SUPREME AUDIT INSTITUTION OF INDIA
लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

# இந்திய தணிக்கைத் தலைவரின்
# 2023-24 ஆண்டிற்கான
# மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை

தமிழ்நாடு அரசு
அறிக்கை எண் 2 - 2025
(மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை)

# இந்திய தணிக்கைத் தலைவரின்
# 2023-24 ஆண்டிற்கான
# மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை

**தமிழ்நாடு அரசு**

***அறிக்கை எண் 2 - 2025***

**(மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை)**

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | xi |
| தணிக்கை குறிப்புகளின் சுருக்கம் | | xiii |
| **அத்தியாயம் I - கண்ணோட்டம்** | | |
| **கண்ணோட்டம்** | **1.1** | 1 |
| **தமிழ்நாடு மாநிலம் குறித்த விவரங்கள்** | **1.2** | 1 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு மற்றும் ஒட்டுமொத்த மதிப்பு | 1.2.1 | 1 |
| **மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைக்கான அடிப்படையும் அணுகுமுறையும்** | **1.3** | 4 |
| **அரசு கணக்குகள் கட்டமைப்பு மற்றும் வரவு –செலவு திட்ட நடைமுறை பற்றிய கண்ணோட்டம்** | **1.4** | 5 |
| **வரவு – செலவு திட்ட நடைமுறைகள்** | **1.5** | 9 |
| **நிதிகள் பற்றிய ஒரு சுருக்கம்** | **1.6** | 10 |
| **அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம்** | **1.7** | 11 |
| **நிதி குறியீடுகள்** | **1.8** | 12 |
| **தணிக்கையின் ஆய்வுக்கு பின் பற்றாக்குறைகள் மற்றும் மொத்த கடன் தொகைகளின் அளவுகள்** | **1.9** | 17 |
| தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய பகுப்பாய்வு | 1.9.1 | 17 |
| நிதிப் பொறுப்புகளின் போக்குகள் | 1.9.2 | 18 |
| **அத்தியாயம் II - மாநில அரசின் நிதிகள்** | | |
| **2022-23 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2023-24 ஆண்டின் நிதி நடவடிக்கைகளின் சுருக்கம்** | **2.1** | 19 |
| **நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்** | **2.2** | 22 |
| **மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்** | **2.3** | 23 |
| மாநிலத்தின் வரவுகள் | 2.3.1 | 23 |
| மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் | 2.3.2 | 24 |
| *வருவாய் வகை வரவுகளின் போக்கும் வளர்ச்சியும்* | *2.3.2.1* | 24 |
| *மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்* | *2.3.2.2* | 26 |
| *மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றம்* | *2.3.2.3* | 28 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| மூலதன வகை வரவுகள் | 2.3.3 | 32 |
| நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு | 2.3.4 | 34 |
| **நிதியை செலவிடுதல்** | **2.4** | 34 |
| செலவின் வளர்ச்சி மற்றும் கூறுகள் | 2.4.1 | 35 |
| வருவாய் வகை செலவு | 2.4.2 | 36 |
| *வருவாய் வகை செலவில் முக்கிய மாற்றங்கள்* | *2.4.2.1* | 38 |
| *தவிர்க்க இயலாத செலவு* | *2.4.2.2* | 39 |
| *தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம்* | *2.4.2.3* | 41 |
| *மானியங்கள்* | *2.4.2.4* | 43 |
| *சிறு தலைப்பு – 911ன் கீழ் மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்* | *2.4.2.5* | 44 |
| *மாநில நிதி குழு – GST இழப்பீட்டை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிராமை* | *2.4.2.6* | 45 |
| மூலதன வகை செலவு | 2.4.3 | 46 |
| *மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்* | *2.4.3.1* | 47 |
| *மூலதன வகை செலவின் தரம்* | *2.4.3.2* | 48 |
| செலவு முன்னுரிமைகள் | 2.4.4 | 51 |
| குறுந்தலைப்பு வாரியான செலவு | 2.4.5 | 52 |
| **பொது கணக்கு** | **2.5** | 53 |
| பொது கணக்கின் நிகர இருப்புகள் | 2.5.1 | 53 |
| சேம நிதிகள் | 2.5.2 | 54 |
| *தொகுக்கப்பட்ட கடன்தீர் நிதி* | *2.5.2.1* | 54 |
| *மாநில பேரிடர் நிவாரண நிதி* | *2.5.2.2* | 55 |
| *மாநில பேரிடர் தணிப்பு நிதி* | *2.5.2.3* | 57 |
| *உத்தரவாத மீட்பு நிதி* | *2.5.2.4* | 57 |
| *தொகுப்பு நிதிக்கு வெளியே வைக்கப்பட்ட நிதி / மாநிலத்தின் பொதுக் கணக்கு மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட நிதி* | *2.5.2.5* | 57 |
| **பொது கடன் மேலாண்மை** | **2.6** | 58 |
| கடன் நிலையின் கூறுகள் | 2.6.1 | 59 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| *வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை* | *2.6.1.1* | 63 |
| *நிதிப் பற்றாக்குறையின் கூறுகளும் மற்றும் ஈடு செய்யப்பட்ட வழிகளும்* | *2.6.1.2* | 64 |
| கடன் விவரங்கள்: முதிர்வு மற்றும் மீள செலுத்துதல் | 2.6.2 | 66 |
| **கடன் தாங்கு தன்மை பற்றிய பகுப்பாய்வு** | **2.7** | 67 |
| வாங்கப்பட்ட கடன்களின் பயன்பாடு | 2.7.1 | 75 |
| உத்தரவாதங்களின் நிலை – எதிர்பாரா பொறுப்புகள் | 2.7.2 | 76 |
| ரொக்க இருப்பு மேலாண்மை | 2.7.3 | 77 |
| **முடிவுரை** | **2.8** | 80 |
| **பரிந்துரை** | **2.9** | 81 |
| **அத்தியாயம் III – வரவு செலவு திட்ட மேலாண்மை** | | |
| **முன்னுரை** | **3.1** | 83 |
| **வரவு – செலவு திட்ட நடைமுறை** | **3.2** | 83 |
| **மகளிருக்கான வரவு செலவு திட்டம்** | **3.3** | 85 |
| 2023-24ம் ஆண்டு GBSன் கண்ணோட்டம் | 3.3.1 | 85 |
| 2023-24ம் ஆண்டின் GBSன் பகுப்பாய்வு | 3.3.2 | 86 |
| தணிக்கை குறித்துரைகள் | 3.3.3 | 87 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணை திட்டத்திற்கான சிறப்பு கூறு அறிக்கை | 3.4 | 89 |
| 2023-24 ஆண்டு SCSP மற்றும் TSP பற்றிய கண்ணோட்டம் | 3.4.1 | 89 |
| தணிக்கை குறித்துரைகள் | 3.4.2 | 90 |
| **நிதியொதுக்க கணக்குகள்** | **3.5** | 94 |
| 2023-24ல் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவுகள் மற்றும் சேமிப்பு / மிகையின் சுருக்கம் | 3.5.1 | 94 |
| அனுமதிக்கப்பட்ட/சாட்டிய செலவினங்கள் | 3.5.2 | 95 |
| வரவு செலவு திட்டத்தின் துல்லியதன்மை | 3.5.3 | 95 |
| *மொத்த செலவினத்தின் வெளிப்பாடு* | *3.5.3.1* | 95 |
| *செலவின அமைப்பு வெளிப்பாடு* | *3.5.3.2* | 96 |
| **நிதியொதுக்கம் மீதான தணிக்கை** | **3.6** | 97 |
| வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கு வைப்பு முறையின் நம்பகத்தன்மை மீதான காண்புரைகள் | 3.6.1 | 97 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| *வரவு – செலவு திட்ட மானியம் காலாவதியாகாமல் இருக்க நிதியை எடுத்தமை* | *3.6.1.1* | 97 |
| *தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம்* | *3.6.1.2* | 98 |
| *தேவையற்ற/மிகையான/போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள்* | *3.6.1.3* | 98 |
| *சட்டபடியான அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவு* | *3.6.1.4* | 100 |
| *செலவிடப்படாத தொகை, ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும்/ அல்லது பெருமளவிலான சேமிப்புகள்/ ஒப்படைப்புகள்* | *3.6.1.5* | 101 |
| *மிகை செலவும் அதன் முறைப்படுத்தலும்* | *3.6.1.6* | 105 |
| வரவு – செலவு திட்டம் மற்றும் கணக்குவைப்பு முறையின் செயல்திறன் குறித்த குறிப்புகள் | 3.6.2 | 106 |
| *வரவு–செலவு திட்ட மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியானவற்றுக்கும் இடையேயான இடைவெளி* | *3.6.2.1* | 106 |
| *வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் அதனை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியான நிதி ஒதுக்கீடு* | *3.6.2.2* | 109 |
| *விரைவுபடுத்தப்பட்ட செலவு* | *3.6.2.3* | 110 |
| **எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்** | **3.7** | 111 |
| **தேர்ந்தெடுக்கப்பட்ட மானியங்கள் மீதான சீராய்வு** | **3.8** | 112 |
| பள்ளி கல்வி துறை | 3.8.1 | 113 |
| *ஒதுக்கீடு மற்றும் செலவு* | *3.8.1.1* | 113 |
| *பள்ளி கல்வி துறையில் விரைவுபடுத்தப்பட்ட செலவு* | *3.8.1.2* | 114 |
| *பிற தணிக்கை குறித்துரைகள்* | *3.8.1.3* | 114 |
| இந்து சமய அறநிலையத் துறை | 3.8.2 | 116 |
| *ஒதுக்கீடு மற்றும் செலவு* | *3.8.2.1* | 116 |
| *வருவாய் தலைப்பின் கீழ் தொடர் சேமிப்புகள்* | *3.8.2.2* | 117 |
| *வருவாய் தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடுகளை திரும்பப் பெறுதல் மற்றும் அதிக சேமிப்புகள் குறித்து தணிக்கை குறித்துரைகள்* | *3.8.2.3* | 117 |
| **முடிவுரை** | **3.9** | 118 |
| **பரிந்துரைகள்** | **3.10** | 121 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் IV - கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்** | | |
| **மாநில அரசின் கடன்கள் தொகுப்பு நிதியில் வரவு வைக்கப்படவில்லை** | **4.1** | 123 |
| **வட்டி பெறும் வைப்புத்தொகைகள் தொடர்பான வட்டி பொறுப்புகளை தீர்வு செய்யாமை** | **4.2** | 124 |
| **மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவிப்பு** | **4.3** | 125 |
| **தொகு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மின்சார வரி** | **4.4** | 127 |
| **பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்** | **4.5** | 127 |
| நகராட்சி நிர்வாக ஆணையரகம் (CMA) | 4.5.1 | 129 |
| மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம் | 4.5.2 | 130 |
| **மானிய உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தியமை** | **4.6** | 131 |
| **சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள்** | **4.7** | 132 |
| **தன்வைப்பு கணக்குகள்** | **4.8** | 133 |
| **பணமாக்கப்படாத காசோலைகளின் பெருக்கம் மற்றும் மின்னணு இசைவு சேவையிலிருந்து திரும்பப் பெறப்பட்டவை** | **4.9** | 134 |
| பணமாக்கப்படாத காசோலைகள் | 4.9.1 | 134 |
| நிலுவையில் உள்ள மின்னணு இசைவு சேவை (ECS) கொடுப்புகள் | 4.9.2 | 135 |
| **சிறுதலைப்பு '800'ன் வரைமுறையற்ற பயன்பாடு** | **4.10** | 135 |
| **அனாமத்து மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் செலுத்தங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இருந்த மீதங்கள்** | **4.11** | 139 |
| **துறையின் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்படாமை** | **4.12** | 140 |
| **ரொக்க இருப்பு குறித்த ஒத்திசைவு** | **4.13** | 141 |
| **2023-24ம் ஆண்டில் நிதிக் குறியீடுகள் மீதான சில பரிவர்த்தனைகளின் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வுகளின் தாக்கம்** | **4.14** | 143 |
| **கணக்கு தரநிலைகளுடன் இணக்கம்** | **4.15** | 143 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| **கணக்குகள் அளிக்கப்படாமை / அளிப்பதில் நேர்ந்த தாமதம்** | **4.16** | 145 |
| **தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தனி தணிக்கை அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் வைப்பதில் நிலுவை நிலை** | **4.17** | 146 |
| **கையாடல்கள், இழப்புகள் மற்றும் களவுகள்** | **4.18** | 146 |
| **மாநில நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை** | **4.19** | 147 |
| **முடிவுரை** | **4.20** | 147 |
| **பரிந்துரைகள்** | **4.21** | 148 |

## இணைப்புகள்



| இணைப்பு எண் | பொருள் | பார்வைக்கான பத்திகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.1 | மாநிலம் பற்றிய விவரக்குறிப்புரை | 1.2 | 151 |
| 1.2 பிரிவு அ | அரசு கணக்குகளின் அமைப்பு மற்றும் முறை | 1.4 | 152 |
| பிரிவு ஆ | நிதி கணக்குகளின் அமைப்பு | 1.4 | 152 |
| 1.3 பிரிவு அ | நிதிநிலையை மதிப்பிடுவதற்கு கையாளப்பட்டுள்ள வழிமுறைகள் | 1.4 | 155 |
| பிரிவு ஆ | தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டம், 2003 | 1.4 | 155 |
| 2.1 | மாநில அரசின் நிதிநிலைமை பற்றிய ஒரு பல்வருடப் புள்ளி விவரம் | 2.1 | 156 |
| 2.2 | SNAக்கு நிதியை விடுவிப்பதில் தாமதம் | 2.3.2.3 | 159 |
| 2.3 | சிறுதலைப்பு – 911ன் கீழ் ஒரு கோடி மற்றும் அதற்கு மேலுள்ள தொகைகளை திருப்பிச் செலுத்துதல் | 2.4.2.5 | 161 |
| 2.4 | ‘அறிக்கை 16 மற்றும் 19’ களில் உள்ள இருப்புகளில் வேறுபாடு | 2.4.3.2 (i) | 166 |
| 2.5 | கடன் தாங்கு திறன் பகுப்பாய்வு | 2.7 | 168 |
| 3.1 | மகளிருக்கான வரவு செலவு திட்ட அறிக்கை. பகுதி-அ ன் கீழ் வழங்கப்பட்டு திரும்ப பெறப்பட்ட அடையாள நிதியொதுக்கம் | 3.3.3 | 170 |
| 3.2 | மகளிருக்கான வரவு செலவு திட்ட அறிக்கை பகுதி– அ ன் கீழ் முழுமையாக திரும்ப பெறப்பட்ட நிதியொதுக்கம் | 3.3.3 | 171 |
| 3.3 | வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் உள்ளபடியான செலவினம் 50 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்த பகுதி 'அ' திட்டங்கள் | 3.3.3 | 172 |
| 3.4 | 31 மார்ச் 2024 நிலவரப்படி வங்கிக் கணக்கில் செலவிடப்படாத தொகை | 3.6.1.1 | 173 |
| 3.5 (அ) | துணை மானிய ஒதுக்கீடு (ஒவ்வொரு திட்டத்திலும் தலா ₹50 இலட்சம் மற்றும் அதற்கு மேலாக) தேவையற்றதாக ஆன நேர்வுகள் | 3.6.1.2 மற்றும் 3.8.1.3 | 174 |

| இணைப்பு எண் | பொருள் | பார்வைக்கான பத்திகள் | பக்கம் |
|---|---|---|---|
| 3.5 (ஆ) | மிகையான துணை ஒதுக்கீடு (ஒவ்வொரு திட்டத்திலும் ₹10 கோடி அல்லது அதற்கு மேலும்) | 3.6.1.2 மற்றும் 3.8.1.3 | 178 |
| 3.6 | போதுமானதாக இல்லாத துணை ஒதுக்கீடு (ஒவ்வொரு திட்டத்தின் கீழும் ₹50 இலட்சம் அல்லது அதற்கு மேலும்) | 3.6.1.2 மற்றும் 3.8.1.3 | 181 |
| 3.7 | போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கம் | 3.6.1.3 | 185 |
| 3.8 | மிகை மறுநிதியொதுக்கம் | 3.6.1.3 | 186 |
| 3.9 | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் – மறுநிதியொதுக்கம் மூலம் தேவையற்ற ஒதுக்கீடு | 3.6.1.3 | 188 |
| 3.10 | ₹100 கோடிக்கு மேலான ஒதுக்கீடுகள் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டமை மற்றும் செலவு செய்யப்படாமை | 3.6.1.3 | 189 |
| 3.11 | பெருந்தலைப்பு ‘2049’ன் கீழ் வட்டி பொறுப்புகளுக்கான ஒதுக்கீடு திரும்ப பெறப்பட்டமை | 3.6.1.3 மற்றும் 4.2 | 191 |
| 3.12 | இறுதி திருத்திய ஒதுக்கீடு இல்லாமல் மேற்கொண்ட செலவினம் | 3.6.1.3 | 192 |
| 3.13 | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் – செலவு ஏதுமின்றி முதல் மறுநிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்து அந்த ஒதுக்கீடை இரண்டாவது மறுநிதியொதுக்கத்தில் திரும்ப பெற்றமை | 3.6.1.3 | 193 |
| 3.14 | ₹100 கோடி தொகைக்கும் மேலாக சேமிப்புகள் நிகழ்ந்த மானியங்கள் | 3.6.1.5 (அ) மற்றும் 3.8.1.1 | 195 |
| 3.15 | 31 மார்ச் 2024 அன்று தலா ₹10 கோடி தொகைக்கு மேலாக ஒப்படைக்கப்பட்ட நேர்வுகள் | 3.6.1.5 (ஆ) மற்றும் 3.8.1.3 | 198 |
| 3.16 | ₹ ஒரு கோடி மற்றும் அதற்கு மேலாக சேமிப்புகள் நிகழ்ந்து அவை திருப்பி ஒப்படைக்கப்படாத நேர்வுகள் | 3.6.1.5 (ஆ) | 202 |
| 3.17 | சேமிப்பு தொகையை விட அதிகமாக ஒப்படைக்கப்பட்ட மானியங்கள்/ நிதியொதுக்கங்கள் | 3.6.1.5 (ஆ) | 203 |

| இணைப்பு எண் | பொருள் | பார்வைக்கான பத்திகள் | பக்கம் |
|---|---|---|---|
| 3.18 | 2019-2024 வரையிலான காலகட்டத்தில் தொடர் சேமிப்புகள் நிகழ்ந்த மானியங்களின் விவரங்கள் | 3.6.1.5 (ஈ) | 204 |
| 3.19 | ஒரு கோடி மற்றும் அதற்கும் மேல் செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, செலவு ஏதும் செய்யப்படாத திட்டங்கள் | 3.6.2.2 | 206 |
| 3.20 | விரைவுபடுத்தப்பட்ட செலவினம் (ஒதுக்கீடு ஒரு கோடிக்கு மேல் இருந்து 100 விழுக்காடு செலவினமும் மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது) | 3.6.2.3 மற்றும் 3.8.1.2 | 214 |
| 3.21 | நடப்பாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட எதிர்பாரா செலவு நிதி முன்பணங்கள் பற்றிய விவரங்கள் | 3.7 | 222 |
| 4.1 | நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் | 4.5 | 223 |
| 4.2 | ‘800 - பிற செலவுகள்’ சிறு தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட செலவுகள் | 4.10 | 225 |
| 4.3 | ‘800 - பிற வரவுகள்’ சிறு தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட வரவுகள் | 4.10 | 226 |
| 4.4 | 2023-24 ஆண்டு முடிவில் கணக்குகள் பெறப்படாத அமைப்புகள் மற்றும் ஆணைக்குழுக்களின் பட்டியல் | 4.16 | 228 |
| 4.5 | சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டிய தனி தணிக்கை அறிக்கையின் நிலை | 4.17 | 237 |
| 4.6 | களவு, இருப்பு குறைவு மற்றும் கையாடல் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்த துறை/வகை வாரியான விவரங்கள் | 4.18 | 240 |
| | இவ்வறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்சுருக்கங்களுக்கான விளக்கம் | - | 241 |

இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-Iல் இவ்வறிக்கைக்கான அடிப்படை மற்றும் அணுகுமுறையை விளக்குகிறது மற்றும் இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள், அரசு கணக்குகளின் கட்டமைப்பு, வரவு – செலவு திட்ட நடைமுறைகள், முக்கிய குறியீடுகள் மீதான பகுப்பாய்வு, 31 மார்ச் 2024–உடன் முடிந்த ஆண்டிற்கான பற்றாக்குறை/மிகை உட்பட மாநிலத்தின் நிதி நிலை ஆகியவை பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் அளிக்கிறது.

அத்தியாயம்–IIல் மாநிலத்தின் நிதிகள் பற்றிய ஒரு பரந்த பார்வையை அளிக்கிறது; முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் முக்கிய நிதி இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள், 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்த அளவிலான போக்குகள், மாநிலத்தின் கடன் நிலைமை, பொது கணக்கின் கீழ் முக்கிய நிதி நடவடிக்கைகள், ஆகியவற்றை மாநிலத்திற்கான நிதி கணக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது.

அத்தியாயம்-IIIல் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் அடிப்படையில் அமைந்தது; மாநில அரசின் நிதியொதுக்க முன்னுரிமைகளை சீராய்வு செய்து, வரவு – செலவு திட்ட மேலாண்மை தொடர்பான அரசியலமைப்பு சட்டத்தின் வழிவகைகளிலிருந்து தவறிய நேர்வுகள் குறித்து தெரிவிக்கிறது.

அத்தியாயம்-IVல் மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகள் அளித்த கணக்குகளின் தரம் மற்றும் மாநில அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் உரிய நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பின்பற்றாமை தொடர்பான குறிப்புகளை தெரிவிக்கிறது.

செயலாக்க தணிக்கையில் கண்டறிந்தவை மற்றும் பல்வேறு துறைகள் மீதான தணிக்கை பத்திகள் உள்ளடங்கிய அறிக்கை, சட்டப்படி அமைக்கப்பட்ட கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மீதான தணிக்கை குறிப்புகளை கொண்ட அறிக்கை மற்றும் வருவாய் வரவினங்களின் மீதான அறிக்கை ஆகியவை தனித்தனி அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

தமிழில் தரப்பட்டுள்ள இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளிலுமுள்ள உண்மைகளின் அர்த்தம் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழிபெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையில் ஏதாவது சந்தேகம் எழுமானால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

# தணிக்கை
# குறிப்புகளின் சுருக்கம்

# தணிக்கை குறிப்புகளின் சுருக்கம்

**இந்த அறிக்கை பற்றிய விவரம்**

**இந்திய தணிக்கை தலைவரின் (CAG) இந்த அறிக்கையானது 2023-24ம் ஆண்டிற்கான மாநில நிதி நிலை மீதான அறிக்கையாகும். இந்த அறிக்கை, நிதிகளை பற்றிய கண்ணோட்டம், வரவு–செலவு திட்ட மேலாண்மை மற்றும் கணக்குகளின் தரம், நிதிநிலை அறிக்கைகளின் நடைமுறைகள் போன்ற விவரங்களை வழங்குகிறது.**

**அறிக்கையில் உள்ள உள்ளடக்கங்களின் சிறப்பம்சங்களையும், முக்கியமான இலக்கங்கள் மற்றும் கூறுகளின் சுருக்கத்தையும், நிதி தாங்கும் தன்மையை பற்றிய ஒரு பார்வையையும், வரவு செலவு திட்ட நோக்கத்திற்கான செயல்திறனையும், வருவாய் மற்றும் செலவின கணிப்புகளையும், அதற்கான வேறுபாட்டு காரணங்களையும் மற்றும் அதன் தாக்கத்தையும் இந்த தணிக்கை குறிப்புகளின் சுருக்கம் வழங்குகிறது.**

2019-20ல் ₹17,43,144 கோடியாக இருந்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) நடப்பு விலைகளில் சராசரியாக 10.92 விழுக்காடு உயர்ந்து, 2023-24ல் ₹27,21,571 கோடியாக இருந்தது. 2019-20ல் ₹2,88,353 கோடியாக இருந்த வரவு செலவு திட்ட மதிப்பீடு சராசரியாக 10.88 விழுக்காடு உயர்ந்து 2023-24ல் ₹4,46,888 கோடியாக இருந்தது.

2022-23ஐ விட நடப்பாண்டில் GSDP 13.71 விழுக்காடு உயர்ந்துள்ளது. வருவாய் வகை வரவுகள் 8.55 விழுக்காடு உயர்ந்தது. 2022-23ல் GSDPல் 10.18 விழுக்காடாக இருந்த வருவாய் வகை வரவுகள் 2023-24ல் 9.72 விழுக்காடாக குறைந்தது. இந்த காலகட்டத்தில் வரி வருவாய் (சொந்த வரி வருவாய் + வரி மற்றும் தீர்வைகளின் நிகரத்தில் பங்கு) 12.91 விழுக்காடு உயர்ந்தது மற்றும் மாநிலத்தில் சொந்த வரி வருவாய் 11.35 விழுக்காடு உயர்ந்தது. 2022-23ல் ₹3,26,755 கோடியாக இருந்த மொத்த செலவினம் (வருவாய் வகை செலவினம், மூலதன செலவினம் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்) 9.89 விழுக்காடு உயர்ந்து ₹3,59,063 கோடி ஆனது. இதில் வருவாய் வகை செலவுகள் 2022-23லிருந்து 10.63 விழுக்காடு உயர்ந்தது. 2022-23ல் ₹36,215 கோடியாக இருந்த வருவாய் வகை பற்றாக்குறை, 24.59 விழுக்காடு அதிகரித்து, 2023-24ல் ₹45,121 கோடி ஆனது. 2022-23ல் ₹81,886 கோடியாக இருந்த நிதி பற்றாக்குறை 10.43 விழுக்காடு உயர்ந்து 2023-24ல் ₹90,430 கோடி ஆனது.

### *வருவாய்க்கும் செலவினத்திற்குமான பொருத்தமின்மை*

வருவாய்க்கும் செலவினத்திற்குமான தொடர் பொருத்தமின்மை என்பது நிதி அழுத்தத்தை குறிக்கிறது. மாநில சொந்த வரி வருவாய், வரியல்லாத வருவாய், வரிகளில் மாநிலத்தின் பங்காக வரி பகிர்வு, மத்திய அரசிடமிருந்து

பெறப்படும் உதவி மானியங்கள், நிதிமாற்றங்கள் மற்றும் கடனல்லாத மூலதன வரவுகள் போன்ற பல்வேறு வருவாய் ஆதாரங்கள் மாநிலத்திற்கு உள்ளன. வருவாய் வகை செலவுகள் மற்றும் மூலதன வகை செலவுகள் (சொத்து உருவாக்கம், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் முதலீடு) ஆகியவை மாநில அரசின் செலவுகளுள் அடங்கும்.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வருவாய் வகை வரவுகள் ₹1,74,526 கோடியிலிருந்து. ஆண்டுக்கு சராசரியாக 9.08 விழுக்காடு உயர்ந்து ₹2,64,597 கோடி ஆனது. இதே காலகட்டத்தில் மூலதன வரவுகள் ₹72,158 கோடியிலிருந்து ₹1,35,634 கோடியாக உயர்ந்தது. 2019-20ல் வருவாய் வகை வரவுகளில் 15.92 விழுக்காடாக இருந்த உதவி மானியங்களின் பங்கு 2023-24ல் 9.58 விழுக்காடாக குறைந்தது. நடப்பாண்டில், மத்திய அரசு பங்களிக்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்காக ₹13,972 கோடியை மாநில அரசு பெற்றது.

வருவாய் வகை செலவானது பணிகளை தற்போதைய அளவில் தொடர்ந்து மேற்கொள்ளவும் கடந்த கால பொறுப்புகளுக்கான தொகைகளை செலுத்தவும் செய்யப்படுகிறது. எனவே, அதன் விளைவாக மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பணிகளில் எந்த ஏற்றமும் ஏற்படுவதில்லை. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில, வருவாய் வகை செலவானது ₹2,10,435 கோடியிலிருந்து (GSDPல் 12.07 விழுக்காடு) ₹3,09,718 கோடியாக உயர்ந்தது (GSDPல் 11.38 விழுக்காடு). இது வருடாந்திர சராசரி வீதமாக 86.46 விழுக்காடாக அதிகரித்து, மொத்த செலவினத்தில் கணிசமான பகுதியை (85.68 முதல் 87.65 விழுக்காடு வரை) கொண்டுள்ளது.

## *செலவுகள் மீதான முடிவுகள்*

வருவாய் வகை செலவுகளுக்கும் வருவாய் வகை வரவுகளுக்கும் உள்ள வித்தியாசம் வருவாய் வகை பற்றாக்குறையாகும். 2019-20ல் ₹35,909 கோடியாக (GSDPல் 2.06 விழுக்காடு) இருந்த வருவாய் பற்றாக்குறை நடப்பாண்டில் 45,121 கோடியாக (GSDPல் 1.66 விழுக்காடு) உயர்ந்தது.

மாநில அரசு ₹40,500 கோடி மட்டுமே மூலதன செலவினமாக செலவிட்டது. 2023-24ல் இது மொத்த செலவினத்தில் 11.28 விழுக்காடாகும். மொத்த கடனில் மூலதன செலவினம் 31 விழுக்காடாகும். இவ்வாறு பெறப்பட்ட கடன்கள், மூலதன உருவாக்கம்/வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல், நடப்பு செலவுகளை எதிர்கொள்ள பயன்படுத்தப்பட்டது.

மொத்த செலவினத்திற்கும் மொத்த கடனில்லா வருவாய்க்கும் உள்ள வித்தியாசம் நிதி பற்றாக்குறையாகும். 2019-20ல் ₹60,179 கோடியாக (GSDPல் 3.45 விழுக்காடு) இருந்த நிதி பற்றாக்குறை 2023-24ல் ₹90,430 கோடியாக (GSDPல் 3.32 விழுக்காடு) உயர்ந்தது.

வருவாய் வகை செலவினத்தில் தவிர்க்க இயலாத செலவு பெரும்பங்கு வகிக்கிறது. நிதி ஆதாரங்களில் முதலாவதாக தவிர்க்க இயலாத செலவு செய்யப்படுகிறது. தவிர்க்க இயலாத செலவில் வட்டி செலுத்தங்கள், சம்பளம் மற்றும் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் அடங்கும். வட்டி செலுத்தங்கள், சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் போன்ற தவிர்க்க இயலாத செலவுகள் வருவாய் வகை செலவினத்தில் 50-56 விழுக்காடு ஆகும். 2019-20ல் வருவாய் வகை செலவினத்தில் 56 விழுக்காடாகவும் 2021-22ல் 50 விழுக்காடாகவும் இருந்தது. தவிர்க்க இயலாத செலவுகள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 8.42 விழுக்காடு உயர்ந்தது. அதாவது, 2019-20ல் ₹1,17,819 கோடியாக இருந்த தவிர்க்க இயலாத செலவுகள் 2023-24ல் ₹1,63,355 கோடியாக உயர்ந்தது (2022-23ம் ஆண்டைவிட 12.42 விழுக்காடு (₹1,45,306 கோடி) உயர்வு).

தவிர்க்க இயலாத செலவுடன், 2019-20 முதல் 2023-24 வரை வருவாய் வகை செலவினத்தில் 16.76 விழுக்காடாக இருந்த நெகிழ்வற்ற செலவு 15.94 விழுக்காடாக குறைந்தது. 2022-23ல் ₹45,541 கோடியாக இருந்த நெகிழ்வற்ற செலவு, 8.36 விழுக்காடு உயர்ந்து, 2023-24ல் ₹49,346 கோடி ஆனது.

தவிர்க்க இயலாத செலவு மற்றும் நெகிழ்வற்ற செலவு ஆகிய இரண்டும் சேர்ந்து 2023-24ல் ₹2,12,701 கோடியானது. இவை வருவாய் வகை செலவினத்தில் 68.68 விழுக்காடாகும். தவிர்க்க இயலாத மற்றும் நெகிழ்வற்ற செலவின் உயர்ந்து வரும் போக்கினால், சொத்து உருவாக்கம் மற்றும் பிற முக்கிய துறைகளுக்கு செலவு செய்வதில் அரசுக்கு குறைந்த அளவே நெகிழ்வுத் தன்மை உள்ளது.

### *தவிர்க்க இயலாத செலவை தவிர்த்து மற்ற செலவினத்தில் மானியங்களின் பெரும் பங்கு*

2019-20ல் ₹20,144 கோடியாக இருந்த மானியம், உயர்ந்து வரும் போக்கில், 2023-24ல் ₹37,749 கோடியானது. அதாவது 2019-20ல் மொத்த செலவினத்தில் 9.57 விழுக்காடாக இருந்த மானியங்கள் 2023-24ல் 12.19 விழுக்காடாக உயர்ந்தது. இதை தவிர, மறைமுக மானியங்களுக்காக அரசு ₹801.77 கோடி செலவு செய்தது.

### *வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள்*

மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள் வாயிலாக, ₹1,672.01 கோடியை வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டு கடன்களாக பெற்றது. இவை, தொகு நிதிக்குள் வருவதில்லை. ஆனால் அந்த கடன்கள் வரவு செலவு திட்டம் மூலமாக திருப்பி செலுத்தப்படுகிறது. 2023-24ல் இந்த கடன்களை திருப்பிச் செலுத்த மாநில அரசு ₹51.45 கோடியை வழங்கியது. இந்த செலுத்தங்கள், அரசால் செலுத்தப்படும் கடன்கள் மற்றும் வட்டியை தவிர்த்த கூடுதல் செலவினங்களாகும்.

### உத்தரவாதங்களால் ஏற்பட்ட எதிர்பாரா பொறுப்புகள்

மார்ச் 31, 2024 நிலையில் நிலுவையில் இருந்த மாநில அரசின் மொத்த உத்தரவாதங்கள் ₹1,22,269.91 கோடி ஆகும். இது 2022-23ன் மொத்த வருவாய் வகை வரவுகளில் (₹2,43,749.34 கோடி) 50.16 விழுக்காடு மற்றும் GSDPல் (₹27,21,571 கோடி, 'நடப்பு விலைகளில்') 4.49 விழுக்காடு ஆகும். அரசு அளித்த உத்தரவாதம் எதுவும் நடப்பாண்டில் பயன்படுத்தப்படவில்லை.

### நிதி நிலைத்தன்மை

பற்றாக்குறைகள், கடன் மற்றும் பொறுப்புகளின் அளவு, வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டு வாங்கும் கடன்களுக்கான பொறுப்புகள், உத்தரவாதம், மானியங்கள் போன்ற பெரிய அளவுருக்கள் மூலம் நிதி நிலைத்தன்மை ஆய்வு செய்யப்படுகிறது. வருவாய் மற்றும் செலவின பொருத்தமின்மையை பொறுத்தவரை, தவிர்க்க இயலாத மற்றும் நெகிழ்வற்ற செலவு ஒரு முக்கியமான தடைக்கல்லாகும். தவிர்க்க இயலாத செலவில் சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டி செலுத்தங்கள் போன்றவை அடங்கும். நெகிழ்வற்ற செலவினத்தில் மத்திய அரசு பங்களிப்பு செய்யும் திட்டத்தில் உள்ள செலவு, சேமநிதிகளுக்கான மாற்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் போன்றவை அடங்கும்.

### FRBM தேவைகள் மற்றும் நிதி அளவுருக்களுக்கு உட்படுத்துதல்

2023-24ஆம் ஆண்டில் நிதி பற்றாக்குறை GSDPல் 3.32 விழுக்காடு ஆக இருந்தது. இது TNFR சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான மூன்று விழுக்காட்டை விட மிக அதிகமாகும். நிலுவையிலுள்ள பொறுப்புகள் (வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் உட்பட) GSDPல் எதிர்பார்க்கப்பட்ட வரம்பான 29.10 விழுக்காட்டிற்கு மாறாக 28.00 விழுக்காடாக இருந்தது.

கடன் தாங்கு தன்மையின் பகுப்பாய்வில், 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த கடன் நிலுவையில் உள்ள ஒட்டுமொத்த கடனில் ஆண்டுக்கு சராசரியாக 15.62 விழுக்காடு உயர்ந்தது. 2019-20ல் 24.35 விழுக்காடாக இருந்த கடன் மற்றும் GSDPக்குமான விகிதம் 2023-24ல் 28.00 விழுக்காடாக உயர்ந்தது.

தோமர் மாதிரியின்படி முதல் இரண்டு ஆண்டுகளில் அதாவது 2019-20 முதல் 2020-21 வரை முதன்மை பற்றாக்குறை உயர்ந்து வரும் போக்கில் இருந்தது. 2019-20ல் நேர்மறையாக இருந்த தோமர் இடைவெளி, (g-r) முக்கியமாக 2020-21ல் எதிர்மறையானது. இது, GSDPல் ஒட்டுமொத்த கடனின் விழுக்காடு, நிலைத்தன்மைக்கு மாறாமல் காலவரையின்றி அதிகரிக்கும் என்பதை குறிக்கிறது. ஆயினும் 2021-22 மற்றும் 2022-23ம் ஆண்டுகளில், தோமர் இடைவெளி கடந்த ஆண்டுகளை விட கணிசமாக உயர்ந்ததால் அதன் மதிப்பு மீண்டும் நேர்மறையானது. தோமர் இடைவெளி 2023-24 ஆண்டில் ஓரளவு குறைந்து 5.80 ஆக இருந்தது. இவ்வாறாக, தோமர் மாதிரியின்படி, ஒட்டுமொத்த கடன் நிலைத்தன்மை மாறும்.

### *SNAக்கு நிதி விடுவித்தமை*

நடப்பாண்டில் SNAன் மத்திய அரசு பங்காக ₹13,133.76 கோடியை மாநில அரசு பெற்றது. மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கு இணங்க, 31 மார்ச் 2024 அன்றுள்ளவாறு, மாநில அரசு மத்திய அரசின் பங்கான ₹13,487.29 கோடியையும், மாநில அரசின் பங்கான ₹12,198.81 (மாநில அரசின் அதிகப்படி பங்கான ₹17.26 கோடி உட்பட) கோடியையும் SNA கணக்கிற்கு மாற்றம் செய்தது. 31 மார்ச் 2024 அன்றுள்ளவாறு, SNA கணக்கில் செலவாகாமல் உள்ள இருப்பு ₹10,083.87 கோடியாகும். மத்திய மாநில அரசுகள் பங்களித்த ஏழு திட்டங்களில் இந்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பை SNA கணக்கிற்கு மாற்றம் செய்வதில் ஒன்று முதல் 106 நாட்கள் தாமதம் இருந்தது. மேலும் மூன்று மத்திய அரசு திட்டங்களில் இந்திய அரசின் பங்கை மாற்றம் செய்வதில் ஒன்று முதல் 24 நாட்கள் தாமதம் காணப்பட்டது.

### *பட்ஜெட் செயல்திறன்*

### *மொத்த செலவு வெளியீடு*

மொத்த செலவினம், ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையை விட எந்த அளவிற்கு மிகை மற்றும் சேமிப்பை பிரதிபலிக்கிறது என்பதை மதிப்பிடுவதற்காக. வரவு செலவு திட்ட நோக்கம் மற்றும் வரவுசெலவுத் திட்ட செயலாக்கத்தின் அடிப்படையில் வரவு செலவு திட்ட செயல்திறன் ஆய்வு செய்யப்படுகிறது. வருவாய் பிரிவில், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் (BE) ஒப்பிடும்போது உள்ளபடியான செலவின் வேறுபாடு 1.96 சதவீதமாக இருந்தது. இது 47 மானியங்களில் 25 சதவிகிதத்திற்கு உள்ளாகவும், இரண்டு மானியங்களில் 25 சதவிகிதத்திற்கு மேல் 50 சதவிகிதத்திற்கு உள்ளாகவும் மற்றும் நான்கு மானியங்களில் முறையே 50 சதவிகிதத்திற்கு மேல் 100 சதவிகிதத்திற்கு உள்ளாகவும் இரண்டு மானியங்களில் 100 சதவிகிதத்திற்கு மேலும் வேறுபாடு இருந்தது. மூலதனப் பிரிவில், வரவு செலவு திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது வேறுபாடு (-) 4.21 சதவீதமாக இருந்தது. இது 11 மானியங்களில் 25 சதவிகிதத்திற்கு உள்ளாகவும், எட்டு மானியங்களில் 25 சதவிகிதத்திற்கு மேல் 50 சதவிகிதத்திற்கு உள்ளாகவும், 18 மானியங்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் 100 சதவிகிதத்திற்கு உள்ளாகவும் மற்றும் ஆறு மானியங்களில் 100 சதவிகிதத்திற்கு அதிகமாகவோ அல்லது அதற்கு சமமாகவோ வேறுபட்டு இருந்ததே இதற்குக் காரணம். எட்டு மானியங்களின் கீழ் அசல் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இரண்டு மானியங்களில் அசல் ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட்டது என்றும் கண்டறியப்பட்டது.

### செலவு அமைப்பு வெளியீடு

செலவு அமைப்பு வெளியீடு என்பது, செலவினத்தை மேற்கொள்ளும் போது, வரவு செலவு திட்ட வகைகளின் கீழ் செய்யப்படும் மறு ஒதுக்கீடுகள், செலவின் அமைப்பை எந்த அளவு பாதிக்கிறது என்பதை குறிப்பதாகும். வருவாய் பிரிவில், திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் (RE) உள்ளபடியான செலவினத்திற்கும் வேறுபாடு 0.37 சதவீதம் ஆகும். 50 மானியங்களில் 25 சதவீதம் வரையிலும், மூன்று மானியங்களில் 25 முதல் 50 சதவீதமும், ஒரு மானியத்தில் 50 முதல் 100 சதவீதமும் மற்றும் ஒரு மானியத்தில் 100 சதவீதத்திற்கு மேலும் வேறுபாடு காணப்பட்டதே இதற்கு காரணமாகும். முதலீட்டுப் பிரிவில், RE உடன் செலவினத்தை ஒப்பிடும் போது வேறுபாடு (-)0.05 சதவீதம் ஆகும். 22 மானியங்களில் 25 சதவீதமும், 10 மானியங்களில் 25 முதல் 50 சதவீதமும், மூன்று மானியங்களில் 50 சதவீதத்திற்கு மேல் 100 சதவீதம் வரையிலும் ஒரு மானியத்தில் 100 சதவீதத்திற்கு மேலும் வேறுபாடு காணப்பட்டதே இதற்கு காரணமாகும். ஒரு மானியத்தைப் பொறுத்தவரை, அசல் வரவு செலவு திட்டம் அல்லது REல் ஒதுக்கீடு ஏதுமின்று செலவு மேற்கொள்ளப்பட்டது.

2023-24ம் ஆண்டில் 26 மானியங்களின் கீழ் 81 நேர்வுகளில் (ஒவ்வொரு நேர்விலும் ₹50 லட்சத்திற்கும் அதிகமாக) செய்யப்பட்ட கூடுதல் ஒதுக்கீடுகள் ₹1,078 கோடி தேவையற்றது. ஏனெனில், இந்த மானியங்களின் செலவானது மூல ஒதுக்கீடுகளின் அளவிற்கு கூட வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

வரவு செலவு திட்ட ஒட்டுமொத்த நம்பகத்தன்மை மதிப்பீட்டின்படி, உண்மையான செலவுக்கும் அசல் வரவு செலவு திட்டத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தாலும், வெவ்வேறு மானியங்களில் 25 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் கூட வேறுபாடுகள் இருந்தன. மேலும், பல சந்தர்ப்பங்களில், அசல் மானிய அளவிற்குக் கூட செலவு செய்யாத நிலையில் கூடுதல் மானியங்கள் கொடுத்திருப்பதும் கவனிக்கப்பட்டது. அத்தகைய வேறுபாடுகளை சமாளிக்க நம்பகமான வரவு செலவு திட்ட நடைமுறை தேவை.

### சட்டபூர்வ அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட செலவினம்

ஒன்பது கணக்கு தலைப்புகளில், ₹42.42 கோடி செலவினம், மூல வரவு செலவு திட்டத்திலோ அல்லது துணை மதிப்பீடுகளிலோ ஒதுக்கீடு ஏதுமின்றி, மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் சட்டசபையின் அனுமதியின்றி திட்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### மானியங்கள்/ஒதுக்கீடுகள் மீதான அதிகப்படியான அளவை முறைப்படுத்துதல்

அரசியலமைப்பின் பிரிவு 204 மற்றும் 205(1)(b)ன்படி மானியம்/ ஒதுக்கீடுகளில் ஏற்படும் கூடுதல் செலவை மாநில அரசு மாநில

சட்டமன்றத்தால் முறைப்படுத்த வேண்டும். 2019-23ம் ஆண்டுகளுக்கான கூடுதல் செலவு ₹968.12 கோடியாகும். இத்தொகை இன்னும் (ஆகஸ்ட் 2024) மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்தப்படவில்லை.

### *கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்*

கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளின் தரம் என்பது, உள்ளபடியான செலவினத்திற்கு ஆதாரமாக உள்ள கணக்கு பதிவுருக்கள் அல்லது சரிகட்டல் பதிவுருக்களை பெறுவதில் ஏற்படும் தாமதம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் ஒழுங்குமுறை குறைபாடுகள், இணக்கம் ஆகியவற்றில் உள்ள இடைவெளி தொடர்பான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். அரசாங்கக் கணக்குகளுக்கு வெளியே நிதிகளை நிறுத்துதல், பொறுப்புகளை நிறைவேற்றாதது அல்லது முழுமையாக நிறைவேற்றாமல் இருப்பது, பரிவர்த்தனைகள் மற்றும் தரவு இடைவெளிகளின் தவறான வகைப்படுத்தல் போன்ற கணக்குகள் மற்றும் நிதி அறிக்கை தொடர்பான சிக்கல்களையும் இது எடுத்துக்காட்டுகிறது.

### *ஒத்திசைவு*

தமிழ்நாடு கருவூல விதிகளின்படி, அனைத்து துறைகளும் தங்களது செலவு மற்றும் வரவுகளை மாநில கணக்காயர் அலுவலகத்தின் கணக்குகளில் பதிவு செய்துள்ள செலவினங்களுடன் ஒத்திசைவு செய்ய வேண்டும். மாநில அரசு வருவாய் செலவினத்தில் 2.89 சதவீதம், மூலதன செலவினத்தில் 1.15 சதவீதம் மற்றும் வருவாய் வரவுகளில் 6.14 சதவீதம், கடன் மற்றும் முன்பணத்தில் 2.81 சதவீதம் ஒத்திசைவு செய்யவில்லை.

மீதமுள்ள ஒத்திசைவு செய்யப்படாத தொகையானது, வரவு மற்றும் செலவு ஆகிய இரண்டின் CCOக்களில் முறையே 41.43 சதவீதம் மற்றும் 38.60 சதவீதம் தொடர்பானது.

### *IGAS உடன் இணங்குதல்*

இந்திய அரசு கணக்கு தரநிலைகளின் (IGAS) தேவைகளுக்கு மாறாக, மாநில அரசு, IGAS-3: அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான தரநிலையை பகுதியளவே பின்பற்றியது. 2018-19ம் ஆண்டில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களின் மறுசீரமைப்பைத் தொடர்ந்து, 2023-24ம் ஆண்டில் கடன் தலைப்புகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட புள்ளிவிவரங்கள் ஒத்திசைவு செய்து முடிக்கப்படவில்லை. மாநில கணக்குகளுடன் ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

### *நிபந்தனைக்குட்பட்ட மானியங்களுக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள்*

நிபந்தனைக்குட்பட்ட மானியங்களுக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்களை (UCs) குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இருந்தபோதிலும், 31 மார்ச் 2024 நிலவரப்படி ₹2,805.94 கோடி மதிப்புள்ள

111 பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையில் உள்ளன. பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்பிக்காதது பொறுப்புடைமையை உறுதி செய்யும் விதிகளை துறை அதிகாரிகள் பின்பற்ற தவறியதை சுட்டிக் காட்டுகிறது. இது நிதியை தவறாக பயன்படுத்துதல் மற்றும் மோசடிக்கு வழிவகுக்கும் அபாயம் நிறைந்ததாகும்.

### *தற்காலிக முன்பணம்*

பணம் பெற்று வழங்கும் பல்வேறு அலுவலர்களால் பெறப்பட்ட ₹216.46 கோடி மதிப்புள்ள 383 தற்காலிக முன்பணங்கள், மார்ச் 31, 2024 வரை சரிசெய்யப்படாமல் இருந்தன. இவற்றில் 181.58 கோடி அளவிலான 99 தற்காலிக முன்பணங்கள் 2022-23 வரையிலான காலகட்டத்தை சேர்ந்ததாகும். தற்காலிக முன்பணங்கள் பெறப்பட்டு கணக்கில் கொண்டுவரப்படாதது பொது நிதி வீணாதல்/தவறாக பயன்படுத்துதல்/மோசடி போன்றவற்றிற்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கின்றது.

### *அரசாங்கக் கணக்கிற்கு வெளியே உள்ள நிதிகள்*

இந்த ஆண்டு TANGEDCO நுகர்வோரிடம் இருந்து ₹1,985.03 கோடி மின்சார வரியாக வசூலித்தது, ஆனால் ₹1,457.75 கோடியை மட்டுமே அரசு கணக்கில் செலுத்தியது என கண்டறியப்பட்டது. 31 மார்ச் 2024 நிலவரப்படி வசூலிக்கப்பட்ட, ஆனால் (வசூல் கட்டணம் ₹19.85 கோடியை எடுத்துக்கொண்ட பிறகு). தொகுப்பு நிதியில் செலுத்தப்படாத மின்சார வரியின் அளவு ₹507.43 கோடி ஆகும். வசூலிக்கப்பட்ட வரி தொகையை நீண்ட காலத்திற்கு அரசு கணக்கில் செலுத்தாமல் வைத்திருப்பது, தற்காலிக பண மோசடிக்கு வழி வகுக்கக்கூடும்.

# அத்தியாயம் I

# கண்ணோட்டம்

# அத்தியாயம் I

# கண்ணோட்டம்

## 1.1 கண்ணோட்டம்

இந்த அறிக்கை மாநிலத்தைப் பற்றிய சுருக்கமான விவரக்குறிப்பையும், அறிக்கைக்கான அணுகுமுறையையும் மற்றும் அடிப்படையையும் விவரிக்கிறது. இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள், அரசு கணக்குகளின் கட்டமைப்பு, வரவு – செலவு திட்ட நடைமுறைகள், ஒட்டு மொத்த பொருளாதாரத்தில் முக்கிய குறியீடுகள் மீதான பகுப்பாய்வு, பற்றாக்குறை/மிகை உட்பட மாநிலத்தின் நிதி நிலை ஆகியவை பற்றிய கண்ணோட்டத்தை அளிக்கின்றன.

## 1.2 தமிழ்நாடு மாநிலம் குறித்த விவரங்கள்

இந்திய மாநிலங்களுள், தமிழ்நாடு 1,30,060 சதுர கி.மீ. பரப்புடன் கூடிய 11வது பெரிய மாநிலமாகும். இது 38 மாவட்டங்களையும், 313 தாலுக்காக்களையும் கொண்டது. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் மக்கள்தொகை 7.21 கோடியாகும். மக்கள் தொகைப்படி தமிழ்நாடு ஏழாவது பெரிய மாநிலமாகும். 2011-2036 ஆண்டுகளுக்கு, மத்திய மற்றும் மாநிலங்களுக்கு எதிர்நோக்கப்படும் மக்கள்தொகையை கணிக்கும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் மக்கள்தொகைக்கான தேசிய குழு, 2023-24ல் தமிழகத்தின் மக்கள்தொகை 7.71 கோடியாக இருக்கும் என கணித்துள்ளது. தமிழ்நாடு சம்பந்தமான பொதுவான மற்றும் நிதி விவரங்கள் **இணைப்பு 1.1ல்** தரப்பட்டுள்ளன.

### 1.2.1 மாநில மொத்த உற்பத்தி மதிப்பு மற்றும் ஒட்டுமொத்த மதிப்பு

மாநிலத்தின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) எனப்படும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களின் அளவை GSDP குறிப்பதால், அது மாநில பொருளாதாரத்திற்கான முக்கிய குறியீடு ஆகும்.

தேசிய கணக்குகள் 2008க்கான ஐக்கிய நாட்டு அமைப்பின்படி, உற்பத்தி மதிப்பிலிருந்து இடைநிலை நுகர்வு மதிப்பை கழித்தால் கிடைப்பதுதான் ஒட்டுமொத்த மதிப்பு (GVA) ஆகும். தொழில்துறை மற்றும் தனிநபர் உற்பத்தியை கொண்டு கணக்கிடப்படும் GDPயை அளவிட GVA முக்கிய பங்களிக்கிறது. இவ்வாறாக, பொருளாதார வளர்ச்சிக்கு GDPயை விட GVA நல்ல குறியீடாக கருதப்படுகிறது. வரிகள் மற்றும் நிதி உதவிகளின் தாக்கத்தை பொருட்படுத்தாததால், இந்திய அரசு மற்றும் சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகள் பொருளாதார ஆய்வுக்கு GVAயை பயன்படுத்துகின்றன.

தேசிய அளவிலான GVA மற்றும் GDP தரவுகளை, மாநில அளவிலான GSVA மற்றும் GSDP ஆகியவற்றுடன் ஒப்பீடு செய்வது ஒரு நல்ல பகுப்பாய்விற்கும் கொள்கை வகுப்பதற்கும் மிக அவசியம் என கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

GSVA மற்றும் GSDP முறையே GVA மற்றும் GDPஉடன் ஒப்பிடப்பட்டு அதனுடைய போக்குகள் **அட்டவணை 1.1ல்** காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1: GSVA மற்றும் GSDP முறையே GVA மற்றும் GDP உடன் ஒப்பிடப்பட்டு அதன் போக்குகள் (தற்போதைய விலையில்)**

**(₹ கோடியில்)**

| வருடம் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| **இந்தியா** | | | | | |
| GDP (2011-12 வரிசை) | 2,01,03,593 | 1,98,54,096 | 2,35,97,399 | 2,69,49,646 | 2,95,35,667 |
| GVA | 1,83,81,117 | 1,82,10,997 | 2,16,35,584 | 2,46,59,041 | 2,67,62,147 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GDPன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *6.37* | *(-) 1.24* | *18.85* | *14.21* | *9.60* |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GVAன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *7.02* | *(-) 0.93* | *18.81* | *13.97* | *8.53* |
| தனிநபர் GDP (₹) | 1,49,915 | 1,46,301 | 1,72,422 | 1,94,879 | 2,11,725 |
| **தமிழ்நாடு மாநிலம்** | | | | | |
| GSDP தற்போதைய விலையில் (2011-12 வரிசை) | 17,43,144 | 17,88,074 | 20,72,496 | 23,93,364 | 27,21,571 |
| GSVA | 16,01,332 | 16,54,821 | 19,12,324 | 22,03,808 | 24,91,136 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டவாறு GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *6.93* | *2.58* | *15.91* | *15.48* | *13.71* |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GSVAன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *7.47* | *3.34* | *15.56* | *15.24* | *13.04* |
| தனிநபர் GSDP (₹) | 2,29,657 | 2,34,486 | 2,70,787 | 3,11,778 | 3,53,483 |

(ஆதாரம்: இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)

கோவிட் காலகட்டத்திற்கு பிறகு அதாவது 2021-22ம் ஆண்டில், GSDPல் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருந்தது (2.58 விழுக்காட்டில் இருந்து 15.91 விழுக்காடு). இக்காலக்கட்டத்தில் தொழில் மற்றும் சேவை துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியே வளர்ச்சி வீதம் அதிகரித்ததற்கு காரணமாகும். வளர்ச்சி வீதம் சற்றே குறைந்து 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் முறையே 15.48 மற்றும் 13.71 ஆக இருந்தது.

2023-24ல் GSDPன் தற்போதைய விலைவிகிதங்களின்படியான வளர்ச்சியானது 13.71 விழுக்காடு ஆகவும், இந்திய அளவிலான வளர்ச்சி 9.6 விழுக்காடு ஆகவும் இருந்தது. மேலும் இந்தியாவின் தனிநபர் வருமானம் ₹2,11,725 என்பதற்கெதிராக மாநிலத்தின் தனிநபர் வருமானம் ₹3,53,483 ஆக இருந்தது.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் GSDP மற்றும் GSVAன் போக்குகள் **விளக்கப்படம் 1.1ல்** காட்டப்பட்டுள்ளன.




**விளக்கப்படம் 1.1 : GSVAக்கு எதிராக GSDPயின் வளர்ச்சிவீதம் (2019-20 முதல் 2023-24 வரை)**

(ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை)

2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளில் நிகர வரிகளின் வளர்ச்சியில் முறையே குறைவும், ஒடுக்கமும் காணப்பட்டதால் 2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளில் GSVAயின் வளர்ச்சிவீதம் GSDPயின் வளர்ச்சிவீதத்தைவிட அதிகமாக இருந்தது. ஆனால், 2021-22 முதல் 2023-24 வரை GSVAயின் வளர்ச்சிவீதம் GSDPயின் வளர்ச்சிவீதத்தைவிட குறைவாக இருந்தது.

பொருளாதாரத்தில் மாறிவரும் அமைப்பை புரிந்துகொள்வதற்கு, GSVAக்கு பிரிவுவாரியான (sectoral) பங்களிப்பின் மாற்றங்களும் முக்கியமானவை ஆகும். பொருளாதார நடவடிக்கை என்பது, வேளாண்மை, தொழில் மற்றும் சேவைகள் சார்ந்தது. அவை முறையே, முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. 2019-20 மற்றும் 2023-24 வரையிலான காலகட்டத்தில் GSVAக்கு பிரிவுவாரியான பங்களிப்பு மற்றும் GSDPயின் பிரிவுவாரியான வளர்ச்சி **விளக்கப்படங்கள் 1.2 மற்றும் 1.3ல்** காட்டப்பட்டுள்ளன.




**விளக்கப்படம் 1.2: GSVAக்கு பிரிவுவாரியான பங்களிப்பில் மாற்றம் (2019-20 முதல் 2023-24 வரை)**

(ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)

2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்து வருட காலத்தில், வேளாண் துறை மற்றும் தொழில் துறையின் பங்களிப்பு முறையே 0.38 மற்றும் 0.67 விழுக்காடு புள்ளிகள் உயர்ந்தது. ஆனால் சேவை துறைகளின் பங்களிப்பு 1.05 விழுக்காடு புள்ளிகள் குறைந்தது.




(ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை, மத்திய புள்ளியியல் அலுவலகம்)

வளர்ச்சி வீதமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023-24ல் தொழில்கள் மற்றும் சேவை துறைகளில் குறைந்தும், வேளாண் துறையில் அதிகரித்தும் காணப்படுவதை மேற்கண்ட விளக்கப்படம் மூலம் அறியலாம். 2023-24ல் GSDP மற்றும் GSVAன் வளர்ச்சி வீதம் குறைந்ததற்கு தொழில் மற்றும் சேவை துறைகளின் வளர்ச்சி வீதத்தில் குறைவு ஏற்பட்டதே காரணமாகும்.

## 1.3 மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைக்கான அடிப்படையும் அணுகுமுறையும்

மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை, அரசியலமைப்பு சட்டம், பிரிவு 151 (2)ன்படி தயாரிக்கப்பட்டு, ஆளுநரிடம் அளிக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 151 (2)ன்படி, ஒரு மாநில அரசின் கணக்குகள் தொடர்பான இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) அறிக்கைகள் அம்மாநில ஆளுநரிடம் அளிக்கப்பட்டு, ஆளுநர் அவற்றை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்படி வகைப்படுத்துவார்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் கருவூலங்கள், கணக்குகளை பராமரிக்கும் பொறுப்புடைய அலுவலகங்கள் மற்றும் துறைகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் கருவூலப்பட்டிகள், செலுத்துச்சீட்டுகள் மற்றும் கணக்குகள் (முதனிலை மற்றும் துணை) ஆகியவற்றையும் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படும் அறிக்கைகள் ஆகியவற்றையும் கொண்டு முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் பணிவரவுகள்) (PAG (A&E)) மாநிலத்தின் நிதி கணக்குகளையும் நிதியொதுக்க கணக்குகளையும் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கிறார். இம்மாநிலத்தில், கருவூலங்களானவை கருவூலப்பட்டிகளிலிருந்து (voucher) கணக்குகளை தொகுக்கின்றன (முதனிலை தொகுப்பு); பின்னர் அக்கணக்குகள், தொடர்புடைய பட்டிகளுடன் PAG (A&E)க்கு

இரண்டாம் நிலை தொகுப்பின் பொருட்டு அனுப்பப்படுகின்றன. இக்கணக்குகள் முதன்மை கணக்காய்வுத் தலைவரால் (தணிக்கை – I) சுதந்திரமாக தணிக்கை செய்யப்பட்டு, CAGஆல் சான்றளிக்கப்படுகின்றன.

இவ்வறிக்கைக்கான அடிப்படை தகவல்களை, நிதி கணக்குகளும் நிதியொதுக்க கணக்குகளும் அளிக்கின்றன. பிற தகவல் ஆதாரங்களுள் பின்வருவன அடங்கும்:

- மாநிலத்தின் 2023-24ம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம், நிதிவகையிலான அளவீடுகள் மற்றும் நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமைகளை எதிர்நோக்கப்பட்டவைகளுடன் ஒப்பிட்டு மதிப்பிடுதல், தொடர்புடைய விதிகள் மற்றும் அவற்றுக்கான நடைமுறைகளுக்கு உட்பட்டு அவை திறம்பட செயல்படுத்தப்பட்டதா என்பதை மதிப்பிடுதல்;
- முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), தமிழ்நாடு, அலுவலகம் மேற்கொண்ட தணிக்கையின் முடிவுகள்;
- துறை அலுவலர்கள், கருவூலங்கள் ஆகியவற்றில் இருந்த பிற தகவல்கள் (கணக்கு மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு);
- GSDP தகவல்கள் மற்றும் மாநிலம் தொடர்பான பிற தகவல்கள்; மற்றும்
- CAGன் தணிக்கை அறிக்கைகள்.

நிதிக்குழுவின் (Finance Commission - FC) பரிந்துரைகள், தமிழ்நாடு மாநில நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு – செலவு திட்ட மேலாண்மை சட்டம் (TNFR சட்டம்), சிறந்த வழக்குகள் மற்றும் இந்திய அரசின் வழிகாட்டுநெறிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. தணிக்கைக்கான ஒரு துவக்க கூட்டம் மாநில நிதித்துறையுடன் 19 ஜூன் 2024 அன்றும், தணிக்கை நிறைவுக் கூட்டம் 22 நவம்பர் 2024 அன்றும் நடைபெற்றன.

தணிக்கை நிறைவு கூட்டத்தில் அரசு அளித்த மறுமொழிகள் இவ்வறிக்கையில் உரிய இடங்களில் தகுந்தவாறு சேர்க்கப்பட்டுள்ளன.

## 1.4 அரசு கணக்குகள் கட்டமைப்பு மற்றும் வரவு – செலவு திட்ட நடைமுறை பற்றிய கண்ணோட்டம்

அரசு கணக்குகள், நிதி அடிப்படையிலான கணக்குவைப்பு மற்றும் நிதி செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துதல் என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவை ஆகும். நிதி அடிப்படையிலான கணக்குவைப்பு என்பது, தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொது கணக்கு என்பவற்றுள் தொடர்புடைய ஒன்றின் கீழ் அனைத்து வரவுகளையும் செலவுகளையும் கணக்குவைப்பது ஆகும். இந்நிதிகள் அரசியலமைப்பு சட்டத்தினால் உருவாக்கப்பட்டு, பொது பொறுப்புடைமைக்கான கருவிகளாக திகழ்கின்றன. இந்நிதிகள் குறித்த விவரங்களும் அவற்றின் நோக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

### 1. மாநிலத்தின் தொகுநிதி (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 266(1))

மாநில அரசு பெறும் அனைத்து வருவாய்கள், கடன்கள்* இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கும் வழிவகை முன்பணங்கள் மற்றும் அரசு திரும்ப பெறும் கடன்கள் ஆகியன இந்நிதியில் அடங்கும். சட்டத்தின்படி அல்லாமல் மற்றும் அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்படும் நோக்கங்களுக்கு அல்லாமல் இந்நிதியிலிருந்து எந்த தொகையையும் செலவிட இயலாது. குறிப்பிட்ட சில வகை செலவுகள் (எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பு சாசன அதிகாரிகளின். சம்பளம், கடனை திரும்ப செலுத்துதல் போன்றவை) இந்நிதியின் மீது சாட்டப்படும் செலவுகள் ஆகும்; இவை சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. மற்ற செலவுகள் அனைத்திற்கும் (அனுமதிக்கப்பட்ட செலவுகள்) சட்டமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

* (சந்தை கடன்கள், பத்திரங்கள், மத்திய அரசு மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள், தேசிய சிறு சேமிப்பு நிதியத்திற்கு அளிக்கப்படும் சிறப்பு பத்திரங்கள் போன்றவை)

### 2. மாநில எதிர்பாரா செலவு நிதி (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 267(2))

இது சட்டமன்றத்தால் சட்டப்படி அமைக்கப்பட்ட, பணி செய்வதற்காக முன்பணம் வழங்கும் தன்மையுடைய நிதி ஆகும். இந்நிதி, எதிர்பாரா செலவை மேற்கொள்வதற்கு மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறுவதற்கு முன்பு அச்செலவிற்கான முன்பணத்தை வழங்கும் பொருட்டு, ஆளுநரின் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து செய்யப்படும் செலவுக்கான தொகையானது பின்னர் மாநில தொகுநிதியின் உரிய பெருந்தலைப்பின் கீழ் பற்று வைப்பதன் மூலம் மீளப்பெறப்படுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் இந்நிதிக்கான மூல தொகை ₹150 கோடி ஆகும்.

### 3. மாநிலத்தின் பொது கணக்கு (இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 266(2))

மேற்கூறியவற்றை தவிர, அரசால் அல்லது அரசு சார்பாக பெறப்படும் அனைத்து பொது பணமும் பொது கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்கு அரசு ஒரு வங்கியாளராக அல்லது அறங்காவலராக செயல்படும். சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி, வைப்புத்தொகைகள் (வட்டியுடனானவை, வட்டி இல்லாதவை), முன்பணங்கள் போன்ற திரும்ப செலுத்த வேண்டிய தொகைகள், சேம நிதிகள் (வட்டியுடனானவை, வட்டி இல்லாதவை), செலுத்தங்கள் மற்றும் அனாமத்து தலைப்புகள் (இவை இரண்டும் கணக்குவைக்கப்படாத தொகைகளுக்கான இடைக்கால தலைப்புகள்) ஆகியன பொது கணக்கில் அடங்கும். அரசிடம் உள்ள நிகர மீத தொகையும் பொது கணக்கிலேயே சேர்க்கப்படும். பொது கணக்கு சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதல்ல.

### வரவு – செலவு திட்ட ஆவணங்கள்

ஒவ்வொரு நிதி ஆண்டு தொடர்பாகவும், அரசின் எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த ஒரு அறிக்கை சட்டமன்றத்தின் அவை அல்லது அவைகளில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டம் (பிரிவு 202)ன்படி கட்டாயம் ஆகும். இந்த 'ஆண்டு நிதி அறிக்கை'

வரவு – செலவு திட்டத்தின் முக்கிய ஆவணம் ஆகும். மேலும், வரவு – செலவு திட்டமானது, வருவாய் வகையிலான செலவை பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட வேண்டும்.

**வருவாய் வகை வரவுகள்** என்பதில் வரி வருவாய், வரியல்லாத வருவாய், மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு மற்றும் மத்திய அரசின் மானியங்கள் போன்றவை அடங்கும்.

**வருவாய் வகை செலவு** என்பதில், இயல்வகையான அல்லது நிதிவகையான சொத்துக்களை உருவாக்க முடியாத அரசு செலவுகள் அனைத்தும் அடங்கும். இது, அரசு துறைகளின் வழக்கமான இயக்கம் மற்றும் பல்வேறு சேவைகள் தொடர்பான செலவுகள், அரசு பெற்ற கடன்கள் மீதான வட்டி செலுத்தங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் (மானியங்களுள் சில மூலதன சொத்துக்களை உருவாக்குவதற்காக அளிக்கப்பட்டிருந்தாலும் கூட) போன்ற செலவுகளுக்கு தொடர்புடையதாகும்.

**மூலதன வகை வரவுகள்** என்பதில், கீழே விளக்கப்பட்டுள்ளவாறு, கடன் வரவுகள் மற்றும் கடன் அல்லாத வரவுகள் அடங்கும்:

- **கடன் வரவுகள்:** சந்தை கடன்கள், பத்திரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள், வழிவகை முன்பணங்களின் கீழ் நிகர பரிவர்த்தனைகள், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் போன்றவை;
- **கடன் அல்லாத வரவுகள்:** முதலீடு விலக்குதல் மூலம் கிடைக்கும் வருவாய், கடன்கள் மற்றும் முன்பணங்களை மீளப் பெறுதல்

**மூலதன வகை செலவு** என்பதில், நிலம், கட்டடம், எந்திரம், கருவிகள் போன்றவை வாங்குதல் மற்றும் பங்குகளில் முதலீடு ஆகியவை அடங்கும்.

**கடன்கள் மற்றும் முன்பணங்களில்** பொது துறை நிறுவனங்களுக்கும் மற்ற வகையினருக்கும் அரசு வழங்கும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியன அடங்கும்.

அரசின் கணக்கு வகைப்படுத்தல், செயல்வகை மற்றும் பொருளாதாரம் என கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | நிதி செயல்பாட்டின் தன்மை | வகைப்பாடு |
|---|---|---|
| கணக்குகளுக்கான தலைமை கட்டுப்பாட்டாளரால் (CGA), பெரும் மற்றும் சிறு தலைப்புகளின் பட்டியலில் (List of Major and Minor head - LMMH) தரப்படுத்தப்பட்டுள்ளவை | செயல்பாடு - கல்வி, நலவாழ்வு போன்றவை | மானியங்கள் என்பதன் கீழ் பெருந்தலைப்பு (4 இலக்கங்கள்) |
| | துணை செயல்பாடு | துணை பெருந்தலைப்பு (2 இலக்கங்கள்) |
| | திட்டம் | சிறு தலைப்பு (3 இலக்கங்கள்) |
| மாநிலங்களின் முடிவுக்கு விடப்பட்டுள்ளவை | திட்டம் | துணை தலைப்பு (2 இலக்கங்கள்) |
| | துணை திட்டம் | விரிவான தலைப்பு (3 இலக்கங்கள்) - சம்பளம், பராமரிப்பு போன்றவை |
| | பொருளாதார தன்மை/நடவடிக்கை | குறுந்தலைப்பு (2 இலக்கங்கள்) சம்பளம், காலமுறை பராமரிப்பு போன்றவை |

துறை, செயல், திட்டம் மற்றும் செலவின் தன்மை ஆகியவற்றை செயல்வகை வகைப்பாடு தெரிவிக்கிறது. செலவுகளை வருவாய் வகை, மூலதன வகை, கடன் வகை போன்றவைகளாக வகைப்படுத்த பொருளாதார வகைப்பாடு உதவுகிறது. பொருளாதார வகைப்பாடு என்பதை, 4-இலக்க பெருந்தலைப்பில் முதல் இலக்கத்தில் உள்ள எண்ணின் மூலம் செய்ய இயலும். எடுத்துக்காட்டாக, 0 மற்றும் 1 வருவாய் வரவுகளையும், 2 மற்றும் 3 வருவாய் செலவையும் குறிக்கும். சில குறுந்தலைப்புகளின் உள்ளடக்கமான வரையறை மற்றும் பகிர்மானம் மூலமாகவும் பொருளாதார வகைப்பாடு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொதுவாக குறுந்தலைப்பு 'சம்பளம்' என்பது வருவாய் செலவினத்தையும், குறுந்தலைப்பு 'பெரும் பணிகள்' மூலதன செலவினத்தையும் குறிக்கும். வரவு – செலவு திட்ட ஆவணங்களில் குறுந்தலைப்பு நிதி ஒதுக்கீட்டிற்கான முதனிலை அலகு ஆகும்.

அரசு கணக்குகளின் கட்டமைப்பும் நிதி கணக்குகளின் அமைப்பும் **இணைப்பு 1.2**ல் விளக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் நிதி நிலையை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்பட்ட முறைமை **இணைப்பு 1.3 - பகுதி 'அ'**ல் விளக்கப்பட்டுள்ளது. ஜூன் 2021ல் மாற்றியமைக்கப்பட்ட TNFR சட்டம், 2003ன் முக்கிய அம்சங்கள் **இணைப்பு 1.3 - பகுதி 'ஆ'**ல் தரப்பட்டுள்ளன.

### அரசு கணக்குகளின் கட்டமைப்பு



### பொது கடன் மற்றும் பொது பொறுப்புகள்

இந்த அறிக்கையில் 'பொது கடன்' என்பது அரசின் சந்தை கடன்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் ஆகியன அடங்கும். இதற்கான பெருந்தலைப்பு 6003 மற்றும் 6004 - பொது கடன்.

மேலும், பொதுக் கணக்கின் கீழ் வரும் சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநிதிகள், வைப்பு தொகைகள், மற்றும் முன்பணங்கள் ஆகியவற்றின் பரிவர்த்தனைகள், பெற்ற பணத்தை திருப்பித்தரவேண்டிய அரசின் பொறுப்பு அல்லது கொடுத்த தொகையை மீளப் பெறுவதற்கான உரிமை சார்ந்தவையாகும். 'செலுத்துகைகள்' மற்றும் 'அநாமத்து' கீழ் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் கருவூலங்கள் மற்றும் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு இடையே நடக்கும் பண செலுத்துகைகள் மற்றும் பல்வேறு கணக்கியல் வட்டங்களுக்கிடையே நடைபெறும் மாற்றங்கள், போன்றவற்றை சரிகட்டும் தலைப்புகளாகும்.

இந்த அறிக்கையில், பொது பொறுப்புகள் என்பது 6003 மற்றும் 6004 பெருந்தலைப்புகளுடன், சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநிதிகள், வைப்பு தொகைகளுக்கு தொடர்புடைய 8001 முதல் 8554 வரையிலான பெருந்தலைப்புகளின் கீழ் வரும் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியதாகும்.

## 1.5 வரவு – செலவு திட்ட நடைமுறைகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 202ல் கூறப்பட்டபடி, 2023-24 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் செலவுகள் குறித்த மதிப்பீடுகள் அடங்கிய ஒரு அறிக்கையை '**ஆண்டு நிதி அறிக்கை**' (வரவு – செலவு திட்டம் என குறிப்பிடப்படுவது) என்ற வடிவில் சட்டமன்றத்தில் மாநில ஆளுநர் தாக்கல் செய்ய வைத்தார்; இதில் பின்வருவன அடங்கியிருந்தன:

- மாநில தொகுநிதியில் சாட்டப்பட்ட செலவு;
- மாநில தொகுநிதியிலிருந்து செய்ய திட்டமிடப்பட்ட பிற செலவுகளுக்கு தேவைப்பட்ட தொகைகள் மற்றும் வருவாய் வகை செலவினங்களை பிற செலவினங்களில் இருந்து வேறுபடுத்தி காட்டுதல்.

மேற்படி அறிக்கை, அரசியலமைப்பு சட்டம், பிரிவு 203ல் கூறப்பட்டுள்ளவாறு, 54 மானிய/நிதியொதுக்க கோரிக்கைகள், கடன் செலவுகள் மற்றும் பொது கடன் மீள செலுத்துதல் ஆகியவற்றுக்கான இரண்டு 'பிற வெளியீடுகள்' ஆகிய வடிவில் மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. இவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டபின், மேற்கூறிய செலவுகளுக்கு தேவையான நிதியை தொகுநிதியிலிருந்து ஒதுக்குவதற்காக பிரிவு 204ன் கீழ் சட்டமன்றம் நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றுகிறது.

தமிழ்நாடு வரவு - செலவு திட்ட கையேடு, வரவு - செலவு திட்டத்தை வகுக்கும் முறையை விளக்கி, மதிப்பீடுகள் தயாரிப்பிலும் செலவு நடவடிக்கைகள் மீதான கண்காணிப்பிலும் அரசுக்கு வழிகாட்டுகிறது. வரவு - செலவு திட்டம் மற்றும் அது தொடர்பான பிற முன்னெடுப்புகள் குறித்த தணிக்கை கூர்ந்தாய்வின் முடிவுகள் இவ்வறிக்கையின் **அத்தியாயம் III**ல் விளக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிகள் பற்றிய ஒரு சுருக்கம்

2022-23 ஆண்டின் உள்ளபடியான வரவு - செலவு விவரங்கள், 2023-24 ஆண்டுக்கான மதிப்பீடுகள் (திருத்தப்பட்டவை) மற்றும் உள்ளபடியான வரவு - செலவு விவரங்கள் ஆகியவற்றை **அட்டவணை 1.2** ஒப்பிடுகிறது.

**அட்டவணை 1.2: 2022-23க்கான உள்ளபடியான இலக்கங்கள், 2023-24க்கான மதிப்பீடுகள் (திருத்தப்பட்டவை) மற்றும் உள்ளபடியான இலக்கங்கள் ஆகியவற்றின் ஒப்பீடு**

(₹ கோடியில்)

| வ. எண் | கூறு | 2022-23 உள்ளபடி-யானவை | 2023-24 வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் (திருத்தப்-பட்டவை) | 2023-24 உள்ளபடி-யானவை | மதிப்பீட்டில் உள்ள படியானதின் விழுக்காடு | GSDPல் $ உள்ளபடியானதின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | வரி வருவாய்* | 1,88,954 | 2,15,200 | 2,13,351 | *99.14* | *7.84* |
| | (i) சொந்த வரி வருவாய் | 1,50,223 | 1,70,147 | 1,67,279 | *98.31* | *6.15* |
| | (ii) மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு ** | 38,731 | 45,053 | 46,072 | *102.26* | *1.69* |
| 2 | வரியல்லாத வருவாய் | 17,061 | 30,381 | 25,904 | *85.26* | *0.95* |
| 3 | உதவி மானியங்கள், பங்களிப்புகள் *** | 37,734 | 26,996 | 25,342 | *93.87* | *0.93* |
| 4 | **வருவாய் வரவுகள் (1+2+3)** | **2,43,749** | **2,72,577** | **2,64,597** | ***97.07*** | ***9.72*** |
| 5 | கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீள பெறுதல் | 1,078 | 2,612 | 4,024 | *154.06* | *0.15* |
| 6 | பிற வரவுகள் | 42 | 3 | 12 | *400* | *0* |
| 7 | (i) கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள் (அ) | 90,841 | 94,167 | 94,423 | *100.28* | *3.47* |
| | (ii) ஆரம்ப மற்றும் இறுதி ரொக்க இருப்பின் நிகரத் தொகை(ஆ) | (-) 8,955 | (-) 107 | (-) 3,993 | *3,731.78* | *(-) 0.15* |
| | மொத்தம் (i) + (ii) | 81,886 | 94,060 | 90,430 | *96.14* | *3.32* |
| 8 | **மூலதன வகை வரவுகள் (5+6+7)** | **83,006** | **96,675** | **94,466** | ***97.72*** | ***3.47*** |
| 9 | **மொத்த வரவுகள் (4+8)** | **3,26,755** | **3,69,252** | **3,59,063** | ***97.24*** | ***13.19*** |
| 10 | **வருவாய் செலவு** | **2,79,964** | **3,17,484** | **3,09,718** | ***97.55*** | ***11.38*** |
| 11 | **வட்டி செலுத்தங்கள்** | **46,911** | **54,669** | **53,566** | ***97.98*** | ***1.97*** |
| **12** | **மூலதன செலவு** | **39,530** | **42,532** | **40,500** | ***95.22*** | ***1.49*** |
| **13** | **கடன்கள் மற்றும் முன்பணங்கள்** | **7,261** | **9,236** | **8,845** | ***95.77*** | ***0.32*** |

(₹ கோடியில்)

| வ. எண் | கூறு | 2022-23 உள்ளபடி-யானவை | 2023-24 வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் (திருத்தப்-பட்டவை) | 2023-24 உள்ளபடி-யானவை | மதிப்பீட்டில் உள்ள படியானதின் விழுக்காடு | GSDPல் $ உள்ளபடியானதின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 14 | மொத்த செலவு (10+12+13) | 3,26,755 | 3,69,252 | 3,59,063 | *97.24* | *13.19* |
| 15 | வருவாய் பற்றாக்குறை ^^ (4-10) | (-) 36,215 | (-) 44,907 | (-) 45,121 | *99.53* | *(-) 1.66* |
| 16 | நிதி பற்றாக்குறை ^^ {(4+5+6)-14} | (-) 81,886 | (-) 94,060 | (-) 90,430 | *99.53* | *(-) 3.32* |
| 17 | முதனிலை பற்றாக்குறை (16-11) | (-) 34,975 | (-) 39,391 | (-) 36,864 | *99.53* | *(-) 1.35* |
| | மேலோங்கு நிலை விகிதம் | | | | | |
| | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1.44 | 0.88 | 0.83 | | |

(அ) கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள்: பொது கடனின் நிகர தொகை (வரவு - செலவு) + எதிர்பாரா செலவு நிதியின் நிகர தொகை + பொது கணக்கின் நிகர தொகை (வரவு - செலவு)

(ஆ) மாநில கணக்காயர் தெரிவித்த ரொக்க இருப்புக்கும், இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்பிற்கும் இடையே ₹112 கோடி வேறுபாடு உள்ளது (பத்தி 4.13ல் விரிவாக தரப்பட்டுள்ளது.

$ GSDP (தற்போதைய விலை விகிதங்களில்) ₹27,21,571 கோடி; * SGST ₹61,690.29 கோடியை உள்ளடக்கியது; ** CGST ₹13,982.28 கோடியை உள்ளடக்கியது; *** GST நடைமுறைப்படுத்தியதால் மாநில அரசுகளுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய இழப்பீடு ₹4,574.20 கோடியை உள்ளடக்கியது

(ஆதாரம்: வரவு - செலவு திட்ட ஆவணங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ம் ஆண்டில் மாநிலத்தின் வருவாய் வரவினங்கள் 8.55 விழுக்காடு உயர்ந்திருந்தது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தை (திருத்திய மதிப்பீடு) விட 2.93 விழுக்காடு குறைந்திருந்தது. நடப்பாண்டில் வருவாய் செலவினம் (₹3,09,718 கோடி) வருவாய் வரவினத்தை (₹2,64,597 கோடி) விட கூடுதலாக இருந்ததால் ₹45,121 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டது. 2024-25ல் எட்டப்பட வேண்டிய இலக்கான 3 விழுக்காடு என்பதற்கு மாறாக, நடப்பாண்டில் நிதி பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் 3.32 விழுக்காடாக இருந்தது.

2023-24ஆம் ஆண்டிற்கான மாநில சொந்த வரி வருவாய் மேலோங்கு விகிதம் 0.83 ஆகும். ஒன்றுக்கும் குறைவான இம் மதிப்புகள், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி வீதம், அக்காலக் கட்டத்திற்கான GSDP வளர்ச்சி வீதத்தை விட குறைவாக உள்ளதை சுட்டிக்காட்டுகிறது.

## 1.7 அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம்

அரசின் கணக்குகள், அரசின் நிதி பொறுப்புகளையும் செய்யப்பட்ட செலவின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களையும் உள்ளடக்கியவை ஆகும். நிதி பொறுப்புகள் பெரும்பாலும், உள்நாட்டு கடன்கள், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொது கணக்கு மற்றும் சேம நிதிகளிலிருந்து வரவுகள் ஆகியவற்றை கொண்டுள்ளன; சொத்துக்கள் முக்கியமாக, மூலதன செலவு, அரசு அளித்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் ரொக்க இருப்புகள் ஆகியவற்றை கொண்டுள்ளன.

**அட்டவணை 1.3: சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஒரு சுருக்கம்**

(₹ கோடியில்)

| பொறுப்புகள் | | | | | சொத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2022-23** | **2023-24** | உயர்வு/ குறைவு (-) விழுக்காட்டில் | | | **2022-23** | **2023-24** | உயர்வு/ குறைவு (-) விழுக்காட்டில் |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** | **(9)** | **(10)** |
| தொகு நிதி | | | | | | | | | |
| அ | உள்நாட்டு கடன்கள் | 5,67,635 | 6,42,594 | *13.21* | அ | மொத்த மூலதன செலவு | 3,55,240 | 3,95,741 | *11.40* |
| ஆ | இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 48,258* | 61,332* | *27.09* | ஆ | இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 43,055 | 47,876 | *11.20* |
| இ | எதிர்பாரா செலவு நிதி | 150 | 150 | -- | இ | எதிர்பாரா செலவு நிதி | -- | 5 | 500.00 |
| பொது கணக்கு | | | | | | | | | |
| அ | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதிகள் போன்றவை | 33,884 | 35,199 | *3.88* | அ | முன்பணங்கள் | 8 | 8 | -- |
| ஆ | வைப்பு நிதிகள் | 95,041 | 99,012 | *4.18* | ஆ | செலுத்தங்கள் | 11 | 16 | *45.45* |
| இ | சேம நிதிகள் | 14,020 | 9,599 | *(-) 31.53* | இ | அனாமத்து மற்றும் பல்வகை | 400 | 463 | *15.75* |
| ஈ | அனாமத்து மற்றும் பல்வகை | -- | -- | -- | ஈ | ரொக்க இருப்பு (குறிப்பிட்ட நோக்கத்திற்கான நிதியில் செய்யப்பட்ட முதலீடு உட்பட) | 81,341 | 85,334 | *4.91* |
| | | | | | | மொத்தம் | **4,80,055** | **5,29,443** | *10.29* |
| | | | | | | வரவுகளுக்கு மேற்பட்ட செலவின் திரள் மொத்தம் | 2,78,933 | 3,18,443 | *14.16* |
| | **மொத்தம்** | **7,58,988** | **8,47,886** | ***11.71*** | | **மொத்தம்** | **7,58,988** | **8,47,886** | ***11.71*** |

* 2023-24 மற்றும் 2022-23. ஆண்டுகளின் கடன் வரவுத் தொகையான ₹61,332 கோடி மற்றும் ₹48,258 கோடி முறையே 2021-22 மற்றும் 2020-21 ஆண்டுகளில் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டு தொகையான ₹8,095 கோடி மற்றும் ₹6,241 கோடியை உள்ளடக்கியதாகும். திருப்பித்தர வேண்டாத இத்தொகை மாநிலத்தின் கடனாக கருதப்படக் கூடாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

**நடப்பாண்டில் சொத்துக்கள் முந்தைய ஆண்டை விட 10.29 விழுக்காடு உயர்ந்ததற்கெதிராக பொறுப்புகள் 11.71 விழுக்காடு உயர்ந்தது.**

## 1.8 நிதி குறியீடுகள்

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வருவாய், நிதி மற்றும் முதனிலை பற்றாக்குறைகள் ஆகிய மூன்று முக்கிய நிதிவகையிலான அளவுருக்கள் மாநில அரசின் நிதிநிலையில் உள்ள ஒட்டுமொத்தமான சமமற்ற நிலையின் அளவை குறிக்கின்றன. அரசு கணக்குகளில் உள்ள பற்றாக்குறை அரசின் வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியை காட்டும். மேலும், அப்பற்றாக்குறைக்காக பெறப்படும் நிதிகளும், நிதி முறைகளும் அரசு நிதியின் ஆரோக்கிய நிலைக்கான குறியீடுகளாக கருதப்படும். பற்றாக்குறைகளை ஈடு செய்வதற்கான நிதிகளை பெறுவது தொடர்பான போக்குகள், தன்மை, அளவு மற்றும் முறைகள் பற்றி இப்பகுதி விளக்குகிறது; TNFR சட்டம் 2003ன் கீழ் 2023-24 நிதியாண்டுக்கு

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிட்ட வகையில், வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறைகளின் உள்ளபடியான அளவுகள் குறித்த மதிப்பீடுகளையும் தருகிறது. மூன்று நிதி குறியீடுகளின் இலக்குகள் பின்வருமாறு:

(i) 2025-26 ஆண்டுவாக்கில் வருவாய் பற்றாக்குறையை தவிர்ப்பது.

(ii) நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதத்தை 31 மார்ச் 2025க்குள் மூன்று விழுக்காட்டிற்குள் கொண்டுவருதல்,

(iii) கடனுக்கும் GSDP க்குமான விகிதத்தை 29.10 விழுக்காட்டிற்குள் வைத்திருத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளுக்கெதிராக 2023-24ல் எய்தப்பட்டவைகளின் விவரங்கள் பின்வரும் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளன.

## நிதியின் போக்குகள்

வாங்கப்பட்ட கடன் முழுவதும் மூலதன செலவிற்கு பயன்படுத்தும் பொருட்டும், வருவாய் பற்றாக்குறையை முழுவதும் நீக்கும் பொருட்டும், நடப்பாண்டில் நிதிக்குழுவின் மானியத்தின் ஒரு பகுதியாக வருவாய் பற்றாக்குறை மானியமாக ₹838.94 கோடியை தமிழக அரசு பெற்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டில் வருவாய் முதனிலை மற்றும் நிதிப் பற்றாக்குறை கணிசமாக உயர்ந்திருப்பதை **1.4 முதல் 1.6 வரையிலான விளக்கப்படங்கள்** காட்டுகின்றன. 2019-20ல் 24.35 விழுக்காடாக இருந்த வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் உள்ளிட்ட கடன் /GSDP விகிதம், 2021-22ல் 28.83 விழுக்காடாக உயர்ந்து 2022-23ல் 28.39 விழுக்காடாக ஓரளவு குறைந்து, நடப்பாண்டில் 28.00 விழுக்காடாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் குறைந்து, நடப்பாண்டில் 3.32 விழுக்காடாக இருந்தது.

**விளக்கப்படம் 1.4: பற்றாக்குறை அளவுருக்களின் போக்குகள்**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

நிதி பற்றாக்குறை GSDPல் 3.32 விழுக்காடு ஆகும். இது 2023-24 ஆம் ஆண்டிற்காக TNFR சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட மிக அதிகமாகும்.

வருவாய் பற்றாக்குறையை GSDP விழுக்காடாக பார்க்கும் போது கடந்த ஆண்டை விட 0.15 புள்ளிகள் அதிகரித்து காணப்பட்டது. எனினும், முதன்மைப் பற்றாக்குறை GSDP விழுக்காட்டில் 2021-22 ஆண்டிலிருந்து குறைவுப் போக்கில் காணப்பட்டது.




*பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹8,095 கோடியும், 2020-21ல் வழங்கப்பட்ட ₹6,241 கோடியும் இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனினும் வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

வருவாய் பற்றாக்குறையை நீக்குதல், நிதி பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த/நிலுவையில் உள்ள கடன்களை ஏற்கக்கூடிய அளவிற்கு குறைத்தல், மேம்பட்ட கடன் மேலாண்மை முறையை அமைத்தல், மத்திம கால கட்டமைப்பில் ஒளிவுமறைவற்ற தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நிதி மேலாண்மையில் விவேகத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் மாநில அரசு நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு - செலவு திட்ட மேலாண்மை சட்டத்தை (FRBM) இயற்றியது. பற்றாக்குறை மற்றும் கடன் அளவு தொடர்பாக மாநில அரசு பின்பற்ற வேண்டிய அளவிடக்கூடிய இலக்குகளை அச்சட்டம் விதிக்கிறது.

வருவாய் பற்றாக்குறையை நீக்குவதற்கும் நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கும் விதிக்கப்பட்ட காலக்கெடுவை தமிழ்நாடு அரசு TNFR சட்டம் 2003ஐ அவ்வப்போது திருத்துவதன் மூலம் நீட்டித்து வந்தது. TNFR சட்டம் 2003ஐ பின்பற்றும் வகையில், மாநில அரசு 2023-24 காலகட்டத்திற்கான மத்திம கால நிதி திட்டத்தை (MTFP) உருவாக்கியது.

வரவு செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட முக்கியமான நிதி மாறுபாடுகள் மற்றும் TNFR சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் உள்ளபடியானவை **அட்டவணை 1.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.4: TNFR சட்டத்தின் வழிவகைகளை பின்பற்றியமை**

| நிதி அளவுருக்கள் | சட்டத்தில் கூறப்பட்ட இலக்குகள்/MTFPல் எதிர்நோக்கப்பட்ட இலக்குகள் | சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
| தற்போதைய விலைவிகிதங்களில் GSDP (₹ கோடியில்) | | **17,43,144** | **17,88,074** | **20,72,496** | **23,93,364** | **27,21,571** |
| வருவாய் பற்றாக்குறை (-) / மிகை (+) (₹ கோடியில்) | 2025-26 ஆண்டுடன் வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் | **(-) 35,909** | **(-) 62,326** | **(-) 46,538** | **(-) 36,215** | **(-) 45,121** |
| நிதி பற்றாக்குறை (-) / மிகை (+) (GSDPன் விழுக்காடாக) | நிதிப் பற்றாக்குறையை மார்ச் 2025க்குள் மூன்று விழுக்காட்டிற்கு குறைத்தல் | **(-) 60,179** ***(3.45)*** | **(-) 93,983** ***(5.26)*** | **(-) 81,835** ***(3.95)*** | **(-) 81,886** ***(3.46)*** | **(-) 90,430** ***(3.32)*** |
| நிலுவையில் உள்ள மொத்த கடன் * (₹ கோடியில்) | | 4,24,447 | 5,13,223** | 5,97,573** | 6,79,554** | 7,62,006** |
| நிலுவையில் உள்ள மொத்த கடனுக்கும் GSDPக்கும் உள்ள விகிதம் (விழுக்காடு) | *29.10* விழுக்காடு | ***24.35*** | ***28.70*** | ***28.83*** | ***28.39*** | ***28.00*** |

* பொது கடன்கள் , வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் மற்றும் பொது கணக்கு பொறுப்புறுதிகளை உள்ளடக்கியதே மொத்த நிலுவை பொறுப்புகள் ஆகும் .

** பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹8,095 கோடியும், 2020-21ல் வழங்கப்பட்ட ₹6,241 கோடியும் இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆதாரம்: (i) TNFR சட்டம்; (ii) வரவு-செலவு திட்ட உரை மற்றும் (iii) உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

மாநிலம், ஒரே ஒரு அளவுரு, அதாவது, GSDPக்கும் கடனுக்குமான விகிதத்தில் மட்டுமே மேம்பாடு அடைந்துள்ளது. கடந்த ஆண்டு ₹36,215 கோடியாக இருந்த நிதிப்பற்றாக்குறை ₹45,121 கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால் 2025-26க்குள் நிதிப்பற்றாக்குறையை தவிர்க்க வேண்டும் என்பதே இலக்கு ஆகும். MTFPல் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான நிலைகள் **அட்டவணை 1.5ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.5: 2023-24 ஆண்டிற்கு MTFPல் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான நிலைகள்**

(₹ கோடியில்)

| வ. எண் | நிதி மாறுபாடுகள் | MTFPல் எதிர்பார்ப்பு | உள்ளபடியானவை (2023-24) | வேறுபாடு (விழுக்காடு) |
|---|---|---|---|---|
| 1 | சொந்த வரி வருவாய் | 1,78,500 | 1,67,279 | *(-) 6.29* |
| 2 | வரியல்லாத வருவாய் | 17,868 | 25,904 | *44.97* |
| 3 | மத்திய அரசின் வரிகளில் பங்கு | 37,571 | 46,072 | *22.63* |
| 4 | இந்திய அரசிடமிருந்து உதவி மானியம் | 45,120 | 25,342 | *(-) 43.83* |
| 5 | வருவாய் வகை வரவுகள் **(1+2+3+4)** | **2,79,059** | **2,64,597** | *(-) 5.18* |
| 6 | வருவாய் வகை செலவு | 3,05,372 | 3,09,718 | *1.42* |
| 7 | வருவாய் பற்றாக்குறை (-)/ மிகை (+) **(5-6)** | **(-) 26,313** | (-) 45,121 | *71.48* |
| 8 | நிதி பற்றாக்குறை (-)/மிகை (+) | **(-) 89,884** | (-) 90,430 | *0.61* |
| 9 | கடன் - GSDP விகிதம் (விழுக்காடு#) | *29.10* | *28.00** | *(-) 1.10* |
| 10 | தற்போதைய விலை விகிதங்களில் GSDPன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *18.92* | *13.71* | *(-) 5.21* |

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் திருப்பித் தர வேண்டாத கடனாக வழங்கப்பட்டவை (2021-22 ₹8,095 கோடி மற்றும் 2020-21ல் ₹6,241 கோடி), இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

# கடன்கள் என்பது உள்நாட்டுக் கடன், மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள், பொதுக் கணக்கு பொறுப்புறுதிகள் மற்றும் வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களை உள்ளடக்கியதாகும்.

(ஆதாரம்: (i) MTFP; (ii) நிதி கணக்குகள்; GSDP இலக்கங்கள்: மத்திய புள்ளிவிவர அலுவலகம்)

மத்திய அரசின் வரிகளில் பங்கு, வரியல்லாத வருவாய் ஆகியவை 2023-24ல் MTFPல் எதிர்நோக்கப்பட்ட இலக்குகளை விட கணிசமாக உயர்ந்திருந்தது என்பது மேலே உள்ள அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. மாறாக வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறைகள் MTFPல் எதிர்நோக்கப்பட்ட இலக்குகளைவிட அதிகமாக இருந்தன. இந்திய அரசிடமிருந்து பெறப்படும் மானியத்தில் ஏற்பட்ட கணிசமான குறைவு மற்றும் MTFPல் எதிர்நோக்கப்பட்டதை விட சொந்த வரிவருவாயில் ஏற்பட்ட குறைவு ஆகியவையே இதற்கு காரணமாகும். TNFR சட்டத்தின்படி 2025-26க்குள் வருவாய் பற்றாக்குறை முற்றிலும் நீக்கப்பட வேண்டும், என்றாலும் வருவாய் பற்றாக்குறை (-) ₹45,121 கோடியாக உள்ளது. (MTFP எதிர்பார்ப்பை விட 71.48 விழுக்காடு அதிகம் ஆகும்).

## 1.9 தணிக்கையின் ஆய்வுக்கு பின் பற்றாக்குறைகள் மற்றும் மொத்த கடன் தொகைகளின் அளவுகள்

நிதி மற்றும் நிதியொதுக்க கணக்குகளின் பகுப்பாய்வை அடிப்படையாக கொண்ட பல்வேறு நிதிவகையிலான அளவீடுகளில் தணிக்கை காண்புரையின் தாக்கத்தை இப்பிரிவு எடுத்துரைக்கிறது.

TNFR சட்டத்தின்படி, பற்றாக்குறைகள், கடன்கள் மற்றும் உத்தரவாதங்களுக்கான உச்சவரம்பு போன்ற நிதி குறியீடுகளுக்கான இலக்குகளை அடைவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். வருவாய் வகை செலவுகளை மூலதன செலவுகளாக வகைப்படுத்துதல் மற்றும் வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டு வாங்கப்பட்ட கடன்கள் போன்ற பல்வேறு காரணிகள் வருவாய் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறையை கணக்கிடுவதில் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், கடன்களை தள்ளிப்போடுதல், மேல்வரி/உரிமைத் தொகைகளை தொகு நிதிக்குள் செலுத்தாமல் இருப்பது, சேம நிதி, உத்தரவாத மீட்பு நிதி, புதிய ஓய்வூதிய திட்டம் போன்றவைகளுக்கு குறைவாக பங்களிப்பு போன்றவையும் வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும். உள்ளபடியான பற்றாக்குறையை கண்டறிய, வருவாய்/மூலதனம் போன்றவற்றில் தவறாக வகைப்பாடுகளை கவனத்தில் கொள்வதுடன் அத்தகைய தவறுகளால் ஏற்படும் தாக்கத்தையும் சரிசெய்ய வேண்டும்.

### 1.9.1 தணிக்கையின் ஆய்வுக்கு பிந்தைய பகுப்பாய்வு

நடப்பாண்டின் பரிவர்த்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் சில கணக்கு சரிசெய்தல் காரணமாக, வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை பாதிக்கப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. இது **அட்டவணை 1.6ல்** கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 1.6: குறைவாக/மிகையாக காட்டப்பட்ட வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை**

| விவரங்கள் | வருவாய் பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (குறைவாக காட்டப்பட்டது (+) / மிகையாக காட்டப்பட்டது (-)) (₹ கோடியில்) | நிதி பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (குறைவாக காட்டப்பட்டது (+) / மிகையாக காட்டப்பட்டது (-)) (₹ கோடியில்) |
|---|---|---|
| வட்டித்தொகை மாற்றத்தில் குறைவு . | (+) 96.04 | (+) 96.04 |
| திருப்பி செலுத்தப்படாத எதிர்பாரா செலவு நிதி | (+) 5.47 | (+) 5.47 |
| புதிய ஓய்வூதியத் திட்டத்தில் குறைவான பங்களிப்பு | (+) 99.76 | (+) 99.76 |
| மொத்தம் | (+) 201.27 | (+) 201.27 |

(ஆதாரம் : நிதி கணக்குகளின் NTFA மற்றும் தணிக்கைக்குப் பிந்தைய பகுப்பாய்வு )

மேலே உள்ள **அட்டவணை 1.6ல்** கூறப்பட்டுள்ள குறைவான வட்டித்தொகை மாற்றம், திருப்பி செலுத்தப்படாத எதிர்பாரா செலவு நிதி, மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு குறைவான பங்களிப்பு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டால், நடப்பாண்டில், மாநிலத்தின் நிதி

பற்றாக்குறை ₹90,430 கோடியிலிருந்து (**பத்தி 1.8**) ₹90,631.27 கோடியாக உயரும். மேலும், மேலே கூறப்பட்டுள்ளவைகளை எடுத்துக்கொண்டால், வருவாய் பற்றாக்குறை ₹ 45,322.27 கோடியாகவும், நிதி பற்றாக்குறைக்கும் GSDPக்குமான விகிதம் 3.33 விழுக்காடாகவும் இருக்கும் என்பதை இங்கு சொல்வது பொருத்தமானதாக இருக்கும்.

### 1.9.2 நிதிப் பொறுப்புகளின் போக்குகள்

நிலுவையில் உள்ள மாநில அரசின் கடன்கள் / பொறுப்புகள் மீதான பகுப்பாய்வு, அவற்றை (i) GSDPன் விழுக்காடு மற்றும் (ii) அரசின் நிலுவை கடன்களின் வளர்ச்சி விகிதம் என்ற வகைகளில் **அட்டவணை 1.7** மூலம் விளக்குகிறது.

**அட்டவணை 1.7: நிலுவையில் உள்ள மொத்த கடன்கள் / பொறுப்புகள்**

(₹ கோடியில்)

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் உட்பட நிலுவையில் உள்ள மொத்த கடன்கள் / பொறுப்புகள் | 4,24,447 | 5,13,223* | 5,97,573* | 6,79,554* | 7,62,006* |
| நிலுவையில் உள்ள கடன்களின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | 14.87 | 20.92 | 16.44 | 13.72 | 12.13 |
| வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலுவையில் உள்ள மொத்த கடனுக்கும் GSDPக்கும் உள்ள விகிதம் (விழுக்காடு) | 24.35 | 28.70 | 28.83 | 28.39 | 28.00 |

* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் திருப்பித் தர வேண்டாத கடனாக 2021-22ல் வழங்கப்பட்ட ₹8,095.25 கோடி மற்றும் 2020-21ல் வழங்கப்பட்ட ₹6,241 கோடி, இந்த குறியீடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)

வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் உள்ளிட்ட கடன் நிலுவை முந்தைய ஆண்டைவிட 12.13 விழுக்காடு உயர்ந்தது. இது 2022-23 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதமான 13.72 விழுக்காட்டை விட குறைவாகும். நடப்பாண்டின் மூலதன வகை செலவின வளர்ச்சி வீதம் 2.45 விழுக்காடு (கடந்தாண்டில் 6.81 விழுக்காடு) என்பதும் அதிக அளவிலான நிதி பற்றாக்குறையும், நடப்பாண்டில் வாங்கப்பட்ட கடன் தொகைகள், வருவாய் வகை செலவை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டது என்பதை காட்டுகின்றன.

மூலதன செலவின் வளர்ச்சி வீதமானது , கடந்த மூன்று ஆண்டுகளில் முறையே 11.92 விழுக்காடு (2021-22) 6.81 விழுக்காடு (2022-23) மற்றும் 2.45 விழுக்காடு (2023-24) என குறைவுப் போக்கில் காணப்பட்டது . இது கடன் மூலம் பெற்ற பணத்தை வருவாய் செலவினத்திற்காக அதிக அளவில் பயன்படுத்தியதை சுட்டிக்காட்டுகிறது. இதனால் எந்த அளவு மூலதன உருவாக்கம் குறைந்ததோ, அந்த அளவிற்கு, கடன், வருங்கால தலைமுறையினர் மீதான சுமையாக மாறும்.

கடன்/GSDP விகிதம் (28.00 விழுக்காடு) MTFPல் கூறப்பட்ட வரம்பான 29.10 விழுக்காட்டிற்குள் இருந்தது.

# அத்தியாயம் II

# மாநில அரசின் நிதிகள்

# அத்தியாயம் II

# மாநில அரசின் நிதிகள்

இந்த அத்தியாயம், தமிழ்நாடு அரசின் நடப்பாண்டு (2023-24) நிதிநிலை குறித்த ஒரு விரிவான பார்வையை அளிக்கிறது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் இருந்த ஒட்டுமொத்த போக்குகளை கருத்தில் கொண்டும், கடந்த ஆண்டின் (2022-23) நிதி நிலையோடு ஒப்பிட்டும், நடப்பாண்டில் நேர்ந்த மிக முக்கியமான மாறுதல்களை ஒரு பகுப்பாய்வு செய்கிறது.

## 2.1 2022-23 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2023-24 ஆண்டின் நிதி நடவடிக்கைகளின் சுருக்கம்

கடந்த ஆண்டோடு (2022-23) ஒப்பிட்ட வகையில் மாநில அரசின் நடப்பாண்டிற்கான (2023-24) நிதி நடவக்கைகளின் சுருக்கத்தை **அட்டவணை 2.1** வழங்குகிறது. 2019-20 முதல் 2023-24 வரையுள்ள காலகட்டத்தில் நிதி குறியீடுகளின் போக்கை **இணைப்பு 2.1** காட்டுகிறது.

**அட்டவணை 2.1: 2022-23 ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் 2023-24 ஆண்டின் நிதி செயல்பாடுகளின் சுருக்கம்**

*(₹ கோடியில்)*

| வரவுகள் | 2022-23 | 2023-24 | செலவுகள் | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| பிரிவு-அ: வருவாய் | | | | | |
| **வருவாய் வகை வரவுகள்** | **2,43,749.34** | **2,64,596.66** | **வருவாய் வகை செலவு** | **2,79,964.48** | **3,09,717.77** |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,50,222.75 | 1,67,278.40 | பொது பணிகள் | 99,096.70 | 1,13,335.69 |
| வரியில்லாத வருவாய் | 17,060.95 | 25,903.83 | சமூக பணிகள் | 88,967.59 | 1,01,245.51 |
| மத்திய அரசு வரிகள் / தீர்வைகளில் பங்கு | 38,731.24 | 46,072.27 | பொருளாதார பணிகள் | 71,974.59 | 71,572.86 |
| இந்திய அரசின் மானியங்கள் | 37,734.40 | 25,342.16 | உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள் | 19,925.60 | 23,563.71 |
| பிரிவு-ஆ: மூலதன வகை மற்றும் பிற இனங்கள் | | | | | |
| பல்வகை மூலதன வகை வரவுகள் | 41.97 | 11.88 | **மூலதன செலவு** | **39,529.91** | **40,500.20** |
| | | | பொது பணிகள் | *1,040.98* | *950.05* |
| | | | சமூக பணிகள் | *14,323.77* | *14,398.05* |
| | | | பொருளாதார பணிகள் | *24,165.16* | *25,152.10* |
| மீள பெறப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 1,078.10 | 4,024.47 | வழங்கப்பட்ட கடன்கள், முன்பணங்கள் | 7,260.82 | 8,845.11 |
| பொது கடன் வரவுகள் | 1,01,061.71 | 1,31,597.14 | திருப்பி செலுத்தப்பட்ட பொது கடன் | 27,104.39 | 43,564.79 |
| எதிர்பாரா செலவு நிதி | -- | -- | எதிர்பாரா செலவு நிதி | -- | 5.47 |
| பொது கணக்கு வரவுகள் | 4,79,342.00 | 5,44,412.09 | பொது கணக்கு செலவுகள் | 4,62,458.90 | 5,38,015.71 |
| துவக்க ரொக்க இருப்பு | 72,386.10 | 81,340.72 | இறுதி ரொக்க இருப்பு | 81,340.72 | 85,333.91 |
| மொத்தம் | 8,97,659.22 | 10,25,982.96 | மொத்தம் | 8,97,659.22 | 10,25,982.96 |

*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்)*

**அட்டவணை 2.2: 2022-23 உடன் ஒப்பிடுகையில் 2023-24ல் முக்கிய நிதி தொகுப்பு இலக்கங்களில் முக்கிய மாற்றங்கள்**

| | |
|---|---|
| வருவாய் வகை வரவுகள் | ✓ மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள் 8.55 விழுக்காடு அளவிற்கு உயர்ந்தது.<br>✓ மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 11.35 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ வரியல்லாத வருவாய் 51.83 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு 18.95 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ இந்திய அரசின் உதவி மானியங்கள் 32.84 விழுக்காடு குறைந்தது. |
| வருவாய் வகை செலவு | ✓ வருவாய் வகை செலவுகள் 10.63 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 14.37 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 13.80 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான வருவாய் வகை செலவுகள் 0.56 விழுக்காடு அளவு சற்று குறைந்தது.<br>✓ உதவி மானியங்கள் மீதான செலவுகள் 18.26 விழுக்காடு உயர்ந்தது. |
| மூலதன வகை வரவுகள் | ✓ மூலதன வரவுகள் ( கடன் மற்றும் கடன் அல்லாத வரவுகள் ) 32.74 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பலதரப்பட்ட மூலதன வரவுகள் 71.43 விழுக்காடு அளவு குறைந்தன. |
| மூலதன வகை செலவு | ✓ மூலதன வகை செலவுகள் 2.45 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 8.74 விழுக்காடு குறைந்தது.<br>✓ சமூக பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 0.52 விழுக்காடு அளவு சற்று உயர்ந்தது.<br>✓ பொருளாதார பணிகள் மீதான மூலதன வகை செலவுகள் 4.08 விழுக்காடு உயர்ந்தது. |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | ✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்குதல் 21.82 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப் பெறுதல் 273.29 விழுக்காடு உயர்ந்தது. |
| பொது கடன் | ✓ கடன் சார்ந்த வரவுகள் 30.21 விழுக்காடு உயர்ந்தது .<br>✓ பொது கடன் திரும்ப செலுத்துதல் 60.73 விழுக்காடு உயர்ந்தது. |
| பொது கணக்கு | ✓ பொது கணக்கு வரவுகள் 13.57 விழுக்காடு உயர்ந்தது.<br>✓ பொது கணக்கு செலவுகள் 16.34 விழுக்காடு உயர்ந்தது. |
| ரொக்க இருப்பு | ✓ கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ல் ரொக்க இருப்பு ₹3,993.19 கோடி (4.91விழுக்காடு) உயர்ந்தது. |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ல் நிகழ்ந்த முக்கிய மாற்றங்கள் பின்வரும் துணை பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

➢ **மாநிலத்தின் வருவாய் வரவுகள்** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.55 விழுக்காடு (₹20,847 கோடி) அளவிற்கு உயர்ந்தது. வருவாய் வகை வரவுகளில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) இழப்பீடான ₹4,574 கோடி உள்ளடங்கியுள்ளது.

➢ **வருவாய் வகை செலவினம்** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹29,753 கோடி (10.63 விழுக்காடு) உயர்ந்தது. இவ்வுயர்வுக்கு, சந்தை கடன்கள் மீதான வட்டி கொடுப்புகள் (₹41,418 கோடி) மின்வாரியங்களுக்கான உதவி (₹24,040 கோடி) ஓய்வூதியம் மற்றும்

இதர ஓய்வூதியம் பலன்களுக்காக அதிகரித்து வழங்கப்பட்ட தொகை (₹16,709 கோடி) மற்றும் மகளிர் நலம் (₹6,411 கோடி) ஆகியவை முக்கிய காரணங்களாகும்.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ல் **மூலதனச் செலவு** 2.45 விழுக்காடு (₹970 கோடி) உயர்ந்தது. 2021-22 உடன் ஒப்பிடுகையில் ஆனால் 2022-23ல் 6.81 விழுக்காடு உயர்வு இருந்தது.
- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் **பொதுக் கடன் வரவுகள் அதாவது கடன்கள்** மற்றும் பொதுக்கடன் திருப்பி செலுத்துதல் முறையே ₹30,535 கோடி (30.21 விழுக்காடு) மற்றும் ₹16,460.40 கோடி (60.73 விழுக்காடு) உயர்ந்தது.
- **கடன்கள் மற்றும் முன்பணங்களை மீளப்பெறுதல்** நடப்பாண்டில் ₹2,946 கோடி (273.29 விழுக்காடு) அதிகரித்தது. இதற்கு சட்டபூர்வ நிறுவனங்கள் / அரசு நிறுவனங்கள் (₹2,209.27 கோடி -பொருளாதார சேவையின் கீழ்) மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் (₹960.90 கோடி – சமூக சேவையின் கீழ்) பெற்ற கடனை திருப்பிச் செலுத்தியதே காரணம் ஆகும்.
- **கடன்கள் மற்றும் முன்பணங்கள்** வழங்குவது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ₹1,584 கோடி (22 விழுக்காடு) உயர்ந்தது. இந்த ஆண்டு, நகர்புற மேம்பாட்டில் "பிற மேம்பாடு திட்டங்கள்" கீழ் பொதுத்துறை மற்றும் பிற நிறுவனங்களுக்கு ₹6,275 கோடி அளவு கடன் வழங்கப்பட்டதே இதற்கு முக்கிய காரணமாகும்.
- **பொது கணக்கு வரவுகள் மற்றும் செலவுகள்** முறையே ₹65,070 கோடி (14 விழுக்காடு) மற்றும் ₹75,557 கோடி (16 விழுக்காடு) கடந்த ஆண்டை காட்டிலும் உயர்ந்துள்ளது. 2022-23ல் ₹16,883 கோடியாக இருந்த நிகர பொது கணக்கு நடப்பாண்டில் ₹6,396 கோடியாக இருந்தது. காப்பு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகை வைப்பு நிதி மற்றும் முன்பணங்கள் திருப்பி கொடுப்பு ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பால் நிகர பொதுக் கணக்கில் குறைவு ஏற்பட்டது.
- மேற்கூறியவற்றின் நிகர விளைவாக, ஆண்டு முடிவில் இருந்த ரொக்க இருப்பு முந்தைய ஆண்டின் இருப்பைவிட ₹3,993 கோடி கூடுதலாக இருந்தது. எனினும், இக்கூடுதல் தொகை மூலம் 4.91 விழுக்காடு மட்டுமே உயர்வு ஏற்பட்டது. ஆனால் 2022-23ல் முந்தைய ஆண்டை விட 12.37 விழுக்காடு உயர்வு காணப்பட்டது.

## 2.2 நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்

**அட்டவணை 2.3: 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் நிதி ஆதாரங்கள் மற்றும் செலவினங்கள்பற்றிய விவரங்கள்**

(₹ கோடியில்)

| | பொருள் | 2022-23 | 2023-24 | கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| ஆதாரங்கள் | ரிசர்வ் வங்கியில் துவக்க இருப்பு | 72,386 | 81,341 | 8,955 |
| | வருவாய் வகை வரவுகள் | 2,43,749 | 2,64,597 | 20,848 |
| | கடன்கள் மற்றும் முன் பணங்கள் மீளப்பெறப்பட்டமை | 1,078 | 4,024 | 2,946 |
| | பல்வகை மூலதன வகை வரவுகள் | 42 | 12 | (-) 30 |
| | பொது கடன் வரவுகள்(நிகரம்) | 73,958 | 88,032 | 14,074 |
| | பொது கணக்கு வரவுகள்(நிகரம்) | 16,883 | 6,396 | (-) 10,487 |
| | **மொத்தம்** | **4,08,096** | **4,44,402** | **36,306** |
| செலவினங்கள் | வருவாய் வகை செலவு | 2,79,964 | 3,09,718 | 29,754 |
| | மூலதன வகை செலவு | 39,530 | 40,500 | 970 |
| | கடன்கள் மற்றும் முன்பணங்கள் வழங்கல் | 7,261 | 8,845 | 1,584 |
| | எதிர்பாரா செலவுநிதி | .. | 5 | 5 |
| | ரிசர்வ் வங்கியில் இறுதி இருப்பு | 81,341 | 85,334 | 3,993 |
| | **மொத்தம்** | **4,08,096** | **4,44,402** | **36,306** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.1: நிதி வரும் மற்றும் செல்லும் வழிகள்**







RE – *வருவாய் வகை செலவினம்.*

(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

## 2.3 மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

1. **வருவாய் வகை வரவுகள்** என்பதில் வரி வருவாய் (சொந்த வரி வருவாய், மத்திய அரசு வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு) வரியல்லாத வருவாய் மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

2. **மூலதன வரவுகள்** (கடன்கள் மற்றும் கடன்களில்லாத மூலதன வரவுகள்) என்பதில் முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள்/ வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்), இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

   வருவாய், மூலதன ஆகிய இரண்டு வகை வரவுகளும் மாநிலத்தின் தொகுநிதியின் பகுதிகள் ஆகும்.

3. **பொது கணக்கு நிகர வரவுகள்:** சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநலநிதிகள், வைப்புத் தொகைகள், அனாமத்து செலுத்துகைகள், போன்றவை தொடர்பான, தொகுநிதியின் பகுதிகளாக சேராத, சில வரவு மற்றும் செலவு இனங்கள் உள்ளன.

   இவை, அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 266(2)ன் கீழ் அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும். இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

### 2.3.1 மாநிலத்தின் வரவுகள்

வருவாய் மற்றும் மூலதனம் ஆகிய இரு வகைகளை சார்ந்த வரவுகளே மாநில அரசின் நிதி ஆதாரங்களாக உள்ளன. இவை தவிர, பொது கணக்கில் உள்ள நிதியை (செலவு போக உள்ள நிகர தொகை) அரசு தன் நிதி பற்றாக்குறையை சமன் செய்ய பயன்படுத்துகிறது.

**2023-24 ஆண்டில் மாநிலத்தின் வரவுகளின் கூறுகள்**




இந்த ஆண்டில் மாநில அரசிடம் இருந்த மொத்த நிதி ஆதாரம் ₹4,06,626 கோடி ஆகும். இதில், வருவாய் வகை வரவினம் ₹2,64,597 கோடி (மொத்த நிதி ஆதாரத்தில் 65.07 விழுக்காடு) ஆகும். மூலதன வகை வரவுகள் (₹1,35,633 கோடி) மற்றும் பொது கணக்கு நிகர வரவுகள் (₹6,396 கோடி) ஆகியன மொத்த நிதி ஆதாரத்தில் முறையே 33.36 விழுக்காடு மற்றும் 1.57 விழுக்காடாக இருந்தன.

## 2.3.2 மாநிலத்தின் வருவாய் வகை வரவுகள்

அரசின் வருவாய் வகை வரவுகளை நிதி கணக்குகளின் விவர அறிக்கை 14 விளக்குகிறது. வருவாய் வகை வரவுகளில், மாநிலத்தின் சொந்த வரிகள் மற்று வரியல்லாத வருவாய்கள், இந்திய அரசிடமிருந்து மத்திய வரி மாற்றங்கள் மற்றும் உதவி மானியங்கள் என்பன அடங்கும்.

### *2.3.2.1 வருவாய் வகை வரவுகளின் போக்கும் வளர்ச்சியும்*

கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் GSDP தொடர்பாக வருவாய் வரவினங்களின் போக்குகள் மற்றும் வளர்ச்சி ஆகியன **அட்டவணை 2.4ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4: வருவாய் வகை வரவுகளின் போக்கு**

| அளவுருக்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| வருவாய் வகை வரவுகள் (₹ கோடியில்) | 1,74,526 | 1,74,076 | 2,07,492 | 2,43,749 | 2,64,597 |
| வருவாய் வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | 0.45 | (-) 0.26 | 19.20 | 17.47 | 8.55 |
| சொந்த வரி வருவாய் (₹ கோடியில்) | 1,07,462 | 1,06,153 | 1,22,866 | 1,50,223 | 1,67,279 |
| மத்திய அரசு வரிகள் / தீர்வைகளில் பங்கு (₹ கோடியில்) | 26,393 | 24,924 | 37,458 | 38,731 | 46,072 |
| வரியில்லாத வருவாய் (₹ கோடியில்) | 12,888 | 10,422 | 12,117 | 17,061 | 25,904 |
| இந்திய அரசின் மானியங்கள் (₹ கோடியில்) | 27,783 | 32,576 | 35,051 | 37,734 | 25,342 |
| சொந்த வருவாய் (சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய்) | 1,20,350 | 1,16,575 | 1,34,983 | 1,67,284 | 1,93,183 |
| சொந்த வருவாயின் வளர்ச்சிவீதம் (சொந்த வரி வருவாய் மற்றும் வரியல்லாத வருவாய்) (*விழுக்காட்டில்*) | 0.51 | (-) 3.14 | 15.79 | *23.93* | 15.48 |
| GSDP (₹ கோடியில்) (2011-12 வரிசை) | 17,43,144 | 17,88,074 | 20,72,496 | 23,93,364 | 27,21,571 |
| GSDPயின் வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்) | *6.93* | *2.58* | *15.91* | *15.48* | *13.71* |
| வருவாய் வரவுகள்/GSDP (விழுக்காட்டில்) | 10.01 | 9.74 | 10.01 | 10.18 | 9.72 |

*(தற்போதைய விலைவிகிதங்களின்படியான GSDP பற்றிய தகவல்களுக்கான ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை)*

- வருவாய் வரவுகளின் வளர்ச்சி வீதம் 2022–23ல் 17.47 விழுக்காடாகும் (₹36,257 கோடி). இந்த வளர்ச்சி வீதம் 2023-24ல் 8.55 விழுக்காடாக (₹20,848 கோடி) குறைந்தது.

**விளக்கப்படம் 2.2 : வருவாய் வரவினங்களின் போக்கு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

கடந்த ஐந்து ஆண்டுகளில் வருவாய் வரவினங்கள் GSDPல் 9.72 முதல் 10.18 விழுக்காடுகளுக்கு இடையே இருந்தன .

வருவாய் வகை வரவின் கூறுகளின் போக்கு விளக்கப்படம் 2.3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.3: வருவாய் வரவின கூறுகளின் போக்குகள்




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நடப்பாண்டில், GIAல் ஏற்பட்ட குறைவுக்கு மாறாக வருவாய் வரவினங்களின் கூறுகளான, சொந்த வரிவருவாய், வரியில்லாத வருவாய் மற்றும் மத்திய அரசு வரிகளின் பங்கு ஆகியவை அதிகரித்துக் காணப்பட்டன.

## *2.3.2.2 மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்*

மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களில் அதன் சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் என்பன அடங்கும். அவை பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

### சொந்த வரி வருவாய்

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில், மாநில GST, மாநில ஆயத்தீர்வை, வாகன வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம், நில வரி, சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரிகள் போன்றவை அடங்கும், சொந்த வரி வருவாயின் வளர்ச்சி வீதம் **விளக்கப்படம் 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.4: 2019-24 ஆண்டுகளில் சொந்த வரி வருவாயின் வளர்ச்சி




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2021-22 முதல் 2023-24 வரை சொந்த வரிவருவாய் அதிகரித்து காணப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளாக சொந்த வரிவருவாய் மொத்த வருவாய் வரவினங்களில் கிட்டத்தட்ட 60 விழுக்காடு உள்ளது.

### மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்

பெரும் வரிகள் மற்றும் தீர்வைகள் மூலமான வருவாய் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.5ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5: மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் கூறுகள்**

(₹ கோடியில்)

| வருவாய் தலைப்புகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| மாநில சரக்கு மற்றும் சேவை வரி | 38,376 | 37,942 | 45,277 | 53,823 | 61,961 | |
| விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரிகள் | 44,515 | 43,489 | 48,668 | 59,143 | 60,200 | |
| மாநில ஆயத்தீர்வை | 7,206 | 7,822 | 8,237 | 10,423 | 10,774 | |
| வாகனங்கள் மீதான வரி | 5,675 | 4,561 | 5,627 | 7,513 | 9,375 | |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரபதிவு கட்டணங்கள் | 10,856 | 11,675 | 14,331 | 17,560 | 19,013 | |
| நில வருவாய் | 258 | 211 | 205 | 248 | 256 | |
| சரக்கு மற்றும் பயணிகள் மீதான வரி | 11 | 2 | 12 | 5 | 7 | |
| இதர வரிகள் | 565 | 451 | 509 | 1,508 | 5,693 | |
| **மொத்தம்** | **1,07,462** | **1,06,153** | **1,22,866** | **1,50,223** | **1,67,279** | |
| முந்தைய ஆண்டைவிட வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்) | **(1.83)** | **((-) 1.22)** | **(15.74)** | **(22.27)** | **(11.35)** | |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- கடந்த ஆண்டில் 22.27 விழுக்காடாக இருந்த சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2023-24ல் 11.35 விழுக்காடு அளவுக்கு உயர்ந்து இருந்தது.
- சொந்த வரி வருவாயின் வளர்ச்சி வீதம் 10.92 விழுக்காடு புள்ளிகள் குறைந்ததற்கு, விற்பனை, வணிகம் போன்றவற்றின் மீதான வரிகளின் வளர்ச்சி வீதத்தில் குறைவு ஏற்பட்டதே காரணமாகும். முந்தைய ஆண்டில் 21.52 விழுக்காடாக இருந்த வளர்ச்சி வீதம் வெறும் 1.79 விழுக்காடு மட்டுமே அதிகரித்தது.
- திருத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) தொகையான ₹63,338 கோடிக்கு மாறாக, வசூலிக்கப்பட்ட தொகை ₹61,961 கோடியாகும் (2.18 விழுக்காடு குறைவு).

### வரியல்லாத வருவாய்

வட்டி வரவுகள், பங்கு ஆதாயம் மற்றும் இலாபங்கள், சுரங்கம் மற்றும் பிற துறை வரவுகள் போன்றவை வரியல்லாத வருவாய் ஆகும். அவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.6ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.6:** ***மாநிலத்தின் வரியில்லாத வருவாயின் கூறுகள்***

(₹ கோடியில்)

| வருவாய் தலைப்புகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | பொறி கோடுகள் |
|---|---|---|---|---|---|---|
| வட்டி வரவுகள் | 4,356 | 3,524 | 3,918 | 4,747 | 9,969 | |
| பங்கு ஆதாயம் மற்றும் இலாபங்கள் | 192 | 205 | 272 | 301 | 700 | |
| இதர வரியல்லாத வருவாய்கள் | 8,340 | 6,693 | 7,927 | 12,013 | 15,235 | |
| அ) பெரிய மற்றும் சிறிய பாசன திட்டங்கள் | 48 | 60 | 66 | 71 | 126 | |
| ஆ) சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் | 83 | 181 | 118 | 231 | 398 | |
| இ) நகர்ப்புற மேம்பாடு | 781 | 829 | 743 | 1,092 | 1,469 | |
| ஈ) கல்வி | 1,793 | 1,650 | 1,065 | 2,206 | 1,470 | |
| உ) இரும்புசார சுரங்கங்கள் | 1,150 | 765 | 1,005 | 1,200 | 1,550 | |
| எ) ஏனையவை | 4,485 | 3,208 | 4,930 | 7,213 | 10,221 | |
| **மொத்தம்** | **12,888** | **10,422** | **12,117** | **17,061** | **25,904** | |
| மாநிலத்தின் சொந்த வள ஆதாரங்களில் வரியல்லாத வரி (விழுக்காட்டில்) | *10.71* | *8.94* | *8.98* | *10.20* | *13.41* | |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

➢ 2023-24ல் மாநிலத்தின் வரியல்லாத வருவாய், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹8,843 கோடி (51.83 விழுக்காடு) உயர்ந்தது. மாநிலத்தின் சொந்த வருவாயின் பங்கு என்ற வகையில், 2022-23ல் 10.20 விழுக்காடு என்ற அளவில் இருந்த வரியல்லாத வருவாய் 2023-24ல் 13.41 விழுக்காடாக உயர்ந்தது.

### *2.3.2.3 மத்திய அரசிடமிருந்து நிதி மாற்றம்*

2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் மத்திய அரசிடமிருந்து ஆன நிதி மாற்றங்களின் போக்கு கீழே **விளக்கப்படம் 2.5ல்** தரப்பட்டுள்ளது:

**விளக்கப்படம் 2.5 : மத்திய அரசிடமிருந்தான நிதி மாற்றத்தின் போக்கு**




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

2022-23 வரை அதிகரிக்கும் போக்கில் காணப்பட்ட மத்திய அரசின் நிதிமாற்றம், நடப்பாண்டில் ₹5,051 கோடி (6.61 விழுக்காடு) குறைந்தது. இக்குறைவுத் தொகைக்கு GST தொடர்பான ((-) 71.79 விழுக்காடு) வருவாய்

நட்டத்திற்காக மாநில அரசுக்கு குறைவான இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டதே காரணமாகும்.

மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு, மத்திய வரி மாற்றத்தின் கூறுகள் மற்றும் இந்திய அரசின் உதவி மானியங்கள் குறித்த விவரங்கள் **அட்டவணைகள் 2.7** முதல் **2.9** வரையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.7: மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு-நிதி குழுவின் பரிந்துரையின்படியான தொகை மற்றும் உள்ளபடியாக மாற்றப்பட்ட தொகை**

(₹ கோடியில்)

| ஆண்டு | நிதி குழுவின் பரிந்துரை | நிதி குழுவின் பரிந்துரையின்-படியான தொகை* | உள்ள படியாக மாற்றப்பட்ட தொகை | வேறுபாடு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (4-3) |
| 2015-16 | சேவை வரி தவிர்த்து அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.023 விழுக்காடு மற்றும் பகிரக்கூடிய சேவை வரியின் நிகர வசூல் தொகையில் 4.104 விழுக்காடு (XIVவது நிதிக் குழு பரிந்துரையின்படி) | 23,389 | 20,354 | (-) 3,035 |
| 2016-17 | | 26,992 | 24,538 | (-) 2,454 |
| 2017-18 | | 31,189 | 27,100 | (-) 4,089 |
| 2018-19 | | 36,084 | 30,639 | (-) 5,445 |
| 2019-20 | | 41,796 | 26,393 | (-) 15,403 |
| **2015-20** | | **1,59,450** | **1,29,024** | **(-) 30,426** |
| 2020-21 | அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.189 விழுக்காடு (XVவது நிதிக் குழு பரிந்துரையின்படி) | 35,823 | 24,925 | (-) 10,898 |
| 2021-22 | அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.079 விழுக்காடு | 26,864 | 37,459 | 10,595 |
| 2022-23 | | 29,884 | 38,731 | 8,847 |
| **2023-24** | **அனைத்து பகிரக்கூடிய வரிகளின் நிகர வசூல் தொகையில் 4.079 விழுக்காடு** | **33,627** | 46,072 | **12,445** |

* *நிதி குழுவின் பரிந்துரைகள்*

*(ஆதாரம்: நிதித் துறையால் வழங்கப்பட்ட விவரங்கள்)*

### *மத்திய அரசு வரிகள்/தீர்வைகளில் பங்கு*

**அட்டவணை 2.8: மத்திய வரிகள் மாற்றத்தின் கூறுகள்**

(₹ கோடியில்)

| தலைப்பு | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (CGST) | 7,489.35 | 7,406.64 | 10,308.10 | 10,945.36 | 13,982.28 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) | -- | -- | -- | -- | -- |
| நிறுவன வரி | 8,998.76 | 7,520.26 | 10,912.73 | 12,982.89 | 13,828.96 |
| நிறுவன வரி தவிர்த்து வருமானம் மீதான வரிகள் | 7,051.14 | 7,709.82 | 10,911.33 | 12,678.31 | 15,970.41 |
| சுங்க வரி | 1,672.92 | 1,324.08 | 2,920.27 | 1,522.68 | 1,614.53 |
| மத்திய ஆயத்தீர்வை | 1,163.13 | 837.75 | 1,753.77 | 477.69 | 610.97 |
| சேவை வரி | 0.00 | 108.04 | 609.98 | 60.56 | 8.59 |
| ஏனைய வரிகள் * | 17.11 | 17.92 | 42.44 | 63.75 | 56.53 |
| **மொத்த மத்திய வரி மாற்றங்கள்** | **26,392.41** | **24,924.51** | **37,458.62** | **38,731.24** | **46,072.27** |
| முந்தைய ஆண்டை விட கூடுதல் (விழுக்காடு) | *(-) 13.86* | *(-) 5.56* | *50.29* | *3.40* | *18.95* |
| வருவாய் வகை வரவுகள் | 1,74,526 | 1,74,076 | 2,07,492 | 2,43,749 | 2,64,597 |
| வருவாய் வகை வரவுகளில் மத்திய வரிகள் மாற்றத்தின் விழுக்காடு | *15.12* | *14.32* | *18.05* | *15.89* | *17.41* |

* *செல்வத்தின் மீது வரிகள், வரவு மற்றும் செலவு மீதான பிற வரிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான பிற வரிகள் மற்றும் தீர்வைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2021-22 முதல் 2023-24 வரை மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்காக உள்ளபடி மாற்றம் செய்யப்பட்ட தொகை 15வது நிதி குழு கணக்கிட்ட தொகையை விட கூடுதலாக இருந்தது.

### *இந்திய அரசின் உதவி மானியங்கள்*

**அட்டவணை 2.9: இந்திய அரசின் உதவி மானியங்கள்**

*(₹ கோடியில்)*

| தலைப்பு | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான மானியங்கள் | 12,463.85 | 12,483.68 | 17,250.57 | 15,269.61 | 13,971.63 |
| நிதி குழு மானியங்கள் | 5,905.69 | 8,643.46 | 9,550.41 | 5,791.68# | 6,250.76@ |
| மாநிலங்கள்/சட்டமன்றம் உள்ள யூனியன் பிரதேசத்திற்கும் பிற நிதி மாற்றங்கள்/ மானியங்கள் | 9,485.73 | 11,449.84 | 8,250.00 | 16,673.11$ | 5,119.76^ |
| **மொத்தம்** | **27,783.37*** | **32,576.98** | **35,050.98** | **37,734.40** | **25,342.15** |
| முந்தைய ஆண்டை விட கூடுதல் (*விழுக்காடு*) | *18.89* | *17.25* | *7.59* | *7.66* | *(-) 32.84* |
| வருவாய் வகை வரவுகளில் மானியத்தின் விழுக்காடு | *15.92* | *18.71* | *16.89* | *15.48* | *9.58* |

*@ 2023-24ல் வருவாய் பற்றாக்குறைக்கான மானியம் ₹838.94 கோடியை உள்ளடக்கியது மற்றும் மீதமுள்ள ₹5,411.82 கோடி ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள், SDRF மற்றும் SDMF க்கான மானியங்களாகும்.*

*# 2022-23ல் வருவாய் பற்றாக்குறைக்கான மானியம்* ₹801 கோடியை உள்ளடக்கியது மற்றும் மீதமுள்ள ₹4,990.68 கோடி தொகை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள், SDRF மற்றும் SDMF க்கான மானியங்களாகும்.

*^ GSTஅமல்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கான நிலுவை ஈட்டுத்தொகை* ₹4,574.20 கோடி உள்ளடக்கியது.

*$ GST அமல்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்கான ஈடு ₹16,215 கோடி தொகையும் உள்ளடக்கியது.*

** திருப்பிச் செலுத்தல்கள் தொகை 2019-20ல் (-) ₹71.90 கோடி உள்ளடக்கியது.*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- நடப்பாண்டில் உதவி மானியம் முந்தைய ஆண்டைவிட ₹12,392.25 கோடி (32.84 விழுக்காடு) அளவிற்கு கணிசமாக குறைந்தது.
- வருவாய் வரவுகளில் உதவி மானியங்கள் விழுக்காடு என்ற வகையில் 2022-23ல் 15.48 என்ற அளவில் இருந்தது. இது 2023-24ல் 9.58 ஆக குறைந்தது. இக்குறைவுக்கு மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட GST இழப்பீடு ஜூலை 2023 முதல் நிறுத்தப்பட்டதும், 2023-24ஆம் ஆண்டிற்கான தேசிய பேரிடர் தணிப்பு நிதியான ₹225 கோடி பெறப்படாததுமே முக்கிய காரணங்களாகும்.

### தனியான ஒருங்கிணைப்பு முகமை (SNA)

மத்திய அரசு பொறுப்பேற்கும் (CSS) ஒவ்வொரு திட்டத்திற்கும், ஒவ்வொரு மாநில அரசும், SNAயை ஏற்படுத்த வேண்டும் என செலவின துறை, மத்திய நிதி அமைச்சகம் அறிவுறுத்துகிறது. SNA மாநில அரசால் வணிகம் நடத்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு வணிக வங்கியில் ஒவ்வொரு CSSக்கும் மாநில அளவில் ஒரு தனியான ஒருங்கிணைப்பு கணக்கை தொடங்க வேண்டும். மேலும், புது நடைமுறையின்படி, செலவு செய்யப்படாத தொகை எல்லா செயல்பாட்டு முகமைகளாலும் SNA கணக்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

CSSன் கீழ் நிதியை விடுவிப்பதற்கான நடைமுறையையும் மற்றும் SNA மூலம் விடுவித்த நிதியின் பயன்பாட்டை கண்காணிப்பதற்கான

நடைமுறையையும் மத்திய அரசு வெளியிட்டது. இந்த நடைமுறையின்படி, மாநில அரசு, தான் பெற்ற மத்திய அரசின் பங்கை தன்னுடைய பங்குடன் சேர்த்து SNA கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

மத்திய நிதியமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, CSSன் கீழ் நிதியை பெற்ற மாநில அரசுக்கு அதன் செலவை மேற்கொள்ள கட்டுப்பாடுகள் இருப்பதால், அந்த நிதி பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மாநில அரசின் பங்குடன் சம்பந்தப்பட்ட SNAக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு மாற்றும் போது, 30 நாட்களுக்கு மேல் தாமதமானால் 1 ஏப்ரல் 2023 லிருந்து அரசாங்கம் ஆண்டுக்கு 7 விழுக்காடு வட்டி செலுத்த நேரிடும்.

PFMS இணைய முகப்பின் SNA அறிக்கை (2023-24)யின் படி, நடப்பாண்டில் SNAன் மத்திய அரசின் பங்காக ₹13,133.76 கோடியை மாநில அரசு பெற்றது. மாநில அரசு மத்திய அரசின் பங்கான ₹13,487.29 கோடியையும், மாநிலத்தின் கூடுதல் பங்கான ₹17.26 கோடி உட்பட மாநில அரசின் பங்கான ₹12,198.81 கோடியையும் SNA கணக்கிற்கு மாற்றம் செய்தது. 31 மார்ச் 2024 அன்றுள்ளவாறு, SNA கணக்கில் செலவிடப்படாமல் உள்ள இருப்பு ₹10,083.87 கோடியாகும்.

மத்திய மாநில அரசுகளால் பகிரப்பட்ட ஏழு திட்டங்களில் இந்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கை SNAவிற்கு விடுவிப்பதில் ஒரு நாள் முதல் 106 நாட்கள் வரையில் கால தாமதம் இருந்ததாக SNA அறிக்கை தெரிவிக்கிறது. மூன்று மத்திய திட்டங்களில், இந்திய அரசு நிதியை விடுவிப்பதில் ஒரு நாள் முதல் 24 நாட்கள் வரை கால தாமதம் காணப்பட்டது. திட்டங்களின் விவரங்கள் நிதி மாற்றத்தில் ஏற்பட்ட கால தாமதத்துடன் **இணைப்பு 2.2ல்** தரப்பட்டுள்ளது.

## பதினைந்தாவது நிதி குழு மானியங்கள்

15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2023-24ல் இந்திய அரசு மாநிலத்திற்கு மாற்றம் செய்த நிதி பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.10ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10**: பரிந்துரைக்கப்பட்ட, உள்ளபடி விடுவிக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட தொகைகள்

(*₹ கோடியில்*)

| மாற்றம் | 15வது நிதி குழு பரிந்துரைத்த தொகை– 2023-24 | இந்திய அரசால் உள்ளபடி விடுவிக்கப்பட்ட தொகை 2023-24 | பற்றாக்குறை 2023-24 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **(i) ஊராட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்** | | | |
| (அ) பொதுவான அடிப்படை நிபந்தனை அற்ற மானியங்கள் | 1,116.40 | 1,116.40 | *இல்லை* |
| (ஆ) செயலாக்கம் (நிபந்தனை மானியங்கள்) | 1,674.60 | 1,674.60 | *இல்லை* |
| **ஊராட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்** | **2,791.00** | **2,791.00** | ***இல்லை*** |
| **(ii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்** | | | |
| (அ) திடக்கழிவு மேலாண்மை / சுகாதாரத்திற்காக மில்லியன் பிளஸ் நகரங்களுக்கான மானியம் | 331.00 | 325.20* | *5.80* |

(₹ *கோடியில்*)

| மாற்றம் | 15வது நிதி குழு பரிந்துரைத்த தொகை– 2023-24 | இந்திய அரசால் உள்ளபடி விடுவிக்கப்பட்ட தொகை 2023-24 | பற்றாக்குறை 2023-24 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (ஆ) சுற்றுப்புற காற்றின் தரத்தை உயர்த்துவதற்காக மில்லியன் பிளஸ் நகரங்களுக்கான மானியம். | 129.00 | 12** | *117.00* |
| (இ) மில்லியன் பிளஸ் அல்லாத நகரங்களுக்கான அடிப்படை மானியம் நிபந்தனை அற்றது | 391.20 | 384.17 | *7.03* |
| (ஈ) மில்லியன் பிளஸ் அல்லாத நகரங்களுக்கான நிபந்தனை மானியம். | 586.80 | 576.26 | *10.54* |
| **நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்** | **1,438.00** | **1,297.63** | ***140.37*** |
| சுகாதாரப் பிரிவுக்கான மானியம் | 846.18 | 838.94 | *7.24* |
| **உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்தம்** | **5,075.00** | **4,927.57** | ***147.61*** |
| மாநில பேரிடர் நிவாரண நிதி | 900.00 | 900.00 | ***இல்லை*** |
| மாநில பேரிடர் தணிப்பு நிதி | 225.00 | --*** | 225 |
| **பெரு மொத்தம்** | **6,200.18** | **5,827,57** | **372.61** |

* 2022-23 ஆம் ஆண்டுக்காக 2023-24ல் பெறப்பட்ட நிலுவை தொகையான ₹313 கோடி இதில் சேர்க்கப்படவில்லை.

** 2022-23 ஆம் ஆண்டுக்காக 2023-24ல் மதுரை மாநகராட்சிக்கு விடுவிக்கப்பட்ட ஊக்க மானியத் தொகையான ₹3.09 கோடி இதில் சேர்க்கப்படவில்லை.

*** 2023-24ல் பெறப்பட்ட 2022-23 ஆண்டிற்குரிய ₹107.10 கோடி இதில் சேர்க்கப்படவில்லை.

(*ஆதாரம்: மாநில நிதி துறையிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்*)

மாநிலத்திற்கான (XV FC) பதினைந்தாவது நிதிக்குழு மானியம் ₹372.61 கோடி குறைவாக விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில பேரிடர் தணிப்பு நிதிக்காக (பத்தி 2.5.2.3 ல் விவரிக்கப்பட்டவாறு) ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹225 கோடி தொகையும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான ₹147.61 கோடி தொகையும் அடங்கும்.

### 2.3.3 மூலதன வகை வரவுகள்

மூலதன வகை வரவுகள் என்பதில், முதலீடு நீக்கம் போன்ற பல்வகை மூலதன வகை வரவுகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல், உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து கடன் வரவுகள் (சந்தை கடன்கள், நிதி நிறுவனங்கள் / வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்கள்). இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பன அடங்கும்.

**அட்டவணை 2.11: மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி மற்றும் ஆக்கக் கூறுகளின் போக்கு**

| மாநிலத்தின் நிதி வரவுகளின் ஆதாரங்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| **மூலதன வகை வரவுகள் (₹கோடியில்)** | **72,158.31** | **1,08,112.22** | **1,09,839.77** | **1,02,181.78** | **1,35,633.49** |
| பல்வகை மூலதன வரவுகள் | -- | -- | 0.01 | 41.97 | 11.88 |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீளப்பெறுதல் | 5,384.01 | 5,245.25 | 5,354.77 | 1,078.10 | 4,024.47 |
| **பொது கடன் வரவுகள்** *(₹ கோடியில்)* | **66,774.30** | **1,02,866.97** | **1,04,484.99** | **1,01,061.71** | **1,31,597.14** |
| *உள்நாட்டு கடன்* (₹கோடியில்) | 64,784.61 | 91,997.03 | 90,842.61 | 90,806.43 | 1,16,602.22 |
| *உள்நாட்டு கடன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *42.08* | *42.00* | *(-) 1.25* | *(-) 0.04* | *28.41* |
| *இந்திய அரசிடமிருந்து கடன்கள் மற்றும் முன்பணங்கள்* (₹கோடியில்) | 1,989.69 | 10,869.94* | 13,642.38# | 10,255.28 | 14,994.92 |
| *கடன்கள் மற்றும் முன்பணங்கள் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *(-) 14.96* | *446.31* | *25.51* | *(-) 24.83* | *46.22* |
| கடன் வகை மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம்(விழுக்காடு) | *39.30* | *54.05* | *1.57* | *(-) 3.28* | *30.21* |
| கடன் வகையல்லாத மூலதன வரவுகளின் வளர்ச்சி விகிதம்(விழுக்காடு) | *(-) 22.12* | *(-) 2.58* | *2.09* | *(-) 79.08* | *260.37* |
| GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *6.93* | *2.58* | *15.84* | *14.16* | *13.71* |
| மூலதன வகை வரவுகளின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *31.56* | *49.83* | *1.60* | *(-) 6.97* | *32.74* |

* ₹6,241 கோடி திருப்பித் தர வேண்டாத கடனை உள்ளடக்கியது;

# ₹8,095 கோடி கடனாக வழங்கப்பட்டது; இவை GSTக்கு மாற்றாக வழங்கப்பட்டாலும், அவை மாநில அரசால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதில்லை.

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.6: மூலதன வரவுகளின் வளர்ச்சி**




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- பொது கடன் வரவுகள் 2022-23ல் ₹1,01,062 கோடி என்பதிலிருந்து 2023-24ல் ₹1,31,597 கோடி ஆக அதிகரித்தது.
- கடன் அல்லாத மூலதன வரவுகளின் வளர்ச்சி வீதம் அதிகரித்ததற்கு, சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தால் முன்பு பெறப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டதே முக்கிய காரணமாகும். கடன்கள் மற்றும் முன்பணங்கள் வளர்ச்சி வீதம் அதிகமானதற்கு, சென்னை மெட்ரோ ரயில் திட்டம் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக பெறப்பட்ட கடன்களே காரணமாகும்.

கூடுதலாக இந்த ஆண்டு சந்தை கடன்கள் அதிகரித்ததால், கடன் மூலதன வரவுகளின் வளர்ச்சி வீதம் அதிகரித்தது.

### 2.3.4 நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு

நிதி திரட்டுவதில் மாநிலத்தின் செயல்பாடு, சொந்த வரிகள் மற்றும் வரியல்லாத வருவாய் என்பவை அடங்கிய அதன் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது.

#### வரி மற்றும் வரியல்லாதவை – மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வரவுகள்

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்திற்கான மாநிலத்தின் சொந்த வரி மற்றும் வரியல்லாத வருவாய் வரவுகள் குறித்து மத்திய நிதிக்குழு மற்றும் மாநில வரவு – செலவு திட்டம் ஆகியவற்றின் மதிப்பீடுகளும் உள்ளபடியான வரவுகளும் **விளக்கப்படம் 2.7**ல் தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.7: வரி மற்றும் வரியல்லாதவை –எதிர்ப்பார்க்கப்பட்டதும் ஈட்டப்பட்டதும்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதிக்குழு பரிந்துரைகள்.மற்றும் வரவு செலவுத் திட்ட உரை)*

நடப்பாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் 15வது நிதிக்குழு இலக்கைவிட குறைவாக இருந்தது ஆனால் வரியல்லாத வருவாய் இவற்றை விட கூடுதலாக இருந்தது.

## 2.4 நிதியை செலவிடுதல்

மாநில அரசு, நிதிவகை பொறுப்புடைமை தொடர்பான சட்டங்களுக்கு உட்பட்டு செலவுகளை மேற்கொள்ளும் கடமை உடையது. அதே நேரம், மாநிலத்தில் நிகழ்ந்து வரும் நிதி சீரமைப்பு மற்றும் தொகுத்தல் பணியால் மூலதன உள்கட்டமைப்பு மற்று சமூக பிரிவின் வளர்ச்சிக்கான செலவு குறையாது என்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். இப்பிரிவு மாநிலத்தில் செலவின ஒதுக்கீடு மீதான பகுப்பாய்வின் முடிவுகளை அளிக்கின்றன.

### 2.4.1 செலவின் வளர்ச்சி மற்றும் கூறுகள்

**மொத்த செலவு, அதன் கூறுகள், பல்வேறு பிரிவுகளின் பங்கு, போக்குகள் போன்றவற்றின் விவரங்கள் அட்டவணைகள் 2.12, 2.13 மற்றும் விளக்கப்படங்கள் 2.8 மற்றும் 2.9 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.12: மொத்த செலவு மற்றும் அதன் கூறுகள்**

(₹ கோடியில்)

| அளவுருக்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவு | 2,40,088.56 | 2,73,304.66 | 2,94,681.72 | 3,26,755.21 | 3,59,063.08 |
| வருவாய்வகை செலவு | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 | 2,79,964.48 | *3,09,717.77* |
| மூலதன வகை செலவு | 25,631.58 | 33,067.65 | 37,010.78 | 39,529.91 | *40,500.20* |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 4,022.25 | 3,834.83 | 3,640.52 | 7,260.82 | *8,845.11* |
| மொத்த செலவு/GSDP | *13.77* | *15.28* | *14.22* | *13.65* | *13.19* |
| வருவாய் வகை செலவு/GSDP | *12.07* | *13.22* | *12.26* | *11.70* | *11.38* |
| மூலதனவகை செலவு /GSDP | *1.47* | *1.85* | *1.79* | *1.65* | *1.49* |
| கடன்கள் மற்றும் முன்பணங்கள்/GSDP | *0.23* | *0.21* | *0.18* | *0.30* | *0.33* |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.8 : மொத்த செலவினம்: அதன் கூறுகளுடைய பங்கின் போக்குகள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**அட்டவணை 2.13: செலவில் பல்வேறு பிரிவுகளின் பங்கு**

(விழுக்காடு)

| அளவுருக்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| பொது பணிகள் * | *32.99* | *29.25* | *29.07* | *30.65* | *31.83* |
| சமூக பணிகள் * | *33.26* | *36.82* | *35.20* | *31.61* | *32.20* |
| பொருளாதார பணிகள் * | *25.54* | *26.75* | *27.88* | *29.42* | *26.94* |
| ஏனையவை(உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்) | *8.21* | *7.18* | *7.85* | *8.32* | *9.03* |

*(* இப்பணிகளின் கீழ் வருவாய் வகை மற்றும் மூலதன வகை செலவுகளின் மொத்தம்)*

**விளக்கப்படம் 2.9: மொத்த செலவு - செயல்பாடுகள் வாரியான செலவு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

- 2023-24ல் செய்யப்பட்ட ₹3,59,063 கோடி மொத்த செலவில், வருவாய் வகை செலவு (₹3,09,718 கோடி), மூலதன வகை செலவு (₹40,500 கோடி) மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் (₹8,845 கோடி) முறையே 86.26 விழுக்காடு, 11.28 விழுக்காடு மற்றும் 2.46 விழுக்காடாக இருந்தன.

## 2.4.2 வருவாய் வகை செலவு

வருவாய் செலவானது பணிகளை தற்போதைய அளவில் தொடர்ந்து மேற்கொள்ளவும் கடந்த கால பொறுப்புகளுக்கான தொகைகளை செலுத்தவும் செய்யப்படுகிறது. எனவே, அதன் விளைவாக மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் பணிகளில் எந்த ஏற்றமும் ஏற்படுவதில்லை.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வருவாய் வகை செலவு மொத்த செலவில் சராசரியாக 86.46 விழுக்காடாக (85.68 விழுக்காடு முதல் 87.65 விழுக்காடு வரை) இருந்தது. அதன் வளர்ச்சி விகிதம் ஏற்றத்தாழ்வுகளுடன் 2019-24 காலகட்டத்தில் 6.71 விழுக்காடு முதல் 12.34 விழுக்காடு வரை இருந்து, 2023-24ல் 10.63 விழுக்காடு ஆனது. வருவாய் வகை செலவின், வளர்ச்சி விகிதம், மொத்த செலவில் அதன் விகிதம், ஆகியன **அட்டவணை 2.14ல்** தரப்பட்டுள்ளன. 2023-24ல் வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம் பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.10ல்**. தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.14: வருவாய் வகை செலவு – அடிப்படை அளவுருக்கள்**

| அளவுருக்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவு (₹ *கோடியில்*) | 2,40,088.56 | 2,73,304.66 | 2,94,681.72 | 3,26,755.22 | 3,59,063.08 |
| வருவாய் வகை செலவு (₹ *கோடியில்*) | 2,10,434.73 | 2,36,402.18 | 2,54,030.42 | 2,79,964.48 | 3,09,717.77 |
| *வருவாய் வகை செலவின் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு)* | *6.71* | *12.34* | *7.46* | *10.21* | *10.63* |
| மொத்த செலவில் வருவாய் வகை செலவின விழுக்காடு | *87.65* | *86.50* | *86.20* | *85.68* | *86.26* |
| வருவாய் வகை செலவு /GSDP *(விழுக்காடு)* | *12.07* | *13.22* | *12.26* | *11.84* | *11.38* |
| *வருவாய் வகை வரவில் வருவாய் வகை செலவின் விழுக்காடு* | *120.58* | *135.80* | *122.43* | *114.86* | *117.05* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.10: வருவாய் வகை செலவின் பிரிவுவாரியான பகிர்மானம்**

**(*விழுக்காட்டில்*)**




(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023–24*)

➢ 2023-24ல் வருவாய் செலவினத்தின் வளர்ச்சி வீதம் முந்தைய ஆண்டில் 10.21 விழுக்காடாக இருந்ததற்கு மாறாக 10.63 விழுக்காடு அளவு (₹32,307.86 கோடி) அதிகரித்தது. இதற்கு, குறிப்பாக, சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம் (MH 2235), வட்டி கொடுப்புகள் (MH 2049) மற்றும் மின்சக்தி (MH 2801) ஆகியவற்றில் முறையே ₹9,069.58 கோடி, ₹6,654.88 கோடி மற்றும் ₹6,453.63 கோடி அதிகரித்ததே காரணமாகும். 2022-23ல் GSDPல்

11.84 விழுக்காடாக இருந்த வருவாய் வகை செலவினம் நடப்பாண்டில் 11.38 விழுக்காடாக குறைந்தது.

- MTFPல் எதிர்நோக்கப்பட்டதைவிட வருவாய் வகை செலவினம் ₹3,05,372 கோடி (1.42 விழுக்காடு) அதிகமாக இருந்தது. கூறு வாரியான விவரம் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.4.2.1 வருவாய் வகை செலவில் முக்கிய மாற்றங்கள்

மாநிலத்தின் வருவாய் வகை செலவில் பல்வேறு கணக்கு தலைப்புகளின் கீழ் நடப்பாண்டிற்கும் முந்தைய ஆண்டிற்கும் இடையே இருந்த கணிசமான வேறுபாடுகளை **அட்டவணை 2.15** காட்டுகிறது.

**அட்டவணை 2.15: 2022-23 மற்றும் 2023-2024 ஆண்டுகளிடையே வருவாய் வகை செலவில் இருந்த வேறுபாடு**

(₹ கோடியில்)

| பெருந் தலைப்பு | விவரம் | 2023-24 | 2022-23 | கூடுதல் (+) / குறைவு (-) |
|---|---|---|---|---|
| 2235 | சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | 20,896.75 | 11,827.17 | 9,069.58 |
| 2049 | வட்டி செலுத்தங்கள் | 53,565.69 | 46,910.81 | 6,654.88 |
| 2801 | மின் வசதி | 24,036.88 | 17,583.25 | 6,453.63 |
| 2071 | ஓய்வூதியங்களும், பிற ஓய்வூதிய பலன்களும் | 37,696.81 | 32,177.50 | 5,519.31 |
| 3604 | உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு இழப்பீடு மற்றும் உரிமைத் தொகை | 23,563.71 | 19,925.60 | 3,638.11 |
| 2202 | பொது கல்வி | 43,728.12 | 42,615.28 | 1,112.84 |
| 2851 | கிராமப்புற மற்றும் சிறு தொழில்கள் | 2,418.18 | 1,702.45 | 715.73 |
| 2055 | காவல் | 10,299.93 | 9,609.47 | 690.46 |
| 2048 | கடனைத் தவிர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான ஒதுக்கீடு | 1,283.16 | 632.95 | 650.21 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 4,262.15 | 3,626.29 | 635.86 |
| 2210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் | 13,574.82 | 13,018.51 | 556.31 |
| 2217 | நகர்ப்புற மேம்பாடு | 1,346.45 | 2,143.92 | (-) 797.47 |
| 2852 | தொழில்கள் | 856.37 | 1,774.13 | (-) 917.76 |
| 2505 | ஊரக வேலைவாய்ப்பு | 4,044.22 | 5,936.87 | (-) 1,892.65 |
| 2401 | பயிர்வளர்ப்பு | 10,949.28 | 13,286.61 | (-) 2,337.33 |
| 3456 | நுகர்பொருள் வழங்கல் | 11,208.29 | 13,767.56 | (-) 2,559.27 |

(*ஆதாரம்: உரிய ஆண்டுகளுக்கான நிதி கணக்குகள்*)

- சமூக பாதுகாப்பு மற்றும் நலன் கீழ் வருவாய் செலவினம் அதிகரித்ததற்கு ₹ 7,936.54 கோடி அளவில் வழங்கப்பட்ட 'மகளிர் உரிமைத் தொகை' முக்கிய காரணமாகும்.

- சந்தைக் கடன்கள் ₹ 5,007.76 கோடிக்காக செலுத்தப்பட்ட வட்டித் தொகை அதிகரிப்பால், வட்டி கொடுப்புகள் 14 விழுக்காடு அதிகரித்தது.

- மின்வாரியத்திற்கு ₹6,464 கோடி அளவு உயர்த்தி வழங்கப்பட்ட உதவித்தொகையே மின்சக்தி துறையின் வருவாய் செலவினம் 36.77 விழுக்காடு உயர முக்கிய காரணம் ஆகும்.

- நுகர்பொருள் வழங்கல் துறையில் முன்னர் சேர்க்கப்பட்டிருந்த பொங்கல் பரிசு, தற்போது சேர்க்கப்படாததால் வருவாய் செலவினம் ₹2,559 கோடி (18.59 விழுக்காடு) குறைந்தது.
- வேளாண் பயிர்களுக்கான பிரதம மந்திரி பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு மானிய செலவு குறைந்ததால் பயிர் பாதுகாப்பு துறையில் ₹2,337 கோடி (17.59 விழுக்காடு) வருவாய் செலவினம் குறைந்தது.
- கிராமப்புற வேலைவாய்ப்பின் கீழ் ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா தேசிய திட்டத்தில் ₹1893 கோடி (31.88 விழுக்காடு) செலவு குறைந்து காணப்பட்டது.

### *2.4.2.2 தவிர்க்க இயலாத செலவு*

வருவாய் கணக்கில் மாநில அரசின் தவிர்க்க இயலாத செலவில், வட்டி செலுத்தங்கள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மீதான செலவுகள் என்பன அடங்கும். அரசின் நிதியிலிருந்து செய்யப்படும் செலவில் இது முன்னுரிமை பெறுகிறது.

மேலே உள்ளதை தவிர, சில நெகிழ்வற்ற செலவினங்கள் உள்ளன. இச்செலவினங்கள், மாறக்கூடிய செலவினமான மூலதன செலவினம் போல் அல்லாமல், சாதாரணமாக மாற்றவோ அல்லது மாற்றப்படவோ முடியாது. வருடாந்திர அடிப்படையில், சட்டப்பூர்வமாக தேவைப்படுபவை ஆகும். பின்வரும் செலவினங்கள் நெகிழ்வற்ற செலவினங்களுக்கு உதாரணங்களாகும்.

(i) உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகார பகிர்வு – சம்பளம் மற்றும் படிகளுக்கான சட்டப்படியான அதிகார பகிர்வு (மூலதன செலவினத்திற்கான அதிகார பகிர்வு / மாற்றம்)

(ii) சேம நல நிதிக்கான சட்டப்படியான தேவை – தொகுக்கப்பட்ட கடன் தீர் நிதி, உத்தரவாத மீட்பு நிதி, மாநில பேரிடர் தணிப்பு/பொறுப்பு நிதி போன்றவற்றிற்கான பங்களிப்புகள்.

(iii) எதிர்பாரா செலவு நிதிக்கு திரும்ப பெறுதல் – ஒரே வருடத்தில் திரும்ப பெறுதல்;

(iv) சேமநிதி/பிற குழுவிற்கு சட்டபூர்வமான மேல்வரி மாற்றம்

(v) மத்திய நிதி பெறப்பட்டதற்கு எதிராக CSSக்கான மாநில அரசின் பங்களிப்பு – மாநில அரசின் பங்கை SNAகளுக்கு மாற்றுதல்/செலவு செய்தல்

(vi) வட்டி பெறும் நிதியை முதலீடு செய்து பெறப்படுவது போல் அதன் இருப்புக்கு செலுத்தப்படும் வட்டி, பொது கடன் மீதான வட்டி (சாட்டியது) - வட்டி செலுத்தங்கள்

தவிர்க்க இயலாத செலவின் உயர்வுப் போக்கு காரணமாக, வளர்ச்சி பணிகளுக்கு செலவு செய்ய அரசுக்கு குறைந்த நிதியே இருக்கும். தவிர்க்க இயலாத மற்றும் நெகிழ்வற்ற செலவுகள் மற்றும் கூறுகளின் போக்குகள் **அட்டவணை 2.16**ல் தரப்பட்டுள்ளன. வருவாய் வகை செலவுகளில் தவிர்க்க இயலாத செலவு **விளக்கப்படம் 2.11**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.16: தவிர்க்க இயலாத மற்றும நெகிழ்வற்ற செலவின கூறுகள்**

**(₹ *கோடியில்*)**

| தவிர்க்க இயலாத செலவுகளின் கூறுகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 47,447 | 47,333 | 50,293 | 56,970 | 62,170 |
| ஊதிய மானியங்கள் | 8,190 | 8,027 | 8,416 | 9,248 | 9,922 |
| ஓய்வூதியங்கள் | 30,202 | 27,115 | 26,250 | 32,177 | 37,697 |
| வட்டி செலுத்தங்கள் | 31,980 | 36,497 | 41,564 | 46,911 | 53,566 |
| **மொத்தம் – தவிர்க்க இயலாத செலவு** | **1,17,819** | **1,18,972** | **1,26,523** | **1,45,306** | **1,63,355** |
| **நெகிழ்வற்ற செலவுகளின் கூறுகள்** | | | | | |
| SDRFலிருந்து செய்யப்பட்ட செலவுகள் | 707 | 1360 | 1088 | 329 | 2,013 |
| SDMFலிருந்து செய்யப்பட்ட செலவுகள் | 0 | 0 | 0 | 143 | 415 |
| மத்திய நிதியிலிருந்து செய்யப்பட்ட வருவாய் வகை செலவுகள் (CSS/CS உள்ளிட்டவை) | 22,373 | 24,859 | 28,330 | 27,672 | 29,059 |
| உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார பகிர்வு (பெருந்தலைப்பு – 3604) | 12,182 | 10,920 | 13,134 | 17,397 | 17,859 |
| **மொத்தம்– நெகிழ்வற்ற செலவினம்** | **35,262** | **37,139** | **42,552** | **45,541** | **49,346** |
| **வருவாய் வகை வரவினத்தில் விழுக்காடு கணக்கில்** | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | *27.19* | *27.19* | *24.24* | *23.37* | *23.50* |
| ஊதிய மானியங்கள் | *4.69* | *4.61* | *4.06* | *3.79* | *3.75* |
| ஓய்வூதியங்கள் | 17.31 | 15.58 | 12.65 | 13.20 | *14.25* |
| வட்டி செலுத்தங்கள் | *18.32* | *20.97* | *20.03* | *19.25* | 20.24 |
| **மொத்தம் – தவிர்க்க இயலாத செலவு** | ***67.51*** | ***68.34*** | ***60.98*** | ***59.60*** | *61.74* |
| நெகிழ்வற்ற செலவு | ***20.20*** | ***21.33*** | ***20.51*** | ***18.68*** | ***18.65*** |
| **மொத்தம்** | ***87.71*** | ***87.67*** | ***81.49*** | ***78.29*** | ***80.39*** |
| **வருவாய் வகை செலவில் விழுக்காடு கணக்கில்** | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | *22.55* | *20.02* | *19.80* | *20.35* | *20.07* |
| ஊதிய மானியங்கள் | *3.89* | *3.40* | *3.31* | *3.30* | *3.20* |
| ஓய்வூதியங்கள் | 14.35 | 11.47 | 10.33 | 11.49 | 12.17 |
| வட்டி செலுத்தங்கள் | *15.20* | *15.44* | *16.36* | *16.76* | *17.30* |
| **மொத்தம் – தவிர்க்க இயலாத செலவு** | **55.99** | **50.33** | **49.80** | **51.90** | **52.74** |
| நெகிழ்வற்ற செலவு | **16.76** | **15.71** | **16.75** | **16.27** | ***15.94*** |
| **மொத்தம்** | ***72.75*** | ***66.04*** | ***66.55*** | ***68.17*** | ***68.68*** |
| தவிர்க்க இயலாத வருவாய் வகை செலவை தவிர்த்து மற்ற செலவினம் (RE–தவிர்க்க இயலாத–நெகிழ்வற்ற செலவு) | 57,354 | 80,291 | 84,955 | 89,117 | 97,017 |
| வருவாய் வகை செலவில் *விழுக்காடு* | 27.25 | 33.96 | 33.44 | 31.83 | 31.32 |
| மொத்த செலவினத்தில் *விழுக்காடு* | 23.89 | 29.38 | 28.83 | 27.27 | 27.02 |
| மானியங்கள் | 20,144 | 25,110 | 21,689 | 29,559 | *37,749* |
| தவிர்க்க இயலாத செலவை தவிர்த்து மற்ற செலவினத்தில் மானியங்களின் விழுக்காடு | 35.12 | 31.27 | 25.53 | 33.17 | 38.91 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.11: மொத்த வருவாய் வகை செலவினத்தில் தவிர்க்க இயலாத செலவினத்தில் பங்கு**




(*ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதி கணக்குகள்*)

- **தவிர்க்க இயலாத செலவினம்** (₹1,63,355 **கோடி**) ₹18,049 **கோடி அளவு உயர்ந்தது. இதற்கு முக்கிய காரணம், சம்பளம் மற்றும் ஊதியங்கள் மீதான செலவினம்** 9.13 **விழுக்காடு** (₹5,200 **கோடி**), **ஓய்வூதிய செலவினம்** 17.16 **விழுக்காடு** (₹5,520 **கோடி**) **மற்றும்** '**வட்டி செலுத்துங்கள்**' 14.19 **விழுக்காடு** (₹6,655 **கோடி**) **உயர்ந்ததே ஆகும்.**
- 2022-23ல் வருவாய் வகை வரவினத்தில் 19.25 விழுக்காடாக இருந்த வட்டி செலுத்தங்கள் 2023-24ல் 20.24, விழுக்காடாக (₹2,64,597 கோடி) இருந்தது. 2022-23ல் வருவாய் வகை செலவினத்தில் 16.36 விழுக்காடாக இருந்த வட்டிச் செலுத்தங்கள் நடப்பாண்டில் 17.30 விழுக்காடாக உயர்ந்தது.
- பெருந்தலைப்பு 3604ல் செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டபூர்வமான அதிகார பகிர்வு, SDRF, SDMFல் செய்யப்பட்ட செலவு, CSSல் வருவாய் வகை செலவு ஆகியவை நெகிழ்வற்ற செலவினத்தில் அடங்கும். இது, 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வருவாய் வகை செலவினத்தில் 15.71 முதல் 16.76 விழுக்காடாக இருந்தது. மேலும், நெகிழ்வற்ற செலவானது, கடந்த ஆண்டை விட (₹45,541 கோடி) 2023-24ல் 8.36 விழுக்காடு (₹49,346 கோடி) உயர்ந்தது.

### *2.4.2.3 தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம்*

தமிழ்நாடு அரசு தனது பணியாளர்களுக்காக 'வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS) 1 ஏப்ரல் 2003 முதல் அமல்படுத்தியது. இத்திட்டம் 2003 அல்லது அதற்கு பின் மாநில அரசு பணியில் சேர்ந்தோர் அனைவருக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ், பணியாளர்கள் தமது அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு தொகையையும் மாநில அரசு அதற்கு சமமான தொகையையும் செலுத்துவர். இவ்விரண்டு பங்களிப்புகளும் முதலில் பொது கணக்கிற்கு (பெருந்தலைப்பு '8342-117- வரையறுக்கப்பட்ட பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம்' (DCPS)) மாற்றப்படும்.

ஒவ்வொருவருக்குமான அரசு பணியாளர்[1] DCPS கணக்குகளை அரசு தகவல் மையம் பராமரிக்கிறது. அம் மையம் ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும் விகிதங்களில் வட்டியை கணக்கிட்டு ஒவ்வொரு பணியாளரின் DCPS கணக்கிலும் வரவு வைக்கிறது.

31 மார்ச் 2003 அல்லது அதற்கு முன்போ பணியில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்கள் மீதான நடப்பாண்டு செலவு ₹33,890.19 கோடி ஆகும். இது நடப்பாண்டின் மொத்த வருவாய் வகை செலவினமான ₹3,09,717.77 கோடி தொகையில் 10.94 விழுக்காடு ஆகும்.

தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும், ஓய்வூதிய நிதி ஒழுங்கு முறைமை மற்றும் மேம்பாட்டு அமைப்பு (PFRDA), தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேருமாறு தமிழ்நாடு அரசிடம் கோரியது (2008 மற்றும் 2009). தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்ட கட்டமைப்பில் சேர மறுத்தது (2010). ஓய்வூதிய நிதி தொகையை மாநிலத்தின் பொது கணக்கில் வைத்திருக்கும் தற்போதைய முறையையே தொடர்ந்து பின்பற்றுவதான தனது முடிவை நியாயப்படுத்தும் வகையில், நாடாளுமன்றம், PFRDA சட்டத்தை இயற்றாததை அது துவக்கத்தில் சுட்டிக்காட்டியது.

DCPS என்னும் புதிய ஓய்வூதிய திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வந்த மாநில அரசு, 20 ஆண்டுகள் ஆன பின்னரும், தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேரவில்லை மற்றும் ஒரு நிதி மேலாளரை அமர்த்தவில்லை. மாறாக, மார்ச் 31, 2024 வரையில் நிதியில் சேர்ந்திருந்த ₹75,012.52 கோடி தொகையில், ₹68,264.62 கோடி தொகை (2021-22ல் ₹36,509.99 கோடி, 2022-23ல் ₹20,128.65 கோடி மற்றும் 2023-24ல் ₹11,625.97 கோடி) இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் 'தொகை சேரும் திட்டத்துடன் கூடிய புதிய குழு ஓய்வு பெறும் திட்டம்' என்பதன் கீழ் முதலீடு செய்யப்பட்டது.

LICயிடமிருந்து 2020-21 (₹1,630.48 கோடி) மற்றும் 2021-22 (₹1,995.50 கோடி) ஆண்டுகளுக்காக பெறப்பட்ட வட்டியான ₹3,625.98 கோடி மாநில அரசின் கணக்கில் கொண்டு வரப்பட்டு அதே நிதியில் மறுமுதலீடு செய்யப்பட்டது. எனினும் LICல் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டியான ₹8,723.51 கோடி[2] (2022-23ல் 3,754.51 கோடி மற்றும் 2023-24ல் ₹4,969 கோடி)கணக்களவில் சரிகட்டப்படாமலேயே, ஆயுள் காப்பீடு நிறுவனத்திலேயே மறுமுதலீடு செய்யப்பட்டது. இதனால் ₹8,723.51 கோடி அளவுக்கு வருவாய் வகை வரவினங்கள் குறைத்துக் காட்டப்பட்டது. முன்னதாக, மாநில அரசு DCPS நிதியை LIC மற்றும் கருவூல பத்திரங்கள் இரண்டிலும் முதலீடு செய்தது. ஆனால் இதன் மூலம் கிடைத்த வட்டி பொது சேம நல நிதி வீதத்தை விட குறைவாக இருந்தது. இதைப் பற்றி முந்தைய SFAR அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது.தற்போது, அரசு, DCPS நிதியை LIC ல் மட்டுமே முதலீடு செய்கிறது. இதன் வட்டி வீதம் தற்போதைய சேம நல நிதி வட்டி வீதமான 7.1 விழுக்காடுக்கு இணையாக உள்ளது.

2023-24 ஆண்டில் DCPSன் பணியாளர்கள் மற்றும் அரசு பங்களிப்புகள் முறையே ₹3,906.38 கோடி மற்றும் ₹3,806.62 கோடி ஆகும். NPSல் அரசின் பங்களிப்பு ₹99.76 கோடி அளவுக்கு குறைந்துள்ளதால், வருவாய் செலவினமும் அந்த அளவு குறைவாக காட்டப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், ₹4,661.32 கோடி (LIC யின் மேலாண்மை கட்டணம் ₹70.10 கோடி உட்பட) 2049-வட்டி கொடுப்புகள் என்ற பெருந்தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு DCPS நிதியில் வரவு வைக்கப்பட்டது. DCPS

---

[1] உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் மற்றும் உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் உட்பட

[2] 2022-23 ஆம் ஆண்டுக்கான வட்டித் தொகை துறையால் தெரிவிக்கப்படவில்லை

மீதான வட்டி, 2017-18ல் ₹1,714.87 கோடி என்பதிலிருந்து 2023-24ல் ₹4,661.32 கோடி ஆக உயர்ந்துள்ளது.

### *2.4.2.4 மானியங்கள்*

மானியங்கள், நேரிடையாக வழங்கப்பட்டு, 'மானியங்கள்' (Subsidies) என்ற பொருள் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்படுவது மட்டுமின்றி, மக்களுக்கு சலுகையுடன் கூடிய பொது சேவைகளை அளிப்பதன் மூலம் மறைமுகமாகவும்[3] வழங்கப்படுகின்றன. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வருவாய் வகை வரவுகள் மற்றும் வருவாய் வகை செலவு ஆகியவற்றில் மானியங்களின் விழுக்காடு **அட்டவணை 2.17ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.17 : 2019-24 காலகட்டத்தில் மானியங்கள் மீதான செலவு**

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மானியங்கள் (*₹ கோடியில்*) | 20,144 | 25,110 | 21,689 | 29,559 | 37,749 |
| வருவாய் வகை வரவுகளில் மானியங்களின் விழுக்காடு | *11.54* | *14.42* | *10.45* | *12.13* | *14.27* |
| வருவாய் வகை செலவில் மானியங்களின் விழுக்காடு | *9.57* | *10.62* | *8.54* | *10.56* | *12.19* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

மாநில அரசு 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் நேரிடையாக மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல் **அட்டவணை 2.18ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.18 : மாநில அரசு நேரடி மானியம் வழங்கிய திட்டங்களின் பட்டியல்**

(*₹ கோடியில்*)

| திட்டத்தின் பெயர் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மகளிர் உரிமைத்தொகை | -- | -- | -- | -- | 7,937 |
| பொது விநியோக திட்டத்திற்கான ஆதரவு | 8,363 | 9,604 | 9,324 | 13,277 | 10,501 |
| வீட்டு நுகர்வோருக்கான கட்டண குறைப்பு காரணமாக TNEBக்கு அளிக்கப்பட்ட இழப்பீடு | 3,367 | 3,518 | 3,448 | 5,247 | 6,905 |
| தொழிற்சாலைகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு மானியம் | 2,560 | 1,290 | 1,559 | 1,404 | 505 |
| மாணவர்களுக்கான பேருந்து கட்டண சலுகை மீதான சமூக செலவை ஈடுகட்டுதல் | 1,275 | 3,430 | 1,289 | 1,367 | 1,500 |
| பெண்களுக்கான இலவச பேருந்து பயணத்திற்கான இழப்பை ஈடுகட்டுதல் | -- | -- | 1,217 | 2,729 | 3,000 |
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு இலவச கைத்தறி துணிகள் வழங்குதல் | 484 | 479 | 488 | 770 | 500 |
| விசைத்தறி நெசவாளர்கள் சார்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்துதல் | 336 | 384 | 371 | 375 | 496 |
| வேளாண் இடுபொருட்களுக்காக விவசாயிகளுக்கு மானியம் | 183 | 1 | -- | -- | -- |
| பிற மானியங்கள் | 3,576 | 6,404 | 3,993 | 4,390 | 6,405 |
| **மொத்தம்** | **20,144** | **25,110** | **21,689** | **29,559** | **37,749** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

[3] தொடர்புடைய பெருந்தலைப்பின் கீழ் "11– மானியங்கள்" என்ற பொருள் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்படாத மானியங்கள் 'மறைமுக மானியங்கள் ஆகும்'

2022-23ல் ₹29,559 கோடியாக இருந்த நேரடி மானியங்கள் 2023-24ல் முந்தைய ஆண்டை விட 27.71 விழுக்காடு உயர்ந்து ₹37,749 கோடியானது. இந்த உயர்வுக்கு 'மகளிர் உரிமை தொகை திட்டம்' அறிமுகம் செய்யப்பட்டதே முக்கிய காரணமாகும்.

### மறைமுக மானியங்கள்

சமூக மற்றும் பொருளாதார பொருட்கள்/சேவைகளை அரசு அதன் அடக்கவிலையிலிருந்து குறைத்து வழங்கும் போது மறைமுக மானியங்கள் ஏற்படுகின்றன. இது நேரடியாகவோ அல்லது பொருளாகவோ அல்லது சலுகை விலையாகவோ வழங்கப்படலாம். 2023-24ல் பொருளாக வழங்கப்பட்ட முக்கிய மறைமுக மானியங்கள் **அட்டவணை 2.19ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.19: 2023-24ல் பொருளாக கொடுக்கப்பட்ட மறைமுக மானியங்களின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| திட்டத்தின் பெயர் | 2023-24 |
|---|---|
| இலவச மிதிவண்டி வழங்குதல் | 511.62 |
| தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் கருணை மானியம் | 247.75 |
| தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல் | 26.74 |
| இலவச உணவு மற்றும் துணி வழங்குதல் | 7.18 |
| காது கேளாதோர் மற்றும் பார்வை குறைபாடு உள்ளோருக்கு பல்திறன் அலைபேசி வழங்குதல் | 6.40 |
| தையல் இயந்திர விநியோக திட்டம் | 2.08 |
| **பெரு மொத்தம்** | **801.77** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

₹801.77 கோடி மதிப்பிலான மிதிவண்டி, தரமான விதைகள், தையல் இயந்திரங்கள் போன்ற சில மறைமுக மானியங்கள், மானியங்கள் என்பதற்கு மாறாக, உதவி மானியங்கள் என தவறுதலாக வகைப்படுத்தப்பட்டன. இது குறித்து முந்தைய SFARகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### *2.4.2.5 சிறு தலைப்பு – 911ன் கீழ் மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்*

கணக்கு கட்டுப்பாட்டு அலுவலரால் (CGA) வெளியிடப்பட்ட 'மத்திய மற்றும் மாநிலங்களுக்கான பெரு மற்றும் சிறு தலைப்பு விவரங்கள் (LMMH), **பத்தி 3.10**ன் படி, கடந்த வருடங்களில் நிகழ்ந்த மிகை கொடுப்புகளை திருப்பிச் செலுத்த, சம்பந்தப்பட்ட பெரும்/துணை –பெருந் தலைப்பின் கீழ் 'கழிக்க –மிகையாக கொடுத்த தொகையை திருப்பிச் செலுத்துதல்' (சிறு தலைப்பு 911) என்ற தனி தலைப்பின் கீழ் பதிய வேண்டும். இது, நிதியொதுக்க கணக்குகளில் செயல்பாட்டு பெரு/துணை-பெருந் தலைப்பின் கீழுள்ள மொத்த செலவினம் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டும்.

நடப்பாண்டில், கடந்த ஆண்டுகளில் செலவழிக்கப்படாத 730 கணக்குத் தலைப்புகளிலிருந்த ₹3,943.79 கோடி '911-மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்' என்ற தலைப்பின் கீழ் அரசு கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டது. இதில், முழுவதும் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டங்களான 17 திட்டங்களின் கீழ் ₹12.42 கோடியும், மத்திய மாநில

அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்களான 109 திட்டங்களின் கீழ் ₹1,135.36 கோடியும் அடங்கும். 119 திட்டங்களில் (₹3,878.41 கோடி). ஒரு கோடிக்கும் மேலான செலுத்துகைகள், மொத்த செலுத்துகைகளில் 98.34 விழுக்காடாக இருந்தது. (**இணைப்பு 2.3**). பெருமளவு செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்ட மூன்று திட்டங்கள்:

(1) PMFBYன் கீழ் காப்பீடு மானியத்திற்கான மாநில அரசின் பங்கு (₹1,227.37கோடி).

(2) NFSA 2013ன் கீழ் மாநிலங்களுக்கு இடையே உணவுப்பொருள் போக்குவரத்து மற்றும் நியாய விலை கடைக்காரர்களின் லாபம்-மாநிலத்தின் பங்கு (₹452.69 கோடி).

(3) 'விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டி குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்' (₹225.68 கோடி).

விவசாயிகளின் பயிர்கடனுக்கான வட்டி குறைப்புக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம்' என்ற திட்டத்தில் ('2425.00.108.KD), 2014-15 முதல் 2023-24 கால கட்டத்தில் செய்யப்பட்ட மொத்த செலவான ₹2,244.09 கோடியில், ₹1,216.68 கோடி சிறு தலைப்பு 911ன் கீழ் அரசு கணக்கிற்கு செலுத்தப்பட்டது. இது, பணம் எடுக்கப்பட்ட கணக்கு ஆண்டில், உள்ளபடியான செலவினம் கூட்டிக்காட்டப்பட்டதை உணர்த்துகிறது. அதுமட்டுமல்லாமல், அந்த ஆண்டுகளில் வருவாய் வகை செலவினமும், வருவாய் பற்றாக்குறையும் அந்த அளவிற்கு கூடுதலாக காட்டப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், இந்த திட்டங்களுக்கான செலவினமும் தவறாக காட்டப்பட்டுள்ளது.

### *2.4.2.6 மாநில நிதி குழு - GST இழப்பீட்டை உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிராமை*

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243-I மற்றும் 243-Y ஆகிய பிரிவுகளில் உள்ளபடி, அரசியலமைப்பு சட்டத் திருத்தப்பிரிவு 73 மற்றும் 74 மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆண்டுக்குள்ளும் அதன்பிறகு ஒவ்வொரு ஐந்து ஆண்டு முடிந்த பின்பும் மாநில அரசு நிதிக்குழுவை SFC அமைப்பது கட்டாயமாகும். உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆராய்ந்து மேதகு ஆளுநரிடமும், மேதகு முதல்வரிடமும் அறிக்கையை மாநில நிதிக்குழு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். மாநில நிதி குழுவின் அறிக்கை மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையின் விளக்க குறிப்பாணையுடன் அரசு சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அந்தந்த மாநில நிதி குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுக்காடு வீதத்தை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தின் மூன்றாம் நிலை அதாவது நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், மாநில சொந்த வரி வருவாயில் இருந்து மானியங்களை பெறும். மாநில அரசு ஆறு மாநில நிதி குழுக்களை அமைத்தது மற்றும் எல்லா மாநில நிதி குழு பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கைகளையும் சட்டசபையில் வைத்தது.

அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்திற்கான 5வது மாநில நிதி குழுவின் அறிக்கை, (டிசம்பர் 2016) பத்தி 10.20 பரிந்துரையின் படி, GSTயை நடைமுறைப்படுத்தியதால் ஏற்படும் வருவாய் பற்றாக்குறையை ஈடுகட்ட மத்திய அரசிலிருந்து பெறப்படும் இழப்பீட்டில் 10 விழுக்காட்டை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என பரிந்துரைத்தது. இந்த பரிந்துரை அரசால்

ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மார்ச் 2017ல் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2018-19 முதல் 2023-24 வரையிலான கடந்த ஆறு ஆண்டுகளில் **அட்டவணை 2.19(அ)ல்** விவரிக்கப்பட்டவாறு ₹50,700.60 கோடி பெறப்பட்டு அதில் ஐந்தாவது SFC ஆல் பரிந்துரைக்கப்பட்டு அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு 10 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்வு செய்யப்படவில்லை என்பது நிதி மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் பதிவுருக்களை ஆய்வு செய்ததில் தெரிய வந்தது.

**அட்டவணை 2.19 (அ) : இந்திய அரசால் விடுவிக்கப்பட்ட GST இழப்பீடு.**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | இந்திய அரசால் தமிழக அரசுக்கு விடுவிக்கப்பட்ட GST இழப்பீடு | SFC பரிந்துரைகள் மற்றும் அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய 10விழுக்காடு GST இழப்பீடு |
|---|---|---|
| 2018-19 | 3,151.00 | 315.10 |
| 2019-20 | 8,922.03 | 892.20 |
| 2020-21 | 10,602.83 | 1,060.28 |
| 2021-22 | 7,235.80 | 723.58 |
| 2022-23 | 16,214.83 | 1,621.48 |
| 2023-24 | 4,574.20* | 457.42 |
| **மொத்தம்** | **50,700.69** | **5,070.06** |

* பொருட்கள் மற்றும் சேவை வரி காரணமாக ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய மாநில அரசுக்கு அளிக்கப்பட்ட 2021-22 க்கான ₹3,529.28 கோடி , 2018-19 க்கான ₹3.31 கோடி மற்றும் ஏப்ரல் 2022 முதல் ஜூன் 22 வரை ₹1,041.60 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இவ்வாறாக அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி GST இழப்பை பகிர்ந்து கொள்ளாததால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் போனதுடன் அந்த அளவுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகளையும் செய்ய இயலாமல் போனது. இறுதி கலந்தாய்வு கூட்டத்தில் துறை இதை ஒப்புக்கொண்டது.

### 2.4.3 மூலதன வகை செலவு

மூலதன வகை செலவு என்பது முக்கியமாக சாலைகள், கட்டடங்கள் போன்ற நிலையான சொத்துகளை உருவாக்குவதற்காக செய்யப்படும் செலவு ஆகும். மூலதன வகை செலவு வரவு- செலவு திட்ட ஒதுக்கீடு மற்றும் அதற்கு அப்பாற்பட்ட வகையிலான முறைகள் மூலம் செய்யப்படுகிறது. அண்மைக் காலங்களில் உள்கட்டமைப்பு தேவைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளதால், மூலதன வகை செலவின் பெரும்பகுதியை மேற்கொள்ள சிறப்பு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் அரசு மூலதன வகையில் ₹40,500 கோடி செலவிட்டது. இது முந்தைய ஆண்டைவிட ₹970 கோடி (2.45 விழுக்காடு) கூடுதல் ஆகும். இத்தொகை திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடான ₹42,532 கோடிக்கு எதிராக செலவிடப்பட்டதாகும். இது GSDPல் 1.49 விழுக்காடாகும் மற்றும் பொதுகடன் வரவுகளில் 30.78 விழுக்காடாகும். இது, பொதுகடன் வரவுகள் பற்றாக்குறைகளை எதிர்கொள்வதற்கும்

அல்லது கடன்களை திருப்பிச் செலுத்தவும் பயன்படுத்தப்பட்டது என எடுத்துரைக்கின்றது.

எனினும், மொத்த செலவுடன் ஒப்பிட்டால், மூலதன வகை செலவானது முந்தைய ஆண்டை விட 0.82 விழுக்காடு குறைந்தது. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் இருந்த மூலதன வகை செலவின் போக்கு **விளக்கப்படம் 2.12ல்** தரப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.12: மாநிலத்தின் மூலதன வகை செலவு**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### *2.4.3.1 மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்*

2022-23 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ல் மூலதன வகை செலவில் இருந்த முக்கிய மாற்றங்கள் **அட்டவணை 2.20ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.20: மூலதன வகை செலவில் முக்கிய மாற்றங்கள்**

*(₹ கோடியில்)*

| பெருந் தலைப்பு | விவரம் | 2022-23 | 2023-24 | கூடுதல் / குறைவு(-) |
|---|---|---|---|---|
| 4215 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுக்கான மூலதன செலவு | 2,477.64 | 4,492.54 | 2,014.90 |
| 5054 | சாலைகள் மற்றும் மேம்பாலத்திற்கான மூலதன செலவு | 14,414.16 | 16,147.95 | 1,733.79 |
| 4202 | கல்வி, விளையாட்டு கலை மற்றும் பண்பாட்டுக்கான மூலதன செலவு | 586.31 | 1,009.55 | 423.24 |
| 4211 | குடும்ப நலனுக்கான மூலதன செலவு | 174.48 | 573.86 | 399.38 |
| 4404 | பால் வளத்துக்கான மூலதன செலவு | 43.47 | 289.31 | 245.84 |
| 4059 | பொது பணிகளுக்கான மூலதன செலவு | 821.52 | 496.19 | (-) 325.33 |
| 4250 | இதர சமூக பணிகளுக்கான மூலதன செலவு | 626.56 | 126.26 | (-) 500.30 |
| 4210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்திற்கான மூலதன செலவு | 1,201.20 | 642.16 | (-) 559.04 |
| 5055 | சாலை போக்குவரத்துக்கான மூலதன செலவு | 1,639.85 | 668.71 | (-) 971.14 |
| 4217 | நகர்புற மேம்பாட்டுக்கான மூலதன செலவு | 8,210.71 | 6,414.50 | (-) 1,796.21 |

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

நகர்ப்புற குடி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ₹527.26 கோடி செலவில் சென்னை போரூரில், 400 MLD கொள்ளவுடன் எதிர் சவ்வூடு பரவல் மூலம் கடல் நீரை குடிநீராக்கும் (SWRO) தொழிற்சாலை அமைத்தது மற்றும், கிராமப்புற நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஜல் ஜீவன் திட்டப் பணியை ₹1,635.14 கோடி செலவில் செயற்படுத்தியதும் 4215 – குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுக்கான மூலதன செலவு உயர்ந்திட முக்கிய காரணமாகும். சாலைகள் மற்றும் பாலங்கள் (₹1,733.79 கோடி) மற்றும் கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு (₹423.24 கோடி) ஆகியவற்றிலும் செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், நகர்புற மேம்பாடு (21.88 விழுக்காடு) சாலை போக்குவரத்து (59.22 விழுக்காடு) மற்றும் மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் (46.54 விழுக்காடு) ஆகிய துறைகளில் செலவினம் கணிசமாக குறைந்து காணப்பட்டது.

### *2.4.3.2 மூலதன வகை செலவின் தரம்*

நிதி பொறுப்புடைமை மற்றும் வரவு செலவு திட்ட மேலாண்மை என்ற கட்டமைப்பில், மாநிலம், நிதி பற்றாக்குறையை குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் வருவாய் பற்றாக்குறையை அறவே அகற்ற வேண்டும் என்றும் மூலதன செவினம் / முதலீடு (கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) ஆகியவற்றை தனது சொந்த வருவாய் ஆதாரங்களை கொண்டே செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநில அரசு தான் வாங்கிய கடன்களை சரிக்கட்ட மறைமுக மானியங்கள் என்ற வகையில் தனது வரவு –செலவு திட்டத்தில் சுமையை புகுத்தாமல் தனது முதலீடுகளிலிருந்து போதிய ஆதாயங்களை பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நடப்பாண்டில் அரசு மேற்கொண்ட முதலீடுகள் மற்றும் மூலதன வகை செலவின் மீதான பரந்த பகுப்பாய்வு முடிவுகளை (அறிக்கையின் இப்பகுதி) முந்தைய ஆண்டு ஒப்பிட்ட வகையில் தெரிவிக்கிறது.

### (i) நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் தரம்

2023-24 நிதி கணக்குகளின்படி, மாநில அரசு, ஒரு சட்டமுறை கழகம், 57 அரசு நிறுவனங்கள், இரண்டு கூட்டுப் பங்கு நிறுவனங்கள் மற்றும் 49 கூட்டுறவு அமைப்புகளில் ₹45,009.84 கோடி முதலீடு செய்திருந்தது.

அரசால் செய்யப்பட்ட முதலீடுகளின் விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 2.21ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.21: அரசால் செய்யப்பட்ட முதலீடுகள்**

| வரிசை எண் | விவரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு சேமிப் கிடங்கு நிறுவனம் | 1 | 3.81 |
| 2 | அரசு நிறுவனங்கள் | 57 | 44,528.71 |
| 3 | கூட்டு பங்கு நிறுவனங்கள் | 2 | 0.71 |
| 4 | கூட்டுறவு அமைப்புகள் | 49 | 476.61 |
| | **மொத்தம்** | **109** | **45,009.84** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள்*)

கடந்த ஐந்தாண்டு காலத்தில் (2019-20 முதல் 2023-24 வரை) முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட சராசரி வருமானம் 0.73 விழுக்காடு மட்டுமே, இதே காலகட்டத்தில் அரசு தான் வாங்கிய கடன்களுக்கு சராசரியாக 7.64 விழுக்காடு வட்டி செலுத்தியது. இக்கணிசமான வேறுபாட்டினால், முக்கிய இனங்களுக்கு நிதி ஒதுக்க தேவையான நிதி ஆதாரத்தைக் குறைப்பதுடன் நிதி நிலையில் கடினமான சூழலையும் ஏற்படுத்தியது.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் ஆண்டு முடிவில் இருந்த முதலீடுகள் மற்றும் அவற்றின் மூலம் பெறப்பட்ட வருமானம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.22ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.22: முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

| முதலீடு/வருமானம்/கடன்கள் மீதான செலவு | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு இறுதியில் முதலீடு (₹ கோடியில்) | 39,866 | 41,578 | 42,167 | 44,526 | 45,010 |
| ஆண்டு இறுதியில் கடன்கள் * (₹கோடியில்) | 4,23,743 | 5,12,555 | 5,96,331 | 6,77,255 | 7,58,087 |
| வருமானம் (₹ கோடியில்) | 160 | 174 | 256 | 294 | 700 |
| வருமானம் (விழுக்காடு) | *0.40* | *0.42* | *0.61* | *0.66* | *1.56* |
| அரசு வாங்கிய கடன்களுக்காக செலுத்திய சராசரி வட்டி வீதம் (விழுக்காடு) | *8.07* | *7.80* | *7.50* | *7.37* | *7.46* |
| செலுத்தப்பட்ட வட்டி வீதத்திற்கும் வருமான வீதத்திற்கும் இடையே வேறுபாடு (விழுக்காடு) | *(-) 7.67* | *(-) 7.38* | *(-) 6.89* | *(-) 6.71* | *(-) 5.90* |
| அரசு வாங்கிய கடன்களுக்கான வட்டிக்கும் முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்திற்கும் இடையே வேறுபாடு (₹ கோடியில்) # | 3,057.72 | 3,068.46 | 2,905.31 | 2,987.69 | 2,655.59 |

# ஆண்டு இறுதியில் முதலீடு X வட்டி வீதத்திற்கும் வருமானத்திற்கும் இடையே வேறுபாடு

* பொருட்கள் மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு வழங்கப்பட்ட கடன்களை மாநில அரசு அதனுடைய ஆதாரத்திலிந்து திரும்ப செலுத்தாது. எனவே நிலுவையிலுள்ள கடன்களில் 2020-21ல் ₹6,241 கோடியும் 2021-22,2022-23 மற்றும் 2023-24ல் ₹14,336 கோடி எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

2023-24ம் ஆண்டில், அரசு, மாநில போக்குவரத்து கழகங்களில் ₹396.90 கோடி மற்றும் தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சி கழகத்தில் (வரையறுக்கப்பட்டது) 100 கோடியும் முதலீடு செய்ததால் அரசு முதலீடு அதிகரித்துக் காணப்பட்டது

## முதலீடு தொகை தொடர்பாக அரசுக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இடையே வேறுபாடு

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 19ல் நிறுவனங்கள், கழகங்கள் தொடர்பான அரசு முதலீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விவர அறிக்கை 16ல் அரசின் மூலதன செலவுகள் சிறு /துணை தலைப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும். 23 நிறுவனங்கள் /கழகங்களின் மூலதன விவரங்கள் குறித்து நிதி கணக்குகள் விவர அறிக்கை பிரிவு 2ல் தெரிவிக்கப்பட்டவையும், நிதி கணக்குகள் விவர அறிக்கை 16ல் குரிப்பிடப்பட்டவையும் வேறுபட்டிருந்தன (**இணைப்பு 2.4**) பெருமளவிலான வேறுபாடுகள். (i) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம். (ii) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்

(வரையறுக்கப்பட்டது). (iii) தமிழ்நாடு மாநில போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனம் (வரையறுக்கப்பட்டது). (iv) சென்னை மெட்ரோ ரயில் மற்றும், (v) தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழகம் (மதுரை) ஆகியவை தொடர்பானதாகும்.

நிதி கணக்குகள், அரசு முதலீடுகளின் உண்மை நிலையை உணர்த்தும் வகையில், பொதுத்துறை நிறுவனங்களுடன் வேறுபாடுகளை ஒத்திசைவு செய்ய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### (ii) கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட மற்றும் மீளப் பெறப்பட்ட கடன்கள்

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தவிரவும், அந்த நிறுவனங்களுள் பலவற்றுக்கு, அரசு, கடன்கள் மற்றும் முன்பணங்களும் தந்து வந்துள்ளது.

மார்ச் 31, 2024 நிலையில் நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் வட்டி வரவுகள் மற்றும் செலுத்தப்பட்ட வட்டி ஆகியன பற்றிய விவரங்களை **அட்டவணை 2.23ல்** அளிக்கிறது.

**அட்டவணை 2.23: நிலுவையில் இருந்த கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

(*₹ கோடியில்*)

| வழங்கப்பட்ட மற்றும் மீளப்பெறப்பட்ட கடன்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு துவக்கத்தில் நிலுவையில் இருந்த கடன்கள் | 41,359 | 39,997 | 38,587 | 36,872 | 43,055 |
| இவ்வாண்டில் அளிக்கப்பட்ட கடன் தொகை | 4,022 | 3,835 | 3,640 | 7,261 | 8,845 |
| இவ்வாண்டில் மீள பெறப்பட்ட கடன் தொகை | 5,384 | 5,245 | 5,355 | 1,078 | 4,024 |
| ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த கடன்கள் | 39,997 | 38,587 | 36,872 | 43,055 | 47,876 |
| நிகர கூடுதல் | (-) 1,362 | (-) 1,410 | (-) 1,715 | 6,183 | 4,821 |
| பெறப்பட்ட வட்டி | 4 | 346 | 320 | 372 | 1,093 |
| அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்களின் நிலுவை தொகையில் வட்டி வரவுகளின் விழுக்காடு | *0.01* | *0.88* | *0.85* | 0.93 | *2.40* |
| அரசு வாங்கிய நிலுவையிலுள்ள கடன்களுக்காக செலுத்தப்பட்ட (சராசரி) வட்டி வீதம் (விழுக்காட்டில்) | *8.07* | *7.80* | *7.50* | *7.37* | *7.46* |
| செலுத்தப்பட்ட வட்டி மற்றும் பெறப்பட்ட வட்டி ஆகியவற்றின் வீதங்களிடையே வேறுபாடு (விழுக்காடு) | *8.06* | *6.86* | *6.60* | *6.44* | *5.06* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

### (iii) முடிவுறா திட்டங்களில் செய்யப்பட்ட மூலதனம்

31 மார்ச் 2024 அன்றுள்ளவாறு, முடிவுறா திட்டங்களின் ஆண்டு வாரியான விவரங்கள் **அட்டவணை 2.25**லும், துறை வாரியான விவரங்கள் **அட்டவணை 2.24**லும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.24: துறை வாரியான முடிவுறா திட்டங்களின் விவரங்கள்

(₹ கோடியில்)

| துறை | முடிவுறா திட்டங்களின் எண்ணிக்கை* | எதிர்நோக்கப்பட்ட செலவு | நடப்பாண்டில் செய்யப்பட்ட செலவு |
|---|---|---|---|
| கட்டடங்கள் | 53 | 452.44 | 223.53 |
| நீர்பாசனம் | 130 | 3,662.49 | 706.31 |
| சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் | 500 | 11,071.25 | 2,062.59 |
| ஏனையவை | 49 | 969.38 | 394.97 |
| **மொத்தம்** | **732** | **16,155.56** | **3,387.40** |

அட்டவணை 2.25 முடிவுறா திட்டங்களின் வயது வாரியான விவரம்

(₹ கோடியில்)

| ஆண்டு | முடிவுறா திட்டங்களின் எண்ணிக்கை * | எதிர்நோக்கப்பட்ட செலவு | நடப்பாண்டில் செய்யப்பட்ட செலவு |
|---|---|---|---|
| < 1 ஆண்டு | 594 | 8,691.06 | 2,441.68 |
| > 1 ஆண்டு | 105 | 6,621.68 | 881.69 |
| > 2 ஆண்டுகள் | 17 | 557.34 | 35.08 |
| > 3 ஆண்டுகள் | 2 | 3.61 | 0.00 |
| > 4 ஆண்டுகள் | 3 | 61.36 | 13.25 |
| > 5 ஆண்டுகள் | 6 | 90.34 | 15.10 |
| > 6 ஆண்டுகள் | -- | -- | -- |
| > 7 ஆண்டுகள் | 5 | 130.17 | 0.60 |
| | **732** | **16,155.56** | **3,387.40** |

* 31 மார்ச் 2024க்குள் முடிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன

(*ஆதாரம்: நிதிக் கணக்குகள் 2023-24*)

முடிவுறா திட்டங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 167 என்பதற்கு மாறாக, இந்த ஆண்டு 732 ஆக அதிகரித்துள்ளது. மேலும் ₹220.51 கோடி மதிப்பிலான 11 திட்டங்கள் 5 ஆண்டுகளுக்கு மேலும் ₹81.10 கோடி மதிப்பிலான 2 திட்டங்கள் மற்றும் ₹139.41 கோடி மொத்த மதிப்பிலான 9 திட்டங்கள் நீர் பாசனம் மற்றும் கட்டடங்கள் துறையில் தாமதமாவதை அறிய முடிகிறது. திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க தவறும் பட்சத்தில் திட்ட செலவு கூடுவதுடன் சமூகத்திற்கு இத்திட்டத்தினால் கிடைக்கும் பயன்கள் காலதாமதமாகும். கால மற்றும் செலவு விரயத்தை தடுக்கும் பொருட்டு, மேற்சொன்ன திட்டங்களை விரைந்து முடிக்க திறன்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

### சேம நிதியிலிருந்து மூலதன செலவு செய்யப்பட்டமை

நிதி கணக்குகளில் தெரிவிக்கப்பட்ட மூலதன வகை செலவு (₹40,500.20 கோடி), சேம நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகையை (₹7.38 கோடி) கழித்தபின் உள்ள நிகர தொகையை குறிக்கும்.

## 2.4.4 செலவு முன்னுரிமைகள்

மனித வள வளர்ச்சி நிலைகளை உயர்த்துவதற்கு, மாநிலங்கள், கல்வி, நலவாழ்வு போன்ற முக்கிய சமூக பணிகள் மீதான தமது செலவை உயர்த்த

வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கான ஒதுக்கீடு தேசிய சராசரி ஒதுக்கீட்டைவிட குறைவாக இருந்தால், அப்பிரிவிற்கான நிதி முன்னுரிமை (மொத்த செலவில் அப்பிரிவிற்கான ஒதுக்கீட்டின் விகிதம்) குறைவாக உள்ளது என பொருள்படும். மொத்த செலவில் இத்தகைய கூறுகளின் விகிதம் அதிகமாக இருப்பின், செலவின் தரம் மேம்பட்டதாக கருதப்படும். நலவாழ்வு, கல்வி மற்றும் மூலதன வகை செலவு தொடர்பான மாநிலத்தின் செலவு முன்னுரிமை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.26ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.26: செலவு முன்னுரிமைகள்**

***(விழுக்காட்டில்)***

| | மொத்த செலவு / GSDP | மூலதன வகை செலவு / மொத்த செலவு | கல்வி மீதான செலவு/ மொத்த செலவு | நலவாழ்வு மீதான செலவு / மொத்த செலவு |
|---|---|---|---|---|
| *பொது வகை மாநிலங்கள்* (2019-20) | 15.88 | 14.02 | 15.79 | 5.25 |
| *தமிழ்நாடு* (2019-20) | 13.77 | 12.35 | 15.98 | 5.13 |
| *பொது வகை மாநிலங்கள்* (2023-24) | 15.66 | 16.50 | 14.36 | 5.71 |
| *தமிழ்நாடு* (2023-24) | 13.19 | 13.74 | 12.82 | 4.95 |

*(ஆதாரம்: GSDPக்கு மத்திய புள்ளியியல் அலுவலகம் மற்றும் பொருளாதார ஆலோசகரின் தரவு)*

## 2.4.5 குறுந்தலைப்பு வாரியான செலவு

இவ்வாண்டில் செய்யப்பட்ட குறுந்தலைப்பு வாரியான செலவு **விளக்கப்படம் 2.13ல்** தரப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.13: குறுந்தலைப்பு வாரியான செலவு**

***(விழுக்காட்டில்)***




*(ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24)*

நடப்பாண்டில் ஊதியங்கள் மற்றும் படிகள், ஓய்வூதியம் மற்றும் வட்டி ஆகிய பொறுப்புகள் தொடர்பான செலவு மொத்த வருவாய் வகை மற்றும் மூலதன

செலவில் 47.35 விழுக்காடு ஆகும். மொத்த செலவில் 11.56 விழுக்காடு மட்டுமே மூலதன செலவாக செய்யப்பட்டதால் அரசு மூலதன செலவிற்கு தகுந்த முன்னுரிமை தரவில்லை. 11.56 விழுக்காடு மூலதன செலவில் பெரும் பணிகள் மீதான செலவில் 9.82 விழுக்காடும் பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்ய 1.36 விழுக்காடும் செலவிடப்பட்டன.

## 2.5 பொது கணக்கு

சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி, சேமநிதிகள், வைப்பு தொகைகள், அநாமத்து, செலுத்தங்கள், பேன்றவை தொடர்பான வரவு- செலவு நடவடிக்கைகள் தொகுநிதியின் பகுதிகளாக சேராமல் அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 266(2)ன் படி அமைக்கப்பட்ட பொது கணக்கின் கீழ் வைக்கப்படும். இவை மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டவை அல்ல. இவ்வினங்களில் அரசு ஒரு வங்கியாளர் போன்று செயல்படும். இக்கணக்கின் கீழ் வழங்கப்பட்டது போக மீதமுள்ள தொகை அரசின் பல்வேறு பயன்பாட்டுக்கு கிடைக்கும்.

### 2.5.1 பொது கணக்கின் நிகர இருப்புகள்

மாநிலத்தின் பொது கணக்கில் இருந்த பகுதிவாரியான நிகர இருப்புகள் **அட்டவணை 2.27ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.27: பொது கணக்கில் 31 மார்ச் அன்று இருந்த பகுதிவாரியான நிகர இருப்பு**

*(₹ கோடியில்)*

| பகுதி | துணை பகுதி | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| I. சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை. | (-) 26,475.22 | (-) 29,352.41 | (-) 32,032.78 | (-) 33,884.02 | (-) 35,199.41 |
| J. சேம நிதிகள் | (அ) வட்டியுடன் கூடிய சேமநிதிகள் | (-) 113.42 | (-) 113.42 | (-) 113.42 | (-) 1,198.57 | (-) 134.23 |
| | (ஆ) வட்டி ஈட்டாத சேம நிதிகள் | (-) 2,044.94 | (-) 2,030.89 | (-) 2,273.04 | (-) 2,212.12 | (-) 2932.33 |
| K. வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் | (அ) வட்டியுடன் கூடிய வைப்பு நிதிகள் | (-) 9,323.98 | (-) 8,014.50 | (-) 7643.95 | (-) 9,992.02 | (-) 9,875.27 |
| | (ஆ) வட்டி ஈட்டாத வைப்பு நிதிகள் | (-) 15,235.43 | (-) 22,096.51 | (-) 26,667.81 | (-) 28,410.75 | (-) 20,355.71 |
| | (இ) முன்பணங்கள் | 7.67 | 7.64 | 7.62 | 7.57 | 7.57 |
| L. அநாமத்து மற்றும் பல்வகை | (ஆ) அநாமத்து | (-) 283.10 | 29.01 | 57.60 | 131.71 | 115.53 |
| | (இ) பிற கணக்குகள் | 3,692.59 | 5,841.15 | 15,108.59 | 14,402.40 | 10,460.59 |
| | (ஈ) அயல்நாட்டு அரசுகளுடனான கணக்குகள் | 1.24 | 1.24 | 1.24 | 1.24 | 1.24 |
| | (உ) பல்வகை | -- | -- | -- | -- | (-) 5,599.99 |
| M. செலுத்தங்கள் | (அ) பண அஞ்சல்கள் மற்றும் பிற செலுத்தங்கள் | (-) 0.51 | (-) 0.48 | 5.47 | 5.55 | 5.55 |
| | (ஆ) அரசுகளுக்கிடையேயான சரிக்கட்டல் கணக்கு | 8.56 | 8.48 | 8.83 | 5.02 | 10.01 |
| மொத்தம் | | (-) 49,766.54 | (-) 55,720.69 | (-) 53,541.65 | (-) 61,143.99 | (-) 63,496.45 |

*குறிப்பு : (+) பற்று மீதத்தையும் (−) வரவு மீதத்தையும் குறிக்கும்*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.14: பொது கணக்கு இருப்புகளின் கூறுகளில் ஆண்டுவாரியான மாற்றங்கள்**

(₹ *கோடியில்*)




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- 2022-23ல் ₹61,143.99 கோடி ஆக இருந்த அரசின் பொது கணக்கு பொறுப்புகள் 2023-24ல் ₹63,496.45 கோடியாக, 3.85 விழுக்காடு உயர்ந்தது.

- பொது கணக்கிற்கான பெரும் பங்களிப்புகள் சிறு சேமிப்பு, வருங்கால வைப்புநிதி போன்றவை மற்றும் வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் ஆகும்.

## 2.5.2 சேம நிதிகள்

மாநில அரசின் பொது கணக்கின் கீழ் குறிப்பான மற்றும் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக சேம நிதிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றுக்கான தொகைகள் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து பங்களிப்பு அல்லது மானியங்கள் என்ற வகையில் பெறப்படுகின்றன.

சேம நிதிகளில் 31 மார்ச் 2024 அன்று இருந்த மொத்த தொகை ₹14,020.21 கோடி (வட்டியுடன் கூடிய சேமநிதிகள் ₹1,198.57 கோடியும், வட்டியில்லாத சேமநிதிகள் ₹12,821.64 கோடி உட்பட) ஆகும். முக்கிய சேம நிதிகள் சில கீழே விளக்கப்பட்டுள்ளன.

### *2.5.2.1 தொகுக்கப்பட்ட கடன்தீர் நிதி*

பன்னிரெண்டாவது நிதி குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, சந்தை கடன்கள், பிற கடன்கள் மற்றும் கடன் பொறுப்புகளை தீர்க்க மாநில அரசுகள் கடன் தீர் நிதியை (CSF) உருவாக்கின. அந்நிதியை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது.

சந்தை கடன்கள், மத்திய அரசு கடன்கள் மற்றும் மாநில அரசுக்கு கிடைக்கப் பெற்ற தேசிய சிறுசேமிப்பு நிதிக்கு விடுவிக்கப்பட்ட சிறப்பு கடன் பத்திரங்கள் போன்ற கடன்களை தீர்க்க 2005-06ல் மாநில அரசு CSFஐ உருவாக்கியது. தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, முந்தைய ஆண்டின் முடிவில் நிலுவையில் இருந்த கடன் பொறுப்புகளில் 0.5 விழுக்காடு என்ற விகிதத்தில் அரசு CSFக்கு பங்களிக்கலாம். இவ்வாண்டில் மாநில அரசு அந்நிதிக்கு ₹1,283.16 கோடி பங்களித்தது. இது 1 ஏப்ரல் 2023 அன்று நிலுவையில் இருந்த ₹6,91,590.72 கோடி பொறுப்புகளில் 0.19 விழுக்காடு மட்டுமே ஆகும். எனவே, ₹2,174.79 கோடி குறைவான பங்களிப்பு மூலம் வருவாய் செலவினம் குறைத்துக்காட்டப்பட்டது.

மார்ச் 31, 2024 அன்று CSFல் ₹4,383.60 கோடி தொகை இருந்தது முதலீடுகளிலிருந்து நடப்பாண்டில் ₹583.16 இலட்சம் வட்டி பெறப்பட்டது.

பொறுப்புகளின் உயர்ந்துவரும் போக்கு காரணமாக, அரசு இந்நிதிக்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பங்களிப்பை அளிக்க வேண்டும்.

### *மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதி*

### *2.5.2.2 மாநில பேரிடர் நிவாரண நிதி*

SDRF வழிகாட்டுநெறிகளின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகள் அந்நிதிக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பங்களிக்க வேண்டும் (75:25). அந்த பங்களிப்புகள் பொது கணக்கு பெருந்தலைப்பு – 8121க்கு மாற்றப்படும். மற்றும் செலவு பெருந்தலைப்பு – 2245ன் கீழ் கணக்கு வைக்கப்படும்.

ரிசர்வ் வங்கியின் மிகைப்பற்று ஒழுங்காற்று வழிகாட்டுநெறிகளின் கீழ் மிகைப் பற்றுக்கு பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தில் மாநில அரசுகள் SDRFக்கு வட்டி செலுத்த வேண்டும். அவ்வட்டி அரையாண்டு அடிப்படையில் வரவு வைக்கப்பட வேண்டும். SDRFல் சேரும் தொகை மற்றும் SDRF தொகையின் முதலீட்டிலிருந்து பெறப்படும் வருவாய், மத்திய அரசின் தேதியிட்ட பத்திரங்கள், ஏலம் விடப்படும் அரசு கடன் பத்திரங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் வட்டியுடன் கூடிய வைப்புத் தொகை ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான செலவை எதிர்க்கொள்ள மட்டுமே SDRFஐ பயன்படுத்த வேண்டும். பேரிடர் ஆயத்த நிலை, மறு சீரமைப்பு, மறுகட்டுமானம் மற்றும் துயர் தணிப்பு பணிகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு SDRFஐ பயன்படுத்தக்கூடாது. இத்தகைய செலவுகள் வழக்கமான வரவு செலவு திட்டம்/மாநில திட்ட நிதி போன்றவை மூலம் எதிர்கொள்ளப்பட வேண்டும்.

2023-24ல் மாநில அரசு SDRF கணக்கிற்கு ₹1,200 கோடி (மத்திய அரசு பங்கு ₹900 கோடி மற்றும் மாநில அரசு பங்கு ₹300 கோடி) தொகையை இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் பொருட்டு மாற்றியது.

SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.28ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.28: SDRFலிருந்து செய்யப்பட்ட செலவு பற்றிய விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| கணக்கு பெருந்தலைப்பு | சிறு தலைப்பு | 2023-24ல் ஆன செலவு |
|---|---|---|
| 2245- இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் 01-வறட்சி | 800 – பிற செலவுகள் | 176.66 |
| | 911 – கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது | (-) 2.34 |
| | **துணை மொத்தம்** | **174.32** |
| 2245- இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் 02-வெள்ளங்கள், புயல்கள் போன்றவை. | 101 – கருணை நிவாரணம் | 2,070.64 |
| | 102 – குடிநீர் வழங்கல் | 330.28 |
| | 105 – கால்நடை பாதுகாப்பு | 2.22 |
| | 106 – சேதமடைந்த சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் பழுது நீக்கம் மற்றும் மறு சீரமைப்பு | 9.95 |
| | 107 – சேதமுற்ற அரசு அலுவலக கட்டடங்கள் பழுது நீக்கம் மற்றும் மறு சீரமைப்பு | 4.91 |
| | 111 – இறந்தவர் குடும்பங்களுக்கு கருணை தொகை | 9.05 |
| | 113 – வீடுகள் பழுதுநீக்கம் / மறுகட்டுமானத்திற்காக உதவி | 15.57 |
| | 114 – வேளாண் இடுபொருட்கள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 288.94 |
| | 117 – கால்நடைகள் வாங்க விவசாயிகளுக்கு உதவி | 0.42 |
| | 118 – சேதமுற்ற படகுகள்/ மீன்பிடி கருவிகள் பழுது நீக்கம்/புதிதாக வாங்க உதவி | 30.11 |
| | 122 – சேதமடைந்த நீர்ப் பாசன மற்றும் வெள்ள கட்டுப்பாடு பணிகள் பழுது நீக்கம் மற்றும் மறுசீரமைப்பு | 19.96 |
| | 190 – பொது துறை மற்றும் பிற நிறுவனங்களுக்கு உதவி | 50.00 |
| | 193 – நகர் பஞ்சாயத்துக்கள் / அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அவற்றுக்கு இணையானவைக்கு உதவி | 10.00 |
| | 282 – பொது சுகாதாரம் | 4.98 |
| | 800 – பிற செலவுகள் | 89.15 |
| | 911 – கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது. | (-) 1.68 |
| | **துணை மொத்தம்** | **2,934.49** |
| 80-பொது | 102 – பேரழிவு ஏற்படக்கூடிய இடங்களில் உடனடி நடவடிக்கை மற்றும் இயற்கை பேரழிவு மேலாண்மை | 1.11 |
| | 103 – தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மாநிலங்களுக்கு உதவி. | 0.18 |
| | 800 – பிற செலவுகள் | 152.92 |
| | 911 - கழிக்க: கூடுதலாக வழங்கப்பட்ட தொகை மீள பெறப்பட்டது. | (-) 0.90 |
| | **துணை மொத்தம்** | **153.31** |
| | **பெரு மொத்தம்** | **3,262.12** |
| **05** - மாநில பேரிடர் நிவாரண நிதி | **901- கழிக்க – SDRFலிருந்து செலவிடப்பட்ட தொகை** | **2,013.16** |
| **08** - மாநில பேரிடர் தணிப்பு நிதி | **902- கழிக்க - SDMFலிருந்து செலவிடப்பட்ட தொகை** | **414.80** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

2023-24ம் ஆண்டில் ₹2,013.16 கோடி செலவிடப்பட்டது. இந்நிதியில் 31 மார்ச் 2024 நிலையில் மீதம் ஏதும் இல்லை.

### *2.5.2.3 மாநில பேரிடர் தணிப்பு நிதி*

பேரிடர் மேலாண்மை சட்டம், 2005, பிரிவு 48(1)(c)ன் கீழ் 2021-22ம் ஆண்டில் பேரிடர் தணிப்பு நிதி உருவாக்கப்பட்டது. இந்த நிதி SDRF/NDRF சம்பந்தப்பட்ட பேரிடர் தணிப்பு திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். SDMF நிதிக்கு மத்திய அரசால் 75 விழுக்காடு பங்களிப்பு போக மீதமுள்ள 25 விழுக்காடு மாநில அரசு பங்களிக்க வேண்டும்.

2023-24 ஆண்டில் மாநில அரசு ₹142.80 கோடியை 2022-23 ஆண்டின் இரண்டாம் தவணையாக இந்நிதிக்கு மாற்றம் செய்தல். இதில் மாநில அரசின் பங்கு ₹35.70 கோடி அடங்கும். 2023-24 ஆண்டிற்கான மத்திய அரசு பங்கு ₹225 கோடி மற்றும் மாநில அரசு பங்கு 75 கோடி ஆகியவை இன்னமும் மாற்றம் செய்யப்படவில்லை.

2023-24ல் அரசு பேரிடர் தணிப்பு திட்டங்களுக்கு ₹414.80 கோடி செலவு செய்தது. 31 மார்ச் 2023 அன்று இந்நிதியில் மீதம் ஏதும் இல்லை.

### *2.5.2.4 உத்தரவாத மீட்பு நிதி*

அளிக்கப்பட்ட உத்தரவாதங்களை செயல்படுத்துவதற்கான செலவுத் தொகைகளை செலுத்துவதற்காக உத்தரவாத மீட்பு நிதி மார்ச் 2003ல் அமைக்கப்பட்டது. இதனை ரிசர்வ் வங்கி நிர்வகிக்கிறது. நடப்பாண்டில் வழங்கப்பட்ட அதிகரிக்கும் உத்தரவாதத்தின் விளைவாக செயல்படுத்தப்பட வேண்டிய உத்தரவாத தொகைக்கும் மற்றும் நிலுவையிலுள்ள உத்தரவாத தொகைக்கு இணையாக குறைந்த பட்சம் ஐந்தில் ஒரு பங்கு அளிக்க வேண்டும்.

எனினும், இந்நிதிக்கான பங்களிப்பை, மாநில அரசு அதன் விருப்புரிமையின் படி அதிகரிக்கவோ / குறைக்கவோ செய்யலாம். எனவே இந்நிதிக்கு தேவையான பங்களிப்பை கணக்கிட இயலாது. நிதியில் 31 மார்ச் 2023 அன்று இருந்த தொகை ₹2,150.23 கோடி. நடப்பாண்டில் பத்திரங்கள் விற்றதில் கிடைத்த ஆதாயமான ₹191.50 கோடி உட்பட மாநில அரசின் பங்களிப்பு ₹1,143.41 கோடி ஆகும்; நடப்பாண்டில் எந்த உத்தரவாதமும் பயன்படுத்தப்படவில்லை. 31 மார்ச் 2024 அன்று நிதியில் இருந்த தொகையான ₹3,293.64 கோடியில் ₹3,268.72 கோடி கருவூலப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.2.5 தொகுப்பு நிதிக்கு வெளியே வைக்கப்பட்ட நிதி/மாநிலத்தின் பொது கணக்கு மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட நிதி*

அரசியலமைப்பு சட்டப் பிரிவு 265, எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி வரி வசூலிப்பதை தடை செய்கிறது. மேலும் சட்டபூர்வ அதிகாரமின்றி எந்த வரியும் விதிக்கப்படக் கூடாது அல்லது வசூலிக்கப்படக் கூடாது. சட்டபூர்வ அதிகாரம் என்பது, பரிந்துரைக்கப்பட்ட வரியானது, வரி விதிக்கும் சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகார வரம்புக்குள் இருக்க வேண்டும்.

மேலும், இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 266 (1), பிரிவு 267ன் வழிவகைகளுக்கு உட்பட்டு, ஒரு மாநில அரசால் பெறப்படும் அனைத்து வருவாய், அரசு கடன் பத்திரங்கள் மூலமாக வாங்கப்படும் கடன்கள், கடன்கள் அல்லது வழிவகை முன்பணங்கள் மற்றும் திருப்பிச் செலுத்தப்படும் கடன்கள் மூலம் அரசால் பெறப்படும் அனைத்து பணமும் ஒன்று சேர்த்து ஒரே தொகுப்பாக "மாநில அரசின் தொகுப்பு நிதி" என்ற பெயரில் வைக்கப்படும். பிரிவு 266 (2)ன் படி அரசால் அல்லது அரசு சார்பில் பெறப்படும் பிற பொது பணம் மாநிலத்தின் பொது கணக்கில் வரவு வைக்கப்படும்.

நீலகிரி மலைப்பிரதேசத்தில் உள்ள இரண்டு கட்டண நுழைவு வாயில்கள் மூலம் உள்நுழையும் அனைத்து வெளியூர் வாகனங்களுக்கும் "பசுமை வரி" வருவாய் துறையால் (டிசம்பர் 2017ல் இருந்து) வசூலிக்கப்படுகிறது. உதகமண்டல மாவட்ட ஆட்சியரின் நிர்வாக ஆணைப்படி வசூலிக்கப்படும் இந்த வரி, சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா துறையின் மேம்பாட்டு திட்டங்களுக்காக வசூலிக்கப்படுகிறது. நவம்பர் 2024 வரை வசூலிக்கப்பட்ட ₹8.38 கோடியில் ஊதியம் மற்றும் திட்ட செலவினத்திற்காக ₹2.91 கோடியை வருவாய் துறை செலவழித்தது. மீதி தொகையான ₹5.47 கோடி உதகமண்டல மாவட்ட ஆட்சியரின் பெயரில் உள்ள சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனினும், பசுமை வரி வசூல், தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட எந்த சட்டம் அல்லது விதிகளின் கீழும் வராததால், சட்டபூர்வ அங்கீகாரம் பெறவில்லை.

அத்துடன், தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் 1974ன் கீழ் தமிழ்நாடு அரசின் போக்குவரத்து துறை, பசுமை வரி என்ற அதே பெயரில் வேறொரு வரி வசூலிப்பதையும் தணிக்கை கண்டறிந்தது. இந்த பசுமை வரியானது, பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட ஆண்டுகள் கடந்த பழைய மோட்டார் வாகனங்கள் மீது, காற்று மாசுபடுவதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் விதிக்கப்படுகிறது.

எனவே, நீலகிரி மாவட்ட வருவாய் துறையில் நிர்வாக ஆணை மூலம் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, சேமிப்பு கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் வரி, தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின் கீழ் எவ்வித சட்டபூர்வ அங்கீகாரத்தையும் பெறவில்லை. மேலும் வசூலிக்கப்பட்ட வரி தொகுப்பு நிதிக்கு வெளியே இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இச்செயல் அரசியலமைப்பு பிரிவு 265 மற்றும் 266ன் படி அதிகார வரம்பு மீறிய செயலாகும்.

## 2.6 பொது கடன் மேலாண்மை

தேவையான அளவு நிதி பெறுதல், அதற்குரிய நோக்கங்களை அடைதல், சட்டம் இயற்றுதல் அல்லது ஆண்டு வரவு–செலவு திட்ட அறிவிப்புகள் மூலம் அரசு நிர்ணயித்த பிற அரசு கடன் மேலாண்மை இலக்குகளை அடைதல் ஆகிய நோக்கங்களுக்காக அரசின் கடன் நிலையை மேலாண்மை செய்வதற்கான ஒரு உத்தியை வகுத்து செயல்படுத்துவது கடன் மேலாண்மை எனப்படும்.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த கடன் அளவின் போக்கு (அரசின் உள்நாட்டு கடன், இந்திய அரசிடமிருந்தான கடன்கள் மற்றும் முன்பணங்கள் மற்றும் பொது கணக்கு பொறுப்புகள் உட்பட) மற்றும் GSDPல் கடன் அளவின் பங்கு ஆகியன **விளக்கப்படம் 2.15ல்** தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.15: நிலுவையிலுள்ள பொதுகடன் பொறுப்புகள் மற்றும் GSDPல் அதனுடைய விழுக்காடு**

*(₹ கோடியில்)*




* பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக இந்திய அரசால் வழங்கப்பட்ட தொகை மாநில அரசின் ஆதாரங்களிலிருந்து செலுத்தப்படாது என்பதால், 2020-21 ₹6,241 கோடியும், 2021-22, 2022-23 மற்றும் 2023-2024ல் ₹14,336 கோடியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்திற்குரிய வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களான ₹703.78 கோடி ₹668.42 கோடி, ₹1,241.96 கோடி, ₹2,298.50 கோடி மற்றும் ₹3,919.10 கோடி நிலுவையிலுள்ள பொதுக்கடன் பொறுப்புகளை கணக்கிட, கடன்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

## 2.6.1 கடன் நிலையின் கூறுகள்

மாநில அரசின் மொத்த கடனில் பொதுவாக அரசின் உள்நாட்டு கடன் (சந்தை கடன்கள், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற வழிவகை முன்பணங்கள், தேசிய சிறு சேமிப்பு நிதிக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் போன்றவை), மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள், பொது கணக்கு பொறுப்புகள் ஆகியன அடங்கும். கடன் தொகையின்

கூறுவாரியான போக்கு **அட்டவணை 2.29**லும் மற்றும் 2023-24 இறுதியில் நிலுவையில் இருந்த கடன் தொகையின் பிரிவுகள் **விளக்கப்படம் 2.16**லும் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.29: கடன் தொகையின் கூறுவாரியான போக்கு**

| நிதிப் பொறுப்புகளின் கூறுகள் | | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| **நிலுவையிலுள்ள மொத்த கடன்கள் (அ + ஆ)** | | **4,24,447** | **5,13,223** | **5,97,573** | **6,79,554** | **7,62,006** |
| *(அ) பொது கடன் (₹கோடியில்)* | *உள்நாட்டு கடன் (வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டவை உட்பட)** | *3,53,329* | *4,30,416* | *5,03,447* | *5,69,934* | *6,46,513* |
| | *இந்திய அரசு கடன்கள் (திருப்பித் தர வேண்டாத கடன்கள் தவிர்த்து) *** | *17,925* | *21,199* | *25,395* | *33,922* | *46,996* |
| *(ஆ) பொது கணக்கு பொறுப்புகள் (₹கோடியில்)* | | *53,193* | *61,608* | *68,731* | *75,698* | *68,497* |
| **நிலுவையில் இருந்த மொத்த கடனின் வளர்ச்சி விகிதம் (*விழுக்காடு*)** | | ***14.87*** | ***20.92*** | ***16.44*** | ***13.72*** | ***12.13*** |
| கடன் /GSDP (*விழுக்காடு*) | | 24.35 | 28.70 | 28.83 | 28.39 | 28.00 |
| மொத்த கடன் வரவுகள் (*₹ கோடியில்*) | | 1,87,208 | 2,44,197 | 2,48,996 | 2,28,906 | 2,75,517 |
| மீள செலுத்தப்பட்ட கடனின் மொத்தம் (*₹ கோடியில்*) | | 1,32,202 | 1,49,143 | 1,57,125 | 1,47,982 | 1,94,686 |
| **அரசுக்கு கிடைத்த நிகர கடன் (*₹ கோடியில்*)** | | **55,006** | **95,054** | **91,871** | **80,924** | **80,831** |
| மீள செலுத்தப்பட்ட கடன் / கடன் வரவுகள் (*விழுக்காடு*) | | 70.62 | 61.07 | 63.10 | 64.65 | 70.66 |

* 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்திற்குரிய வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களான ₹703.78 கோடி, ₹668.42 கோடி, ₹1,241.96 கோடி, ₹2,298.50 கோடி மற்றும் ₹3,919.10 கோடி நிலுவையிலுள்ள பொதுக்கடன் பொறுப்புகளை கணக்கிட, கடன்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

** பொருட்கள் மற்றும் சேவைவரி இழப்பீட்டிற்கு மாற்றாக மாநிலத்திற்கு கடன் வரவுகளின் கீழ் கடனாக இந்திய அரசால் வழங்கப்பட்ட தொகை மாநில அரசின் ஆதாரங்களிலிருந்து செலுத்தப்படாது என்பதால், 2020-21 ₹6,241 கோடியும், 2021-22, 2022-23 மற்றும் 2023-2024ல் ₹14,336 கோடியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**விளக்கப்படம் 2.16: 2023-24ல் நிதியாண்டு இறுதியில் நிலுவையிள்ள பொறுப்புகளின் கூறுகள்**




^ *உள்நாட்டுக்கடன், வரவு–செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களான* ₹3,919.10 கோடி உட்பட.

^^ *இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் – திருப்பித் தர வேண்டாத கடன்களான.* ₹14,336 கோடி தவிர்த்து.

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

- அரசின் உள்நாட்டு கடன் திருப்பித் தர வேண்டாத கடன்களை தவிர்த்து 2022-23 இறுதியில் ₹5,69,934 கோடி ஆக இருந்தது இது 13.44 விழுக்காடு உயர்ந்து 2023-24 இறுதியில் ₹6,46,513 கோடி ஆக இருந்தது.
- 2022-23ல் ₹6,79,554 கோடியாக இருந்த (வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் உட்பட) நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகள் 2023-24ல் ₹7,62,006 கோடியாக உயர்ந்தது. ஆனால் 2022-23ல் ₹23,93,364 கோடியாக இருந்த GSDP 2023-24ல் ₹27,21,571 கோடி ஆக உயர்ந்தது. நடப்பாண்டில், GSDPக்கும் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகளுக்கும் இடையே உள்ள விகிதம் 0.61 விழுக்காடு அளவு குறைந்தது. இதன் மூலம் நடப்பாண்டில் GSDP அதிகரித்த அளவு பொறுப்புறுதிகள் அதிகரிக்கவில்லை என்ற உண்மை நிலையை அறியலாம்.

கடன் தொகையின் கூறுவாரியான போக்குகள், உள்நாட்டு கடன் வாங்கப்பட்டது மற்றும் மீள செலுத்தப்பட்டது என்பவற்றுக்கிடையேயான ஒப்பீடு **விளக்கப்படங்கள் 2.17** மற்றும் **2.18**ல் தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.17 கடன் கூறுகளின் போக்குகள்**

**(₹ கோடியில்)**




| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| சந்தை கடன்கள் | 49,826 | 76,796 | 72,500 | 68,003 | 78,252 |
| மத்திய அரசிடமிருந்து கடன்கள் | 633 | 9,515 | 12,290 | 8,528 | 13,073 |
| NSSFக்கு வெளியிடப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | -1,803 | -1,803 | -1,803 | -1,803 | -1,803 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள | 252 | 2,130 | 1,761 | -770 | -1,490 |
| சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 2,365 | 2,877 | 2,680 | 1,851 | 1,315 |
| வைப்பு தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 8,123 | 16,437 | 10,714 | 12,416 | 3,970 |
| அநாமத்து மற்றும் பல்வகை | 5,682 | -6,981 | -43 | -120 | 5,537 |
| செலுத்தங்கள் | -3 | 0 | -6 | 4 | -5 |
| சேம நிதிகள் | 1,293 | 656 | 1,055 | 2,732 | -4,421 |
| எதிர்பாரா செலவு நிதி | 10 | 0 | 0 | 0 | -5 |
| ஒட்டுமொத்த பற்றாக்குறை | 66,378 | 99,627 | 99,148 | 90,841 | 94,423 |
| ரொக்க இருப்பில் கூடுதல்/குறைவு | 6,199 | 5,644 | 17,313 | 8,955 | 3,993 |
| மொத்த நிதிப் பற்றாக்குறை | 60,179 | 93,983 | 81,835 | 81,886 | 90,430 |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.18: வாங்கப்பட்ட மற்றும் திருப்பி செலுத்தப்பட்ட உள்நாட்டுக் கடன்**

**(₹ கோடியில்)**




(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

2019-20ல் ₹64,784 கோடியாக இருந்த உள்நாட்டு கடன் வரவுகள் 2023-24ல் ₹1,16,602 கோடியாக உயர்ந்தது மற்றும் உள்நாட்டு கடனை திருப்பிச் செலுத்தலும் அதே விகிதத்தில் ₹16,510 கோடியிலிருந்து ₹41,643 கோடியாக உயர்ந்தது.

### *2.6.1.1 வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை*

TNFR சட்டம் 2003ன் படி, மொத்த பொறுப்புகள் என்பது 'மாநில தொகு நிதி மற்றும் மாநில பொது கணக்குகளில் உள்ள பொறுப்புகள்' ஆகும். எனினும், பல்வேறு மாநில திட்ட பணிகளுக்காக கழகங்கள்/முகமைகளால் வாங்கப்பட்டு, அசல் மற்றும் வட்டியை செலுத்தும் பொறுப்பை மாநில அரசு ஏற்றுள்ள கடன்கள் மாநிலத்தின் நிதி கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. இக்கடன்கள் மாநிலத்தின் பொறுப்புகளை மறைமுகமாக உயர்த்துகின்றன. அவ்வாறான கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.30ல்** தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 2.30: வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் நிலுவை**

(*₹ கோடியில்*)

| வரிசை எண் | முகமையின் பெயர் | வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் 31 மார்ச் 2023 அன்று நிலுவை | நடப்பாண்டில் வரவு செலவு திட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட கடன்கள் | நடப்பாண்டில் திருப்பிச் செலுத்திய கடன்கள் | 31 மார்ச் 2024 அன்று நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் | 308.71 | --- | 51.45 | 257.26 |
| 2 | நீர் மற்றும் சுகாதார தொகுப்பு நிதி – தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் | 380.14 | 80.48 | --- | 460.62 |
| 3 | தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் ஆறுகள் மறுசீரமைப்பு | 1,609.69 | 1,591.53 | --- | 3,201.22 |
| | **மொத்தம்** | **2,298.54** | **1,672.01** | **51.45** | **3,919.10** |

(*ஆதாரம்: உரிய ஆண்டுக்கான வரவு – செலவு திட்ட ஆவணங்கள் மற்றும் நிதி கணக்குகள்*)

வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகள் வரவு செலவு திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டாலும், நிலுவையிலுள்ள வரவு – செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் நிலுவையிலுள்ள கடன் பொறுப்புகளில் சேராது. 2023-24 நிதிக்கணக்குகள் குறிப்பின்படி, 31 மார்ச் 2024 அன்று நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள் ₹7,72,423 கோடியாகும். இதில் 31 மார்ச் 2024 அன்றுள்ளவாறு வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் ₹3,919.10 கோடி உள்ளடங்காது. இந்த வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களை உள்ளடக்கினால், நிலுவையிலுள்ள பொறுப்புகள் ₹7,62,006 கோடியாக இருக்கும் (திருப்பித் தர வேண்டாத கடன்களை தவிர்த்து) மற்றும் கடன்கள் மற்றும் GSDPக்குமான விகிதம் 28.00 விழுக்காடாக இருக்கும். அவை நிதி கணக்குகளில் காட்டப்படாததால், ஆண்டின் இறுதியில் நிலுவையில் உள்ள அரசின் கடன்கள் பற்றிய விவரங்களில் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை. எனவே, அரசின் நிதி பொறுப்புகள் பற்றிய உண்மை நிலையை கணக்கு பதிவுருக்களிலிருந்து அறிய இயலவில்லை.

### *2.6.1.2 நிதிப் பற்றாக்குறையின் கூறுகளும் மற்றும் ஈடு செய்யப்பட்ட வழிகளும்*

நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றும் அது ஈடு செய்யப்பட்ட வழிகள் **அட்டவணை 2.31**ல் தரப்பட்டுள்ளன. மற்றும் நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான வழிகள் அருவி வகையிலான **விளக்கப்படம் 2.19**ல் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.31: நிதி பற்றாக்குறையின் கூறுகள் மற்றம் அது ஈடு செய்யப்பட்ட வழிகள்**

(₹ *கோடியில்*)

| விவரங்கள் | | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| **நிதி பற்றாக்குறையின் கூறுகள்** | | **60,179** | **93,983** | **81,835** | **81,886** | **90,430** |
| 1 | வருவாய் பற்றாக்குறை | 35,909 | 62,326 | 46,538 | 36,215 | 45,121 |
| 2 | நிகர மூலதனம் | 25,632 | 33,067 | 37,011 | 39,488 | 40,488 |
| 3 | நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் | (-) 1,362 | (-) 1,410 | (-) 1,714 | 6,183 | 4,821 |
| **நிதி பற்றாக்குறை ஈடு செய்யப்பட்ட வழிகள்** | | | | | | |
| 1 | சந்தை கடன்கள் | 49,826 | 76,796 | 72,500 | 68,003 | 78,252 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | 633 | 9,515 | 12,290 | 8,528 | 13,073 |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | (-) 1,803 | (-) 1,803 | (-) 1,803 | (-) 1,803 | (-) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 252 | 2,130 | 1,761 | (-)770 | (-) 1,490 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 2,365 | 2,877 | 2,680 | 1,851 | 1,315 |
| 6 | வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 8,123 | 16,437 | 10,714 | 12,416 | 3,970 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | 5,682 | (-) 6,981 | (-) 43 | (-) 120 | 5,537 |
| 8 | செலுத்தங்கள் | (-) 3 | -- | (-) 6 | 4 | (-) 5 |
| 9 | சேம நிதிகள் | 1,293 | 656 | 1,055 | 2,732 | (-) 4,421 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | 10 | -- | -- | -- | (-) 5 |
| 11 | **ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **66,378** | **99,627** | **99,148** | **90,841** | **94,423** |
| 12 | ரொக்க இருப்பில் கூடுதல்/குறைவு | 6,199 | 5,644 | 17,313 | 8,955 | 3,993 |
| 13 | **மொத்த நிதி பற்றாக்குறை** | **60,179** | **93,983** | **81,835** | **81,886** | **90,430** |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

**விளக்கப்படம் 2.19: நிதிப் பற்றாக்குறை ஈடு செய்யப்பட்ட வழிகள்**

(₹ *கோடியில்*)




(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

**நிதி பற்றாக்குறை செலவினத்தை சமாளிக்க சந்தை கடன்களும் இந்திய அரசு கடன்களும் அதிகமாக பெறப்பட்டதே நிதி பற்றாக்குறை அதிகரிப்பதற்கு காரணம் ஆகும், (அட்டவணை 2.32).**

**அட்டவணை 2.32: நிதி பற்றாக்குறையை ஈடு செய்யும் கூறுகளின் கீழ் வரவுகள் மற்றும் செலவுகள்**

(₹ *கோடியில்*)

| வ எண் | விவரங்கள் | வரவு | செலவு | நிகர தொகை |
|---|---|---|---|---|
| 1 | சந்தை கடன்கள் | 1,13,001 | 34,749 | 78,252 |
| 2 | இந்திய அரசிடமிருந்து கடன்கள் | 14,995 | 1,922 | 13,073 |
| 3 | NSSFக்கு அளிக்கப்பட்ட சிறப்பு பத்திரங்கள் | -- | 1,803 | (-) 1,803 |
| 4 | நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் | 3,601 | 5,091 | (-) 1,490 |
| 5 | சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை | 9,304 | 7,989 | 1,315 |
| 6 | வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் | 1,18,711 | 1,14,741 | 3,970 |
| 7 | அநாமத்து மற்றும் பல்வகை | 4,11,345 | 4,05,808 | 5,537 |
| 8 | செலுத்தங்கள் | 0* | 5 | (-) 5 |
| 9 | சேம நிதிகள் | 5,051 | 9,472 | (-) 4,421 |
| 10 | எதிர்பாரா செலவு நிதி | -- | 5 | (-) 5 |
| **11** | **மொத்த/ஒட்டுமொத்த பற்றாக்குறை** | **6,79,008** | **5,81,580** | 94,423 |
| 12 | ரொக்க இருப்பு | 81,341 | 85,334 | 3,993 |
| **13** | **மொத்த நிதி பற்றாக்குறை** | **5,94,667** | **12,48,494** | **90,430** |

- *செலுத்தங்களின் கீழ் உண்மையான வரவு* (-) ₹ 17.19 *லட்சம்.*

(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

### 2.6.2 கடன் விவரங்கள்: முதிர்வு மற்றும் மீள செலுத்துதல்

**கடன் முதிர்வு மற்றும் மீள செலுத்துதல் என்பது, கடனை மீள செலுத்துவது அல்லது அதற்குரிய தொகைகளை செலுத்துவதற்கான அரசின் பொறுப்புடைமையை குறிக்கும். கடன் மற்றும் அதனை மீள செலுத்துவதற்கான காலம் குறித்த விவரங்கள் அட்டவணை 2.33 மற்றும் விளக்கப்படம் 2.20ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2.33: கடன் முதிர்வு மற்றும் மாநில கடனை மீள செலுத்துவது பற்றிய நிலை.**

| மீள செலுத்துவதற்கான காலம் (ஆண்டுகள்) | தொகை (₹ கோடியில்) | *விழுக்காடு (பொது கடனில்)* |
|---|---|---|
| 0-1 ஆண்டுகள் | 35,709 | *5.07* |
| >1 முதல் 3 ஆண்டுகள் | 85,809 | *12.19* |
| >3 முதல் 5 ஆண்டுகள் | 93,797 | *13.33* |
| >5 முதல் 7 ஆண்டுகள் | 95,000 | *13.50* |
| > 7 ஆண்டுகள் | 3,15,671 | *44.84* |
| மற்றவை[4] | 77,939 | *11.07* |
| **மொத்தம்** | **7,03,925** | ***100.00*** |

*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

**விளக்கப்படம் 2.20: பொது கடன்களை மீள செலுத்தும் நிரல்**




*(ஆதாரம்: நிதி கணக்குகள்)*

**அடுத்த பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படவுள்ள நிலுவையிலுள்ள சந்தை கடன்களின் அசல் மற்றும் வட்டி விவரங்கள்** (2024-25 **ஆண்டிலிருந்து) அட்டவணை 2.34லும் மற்றும் விளக்கப்படம் 2.21லும் கொடுக்கப்பட்டுள்ளன.**

[4] இந்த தொகைக்கான கொடுப்பு நிரல் மாநில கணக்காயரால் (A&E) பராமரிக்கப்படுவதில்லை.

**அட்டவணை 2.34: திருப்பிச் செலுத்தப்படும் கடன்கள் மற்றும் வட்டி**

(₹ கோடியில்)

| ஆண்டு | திருப்பிச் செலுத்தப்படும் | | |
|---|---|---|---|
| | சந்தை கடன்கள் | வட்டி | மொத்தம் |
| 2024-25 | 24,850.00 | 2,010.88 | 26,860.88 |
| 2025-26 | 36,350.00 | 2,814.57 | 39,164.57 |
| 2026-27 | 37,175.00 | 2,884.56 | 40,059.56 |
| 2027-28 | 48,695.32 | 3,618.58 | 52,313.90 |
| 2028-29 | 46,970.00 | 3,820.61 | 50,790.61 |
| 2029-30 | 26,685.50 | 1,970.53 | 28,656.03 |
| 2030-31 | 47,377.00 | 3,296.15 | 50,673.15 |
| 2031-32 | 49,000.00 | 3,393.70 | 52,393.70 |
| 2032-33 | 29,100.00 | 2,200.00 | 31,300.00 |
| 2033-34 | 42,000.00 | 3,149.60 | 45,149.60 |
| **மொத்தம்** | **3,88,202.82** | **29,159.18** | **4,17,362.00** |




(*ஆதாரம்: நிதி கணக்குகள் 2023-24*)

மாநிலத்தின் நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் வட்டியை அடுத்த பத்தாண்டுகளில் திருப்பிச் செலுத்துகைகளின் போக்கு மேற்கண்டவாறு ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளில் மாநிலத்தின் வட்டி பொறுப்பு ₹29,159.18 கோடியாகவும், சந்தைகடன்கள் ₹3,88,202.82 கோடியாகவும் இருக்கும்.

## 2.7 கடன் தாங்கு தன்மை பற்றிய பகுப்பாய்வு

கடன் தொடர்பான தொகைகளை நடப்பாண்டு மற்றும் வரும் ஆண்டுகளில் செலுத்துவதற்குரிய அரசின் ஆற்றல் கடன் தாங்கு தன்மை எனப்படும். மேற்படி தன்மை, நடப்பு காலத்துடன் துவங்கும் ஒரு காலகட்டத்தில் கடன் தொடர்பான நிதி பொறுப்புகளை ஏற்கக்கூடிய சாத்தியக்கூற்றை கணக்கில் கொள்கிறது. அது பொருளாதாரத்தின் நிதி நிலையையை மதிப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணம் ஆகும். உயர் அளவிலான கடன் நிலை பெரும் எண்ணிக்கையிலான இடர்களை உருவாக்கும். உயர் அளவிலான கடன்

நிலை பொதுவாக, அதிக அளவில் கடன் வாங்கும் தேவைகளுடனும், அதன் காரணத்தால் கடன் பெற இயலாத நிலையுடனும் (கடன் வாங்கும் தேவைகளை நிறைவு செய்ய இயலாமை அல்லது உயர் வட்டி விகிதங்களில் வாங்குவது) தொடர்பு கொண்டது ஆகும்.

தோமர் அணுகுமுறை மற்றும் பெரிய அளவிலான நிதி அளவுருக்களை அந்தந்த FRBM இலக்குகளுக்கு உட்படுத்தி நிதி மற்றும் கடன் அளவுருக்களை அடிப்படையாக கொண்டு கடன் தாங்கும் தன்மை பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த பகுப்பாய்வின் முடிவுகள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன:

**(A)** கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளில் 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் இருந்த வேறுபாடுகள் **அட்டவணை 2.35** மற்றும் **விளக்கப்படம் 2.22ல்** தரப்பட்டுள்ளன. **அட்டவணை 2.35** தயாரிப்பதற்கான கணக்கீட்டு விவரங்கள் **இணைப்பு 2.5ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.35: கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளின் போக்குகள்**

| வ எண் | கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஒட்டுமொத்த பொறுப்புறுதி அல்லது ஒட்டுமொத்த கடன்* (*₹ கோடியில்*) | 4,24,447 | 5,13,223 | 5,97,573 | 6,79,554 | 7,62,006 |
| 2 | ஒட்டுமொத்த கடன் தொகையின் வளர்ச்சி விகிதம் (*விழுக்காடு*) | 14.87 | 20.92 | 16.44 | *13.72* | *12.13* |
| 3 | GSDP (இயல்பு நிலையில்) (*₹ கோடியில்*) | 17,43,144 | 17,88,074 | 20,72,496 | 23,93,364 | 27,21,571 |
| 4 | GSDP இயல்பான வளர்ச்சி (*விழுக்காடு*) | 6.93 | 2.58 | 15.91 | 15.48 | *13.71* |
| 5 | ஒட்டுமொத்த கடனுக்கான GSDP விகிதம் (*விழுக்காடு*) ^ | *24.35* | *28.70* | *28.83* | *28.39* | *28.00* |
| 6 | அனைத்து வகையான பொது கடன்களின் முதிர்வு நிலை (கோடியில்) | | | | | |
| 6அ | 0-2 ஆண்டுகள் | *30,139* | *40,235* | *62,766* | *74,968* | *77,126* |
| 6ஆ | 2-5 ஆண்டுகள் | *82,724* | *1,15,385* | *1,21,517* | *1,35,138* | *1,38,189* |
| 6இ | 5-10 ஆண்டுகள் | *1,92,952* | *2,10,289* | *2,19,113* | *1,99,015* | *2,14,753* |
| 6ஈ | 10 ஆண்டுகளுக்கு மேல் | *38,098* | *52,571* | *85,355* | *1,43,123* | *1,95,919* |
| 6உ | பிறவகை* | *26,637* | *38,709* | *53,185* | *63,649* | *77,939* |
| 7 | மொத்த கடனில் திருப்பி செலுத்துதல் (விழுக்காடு) | 87.78 | 76.07 | 79.85 | 84.81 | 89.67 |
| 8 | மொத்த கடன்களில் நிகர கடன்களின் விழுக்காடு. | 12.22 | 23.93 | 20.15 | 15.19 | 10.33 |
| 9 | ஒட்டுமொத்த கடன் மீதான வட்டி கொடுப்புகள் (கோடியில்) | 32,050 | 36,560 | 41,641 | 47,031 | 53,808 |
| 10 | ஒட்டுமொத்த கடன் மீதான பயனுறு வட்டி வீதம் (விழுக்காடு) | *8.42* | *8.16* | *7.70* | *7.61* | *7.84* |
| 11 | வருவாய் செலவினம் (RE) (கோடியில்) | *2,10,435* | *2,36,402* | *2,54,030* | *2,79,964* | *3,09,718* |
| 12 | வருவாய் வரவினத்தில் வட்டி கொடுப்புகள் (விழுக்காடு) | 18.36 | 21.00 | 20.07 | 19.29 | 20.34 |

| வ எண் | கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| 13 | வருவாய் பற்றாக்குறை / மிகை (கோடியில்) | *(-) 35,909* | *(-) 62,326* | *(-) 46,538* | *(-) 36,215* | *(-) 45,121* |
| 14 | முதன்மை வருவாய் இருப்பு (PRB) (கோடியில்) | *(-) 3,859* | *(-) 25,766* | *(-) 4,897* | *10,815* | *8,687* |
| 15 | முதன்மை இருப்பு (PB)/PRB (கோடியில்) | (-) 28,129 | (-) 57,423 | (-) 40,194 | (-) 34,855 | (-) 36,622 |
| 16 | PB/GSDP (விழுக்காடு) | (-) 1.61 | (-) 3.21 | (-) 1.94 | (-) 1.46 | (-) 1.35 |
| 17 | ஒட்டுமொத்த கடன் மீதான ROI மற்றும் பயனுறு வட்டி வீதத்திற்கு இடையிலான வேறுபாடு. | (-) 8.35 | 0.64 | 0.86 | (-) 0.79 | 5.74 |
| 18 | பணப்புழக்கம் மேலாண்மை (RBI வசமுள்ள கடனுதவி பத்திரங்களை பயன்ப்படுத்துதல்) (நிகழ்வுகள்– எண்ணிக்கை) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19 | கடன் நிலைப்படுத்துதல் (குயப்பரவல் + முதன்மை இருப்பு) (கோடியில்) | (-) 34,187 | (-) 84,718 | 8,384 | 15,895 | 6,213 |
| 20 | தோமர் அளவு கோல் | | | | | |
| அ | GSDP (நிலையான சூழலில்) (கோடியில்) | 12,43,836 | 12,44,650 | 13,42,817 | 14,51,929 | 15,71,368 |
| ஆ | உண்மையான வளர்ச்சி (நிலையான சூழலில்) | 3.25 | 0.07 | 7.89 | 8.13 | 8.23 |
| இ | CPI அடிப்படையிலான பணவீக்கம் (விழுக்காடு) | 5.72 | 6.81 | 5.67 | 5.96 | 5.41 |
| ஈ | பயனுறு வட்டி வீதம் | 8.42 | 8.16 | 7.70 | 7.61 | 7.84 |
| உ | உண்மை பயனுறு வட்டி வீதம் (பயனுறு வட்டி வீதம் – பண வீக்கம்) | 2.70 | 1.35 | 2.03 | 1.65 | 2.43 |
| ஊ | வட்டி வளர்ச்சி வேறுபாடுகள் (உண்மை வளர்ச்சி – உண்மை பயனுறு வட்டி வீதம்) | 0.55 | (-) 1.28 | 5.86 | 6.48 | 5.80 |

# *ஒட்டுமொத்த பொறுப்புறுதிகள் = பொது கடன் + பொது கணக்கு பொறுப்புறுதிகள் (அனாமதேய, செலுத்துங்கள் மற்றும் ரொக்க இருப்பு தவிர்த்து) 2021-22ல் பெறப்பட்ட ₹8,095 கோடி மற்றும் 2020-21ல் ₹6,241 கோடி திருப்பித்தர வேண்டாத கடன்கள் உள்ளடக்கப்படவில்லை. 2019-20 முதல் 2023-24 வரை பெறப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் முறையே ₹703.78 கோடி, ₹668.42 கோடி, ₹1,241.96 கோடி, ₹2,298.50 கோடி மற்றும் ₹3,919.10 கோடி அடங்கும்.*

* *பொது கணக்கு பொறுப்புகளின் முதிர்வு நிலை கிடைக்கப்பெறவில்லை.*

PRB: *வருவாய் வரவுகள் – வருவாய் செலவினம் (நிகர வட்டி கொடுப்புகள்) (–)* PB *என்பது முதன்மை பற்றாக்குறையை குறிக்கிறது. மற்றும் நேர்மாறாக*

PB: *மொத்த வரவினங்கள் (நிகர கடன்கள்) – மொத்த செலவினம் (நிகர வட்டி கொடுப்புகள்; (-)* PB *என்பது முதன்மை பற்றாக்குறையை குறிக்கிறது. மற்றும் நேர்மாறாக*

*பணப்புழக்கம் பயனுறு வட்டி வீதம்: வட்டி கொடுப்புகள் / முந்தைய மற்றும் நடப்பு நிதி ஆண்டில் நிலுவையில் உள்ள சராசரி கடன் ( வட்டி தராத பொறுப்புறுதி தவிர்த்து ).*

*பணப்புழக்கம் மேலாண்மை:* SDF , WMA & OD*க்கு எதிராக பெறப்பட்ட தொகை.*

*குயப்பரவல்: வட்டி பரவல் × கடன்*

*முதலீடு மீதான வருமானம் (ROI) வட்டி வரவுகளின் பயனுறு வீதம் மூலம் கணக்கிடப்படும்.*

ROI = *வட்டி வரவுகள் / முந்தைய மற்றும் நடப்பு நிதி ஆண்டில் வழங்கப்பட்ட நிலுவையில் உள்ள சராசரி கடன்கள் மற்றும் முன்பணங்கள் × 100.*

*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

2019-20 முதல் 2023-24 வரையிலான காலக்கட்டத்தில் மாநிலத்தின் கடன் தாங்குதிறன் நிலையை பின் வரும் குறியீடுகள் விவரிக்கின்றன.

| வரிசை எண் | குறியீடு | விளக்கம் | பொருள் விளக்கம் |
|---|---|---|---|
| 1. | கடன் GSDP விழுக்காடாக | மாநிலத்தின் நிதி நிலையை அளவிடுகிறது. அதாவது, கடன்களை திரும்பி செலுத்துவதற்கான திறன் குறித்து. | கடன் – GSDP விகிதம் குறைவது, கடன் நிலைத் தன்மை நோக்கி முன்னேறுவதைக் குறிக்கும் 2019-20ல் 24.35 விழுக்காடாக இருந்த கடன் – GSDP விகிதம் 2021-22ல் 28.83 விழுக்காடாக உயர்ந்து பிறகு 2023-24ல் 28.00 விழுக்காடாக குறைந்தது.<br><br>இது கடன் நிலைத்தன்மை நோக்கி மாநிலம் முன்னேறுவதைக் குறிக்கிறது. 15வது மத்திய நிதிக்குழுவின் அறிக்கையில், 2020-21 முதல் 2025-26 வரையிலான ஆண்டுகளுக்கு மாநிலங்களின் கடன் பாதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 2020-21 முதல் 2022-23 வரையிலான கடந்த மூன்று ஆண்டுகளில் கடன் – GSDP விகித விழுக்காடு பரிந்துரைக்கப்பட்ட வரம்புக்குள் இருந்தது. 2023-24ல், கடன் – GSDP விழுக்காடு, பரிந்துரைக்கப்பட்ட வரம்பான 29.10 விழுக்காட்டிற்கு மாறாக, 28.00 விழுக்காடு ஆகும், மாநிலம், கடன் – GSDP விகிதத்தை கடந்த நான்கு ஆண்டுகளாக நிலையாக பராமரித்து வருவதை மேற்கண்டவற்றிலிருந்து அறியலாம். |
| 2. | (அ) இயல்பான வளர்ச்சி வீதம் கடன் வளர்ச்சி வீதத்தை விட அதிகமாக இருக்க வேண்டும்.<br><br>(ஆ) தோமர் மாதிரி – உண்மை வளர்ச்சி வீதம் உண்மை வட்டி வீதத்தை விட அதிகமாக இருக்க வேண்டும். | போதுமான கூட்டு நிலையில் நிலைத் தன்மை பற்றி மதிப்பீடு செய்து உண்மை வட்டி வீதத்தை விட உண்மை வளர்ச்சி அதிகரிப்பதற்கு தேவையான நிலையை ஆய்வு செய்ய வேண்டும். | அ) 2019-20 முதல் 2021-22 வரையிலான மூன்று ஆண்டுகளில் இயல்பு வளர்ச்சி வீதம் கடன் வளர்ச்சி வீதத்தை விட குறைவாக இருந்தது. 2022-23ல் கடன் வளர்ச்சி வீதத்தை விட அதிகரித்திருந்த இயல்பு வளர்ச்சி வீதம் 2023-24ல் கடன் வளர்ச்சி வீதத்தை விட, இயல்பு வளர்ச்சி வீதம் குறைவாக இருந்தது என்பது கடன் நிலைத் தன்மையை பராமரிக்க, மாநிலத்தின் பணப்புழக்க நிலையை மேம்படுத்துவதற்கான தேவையை உணர்த்துகிறது.<br><br>ஆ) தோமர் மாதிரியின்படி, உண்மை வளர்ச்சி வீதம் (g), நான்கு ஆண்டுகளில் (2019-20, 2021-22, 2022-23, மற்றும் 2023-24) (r) உண்மை வட்டி வீதத்தை விட அதிகமாக இருந்தது. எனினும், 2020-21ல். COVID-19 காரணமாக பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதால், (g), (r) ஐ விட குறைவாக இருந்தது. 2023-24க்கான நேர்மறை தோமர் இடைவெளி (g - r > 0) GSDP வளர்ச்சி, கடனை திருப்பிச் செலுத்த ஏதுவாக உள்ளதைத் குறிக்கிறது. |

| வரிசை எண் | குறியீடு | விளக்கம் | பொருள் விளக்கம் |
|---|---|---|---|
| 3. | (அ) முதன்மை இருப்பு (PB) மிகையாக இருக்க வேண்டும்.<br><br>(ஆ) முதன்மை வருவாய் இருப்பு (PRB) மிகையாக இருப்பதுடன் வட்டி கொடுப்புகளை வழங்க போதுமானதாகவும் இருக்க வேண்டும். | வருவாய் கணக்கின் பார்வையில், முதன்மை பற்றாக்குறை குறைய வேண்டும். அத்துடன் தற்போதைய கடனை திருப்பி செலுத்த தேவையான மிகை நிதி உருவாக்கப்பட வேண்டும். | அ. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-20 முதல் 2023-24 வரை) தொடர்ந்து பற்றாக்குறை நிலை மற்றும் ஏற்றத்தாழ்வுகளுடன் காணப்படுவது, கடன் நிலையற்ற தன்மை நோக்கிச் செல்லும் போக்கினை குறிக்கிறது.<br><br>ஆ. ஆரம்பத்தில் மூன்று ஆண்டுகள், (2019-20 முதல் 2021-22) முதன்மை வருவாய் இருப்பு பற்றாக்குறையாக இருந்தது. அதன் பின் அதிகரித்து, 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் தொடர்ந்து நேர்மறையாக இருந்தது. இது கடன் நிலையானது, 2022-23லிருந்து நிலையற்ற பாதையிலிருந்து நிலையான பாதைக்கு மாறுவதைக் குறிப்பதாகும். |
| 4. | (அ) வருவாய் வரவுகளில் வட்டி கொடுப்பு விழுக்காடு காலப்போக்கில் குறைய வேண்டும்.<br><br>(ஆ) வருவாய் செலவினத்தில் வட்டி கொடுப்புகள் விழுக்காடு, காலப் போக்கில் குறைய வேண்டும். | GSDP, வருவாய் வரவுகள் மற்றும் வருவாய் செலவினங்களில் வட்டி கொடுப்பு விழுக்காடு காலப்போக்கில் குறைவதன் மூலம் அதிகப்படியான வள ஆதாரங்களை பிற உற்பத்தி நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும். | அ) வட்டி கொடுப்புகளுக்கும், வருவாய் வரவுகளுக்கும் உள்ள விகிதம் அதிகரிப்பது கடன் நிலைத்தன்மைக்கான ஏற்ற குறியீடு அன்று. 2019-20 முதல் 2023-24வரையிலான ஐந்து ஆண்டுகளில் இந்த விகிதம் ஏற்றத்தாழ்வுகளுடன் இருந்தது. 2022-23ல் செலுத்த வேண்டிய கடன், மாநிலத்தின் வருவாய் வரவுகளில் 19.29 விழுக்காடாக இருந்தது, 2023-24ல் 20.34 விழுக்காடு ஆனது. திருப்பி செலுத்த வேண்டிய கடன்கள் அதிகரிப்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.<br><br>ஆ) இதைப்போலவே, வருவாய் செலவினத்திற்கும் வட்டி கொடுப்புக்கும் இடையிலான விகிதம் உயர்வது கடன் நிலைத்தன்மைக்கு உகந்த குறியீடு அன்று. 2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்து ஆண்டு கால கட்டத்தில் வருவாய் செலவினத்திற்கும் வட்டிக் கொடுப்புக்கும் இடையிலான விழுக்காடு அதிகரிக்கும் போக்கில் காணப்பட்டது. 2019-20ல் 15.23 விழுக்காடாக இருந்த விகிதம் 2023-24ல் 17.37 விழுக்காடாக உயர்ந்தது. 2023-24ல் திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகை, மாநில வருவாய் செலவினத்தில் 17.37 விழுக்காடாக இருந்தது. இதனால் பிற உற்பத்தி நோக்கங்களுக்கு போதுமான வள ஆதாரங்கள் கிடைக்கவில்லை. |

| வரிசை எண் | குறியீடு | விளக்கம் | பொருள் விளக்கம் |
|---|---|---|---|
| 5. | கடன் கட்டமைப்பு மற்றும் உருவாக்கம் அதாவது முதிர்வு நிலை (M) மற்றும் கடன்களுக்கான செலவு. | மாநிலத்தின் கடன் மீட்பு மீதான அழுத்தத்தை முதிர்வு நிலை உணர்த்துகிறது. உயர்ந்த முதிர்வு நிலை, வருங்காலத்தில் குறைந்த கடன் மீட்பு அழுத்தத்தை குறிக்கும். நீண்டகால கடன்கள் குறைந்த இடர்நிலை கொண்டதாக இருக்கும். செலவு குறைந்த நிதி ஆதார முறை (நிலையான / மாறுபட்ட / முகமதிப்பு வட்டி வீதம்) அதிக நிதி ஆதாரங்களை திரட்ட உதவுவதுடன், வட்டி கொடுப்பு சுமையை குறைத்து சிறந்த நிதி மேலாண்மைக்கு உதவுகிறது. | கடந்த ஐந்து ஆண்டுகளின் பொதுக்கடன் முதிர்வு நிலை அதிகபட்சமான கடனை திருப்பி செலுத்துவதற்கான கடன் மீட்பு அழுத்தம் (பொது கடனில் சராசரியாக 58 விழுக்காடு) ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகே ஏற்படும் என்பதை குறிக்கிறது. இதன் விளைவாக, மாநிலத்தின் நிதி பரப்பு அந்த அளவுக்கு அதிகரித்துள்ளது. நீண்டகால பொதுகடன் முதிர்வு நிலை திருப்பி செலுத்துவதில் உள்ள இடர்களை குறைத்து குறைந்த வட்டி வீதத்தில் மாநில கடன் பெற உதவுகிறது. |
| 6. | பணப்புழக்கம் | மாநிலம், குறுகியகால நிதி தேவைகளை சமாளிக்க எத்தனை முறை WMA மற்றும் OD வசதியை பயன்படுத்தியது என்பதன் மூலம் மாநிலத்தின் பணப்புழக்கத்தை அறியலாம். | கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநில அரசு குறுகியகால பணத்தேவைகளுக்காக வழிவகை முன் பணம் (WMA) மற்றும் அதிகப் பற்று கடன் வசதியை (OD), பயன்படுத்தவில்லை என்பது அரசின் பணப் புழக்க நிலையை பிரதிபலிக்கிறது. |
| 7. | நிதி சமமின்மை (FB) = பரவல் வரம்பு + PB. | FB பூச்சியமாக இருக்கும் போது கடன் / GSDP விகிதம் நிலையாக இருப்பதைக் குறிக்கும். FB நேர்மறையாக இருக்கும் போது கடன் / GSDP விகிதம் குறைவதை உணர்த்தும். எதிர் மறையாகும் போது இந்நிலை மாறும். | கடந்த ஐந்து ஆண்டுகளில், முதல் இரண்டு ஆண்டுகள் நிதி சமமின்மை. எதிர் மறையாக (2019-20 மற்றும் 2020-21) இருந்தது. 2021-22ல் இருந்து நேர்மறையாக மாறியது. நேர்மறை நிதி சமமின்மை என்பது கடன் – GSDP விகிதம் குறைவதை குறிக்கிறது. இன்றைய நிலையில் மாநிலம் தன்னுடய கடன்களை திருப்பி செலுத்தக் கூடிய வலுவான நிலையில் உள்ளதை உணர்த்துகிறது. |

**மேலே விவரிக்கப்பட்ட மாநில கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளின் போக்குகள் கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளன (வரைபடம் 2.22)**

**விளக்கப்படம் 2.22: கடன் தாங்கு நிலைக்கான குறியீடுகளின் போக்குகள்**




*(ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

**(B)** தோமர்[5] (தோமர் 1944) மாதிரியை அடிப்படையாக கொண்டு கடன் தாங்கு நிலை பகுப்பாய்வு செய்யப்பட்டது. தோமர் மாதிரியின் படி, அரசு கடன்தாங்கு நிலையை உறுதி செய்ய, அரசு கடன்களுக்கான வட்டிவீதம் GDP வளர்ச்சி வீதத்தை விட அதிகமாக இருக்க கூடாது.

பொதுகடனின் முக்கிய ஆற்றல் மிக்க கூறுகளான வட்டி வீதம், GSDPன் வளர்ச்சி வீதம் மற்றும் முதன்மை வரவு செலவுத் திட்ட இருப்பு ஆகியவை பின்வருமாறு.

| g-r (g – உள்ளபடியான வளர்ச்சி வீதம்: r – உள்ளபடியான வட்டி வீதம்) | PB (முதன்மை இருப்பு) < 0 (முதன்மை பற்றாக்குறை) | PB (முதன்மை இருப்பு)>=0 (முதன்மை மிகை) |
|---|---|---|
| g – r > 0 (வலுவான பொருளாதார வளர்ச்சி) | உண்மையான பொருளாதார வளர்ச்சி உண்மையான வட்டி வீதத்தை விட அதிகமாக இருந்து, முதன்மை பற்றாக்குறை நிலையாகவும் கடன் / GSDP உடன் மாற்றமின்றியும் இருக்கும் போது, கடன், தாங்கு நிலை கொண்டதாகும். | உண்மையான பொருளாதார வளர்ச்சி உண்மையான வட்டி வீதத்தை விட அதிகமாகி முதன்மை மிகை காட்டும் போது, கடன் /GSDP விகிதம் குறையும் மற்றும் கடன் நிலைத் தன்மை அடைய முயலும் எனவே தாங்கு நிலை கொண்டதாகும். |

5 கடன்களின் முதிர்வு, உள்ளடக்கம், செலவு மற்றும் இடர்களுக்கான கூறுகளை தோமர் மாதிரியில் கணக்கில் கொள்ளவில்லை

| g-r (g – உள்ளபடியான வளர்ச்சி வீதம்: r – உள்ளபடியான வட்டி வீதம்) | PB (முதன்மை இருப்பு) < 0 (முதன்மை பற்றாக்குறை) | PB (முதன்மை இருப்பு)>=0 (முதன்மை மிகை) |
|---|---|---|
| g – r < 0 (மந்தமான பொருளாதார வளர்ச்சி) | உண்மை பொருளாதார வளர்ச்சி உண்மை வட்டி வீதத்தை விட குறைந்து முதன்மை பற்றாக்குறை காட்டும். அப்போது, கடன் எல்லையற்று அதிகமாகி தாங்கு நிலை இழக்கும். | உண்மை பொருளாதார வளர்ச்சி உண்மை வட்டி வீதத்தை விட குறைந்து, முதன்மை மிகை காட்டும், இந்நிலையில் கடன்கள் மத்திம அல்லது நீண்டகால அடிப்படையில் குறைந்தால் அன்றி அக்கடன் ஒருபோதும் தாங்கக் கூடியதன்று. |

தமிழ்நாட்டில் மேற்சொன்ன அலகுகளை பயன்படுத்தியதன் விளைவுகள் **அட்டவணை 2.36ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.36: தோமர் மாதிரியை அடிப்படையாக கொண்ட கடன் தாங்கு நிலை**

| ஆண்டு | உள்ளபடியான வளர்ச்சி வீதம் (g) | உள்ளபடியான வட்டி (r) | g – r (டோமர் இடைவெளி) | முதன்மை பற்றாக்குறை (-)/ மிகை (+) (₹ கோடியில்) | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 3.25 | 2.70 | 0.55 | (-) 28,129 | உண்மையான பொருளாதார வளர்ச்சி உண்மையான வட்டி வீதத்தை விட அதிகமாக இருந்து முதன்மை பற்றாக்குறை நிலையாகவும் கடன் / GSDP உடன் மாற்றமின்றியும் இருக்கும் போது, கடன் தாங்கு நிலை கொண்டதாகும். |
| 2020-21 | 0.07 | 1.35 | (-) 1.28 | (-) 57,423 | உண்மை பொருளாதார வளர்ச்சி உண்மை வட்டி வீதத்தை விட குறைந்து முதன்மை பற்றாக்குறை காட்டும். அப்போது, கடன் எல்லையற்று அதிகமாகி தாங்கு நிலை இழக்கும். |
| 2021-22 | 7.89 | 2.03 | 5.86 | (-) 40,194 | உண்மையான பொருளாதார வளர்ச்சி உண்மையான வட்டி வீதத்தை விட அதிகமாக இருந்து முதன்மை பற்றாக்குறை நிலையாகவும் கடன் / GSDP உடன் மாற்றமின்றியும் இருக்கும் போது, கடன் தாங்கு நிலை கொண்டதாகும். |
| 2022-23 | 8.13 | 1.65 | 6.48 | (-) 34,855 | |
| 2023-24 | 8.23 | 2.43 | 5.80 | (-) 36,622 | |

*குறிப்பு: நிலையான விலையில் GSDPக்காக கணக்கிடப்படும் உண்மையான வளர்ச்சி விகிதம். உண்மையான வட்டி விகிதம் என்பது தமிழ் நாட்டில் பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட சராசரி வட்டி விகிதமாகும்.*

மாநில அரசு, கடன் தாங்கு நிலைக்கும் GSDPக்கான விகிதத்தை பராமரிப்பதிலும் கடன் வளர்ச்சியை விட அதிகமான நேர்மறை வளர்ச்சி அடைவதிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. வளர்ச்சியடைந்த வருவாய் இருப்பு, நிதி நிலை சமமின்மை மற்றும் நேர்மறை தோமர் இடைவெளி கடன்களை திறம்பட நிர்வகிப்பதற்கான திறனை உணர்த்துகிறது. எனினும் அதிகரிக்கும் வட்டி கொடுப்புகள் உருவாக்கும் ஆபத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த அளவில், மாநிலத்தின் நிலையான பொருளாதார நிலை மற்றும் சாதகமான முதிர்வு நிலை, அதன் கடன்களை நிர்வகிக்கக் கூடிய மிக நல்ல நிலையில் இருப்பதை உணர்த்துவதுடன், சமீப காலத்தில் நிதி நிலைமை ஆரோக்கியமாக, நேர்மறைப் போக்கில் செல்வதையும் எதிரொலிக்கிறது.

### 2.7.1 வாங்கப்பட்ட கடன்களின் பயன்பாடு

கடனாக வாங்கப்பட்ட நிதி முக்கியமாக ஒரு சிறந்த நிலையில் மூலதன உருவாக்கம் மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். கடனாக வாங்கப்பட்ட நிதியை நடப்பு கால செலவுகளுக்கும் நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கும் பயன்படுத்துவது என்பது நீடித்திருக்கக்கூடியது அல்ல.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில், கடனாக வாங்கப்பட்ட நிதியை பயன்படுத்துவதில் இருந்த போக்குகள் **அட்டவணை 2.37** மற்றும் **விளக்கப்படம் 2.23ல்** காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.37: கடனாக வாங்கப்பட்ட நிதியின் பயன்பாடு**

(*₹ கோடியில்*)

| ஆண்டு | | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| கடனாக பெறப்பட்ட மொத்த தொகை(பொது கடன்) | அ | 66,774 | 1,02,867 | 1,04,485 | 1,01,062 | 1,31,597 |
| முந்தைய கடன் மீள செலுத்தப்பட்டது (அசல்) (விழுக்காடு) | ஆ | 17,866 *(26.75)* | 16,229 *(15.78)* | 19,737 *(18.89)* | 27,104 *(26.82)* | 43,565 *(33.10)* |
| நிகர மூலதன வகை செலவு (விழுக்காடு) | இ | 25,632 *(38.39)* | 33,067 *(32.14)* | 37,011 *(35.42)* | 39,488 *(39.07)* | 40,488 *(30.77)* |
| நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் (விழுக்காடு) | ஈ | (-) 1,362 *(-) (2.04)* | (-) 1,410 *(-) (1.37)* | (-) 1,714 *(-) (1.64)* | 6,183 *(6.12)* | 4,821 *(3.66)* |
| நிகர கடன் தொகையில் வருவாய் வகை செலவு மேற்கொள்ளப்பட்ட அளவு (விழுக்காட்டில்) | உ = அ–ஆ-இ-ஈ | 24,638 *(36.90)* | 54,981 *(53.45)* | 49,451 *(47.33)* | 28,287 *(27.99)* | 42,723 *(32.47)* |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

- கடன் தொகையிலிருந்து 32.47 விழுக்காடு வருவாய் வகை செலவினத்திற்கு பயன்படுத்தப்பட்டது.
- கடன்கள் 30.21 விழுக்காடு அளவு அதிகரித்தது. இக்கடன்கள் நிதி பற்றாக்குறையை ஈடுகட்ட பயன்படுத்தப்பட்டது.

வருவாய் பற்றாக்குறையை குறைப்பதற்கும் மற்றும் அதனை முழுமையாக நீக்குவதற்கும் மற்றும் அனைத்து கடன்களையும் மூலதன செலவிற்கு பயன்படுத்தவும், நிதிக் குழுவின் பரிந்துரையின் படி, மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு வருவாய் பற்றாக்குறை மானியமாக 2021-22, 2022-23, 2023-24 ஆண்டுகளில் முறையே ₹3,010 கோடி, ₹801 கோடி மற்றும் ₹838.94 கோடி வரப்பெற்றது.

TNFR சட்டத்தின்படி 2025-26க்குள் வருவாய் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும். 2022-23ல் வருவாய் பற்றாக்குறை குறைந்து வந்த போதிலும், 2023-24ல் வருவாய் பற்றாக்குறை 24.59 விழுக்காடு உயர்ந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளின் வருவாய் பற்றாக்குறை போக்குகளை காணும்போது மாநிலம், 2025-26க்குள் முழுமையாக வருவாய் பற்றாக்குறையை நீக்குவது என்ற TNFR சட்டத்தின் இலக்கை அடைய முடியாமல் போகலாம்.

**விளக்கப்படம் 2.23: கடனாக வாங்கப்பட்ட நிதியின் பயன்பாடு போக்குகள்**




*(ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்)*

### 2.7.2 உத்தரவாதங்களின் நிலை – எதிர்பாரா பொறுப்புகள்

அரசு உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையில் கடனை பெற்றவர் அக்கடனை மீள செலுத்த தவறும் நிலையில் அத்தொகையை செலுத்த வேண்டிய எதிர்பாரா பொறுப்புகள் மாநில தொகுநிதிக்கு உண்டு. உத்தரவாதங்கள் தொடர்பான அதிகபட்ச அளவை விதிக்கும் சட்டங்கள் அல்லது உத்தரவாதங்களை மாநில அரசுகள் பிறப்பித்துள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 293ன் படி, மாநில அரசுகள் உத்தரவாதங்களை அளிப்பதற்கான வரையறைகள் மாநில சட்டமன்றங்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு நிதி பொறுப்புடைமை சட்டம் 2003, (i) நிலுவையில் இருக்கக்கூடிய மொத்த உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 100 விழுக்காடு மற்றும் GSDPன் 10 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், (ii) நிதி சுமை அடிப்படையிலான உத்தரவாதங்களுக்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வகை வரவுகளின் 75 விழுக்காடு மற்றும் GSDPன் 7.5 விழுக்காடு என்பனவற்றுள் எது சிறியதோ அதனை அதிகபட்ச அளவாகவும், விதித்துள்ளது.

மேற்சொன்ன அளவீடுகளுடன் ஒப்பிடும் போது, மார்ச் 31, 2024 நிலையில் நிலுவையில் இருந்த மாநில அரசின் மொத்த உத்தரவாதங்கள் ₹1,22,269.91 கோடி ஆகும். இது 2022-23ன் மொத்த வருவாய் வகை வரவுகளில் (₹2,43,749.34 கோடி) 50.16 விழுக்காடு மற்றும் GSDPல் (₹27,21,571 கோடி, தற்போதைய விலைவிகிதங்களில்) 4.49 விழுக்காடு ஆகும். அரசு அளித்த உத்தரவாதம் எதுவும் நடப்பாண்டில் பயன்படுத்தப்படவில்லை. உத்தரவாத கட்டணமாக பெறக்கூடிய தொகை ₹1,359.41 கோடி என மதிப்பிடப்பட்டதற்கு எதிராக, அரசு உள்ளபடியே

ஈட்டியது ₹1,071.83 கோடி ஆகும். இவ்வாறாக, உத்தரவாத கட்டணம் ஈட்டுவதில் ₹287.58 கோடி குறைவு ஏற்பட்டது.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் இருந்த அரசின் உத்தரவாதங்கள் பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.24ல்** தரப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 2.24: மாநில அரசால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்**

(**₹** *கோடியில்*)




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

## 2.7.3 ரொக்க இருப்பு மேலாண்மை

ரிசர்வ் வங்கியுடனான ஒப்பந்தத்தின்படி, மாநில அரசு ஒவ்வொரு நாளும் ₹3.25 கோடி குறைந்தபட்ச ரொக்கத்தை வங்கியுடனான கணக்கில் வைத்திருக்க வேண்டும். ஏதாவதொரு நாளில் இருப்பு தொகை இந்த குறைந்தபட்ச அளவைவிட குறைந்தால், அப்பற்றாக்குறையை அவ்வப்போது சாதாரண வழிவகை முன்பணங்கள்/சிறப்பு வழிவகை முன்பணங்கள்/மிகைப்பற்று பெறுவதன் மூலம் சரி செய்யலாம். அரசு பெறக்கூடிய சாதாரண வழிவகை முன்பணங்களுக்கான வரம்பு 31 மார்ச் 2022 முதல் ₹3,601 கோடி ஆகும். சிறப்பு வழிவகை முன்பணங்களுக்கான வரம்பை வங்கி அவ்வப்போது திருத்தி அமைக்கும். மாநில அரசு தனது உபரி ரொக்க மீதத்தை குறுகிய மற்றும் நீண்டகால இந்திய அரசு மற்றும் கருவூல கடன் பத்திரங்களில் முதலீடு செய்கிறது. அத்தகைய முதலீடுகளிலிருந்து ஈட்டப்படும் ஆதாயங்கள் '0049- வட்டி வரவுகள்' என்ற தலைப்பிக் கீழ் வரவுகளாக வரவு வைக்கப்படும். ரொக்க மீதங்கள் கடன்தீர் தொகு நிதி மற்றும் உத்தரவாத மீட்பு நிதி ஆகியவற்றி முதலீடு செய்யப்படும்.

மாநில அரசு 2023-24ல் குறைந்தபட்ச தினசரி ரொக்க இருப்பை ரிசர்வ் வங்கியில் வைத்திருந்தது. சாதாரண மற்றும் சிறப்பு வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்று தொகைகள் எதையும் பெறவில்லை.

2023-24 ஆண்டில் இருந்த ரொக்க இருப்பு மற்றும் அதன் முதலீடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.38ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.38: ரொக்க இருப்புகள் மற்றும் அதன் முதலீடுகள்**

**(₹ *கோடியில்*)**

| | 1 ஏப்ரல் 2023 அன்று துவக்க இருப்பு | 31 மார்ச் 2024 அன்று இறுதி இருப்பு |
|---|---|---|
| **A. பொதுவான ரொக்க இருப்பு** | | |
| கருவூலங்களில் ரொக்கம் | -- | -- |
| ரிசர்வ் வங்கியில் வைப்பு | (-) 59.17 | (-) 110.02 |
| பிற வங்கிகளில் வைப்பு | -- | -- |
| இறுதி செய்யப்படாத செலுத்தங்கள் – உள்ளூர் | 16.80 | 16.80 |
| **மொத்தம்** | **(-) 42.37** | **(-) 93.22** |
| ரொக்க இருப்பு முதலீட்டு கணக்கில் உள்ள முதலீடுகள் | 14,123.55 | 10,103.03 |
| **மொத்தம்(அ)** | **14,081.18** | **10,009.81** |
| **B. பிற ரொக்க இருப்புகள் மற்றும் முதலீடுகள்** | | |
| பொதுப்பணி, வனத்துறைகளின் அலுவலர்களிடம் இருந்த ரொக்கம் | 4.16 | 4.16 |
| எதிர்பாரா செலவுகளுக்காக துறை அலுவலர்களிடம் இருந்த நிலையான முன்பணம் | 7.35 | 7.21 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்கான நிதிகளில் முதலீடு | 67,248.03 | 75,312.73 |
| **மொத்தம்(ஆ)** | **67,259.54** | **75,324.10** |
| **மொத்தம்(அ +ஆ)** | **81,340.72** | **85,333.91** |
| **ஈட்டப்பட்ட வட்டி** | **4,747.10** | **9,968.76** |

(*ஆதாரம்: நிதி கணக்குகள்* 2023-24)

மாநில அரசின் இந்த ஆண்டு இறுதி ரொக்க இருப்பு மற்றும் அதன் முதலீடுகள் கடந்த ஆண்டை விட ₹3,993 கோடி அளவு உயர்ந்தன.

இந்திய அரசு பத்திரங்கள் மூலம் செய்யப்பட்டிருந்த முதலீடு ₹3,253 கோடி (தொகுப்பு கடன் தீர் நிதி) மற்றும் அரசு கடன் பத்திரங்கள் ₹3,785 கோடி (உத்தரவாத மீட்பு நிதி ₹3,269 கோடி உட்பட) தவிர LICல் DCPS முதலீடு ₹68,265 கோடி மற்றும் SBIல் ₹10 கோடி வைப்பு நிதி முதலீடுகளிலிருந்து மாநில அரசு 2023-24ல் ₹98.60 கோடி வட்டி ஈட்டியது.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ₹4,46,888.25 கோடி, அதாவது செலவு செய்யாத (சேமிப்பு) ஒதுக்கீடான ₹33,302.53 கோடியும் சேர்த்து முழுவதுமாக செலவு செய்திருந்தால் பொதுவான ரொக்க மீதம் எதிர்மறையாக இருந்திருக்கும்.

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் அரசின் ரொக்க இருப்பு முதலீடு கணக்கின் போக்கு **அட்டவணை 2.39ல்** தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.39: ரொக்க இருப்பு முதலீடு கணக்கு ( பெருந்தலைப்பு -8673)

(₹கோடியில்)

| ஆண்டு | துவக்க இருப்பு | இறுதி இருப்பு | உயர்வு (+) / குறைவு (-) | ஈட்டிய வட்டி |
|---|---|---|---|---|
| 2019-20 | 11,008.09 | 10,141.94 | (-) 866.15 | 300.72 |
| 2020-21 | 10,141.94 | 5,622.30 | (-) 4,519.64 | 214.51 |
| 2021-22 | 5,622.30 | 14,875.95 | 9,253.65 | 120.58 |
| 2022-23 | 14,875.95 | 14,123.55 | (-) 752.40 | 130.32 |
| 2023-24 | 14,123.55 | 10,103.03 | (-) 4,021 | 98.60 |

(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

2019-20 இறுதியில் ₹10,142 கோடியாக இருந்த முதலீடு அதிகரித்து 2021-22 மற்றும் 2022-23 ஆண்டுகளில் முறையே ₹14,876 கோடி மற்றும் ₹14,124 கோடியாக உயர்ந்தது என்பது 2019-20 முதல் 2023-24 வரையிலான மாநில அரசின் ரொக்க இருப்பு முதலீடுகளின் போக்கை பகுப்பாய்வு செய்ததில் அறிய நேர்ந்தது. மார்ச் 2024 நிலவரப்படி, இம் முதலீடு கணிசமாக குறைந்து ₹10,103 கோடி என்ற அளவில் இருந்த. அரசு கடன் பத்திரங்கள் மூலம் அரசுக்கு கிடைத்த சராசரி வட்டி வீதம் 4.29 விழுக்காடு மட்டுமே என்ற போதிலும், நிலுவையிலுள்ள பொது கடன்களுக்கு அரசு 7.08 விழுக்காடு வட்டியை சராசரியாக செலுத்தியது. இதனால் சமச்சீரற்ற நிதி நிலை ஏற்படுகிறது.

2019-20 முதல் 2023-24 வரை ரொக்க இருப்பு முதலீடு கணக்கில் இருந்த இருப்பையும் அரசு வாங்கிய சந்தை கடன்களையும் **விளக்கப்படம் 2.25** ஒப்பிடுகிறது. சந்தை கடன்கள் அதிக வட்டி வீதங்களில் வாங்கப்பட்டன. ஆனால், அரசு கடன் பத்திரங்கள் மூலம் குறைவான விகித வட்டி வீதமே கிடைக்கப்பெற்றது.

விளக்கப்படம் 2.25: சந்தை கடன்கள் மற்றும் ரொக்க இருப்பு முதலீடுகள்




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான நிதி கணக்குகள்*)

பொது ரொக்க இருப்பான ₹10,010 கோடி என்பதில் ரொக்க இருப்பு முதலீடு ₹10,103 கோடி மற்றும் RBI வைப்புகள் மற்றும் இறுதி செய்யப்படாத செலுத்தங்கள் (-) ₹93 கோடியும் அடங்கும் நேர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்த மாதத்தில் அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதை குறிக்கும் (கணக்கு பெருந்தலைப்பு 8673) மற்றும் எதிர்மறை நிகர ரொக்க இருப்பு முதலீடு என்பது அந்த மாதத்தில் கடன் பத்திரங்கள் முதிர்வுற்றாலோ அல்லது தள்ளுபடி செய்தோ அரசு கணக்கில் திரும்ப வரவு வைக்கப்படும்.

2023-24ல் சந்தை கடன்கள் அதிகரித்துள்ளன. இவற்றுக்காக தரப்படும் அதிக வட்டி கொடுப்புகளால் முதலீட்டிற்கான ரொக்க இருப்பு குறைந்தது.

## 2.8 முடிவுரை

**மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்கள்:**

**சொந்த வரி வருவாய்:** சொந்த வரி வருவாயின் ஆண்டு வளர்ச்சி விகிதம் முந்தைய ஆண்டில் 22.27 விழுக்காடு என்பதற்கு மாறாக 2023-24ல் 11.35 விழுக்காடு மட்டுமே உயர்ந்தது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய். 2023-24ல் அதன் வருவாய் வரவுகளில் 63.22 விழுக்காடு ஆகும். இது முந்தைய ஆண்டில் 61.63 விழுக்காடாக இருந்தது.

*(பத்தி 2.3.2.2)*

**வரியல்லாத வருவாய்:** மாநிலத்தின் வரியல்லாத வருவாய் 2023-24ல் முந்தைய ஆண்டைவிட ₹8,843 கோடி(51.83 விழுக்காடு) உயர்ந்தது.

*(பத்தி 2.3.2.2)*

**நிதி சேகரிப்பில் மாநிலத்தின் செயல்பாடு:**

நடப்பாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவுகள் குறைவாக இருந்தன. ஆனால் வரியல்லாத வருவாய் வரவுகள் 15வது நிதிக்குழு மதிப்பீடு மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட கூடுதலாக இருந்தன.

*(பத்தி 2.3.4)*

**வருவாய் வகை செலவு :**

வருவாய் வகை செலவு முந்தைய ஆண்டு உயர்வான 10.21 விழுக்காடு என்பதற்கு மாறாக 2023-24ல் ₹32,307.86 கோடி (10.63 விழுக்காடு) உயர்ந்தது. 2022-23ல் GSDPல் 11.84 விழுக்காடாக இருந்த வருவாய் வகை செலவினம் நடப்பாண்டில் 11.38 விழுக்காடாக குறைந்தது.

*(பத்தி 2.4.2)*

வருவாய் செலவினத்தில் வட்டி கொடுப்புகளின் மீதான தவிர்க்க இயலாத செலவுகளின் விழுக்காடு கடந்த ஐந்து ஆண்டுகளில், அதிகரிக்கும் போக்கிலேயே காணப்படுகிறது. 2019-20ல் 15.20 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2023-24ல் 17.30 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

*(பத்தி 2.4.2.2)*

**மூலதன செலவு:**

மூலதன செலவு இந்த ஆண்டு 2.45 விழுக்காடு உயர்ந்துள்ளது. மொத்த செலவினத்தில் மூலதன செலவு விழுக்காடு நடப்பாண்டில் 0.82 விழுக்காடு குறைந்துள்ளது.

*(பத்தி 2.4.3)*

**தொகுப்பு நிதிக்கு வெளியே வைக்கப்பட்ட நிதி:**

நீலகிரி மலைப்பிரதேசத்தில் நுழையும் வெளியூர் வாகனங்கள் மீது விதிக்கப்படும் சட்டபூர்வமற்ற பசுமை வரி மாநில தொகுப்பு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டது.

*(பத்தி 2.5.2.5)*

## 2.9. பரிந்துரை

(i) **கடனை சார்ந்திருப்பதை குறைக்கும் வகையில் மாநில அரசு ஆதாரங்களை திரட்ட வேண்டும்.**

(ii) **உயர்ந்து வரும் போக்கிலுள்ள தவிர்க்க இயலாத செலவினமான வட்டி செலுத்தங்கள் மீது மாநில அரசு அதிகபட்ச கவனம் செலுத்த வேண்டும்.**

(iii) **மாநில அரசு அனைத்து வரிகளையும் மாநில தொகுப்பு நிதியின் கீழ் கொண்டு வர வேண்டும்.**

# அத்தியாயம் III

# வரவு செலவு திட்ட மேலாண்மை

# அத்தியாயம் III

# வரவு செலவு திட்ட மேலாண்மை

## 3.1 முன்னுரை

திறம்பட்ட நிதி மேலாண்மையானது, கொள்கை அளவில் எடுக்கப்பட்ட முடிவுகள், நிதியை வீணாக்காமல் அல்லது திருப்புகை செய்யாமல் நிர்வாக அளவில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதாகும். இந்த அத்தியாயம் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் தணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இது அரசாங்கத்தின் ஒதுக்கீடு முன்னுரிமைகளை மதிப்பாய்வு செய்தல், அரசியலமைப்பு சட்ட விதிகளில் இருந்து விலகல்கள் மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பாதிக்கும் பிரச்சினைகளை உள்ளடக்கியதாகும்.

## 3.2 வரவு செலவு திட்ட நடைமுறை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 202வது பிரிவுக்கு இணங்க, ஒவ்வொரு நிதியாண்டிற்கும், அந்த ஆண்டிற்கான மாநிலத்தின் எதிர்நோக்கப்படும் வரவுகள் மற்றும் செலவினங்களின் அறிக்கை, “ஆண்டு நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்)” என்று அழைக்கப்படும். இந்த அறிக்கை மாநிலத்தின் சட்டமன்றம் முன் வைக்கப்பட வேண்டும். செலவினங்களின் மதிப்பீடுகள் ‘சாட்டப்பட்ட’ மற்றும் ‘அனுமதிக்கப்பட்ட’[1] என்ற வகையில் தனித்தனியாகக் காட்டப்படுகின்றன, மேலும் வருவாய் வகை செலவினங்கள் மற்ற செலவினங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படுகின்றன. மாநில அரசுக்கு எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்வதற்கு முன்பு சட்டமன்ற அங்கீகாரம் அவசியம் தேவை.

தமிழ்நாடு வரவு செலவு திட்ட கையேட்டின்படி, வரவு செலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவற்றில் மதிப்பீட்டு அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலகத்தின் துறைகளின் வழிகாட்டுதலுக்காக நிதித்துறை, விதிகளை வகுக்கிறது. இந்த விதிகள் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அவை அங்கீகரிக்கப்பட்ட மானியங்களுக்குள் இருப்பதையும் உறுதி செய்கிறது. நிதித்துறை அரசின் முடிவுகளை உள்ளடக்கிய மதிப்பீடுகளை தொகுத்து பின்வருவனவற்றை தயாரிக்கிறது.

(i) வரவு-செலவு திட்ட ஆண்டிற்கான நிதி நிலை குறித்த சுருக்க அறிக்கை
(ii) வரவுகள் பற்றிய விரிவான மதிப்பீடுகள் மற்றும்
(iii) மானியங்களுக்கான கோரிக்கைகள் பற்றிய அறிக்கைகள் மற்றும் செலவினங்களின் விரிவான மதிப்பீடுகள்.

---

[1] **சாட்டப்படும் செலவினம்**: குறிப்பிட்ட நோக்கங்களுக்காக (உதாரணமாக அரசியல் சாசன அதிகாரிகளின் ஊதியம், கடன்களை திருப்பிச் செலுத்துதல் போன்றவை) மாநில சட்டமன்றத்தின் ஓட்டளிப்புக்கு உட்படாமல் மாநில தொகுநிதியால் சாட்டப்படும் செலவினம் ஆகும்.
**அனுமதித்த செலவினம்**: பிற செலவினங்கள் அனைத்தும் சட்டமன்ற ஓட்டளிப்புக்கு உட்பட்டவையாகும்.

தொகு நிதியிலிருந்து செலவு செய்யப்படும் இந்த மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டப்பட்ட செலவினங்களை உள்ளடக்கியதாகும். வரவு செலவு திட்டம் தயாரிக்க மாநிலத்தில் வழக்கமாக பின்பற்றப்படும் செயல்முறை பின்வரும் விளக்கப்படத்தில் தரப்பட்டுள்ளது.

**வரவு-செலவு திட்ட நடைமுறை**




CSS: மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்; CS: மத்திய அரசு திட்டங்கள்;
EAP: வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்

ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்றத்தில் நிதியமைச்சரால் ஆண்டு வரவு செலவு திட்டம் தாக்கல் செய்யப்படுகிறது.

2023-24ல் மாநில சட்டமன்றம் ஒப்புதல் அளித்த மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள், செலவு மற்றும் சேமிப்புகள் பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 3.1: வரவு செலவு திட்டம் மற்றும் செலவின சுருக்கம்




## 3.3 மகளிருக்கான வரவு செலவு திட்டம்

மகளிருக்கான வரவு செலவு திட்ட அறிக்கை (அறிக்கை 13) என்பது வரவு செலவு திட்டத்தில், மகளிரை மையப் படுத்துவதற்கான ஒரு கருவியாகும். இதனால் முழு கொள்கை செயல்முறையிலும் பாலின கண்ணோட்டத்தை கருத்தில் கொள்ள உதவுகிறது.

தமிழ்நாடு அரசு (GoTN) 2018-19ம் ஆண்டு முதல் வரவு செலவு திட்ட ஆவணத்தின் ஒரு பகுதியாக GBSஐ வழங்குகிறது. இருப்பினும், பாலின பகுப்பாய்வு செய்து வரவு செலவு திட்டத்தில் ஒன்றிணைப்பதற்காக முன்மொழியப்பட்ட மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவுகள் அனைத்து துறைகளிலும் உருவாக்கப்படவில்லை.

தமிழக அரசால் அளிக்கப்படும் GBSல், மொத்த வரவு செலவு திட்டத்தில் மகளிருக்காக பயனளிக்கும் திட்டங்களுக்கு முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு விழுக்காட்டின் அடிப்படையில் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது பகுதி A (மகளிரை மட்டும் இலக்காக கொண்ட திட்டங்களில் 100 விழுக்காடு ஒதுக்கீடு), பகுதி B (பயனாளிகளை மையப்படுத்தி செயல்படுத்தப்படும் திட்டங்களில் 40 விழுக்காடு முதல் 99 விழுக்காடு வரை பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள்) மற்றும் பகுதி C (தமிழக அரசின் மகளிர் பயன்பெறும் பிற திட்டங்கள் மற்றும் செலவுகள் - இதில் குறைந்தபட்சம் ஒதுக்கீடு 30 விழுக்காடு).

### 3.3.1 2023-24ம் ஆண்டு GBSன் கண்ணோட்டம்

2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்தாண்டு கால GBSன் ஒப்பீடு **விளக்கப்படம் 3.2ல்** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.2: மகளிர் வரவு செலவு திட்ட அறிக்கை ஆண்டுதோறும் ஒப்பீடு**

**(₹ கோடியில்)**




(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்குரிய மகளிர் வரவு செலவு திட்டம்)

2019-20 முதல் 2023-24 வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் மகளிர் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட செலவினம் 2021-22ல் 38.32 விழுக்காடு மற்றும் 2023-24ல் 40.82 என வேறுபட்டிருந்தன. GBS செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24ல் 11.71 விழுக்காடு என உயர்ந்திருந்தது. மேலும், இந்த ஆண்டுகளில், பகுதி A, B மற்றும் C திட்டங்களின் ஒதுக்கீடு பரிந்துரைக்கப்பட்ட அளவிற்குள் இருந்தது.

### 3.3.2 2023-24ம் ஆண்டின் GBSன் பகுப்பாய்வு

2023-24ம் ஆண்டின் GBSல் உள்ள திட்டங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பகுதியின் ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.1ல்** கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 3.1: GBS 2023-24ன் பகுதி வாரியான விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| GBSன் பகுதிகள் | நிதி ஆண்டு 2023-24 | | | |
|---|---|---|---|---|
| | துறைகளின் எண்ணிக்கை | திட்டங்களின் எண்ணிக்கை | 2023-24ன் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | GBS 2023-24ல் உள்ளடங்கிய தொகை |
| பகுதி A | 11 | 140 | 15,528.78 | 15,528.78 |
| பகுதி B | 16 | 316 | 72,853.28 | 38,352.04 |
| பகுதி C | -- | 23* | 1,64,504.02 | 49,351.18 |
| **மொத்தம்** | | **479** | **2,52,886.08** | **1,03,232.00** |

* திட்டங்களை செயல்படுத்தும் துறைகளின் எண்ணிக்கை

*(ஆதாரம்: GBS அறிக்கை – 2023-24)*

பகுதி Aன் கீழ் ஒதுக்கப்பட்ட 11 துறைகளில், சமூக நலன் மற்றும் ஊட்டச்சத்து துறையில் (₹14,568.01 கோடி) அதிகபட்சமாக 93.81 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 'மகளிர் உரிமை தொகை' திட்டத்திற்காக அதிகபட்சமாக ₹7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பகுதி Bல் உள்ள 16 துறைகளில் 'கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சாரம்' துறைக்கு அதிகபட்ச ஒதுக்கீடாக 23.08 விழுக்காடும், (₹8,850.76 கோடி) மற்ற திட்டங்களில், பகுதி Bல் உள்ள' பொது பொருளாதார சேவைகள்'

துறையின் கீழ் 'சமூக பாதுகாப்பு வலை – உணவு பாதுகாப்பு – பொது விநியோக திட்ட ஆதரவு' என்ற திட்டதிற்கு அதிகபட்சமாக ₹8,190 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.3.3 தணிக்கை குறித்துரைகள்

2023-24க்கான GBSஐ பகுப்பாய்வு செய்ததில் பின்வருவன தெரியவந்தன.

- மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட படிவமான அறிக்கை 13ன் படி GBS தயாரிக்கப்படவில்லை. தமிழக அரசால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில் 2021-22ன் உள்ளபடியான செலவு, கடந்த ஆண்டான 2022-23ன் வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு காட்டப்படவில்லை. இதன் விளைவாக, மகளிருக்காக செய்யப்பட்ட உள்ளபடியான செலவினம் மற்றும் மகளிர் தொடர்பான திட்டங்களில் செய்யப்பட வேண்டிய செலவினம் குறித்து தணிக்கையால் பகுப்பாய்வு செய்யமுடியவில்லை. முந்தைய அறிக்கையிலும் இது குறித்து குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் 2024-25 ஆம் ஆண்டில் GBSல் பரிந்துரைக்கப்பட்ட படிவம் பயன்படுத்தப்பட்டது.
- பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் துறையால் சமூக நலன் மற்றும் ஊட்டச்சத்து பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்ட சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திட்டம், நூறு சதவீதம் பெண்கள் சார்ந்த திட்டமாக இல்லாத போதும், இத்திட்டம் GBSன் 'பகுதி அ'ல் சேர்க்கப்பட்டுள்ளது.
- 100 சதவீத பெண்கள் சார்ந்த ஏழு[2] திட்டங்களுக்காக ₹358.23 கோடி வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுடன் மூல வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் இவை 2023-24 GBSல் பகுதி 'அ'ன் கீழ் சேர்க்கப்படவில்லை.
- பகுதி 'அ'ன் கீழ் 140 திட்டங்களில், 17 திட்டங்களுக்கு அடையாள ஒதுக்கீடு மட்டுமே தரப்பட்டிருந்தது. இதில் **இணைப்பு 3.1ல்** பட்டியலிடப்பட்டுள்ள 15 திட்டங்களில் இந்த அடையாள ஒதுக்கீடும் முழுமையாக திரும்பப் பெறப்பட்டது. இந்த 15 திட்டங்களில், 'குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து' என்ற ஒரு திட்டத்தில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் எவ்வித செலவும் செய்யப்படாமல் அடையாள ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட்டது. 12 திட்டங்களில், கடந்த மூன்று முதல் ஏழு வருடங்களாக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமலேயே, அடையாள ஒதுக்கீடுகள் மீண்டும் திரும்பப் பெறப்பட்டன.

---

[2] 1. 'ஸ்வதார் கிரே திட்டத்தை அமல்படுத்துதல்', 2. 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெண் குழந்தைகள் உயர் கல்வி உத்தரவாத திட்டம்', 3. 'மனவளர்ச்சி குன்றிய வயது வந்த பெண்களுக்கான மறுவாழ்வு மையம் ஆரம்பித்தல்', 4. 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றப் பிரிவு', 5. 'பால் உற்பத்தியாளர் பெண்கள் கூட்டுறவை உருவாக்குதல்', 6. 'பெண்கள் தொலைபேசி உதவி சேவை', 7. 'பெண்கள் பின் பராமரிப்பு மையம், வேலூர் உடன் இணைக்கப்பட்ட தொழில்துறை அலகுகள்'

- **இணைப்பு 3.2ல்** பட்டியலிடப்பட்ட பகுதி 'அ'ன் கீழ் வரும் 11 திட்டங்களில் மறு ஒதுக்கீடு செய்யும் வேளையில் முழுமையாக திரும்பப் பெறப்பட்டன.
- **இணைப்பு 3.3ல்** பட்டியலிடப்பட்ட, பகுதி 'அ'ன் கீழ் வரும் ஆறு திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட தொகையின் விழுக்காடு வரவு செலவு திட்ட செலவினத் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தது.
- பகுதி 'ஆ'ன் கீழ் உள்ள 316 திட்டங்களில், 60 திட்டங்களில் ஒதுக்கீடு ஏதுமின்றியும், மற்றும் 15 திட்டங்களில் அடையாள ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் GBSன் கீழ் உள்ள திட்டங்களின் எண்ணிக்கை மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 52 விழுக்காடு பெண்கள் பணிபுரியும் கைத்தறி மற்றும் ஜவுளித் துறைக்கு GBS கீழ் எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அதுபோல உற்பத்தி துறையில் பெண்களை அதிகளவில் ஈடுபடுத்தும் (இந்திய உழைக்கும் பெண்கள் மொத்த எண்ணிக்கையில் 42 விழுக்காடு அளவு) முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருந்த போதிலும், தொழில் மற்றும் சுரங்கத்துறைக்கு குறைந்த அளவான (ஏறத்தாழ 1.51 விழுக்காடு ஒதுக்கீடு) முன்னுரிமை மட்டுமே தரப்பட்டது.
- வருடாந்திர தொழிலாளர் கணக்கெடுப்பு அறிக்கை 2021-22ன்படி, வேளாண் மற்றும் அதனை சார்ந்த நடவடிக்கைகள் துறையில் 62.90 விழுக்காடு பெண்கள் இருந்த போதிலும், 2019-20ல் இருந் 2023-24 வரை 7.03 விழுக்காடாக இருந்த பகுதி 'அ'ன் கீழ் வரும் ‘வேளாண் மற்றும் அதனை சார்ந்த நடவடிக்கைகளுக்கான' ஒதுக்கீடு 0.41 விழுக்காடாக கணிசமாக குறைந்தது.
- பூப்பெய்திய மகளிருக்கான சுகாதார நல்வாழ்வு திட்டத்தில், 2022-23ல் பயன்படுத்தப்பட்ட 69.26 விழுக்காட்டிற்கு மாறாக 2023-24ல் 26.92 விழுக்காடு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மேலும், கடந்த ஆண்டுகளில் செலவிடப்படாத ₹31.72 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டதும் கண்டறியப்பட்டது.

GBS 2023-24, திட்டமிடுதல், முன்னுரிமை மற்றும் மாநிலத்தில் பெண்கள் சார்ந்த திட்டங்களை செயற்படுத்துவதில் உள்ள முக்கியமான இடைவெளிகளை வெளிப்படுத்துகிறது. மகளிருக்கான வரவு செலவு திட்டத்தில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை உருவாக்கிட, வழிகாட்டு நெறிமுறைகளை உறுதியாகப் பின்பற்றுதல், ஒதுக்கீடுகளை அதிகரித்தல் மற்றும் பெண்களுக்கான அதிகாரத்தின் மீதான கவனத்தை அதிகப்படுத்துவதும் இன்றியமையாததாகும்.

## 3.4 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணை திட்டத்திற்கான சிறப்பு கூறு அறிக்கை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் துணை திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணை திட்டம் (TSP) ஆகியவை முறையே 1980-81 மற்றும் 1976-77 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. SCSP மற்றும் TSP ஆகியவற்றின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிட இனத்தவர் (20.01 விழுக்காடு) மற்றும் பழங்குடியினர் (1.17 விழுக்காடு) மக்கள் தொகைக்கேற்ற விகிதத்திலாவது ஆண்டு திட்ட செலவினத்தில் நிதி அளிக்கப்படுவதை உறுதி செய்வதுடன், ஆதிதிராவிட இனத்தவர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக– பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டில் விரிவான கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைதான் இவ்விரு திட்டங்களுக்குமான முதன்மை துறையாக நியமிக்கப்பட்டது. மாநில அளவில் SCSP மற்றும் TSPன் உருவாக்கம் மற்றும் செயலாக்கத்திற்காக, மாநில அளவிலான கண்காணிப்பு அதிகாரியாக இத்துறையின் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அரசு, வரவு செலவு திட்டத்தில் SCSP மற்றும் TSP க்கான ஒதுக்கீடுகளை, முறையே சிறு தலைப்புகள் “789” மற்றும் “796” மூலம் மேற்கொள்கின்றது. இது தவிர, SCSP மற்றும் TSPக்கான இந்திய அரசின் CSS, வரவு செலவு திட்டத்தில் சிறு தலைப்புகள் முறையே “793” மற்றும் “794” மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.4.1 2023-24 ஆண்டு SCSP மற்றும் TSP பற்றிய கண்ணோட்டம்

2019-20லிருந்து 2023-24 வரை SCSP மற்றும் TSPன் ஆண்டு வாரியான ஒப்பீடு கீழே **விளக்கப்படம் 3.3ல்** தரப்பட்டுள்ளது.




*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளுக்குரிய ஆதிதிராவிட இனத்தவர் துணை திட்டம் மற்றும் பழங்குடியினர் துணை திட்டம்)*

➢ 2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்தாண்டுகளின் SCSP மற்றும் TSP வரவு செலவு திட்ட ஆவண அறிக்கைகளை பகுப்பாய்வு செய்ததில், வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் SCSP மற்றும் TSP

வரவு செலவு திட்ட செலவின சராசரி முறையே 21.67 விழுக்காடு மற்றும்
2.08 விழுக்காடு என்று அறிய நேர்ந்தது. 2023-24ல் SCSP மற்றும் TSP யின் வரவு செலவு திட்ட செலவினம் முந்தைய ஆண்டை விட முறையே 3.85 விழுக்காடு மற்றும் 0.42 விழுக்காடு அதிகரித்து காணப்பட்டது.

- ஆதிதிராவிடர் மேம்பாட்டுக்காக SCSPயின் கீழ் 15 துறை சார்ந்த பிரிவுகள் 265 திட்டங்களையும், பழங்குடியினர் மேம்பாட்டிற்காக TSP யின் கீழ் 14 துறை சார்ந்த பிரிவுகள் 246 திட்டங்களையும் செயல்படுத்துகின்றன. SCSPன் கீழ் சமூக நலன் மற்றும் ஊட்டச்சத்து துறைக்கு அதிகபட்ச ஒதுக்கீடாக 22.84 விழுக்காடு (₹3,899.82 கோடி) அளிக்கப்பட்டது. இதில் 'மகளிர் உரிமை தொகை' திட்டம் அதிகபட்ச ஒதுக்கீடாக ₹1,540 கோடி பெற்றது. TSPயின் கீழ் அதிகபட்சமாக ஆதிதிராவிட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக
  41.02 விழுக்காடு (₹654.70 கோடி) அளிக்கப்பட்டது. இதில் ‘பள்ளிகள் திட்டம்’ அதிகபட்ச ஒதுக்கீடாக ₹155.80 கோடி பெற்றது.

## 3.4.2 தணிக்கை குறித்துரைகள்

2023-24 ஆண்டிற்கான SCSP மற்றும் TSP ஆகியவற்றின் பகுப்பாய்வில் கீழ்க்கண்டவற்றை அறிய நேர்ந்தது:

- இந்திய அரசின் வரவு செலவு திட்ட ஆவண அறிக்கை எண் 10A மற்றும் 10Bல் பரிந்துரைக்கப்பட்டவாறு உரிய வடிவமைப்பில் SCSP மற்றும் TSP இரண்டுமே தயாரிக்கப்படவில்லை. மேலும் 2021-22 ஆண்டிற்கான உள்ளபடியான செலவினம், 2022-23 ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு ஆகியவை அத்திட்டங்களில் முறையே குறிப்பிடப்படவில்லை.
- SCSP மற்றும் TSP கீழ் முறையே 62 மற்றும் 61 திட்டங்களுக்கு அடையாள ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டது.
- கடந்த ஐந்தாண்டுகளில் SCக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு, 2020-21ல் 16.12 விழுக்காடு மற்றும் 2023-24ல் 18.48 விழுக்காடுகளுக்கு இடையே மாறுபட்டிருந்தது. அதைப்போலவே, STக்கான ஒதுக்கீடு, 2021-22ல் 1.23 விழுக்காடு மற்றும் 2022-23ல் 1.44 விழுக்காடுகளுக்கு இடையே மாறுபட்டது. இவ்வாறு கடந்த ஐந்தாண்டுகளில் SC க்கான மூல ஒதுக்கீடு கட்டாயமாக அளிக்கப்பட வேண்டிய
  20.01 விழுக்காட்டை விட குறைவாகவே இருந்தது. எனினும், நீடித்த மேம்பாடு இலக்கு தரவு அறிக்கையில், வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 21.29 விழுக்காடு மற்றும் 21.95 விழுக்காடு என்ற வீச்சில் இருந்தது. இது கட்டாயமாக அளிக்கப்பட வேண்டிய விழுக்காட்டை விட அதிகமாகும்.
- 2019-20 முதல் 2023-24 வரை SCSP மற்றும் TSP கீழ் SC மற்றும் ST யின் ஆண்டு வாரியான செலவினம் **விளக்கப்படம் 3.3(அ)ல்** தரப்பட்டுள்ளது.




*(ஆதாரம்: உரிய ஆண்டுகளுக்கான நிதிபொதுக்கக் கணக்குகள்)*

கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், SC க்கான உள்ளபடியான செலவினம், 12.65 விழுக்காடு (2022-23) மற்றும் 17.27 விழுக்காடு (2023-24)களுக்கு இடையே மாறுபட்டிருந்தது என்பதுடன் இக் காலக்கட்டத்தில் செலவினம் முழுமையாக செய்யப்படவில்லை என்பதையும் மேற்கண்டதன் மூலம் அறியலாம்.

- 2023-24 ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான மூல வரவு செலவு திட்டத்தில் 'வேலையின்மை நிவாரணத்தொகை திட்டம் – வேலைவாய்ப்பற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல்' திட்டத்தின் கீழ் SC மற்றும் ST க்காக முறையே ₹10.06 கோடி மற்றும் ₹0.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இவை இரண்டுமே SCSP மற்றும் TSPன் கீழ் கொண்டு வரப்படவில்லை.
- அரசு, 'மகளிர் உரிமை தொகை' திட்டத்தை ₹7,000 கோடி மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுடன் அறிவித்தது. இம் மொத்த ஒதுக்கீடும் பொது திட்டக் கூறு ₹5,460 கோடி மற்றும் ஆதிதிராவிட இனத்தவர் திட்டக் கூறு ₹1,540 கோடி என அளிக்கப்பட்டது. பழங்குடியினருக்கான திட்ட ஒதுக்கீடு ஆரம்பத்தில் TSP கீழ் அளிக்கப்படாமல் விடுபட்டிருந்தாலும், பின்னர் துணை மதிப்பீடுகளில் (பிப்ரவரி 2024) அளிக்கப்பட்டது . இதன் விளைவாக பழங்குடியினர் பயனாளிகளுக்கு 'மகளிர் உரிமை தொகை' அளிப்பதில் தாமதம் ஏற்பட்டது.
- மாநில அரசு "தமிழ் நாடு அரசு கலப்பு திருமண உதவித் தொகை" திட்டத்திற்காக மாநிலத்தின் பங்காக ₹5.72 கோடி வரவு செலவுத் திட்டத்தில் அளித்தது. இத்தொகை முழுவதும் அந்த ஆண்டிலேயே செலவிடப்பட்ட போதும் SCSPன் கீழ் கொண்டுவரப்படவில்லை.

நூறு கோடிக்கும் மேல் ஒதுக்கீடு செய்யப்பட்ட SCSP திட்டங்களை ஆய்வு செய்ததில், இரண்டு திட்டங்களில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே செலவிடப்பட்டதை **அட்டவணை 3.2ல்** கீழே உள்ளவாறு கண்டறிய நேர்ந்தது.

**அட்டவணை 3.2: 100 கோடிக்கும் மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பயன்பாட்டு விழுக்காடு**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | திட்டங்கள் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சி/நகராட்சிகளில் 'தூய்மை பாரதம் இயக்கம் 2.0' செயற்படுத்துதல் | 273.00 | 27.70 | 10.15 |
| 2 | பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் (PMFBY) காப்பீட்டு மானிய தவணைக்கான அரசின் பங்கு | 575.64 | 212.98 | 37.00 |

*(ஆதாரம்: வரவு செலவு திட்ட குறிப்பேடு இணைப்பு XX மற்றும் 2023-24 ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

**வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ஒரு கோடிக்கும் அதிகமாக இருந்த 12 திட்டங்களில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளாமல் மொத்த தொகையும் திரும்பப்பெறப்பட்டது அட்டவணை 3.3ல் விவரிக்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 3.3: ஆதிதிராவிட இனத்திற்கான திட்டங்களின் கீழ் ஒரு கோடிக்கும் மேல் இருந்த ஒதுக்கீடு முழுமையாக திரும்பப்பெறப்பட்டது.**

**(கோடியில்)**

| வரிசை எண் | மானிய எண் | கணக்கு தலைப்பு | விவரம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | 42 | 2501.06.793.UH | கிராம தொழில் முனைவோர் புத்தொழில் திட்டம் (SVEP)– மாநில பங்கு | 1.67 |
| 2 | 42 | 2501.06.793.UD | கிராம தொழில் முனைவோர் புத்தொழில் திட்டம் (SVEP) | 2.51 |
| 3 | 42 | 2501.06.793.UG | மகிளா கிஸான் சஷக்டிகரன் பரியோஜனா (MKSP)– மாநில பங்கு | 4.50 |
| 4 | 42 | 2501.06.793.UC | மகிளா கிஸான் சஷக்டிகரன் பரியோஜனா (MKSP) | 6.75 |
| 5 | 53 | 2230.03.793.AA | TN IPP நிலை 2ன் கீழ் இரட்டை அடுக்கு திறன் மேம்பாட்டு மையம் | 9.36 |
| 6 | 43 | 2202.02.789.JO | பள்ளிகளில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் | 9.70 |
| 7 | 19 | 2211.00.793.UF | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்க திட்டங்கள் – மாநில பங்கு | 13.55 |
| 8 | 42 | 2515.00.793.UB | ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் (RGSA) – மாநில பங்கு | 14.86 |
| 9 | 19 | 2211.00.793.UC | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்க திட்டங்கள் | 20.32 |
| 10 | 42 | 2515.00.793.UA | ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் (RGSA) | 22.29 |
| 11 | 42 | 2235.02.789.PC | சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு கிராம மாற்றம் திட்டம் (TNPVP நிலை II) | 51.41 |

| வரிசை எண் | மானிய எண் | கணக்கு தலைப்பு | விவரம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 12 | 42 | 2216.03.789.JB | ஆதிதிராவிட இனத்தவருக்காக கான்கிரீட் வீடுகள் மேற்கூரையின் கட்டுமான செலவு | 354.00 |

*(ஆதாரம்: 2023-24 ஆண்டிற்கான நிதியொதுக்கக் கணக்குகள்)*

₹100 கோடிக்கு மேல் ஒதுக்கீடு கொண்ட TSP திட்டங்களின் பகுப்பாய்வில், இரண்டு திட்டங்களில், கீழே **அட்டவணை 3.4ல்** விவரிக்கப்பட்டவாறு, 50 விழுக்காட்டிற்கும் குறைவான நிதியே செலவிடப்பட்டதை அறிய நேர்ந்தது.

**அட்டவணை 3.4: 100 கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பயன்பாட்டின் விழுக்காடு**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | திட்ட விவரம் | வரவு செலவு மதிப்பீடு | உள்ளபடியான செலவு | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | ஆஜீவிகா திட்டம் (NRLM) | 133.51 | 5.75 | 4.31 |
| 2 | மாநகராட்சி/நகராட்சிகளில் தூய்மை பாரதம் இயக்கம் 2.0 செயல்படுத்துதல் | 117.00 | 11.87 | 10.15 |

*(ஆதாரம்: வரவு செலவு திட்ட குறிப்பேடு இணைப்பு XIII மற்றும் 2023-24 ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)*

வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ஒரு கோடிக்கும் அதிகமாக இருந்த நான்கு திட்டங்களில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளாமல் மொத்த தொகையும் திரும்பப்பெறப்பட்டது **அட்டவணை 3.5ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.5: பழங்குடியினருக்கான திட்டங்களின் கீழ் ஒரு கோடிக்கும் மேல் இருந்த ஒதுக்கீடு முழுமையாக திரும்பப்பெறப்பட்டது.**

**(₹ கோடியில்)**

| மானிய எண் | கணக்கு தலைப்பு | விவரம் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 04 | 2225.02.796.KC | பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள் | 12.40 |
| 04 | 4225.02.794.SA | குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்களின் (PVTGs) மேம்பாடு | 27.23 |
| 42 | 2515.00.794.UA | ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் (RGSA) | 8.26 |
| 42 | 2515.00.794.UB | ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான் (RGSA) – மாநில பங்கு | 5.51 |

*(ஆதாரம்: 2023-24 ஆண்டிற்கான நிதியொதுக்கக் கணக்குகள்)*

2023-24 ஆண்டிற்கான SCSP மற்றும் TSP, ஆகியவற்றில் இணக்கம், ஒதுக்கீடு மற்றும் செயலாக்கத்தில் இடைவெளி காணப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்புகளை கடைபிடிப்பதை அதிகரித்தல், போதுமான ஒதுக்கீடுகளை உறுதி செய்தல், வரவு செலவு திட்ட செயற்பாட்டிற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான தேவை உள்ளது, சமுதாயத்தில் சமத்துவம் மற்றும் சிறுபான்மை குழுக்களின்

முன்னேற்றத்திற்கான வளர்ச்சியை அடைவதற்கு இது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

## 3.5 நிதியொதுக்க கணக்குகள்

ஒவ்வொரு நிதி ஆண்டிலும், நிதியொதுக்கீட்டு சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள பல்வேறு பணிகளுக்கான அனுமதிக்கப்பட்ட மானியங்கள்[3] மற்றும் சாட்டிய[4] நிதியொதுக்கங்களுக்கு எதிராக அரசு செய்த செலவிற்கான கணக்குகள் நிதியொதுக்க கணக்குகள் எனப்படும். இக்கணக்குகள், வரவு – செலவு திட்ட நிலையிலான மூல ஒதுக்கீடுகள், துணை ஒதுக்கீடுகள், நிதி ஒப்படைப்புகள் மற்றும் மறுநிதியொதுக்கங்கள் ஆகியவற்றை காட்டுவதுடன், வரவு – செலவு திட்டத்தில் அனுமதித்தது மற்றும் சாட்டியது என்ற இரு இனங்கள் தொடர்பாகவும் நிதியொதுக்கீட்டு சட்டம் அனுமதித்த தொகைகளுக்கெதிராக பல்வேறு பணிகளுக்காக செய்யப்பட்ட உள்ளபடியான வருவாய் மற்றும் மூலதன வகை செலவுகளையும் காட்டுகின்றன. இவ்வகையில், நிதியொதுக்க கணக்குகள் நிதி பயன்பாடு பற்றி புரிந்துகொள்ள உதவி செய்து, நிதிக்கணக்குகளுக்கு இணை ஆவணங்களாக திகழ்கின்றன.

### 3.5.1 2023-24ல் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவுகள் மற்றும் சேமிப்பு / மிகையின் சுருக்கம்

54 மானியங்கள் / இரண்டு நிதியொதுக்கங்களுக்கான வரவு செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு, விவரங்களுடன் **அட்டவணை 3.6ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.6: 2023-24ல் அரசால் செயல்படுத்தப்பட்ட மானியங்கள்/நிதியொதுக்கங்களின் எண்ணிக்கை**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | விவரம் | மானியம்/ நிதியொதுக்கங்களின் மொத்த எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட/ சாட்டிய செலவினத்திற்கான வகை | வருவாய் | மூலதனம் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| அ | மானியங்கள் | 54 | அனுமதிக்கப்பட்டது/ சாட்டியது | 54 | 43* | 3,44,739.99 | 3,15,164.91 |
| ஆ | நிதியொதுக்கங்கள் | 2 | சாட்டியது | 1 | 1 | 1,02,148.26 | 98,420.81 |
| | **மொத்தம் (அ+ஆ)** | | | | | **4,46,888.25** | **4,13,585.72** |

** நான்கு மானியங்களில் அடையாள ஒதுக்கீடுகள் மட்டுமே கொடுக்கப்பட்டன.*
*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24)*

---

3 மாநில சட்டமன்றத்தில் ஓட்டளிப்புக்கு உட்பட்டு குறிப்பிட்ட நோக்கங்களுக்கான கோரிக்கை மானியங்களுக்கான தொகை.

4 மாநில சட்டமன்றத்தில் ஓட்டளிப்புக்கு உட்படாமல் மாநில தொகுநிதியில் நேரடியாக சாட்டப்படும் செலவுகள்.

### 3.5.2 அனுமதிக்கப்பட்ட/சாட்டிய செலவினங்கள்

2019-20 முதல் 2023-24ம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலகட்டத்திற்கான சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட மொத்த செலவினம் மற்றும் சேமிப்பு/மிகை பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.7: சேமிப்பு/மிகையின் போக்குகள்**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | ஒதுக்கீடுகள் | | | செலவுகள் | | | நிகர சேமிப்பு (-) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | மொத்தம் | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | மொத்தம் | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது |
| 2019-20 | 2,36,358 | 51,995 | 2,88,353 | 2,10,349 (89) | 50,910 (98) | 2,61,259 (90.60) | (-) 26,009 (11) | (-) 1,084 (2) |
| 2020-21 | 2,82,839 | 56,133 | 3,38,972 | 2,40,033 (85) | 53,720 (96) | 2,93,753 (86.66) | (-) 42,806 (15) | (-) 2,413 (4) |
| 2021-22 | 2,84,539 | 65,201 | 3,49,740 | 2,56,920 (90) | 62,442 (96) | 3,19,362 (91.31) | (-) 27,619 (10) | (-) 2,759 (4) |
| 2022-23 | 3,15,645 | 78,611 | 3,94,256 | 2,83,715 (90) | 75,451 (96) | 3,59,166 (91.10) | (-) 31,930 (10) | (-) 3,160 (4) |
| 2023-24 | 3,43,615 | 1,03,273 | 4,46,888 | 3,14,095 (91) | 99,491 (96) | 4,13,586 (92.55) | (-) 29,520 (9) | (-) 3,782 (4) |

*அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் பயன்பாட்டின் விழுக்காட்டை குறிக்கும்*
*(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதியொதுக்க கணக்குகள்)*

கடந்த ஐந்தாண்டுகளில் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் 86.66 முதல் 92.55 விழுக்காடு வரை அரசு செலவு செய்தது. நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட மானியத்தில் 91 விழுக்காடும், சாட்டிய நிதியொதுக்கத்தில் 96 விழுக்காடும் பயன்படுத்தப்பட்டன. முந்தைய ஆண்டின் அனுமதிக்கப்பட்ட மானிய செலவினத்தை விட ஒரு சதவீதம் அதிகரித்தும் சாட்டிய செலவினத்தில் வேறுபாடு ஏதுமின்றியும் காணப்பட்டது.

### 3.5.3 வரவு செலவு திட்டத்தின் துல்லியதன்மை

உள்ளபடியான வருவாய் மற்றும் செலவினத்திற்கும், வரவு செலவு திட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட வருவாய் மற்றும் செலவினத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஆய்வு செய்வதே வரவு செலவு திட்டத்தின் துல்லியதன்மையாகும். மொத்த செலவின வெளியீடு மற்றும் செலவின அமைப்பு வெளியீ அடிப்படையில் வரவு செலவு திட்டத்தின் நம்பகத்தன்மையை உலக வங்கியின் பொது செலவினம் மற்றும் நிதி பொறுப்புடைமை (PEFA) அளவிடுகிறது.

#### *3.5.3.1 மொத்த செலவினத்தின் வெளிப்பாடு*

உள்ளபடியான செலவினத்தை முதலாவதாக ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிட்டு மொத்த செலவினத்தின் வெளியீடு மதிப்பிடப்படுகிறது. இது நிதி துல்லியத்தன்மையை அல்லது நடப்பாண்டில் எதிர்நோக்கப்பட்ட வருவாய் மற்றும் செலவினத்தின் துல்லியதன்மையை பிரதிபலிக்கும்.

**அட்டவணை 3.8: மூல வரவு செலவு திட்டம் மற்றும் செலவுகளுக்கிடையேயான ஒப்பீடு**

**(₹ கோடியில்)**

| பிரிவு | மூல வரவு செலவு திட்டம் | உள்ள படியான செலவு | மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவிற்கும் உள்ள வேறுபாடு* | மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவிற்கும் உள்ள வேறுபாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **வருவாய்** | 3,12,534.42 | 3,18,666.48 | (+) 6,132.06 | *(+) 1.96* |
| **மூலதனம்** | 44,379.67 | 42,509.34 | (-) 1,870.33 | *(-) 4.21* |

* உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட அதிகமாக இருந்தால், இலக்கங்கள் (+)ல் குறிக்கப்படும். உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட குறைவாக இருந்தால், இலக்கங்கள் (-)ல் குறிக்கப்படும்.

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24)*

வருவாய் பிரிவில், மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு 1.96 விழுக்காடாகும். இந்த வேறுபாட்டுக்கு, 47 மானியங்களில் 25 விழுக்காடு வரையும், இரண்டு மானியங்களில் 25 விழுக்காட்டுக்கு மேல் 50 விழுக்காடு வரையும் மற்றும் நான்கு மானியங்களில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும் இரண்டு மானியங்களில் 100 விழுக்காட்டுக்கு மேலும் இருந்த வேறுபாடுகள் முக்கிய காரணமாகும்.

மூலதன பிரிவில், மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு (-) 4.21 விழுக்காடாகும். இந்த வேறுபாட்டுக்கு, 11 மானியங்களில் 25 விழுக்காடு வரையும், எட்டு மானியங்களில் 25 விழுக்காட்டுக்கு மேல் 50 விழுக்காடு வரையும், 18 மானியங்களில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும் மற்றும் ஆறு மானியங்களில் 100 விழுக்காடு அல்லது அதற்கு மேலும் இருந்த வேறுபாடுகள் முக்கிய காரணமாகும். எட்டு மானியங்களில் மூல ஒதுக்கீடு ஏதும் தரப்படவில்லை மற்றும் இரண்டு மானியங்களில் மொத்த ஒதுக்கீடும் திரும்பப்பெறப்பட்டது (கோரிக்கை மானிய எண் 15 – சுற்றுச்சூழல் மற்றும் கால மாறுபாடு துறை மற்றும் மானிய எண் 24 – சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை)

### 3.5.3.2 செலவின அமைப்பு வெளிப்பாடு

செலவின அமைப்பு வெளிப்பாடு, வரவு செலவு திட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது வரவு செலவு திட்ட பிரிவுகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் மறு ஒதுக்கீடுகள் செலவின அமைப்பில் வேறுபாட்டை உருவாக்குவதில் எத்தகைய பங்கு வகுக்கிறது என்பதை குறிப்பதாகும்.

**அட்டவணை 3.9: திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையிலான ஒப்பீடு**

**(₹ கோடியில்)**

| பிரிவு | மூல வரவு செலவு திட்டம் | திருத்தப்பட்ட மதிப்பீடு | உள்ள படியான செலவு | உள்ளபடியான செலவினத்திற்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு* | திருத்தப்பட்ட மதிப்பீட்டில் உள்ளபடியான செலவினத்தின் வேறுபாடு விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| **வருவாய்** | 3,12,534.42 | 3,17,483.64 | 3,18,666.48 | (+) 1,182.84 | *(+) 0.37* |
| **மூலதனம்** | 44,379.67 | 42,531.68 | 42,509.34 | (-) 22.34 | *(-) 0.05* |

* உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட அதிகமாக இருந்தால் இலக்கங்கள் (+) ல் குறிக்கப்படும். உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட குறைவாக இருந்தால் இலக்கங்கள் (−)ல் குறிக்கப்படும்.

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24 மற்றும் 2023-24 கோரிக்கை மானியங்கள்)*

அந்தந்த மானியங்களுக்கு உரிய வருவாய் பிரிவில், உள்ளபடியான செலவினத்திற்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு 0.37 விழுக்காடு ஆகும். இந்த ஒட்டுமொத்த வேறுபாட்டுக்கு 50 மானியங்களில் 25 விழுக்காடு வரையிலும், மூன்று மானியங்களில் 25 விழுக்காட்டுக்கு மேல் 50 விழுக்காடு வரையும், ஒரு மானியத்தில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும், ஒரு மானியத்தில் 100 விழுக்காட்டிற்கு மேலும் இருந்த வேறுபாடுகளே காரணமாகும்.

மூலதன பிரிவில், திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு (-) 0.05 விழுக்காடாகும். இந்த வேறுபாட்டுக்கு, 22 மானியங்களில் 25 விழுக்காடு வரையும், பத்து மானியங்களில் 25 விழுக்காட்டுக்கு மேல் 50 விழுக்காடு வரையும், மூன்று மானியங்களில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும் மற்றும் ஒரு மானியத்தில் 100 விழுக்காடு அல்லது அதற்கு மேலும் உள்ள வேறுபாடுகள் முக்கிய காரணமாகும். ஏழு மானியங்களில் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தரப்படவில்லை. இவற்றில் ஒரு மானியத்தில் மூல ஒதுக்கீடே தரப்பட்டிருந்தது. மேலும் மானிய எண் 17ல், மூல அல்லது திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் கீழ் ஒதுக்கீடு ஏதுமின்றி செலவு மேற்கொள்ளப்பட்டது.

## 3.6 நிதியொதுக்கம் மீதான தணிக்கை

நிதியொதுக்கங்கள் மீதான இந்திய தணிக்கை தலைவரின் தணிக்கை, பல்வேறு மானியங்களின் கீழ் உள்ளபடியே செய்யப்பட்ட செலவு நிதியொதுக்க சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியை ஒட்டி உள்ளதா மற்றும் அரசியலமைப்பு சட்டத்தின் (பிரிவு 202) வழிவகைகளின் கீழ் சாட்டப்பட வேண்டிய செலவு அவ்வாறே சாட்டப்பட்டதா என்பவற்றை உறுதிப்படுத்த விழைகிறது. செய்யப்பட்ட செலவானது, சட்டங்கள், தொடர்புடைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் ஒத்திருக்கிறதா என்பதையும் உறுதிப்படுத்த விழைகிறது.

### 3.6.1 வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கு வைப்பு முறையின் நம்பகத்தன்மை மீதான காண்புரைகள்

#### *3.6.1.1 வரவு – செலவு திட்ட மானியம் காலாவதியாகாமல் இருக்க நிதியை எடுத்தமை*

தமிழ்நாடு வரவு செலவு திட்ட கையேடு, பத்தி 178ன்படி, அரசு கணக்கிலிருந்து உடனடி தேவை இல்லாமல் பணம் எடுப்பது என்பது முறையற்றது ஆகும். மேலும், நிதிக் குறியீடு தொகுதி – Iன் பிரிவு 39ன் படி, நிதியாண்டின் முடிவில் அனைத்து ஒதுக்கீடுகளும் காலாவதியாகிவிடும். அதனை தவிர்க்க, கருவூலத்திலிருந்து பணம் எடுத்து அடுத்த ஆண்டில் செலவினங்களுக்காக பயன்படுத்தக் கூடாது.

நடப்பாண்டில், பணம் எடுத்து வழங்கும் அதிகாரிகளின் (DDO) வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகைகள் நிதியொதுக்க கணக்கின் கீழ் செலவினமாக காட்டப்பட்டது, **இணைப்பு 3.4ல்** விவரிக்கப்பட்டுள்ளது. எனினும் உள்ளபடியான செலவினத்தையும் மீறி, செலவழிக்கப்படாமல் ₹8.26 கோடி DDOக்களின் வங்கி கணக்கில் இருந்தது. இது வழிமுறைகளை மீறிய செயலாகும் மற்றும் நிதி துறையின் வருவாய் வகை செலவினம் அந்த அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டு காட்டப்பட்டது. இது நிதியாண்டின் முடிவில் பணம் காலாவதியாகாமல் இருக்க தேவையில்லாமல் எடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது.

### *3.6.1.2 தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம்*

2023-24ம் ஆண்டில் மூல ஒதுக்கீடு ₹4,13,639.78 கோடி மற்றும் துணை ஒதுக்கீடு ₹33,248.48 கோடி என்பவற்றுக்கெதிராக, ₹4,13,585.72 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டு, ₹33,302.54 கோடி நிகர சேமிப்பு ஏற்பட்டது.

துணை ஒதுக்கீடுகளை சோதனை சரிபார்ப்பு செய்ததில், தேவையற்ற/ கூடுதலான/குறைவான ஒதுக்கீடுகளின் நேர்வுகள் தெரியவந்தன (**இணைப்பு 3.5(அ), இணைப்பு 3.5(ஆ) மற்றும் இணைப்பு 3.6**). இவை விவரமாக **விளக்கப்படம் 3.4ல்** காட்டப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.4: தேவையற்ற/ கூடுதலான/போதுமானதாக இல்லாத துணை ஒதுக்கீடுகள்**




செலவினம் மூல ஒதுக்கீட்டிற்குள் இருந்த போதிலும், துணை ஒதுக்கீடுகள் தேவையில்லாமல் கொடுக்கப்பட்டிருப்பது மேலே கூறப்பட்டவைகளிலிருந்து தெரிய வந்தது. மேலும், சில கணக்குத் தலைப்புகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமல் கூடுதல் செலவுகளுக்கு வழிவகுத்தது. IFHRMS செயல்படுத்தப்பட்ட பின்பும், செலவின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் வழிமுறை போதுமானதாக இல்லை.

### *3.6.1.3 தேவையற்ற/ மிகையான / போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள்*

துணை மானியத்தை தவிர, ஒரு மானியத்திற்குள்ளே நிதியை மறுஒதுக்கீடு செய்ய மறுநிதியொதுக்கத்தை பயன்படுத்த முடியும். ஒரு மானியத்தினுள் அல்லது சாட்டப்பட்ட நிதியொதுக்கத்திற்குள், சேமிப்பு எதிர்நோக்கப்படும் ஒரு அலகிற்கான ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி தேவைப்படும். மற்றொரு அலகிற்கு, ஒரே பிரிவின் கீழ், (வருவாய்-அனுமதிக்கப்பட்டது, வருவாய்–சாட்டப்பட்டது, மூலதனம்-அனுமதிக்கப்பட்டது, மூலதனம்-சாட்டப்பட்டது) நிதியை தகுதியுடைய அதிகார அமைப்பு மூலம் மாற்றுவது மறுநிதியொதுக்கம் ஆகும்.

எனினும், ஒரு துணை தலைப்பிலிருந்து மற்றொன்றிற்கு கணிசமான அளவில் மறுநிதியொதுக்கம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். செய்ய விடுபட்டவை மற்றும் தொலைநோக்கு பார்வையின்மையை

சரிசெய்வதற்காக மட்டுமே மறுநிதியொதுக்கம் செய்யும் முறையை பயன்படுத்துவது என்பது கூடாது.

வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டில் இருந்த துல்லியமின்மையை சுட்டிக்காட்டுவது மட்டுமல்லாமல், நிதி தேவையுள்ள பிற துறைகளுக்கு நிதி கிடைக்க விடாமல் செய்யும் வகையில், தேவையற்ற/ மிகையான/குறைவான மறுநிதியொதுக்கம் இருந்ததை, **அட்டவணை 3.10** விளக்குகிறது.

**அட்டவணை 3.10: 2023-24ல் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள்**

| வரிசை எண் | விவரம் | கணக்குத் தலைப்புகளின் எண்ணிக்கை | மூல ஒதுக்கீடு (O) | துணை ஒதுக்கீடு (S) | மறுநிதி யொதுக்கம் (R) | இறுதி திருத்திய மானியம் (O+S+R) | தொகை (₹ கோடியில்) | பார்வை – இணைப்பு எண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| I | மிகையான/ போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 1 | ₹2 கோடிக்கும் மேலுள்ள கூடுதல்கள் | 29 | 45,541.49 | 192.82 | 4,476.26 | 50,210.57 | 1,003.14 | **3.7** |
| 2 | ₹2 கோடிக்கும் மேலுள்ள சேமிப்புகள் | 33 | 36,148.11 | 369.92 | (-) 761.53 | 35,756.51 | (-) 918.26 | **3.8** |
| II | தேவையற்ற மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 3 | செலவு ஏதுவுமில்லாமல் அல்லது மூல மற்றும் துணை ஒதுக்கீட்டிற்குள் செலவு இருந்து, மறுநிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவது | 22 | 1,059.60 | 42.57 | 89.07 | 1,191.24 | 1,005.38 | **3.9** |
| III | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 4 | ₹100 கோடிக்கும் மேலான ஒதுக்கீடுகள் முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டவை | 28 | 12,489.10 | 0.68 | (-) 12,489.78 | 0 | 12,489.78 | **3.10** |
| 5 | பெருந்தலைப்பு 8342ன் கீழ் வைப்புத் தொகைகள் மீதான வட்டி பொறுப்புகளுக்கான மீதான ஒதுக்கீடுகள் முழுவதும் திரும்ப பெறப்பட்டன | 10 | 9.46 | 0* | (-) 9.46 | 0 | 0 | **3.11** |
| 6 | இறுதி திருத்திய மானியம் இல்லாமல் செய்த செலவு | 6 | 105.35 | 38.03 | (-) 143.38 | 0 | 154.43 | **3.12** |

* அடையாள ஒதுக்கீடு ₹1,000

(*ஆதாரம்: விரிவான நிதியொதுக்க கணக்குகள் 2023-24*)

64 நிகழ்வுகளில், **இணைப்பு 3.13ல்** கூறப்பட்டுள்ளவாறு, முதல் மறுநிதியொதுக்கத்தில் ₹255.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இரண்டாவது நிதியொதுக்கத்தில் மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள் உட்பட ₹293.95 கோடியை திரும்ப பெறப்பட்டதன் விளைவாக செலவு ஏதுமில்லை.

இவ்வாறாக, மறுநிதியொதுக்கத்தின் தேவையை உறுதி செய்ய, தெளிவான செயல் முறை இல்லாதது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாக தெரிய வருகிறது. இதனால் தேவையில்லாத மறுநிதியொதுக்கமும் அதன் விளைவாக ஆண்டு முடிவில் தேவையற்ற சேமிப்புகள்/ஒப்புவிப்புகள் நிகழ்கின்றன.

மேலும், நிதித்துறை வெளியிட்ட மறுநிதியொதுக்க ஆணைகள் மீதான விரிவான கூர்ந்தாய்வில், மொத்தம் உள்ள 24,097 இனங்களுள் 4,932 இனங்களுக்கு (20.47 விழுக்காடு) கூடுதல் நிதி ஒதுக்கீடு/ஒதுக்கீட்டை திரும்ப பெற்றமைக்கு சரியான காரணங்கள் அளிக்கப்படாமல், "உள்ளபடியான தேவை", "குறைந்த/கூடுதல் தேவை", "உள்ளபடியான தேவையின் அடிப்படையில்" போன்ற தெளிவற்ற சொற்றொடர்கள் இடம்பெற்றிருந்ததை காட்டியது. இது தமிழ்நாடு வரவு செலவு திட்ட நடைமுறை நூல், பத்தி 151(ii) க்கு மாறானதாகும்.

இவ்வாறாக, பல்வேறு கட்டங்களில் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் மற்றும் ஒதுக்கீடு இல்லாமல் செலவிடுதல் ஆகியவை, வரவு – செலவு திட்டம் மறுநிதியொதுக்கம் என்ற இரண்டு நிலைகளிலும் உள்கட்டுப்பாட்டு/ கண்காணிப்பு முறைமை வலுவற்று இருப்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன. எனவே, மறுநிதியொதுக்கத்தின் தேவை மற்றும் தொகையை உறுதி செய்ய தெளிவான செயல் முறை இல்லாததால் தேவையில்லாத மறுநிதியொதுக்கம் மற்றும் அதன் விளைவாக ஆண்டு முடிவில் தேவையற்ற சேமிப்புகள்/ஒப்புவிப்புகள் நிகழ்கின்றன.

### *3.6.1.4 சட்டப்படியான அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவு*

ஒன்பது கணக்கு தலைப்புகளில், மூல வரவு செலவு திட்டத்திலோ அல்லது துணை மதிப்பீடுகளிலோ, எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இது சட்டசபையின் ஆணையின்றி திட்டங்களில் செலவினம் மேற்கொண்ட நிலையை உருவாக்கியது.

**அட்டவணை 3.11: மறுநிதியொதுக்கம் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடு**

**(₹ இலட்சத்தில்)**

| வரிசை எண் | மானிய எண் | கணக்கு தலைப்பு | மறுநிதியொதுக்கம் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | 05 | 3054.80.797.JD | 15.20 | 15.20 |
| 2 | 06 | 2403.00.794.SB | 2.76 | 2.76 |
| 3 | 07 | 4405.00.104.JK | 1.30 | 1.30 |
| 4 | 19 | *2210.01.001.AB (C)* | *2.09* | *2.09* |
| 5 | 19 | *2210.01.110.AA (C)* | *0.15* | *0.15* |
| 6 | 21 | 5054.04.800.JC | 11.10 | 11.10 |
| 7 | 35 | 2062.00.105.AC | 0.90 | 0.90 |
| 8 | 54 | 4406.02.793.UF | 6.84 | 6.84 |
| 9 | 56 | *2049.03.117.AN (C)* | *2.08* | *2.08* |
| | | **மொத்தம்** | **42.42** | **42.42** |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24)*

### 3.6.1.5 செலவிடப்படாத தொகை, ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும்/அல்லது பெருமளவிலான சேமிப்புகள்/ஒப்படைப்புகள்

எதிர்பார்க்கக்கூடிய எந்த ஒரு செலவுக்கும் வரவு-செலவு திட்டத்தில் இடமளித்து, தேவையான அளவு மட்டுமே அவற்றுக்கு நிதி ஒதுக்கவும் வேண்டும் என்பது மதிப்பிடும் அலுவலர்கள் அனைவருக்குமான அடிப்படை விதி ஆகும். இக்காரணத்திற்காக, செலவிடப்படாமல் போகக்கூடிய நிதி ஒதுக்கீடு கூடிய விரைவில் ஒப்படைப்பாக தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கவில்லையெனில், நிதி கிடைத்திருந்தால் அதை செலவிட்டிருக்கக்கூடிய துறைகளுக்கு அது கிடைக்காமல் போகும். ஒப்படைப்புகள் பொதுவாக மார்ச் மாதத்தில் செய்யப்படுகின்றன. நிகழ்ந்துள்ள செலவின் மீதான கண்காணிப்பும், முந்தைய மாத செலவினத்தின் மீதான கவனமும், கட்டுப்பாட்டு அலுவலர், தனது இறுதியான நிதி தேவையை கூடிய வரை துல்லியத்தன்மையுடன் மதிப்பிடுவதற்கு உதவும். சேமிப்பு தொகைகளை வருங்காலத்தின் கூடுதல் நிதி தேவைக்காக ஒதுக்கி வைக்கக்கூடாது.

பெருமளவிலான சேமிப்புகள் மற்றும் ஒப்புவிப்புகள் ஏற்பட்ட நேர்வுகள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### *(அ) 2023-24ல் பெரிய சேமிப்புகள் நிகழ்ந்த மானியங்கள்*

பல்வேறு மானியங்களின் கீழ் தலா ₹100 கோடி அளவிற்கு மேல் சேமிப்பு இருந்த 41 நேர்வுகளில் மொத்தம் ₹31,217.00 கோடி அளவுக்கு (**இணைப்பு 3.14ல்** விவரிக்கப்பட்டவாறு) சேமிப்பு ஏற்பட்டது. நடப்பாண்டில், தலா ₹10 கோடி அளவுக்கு மேலாக நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காட்டிற்கு குறைவான பயன்பாடு இருந்த 11 மானியங்கள் மற்றும் 20 விழுக்காட்டிற்கு குறைவாக இருந்த இரண்டு மானியங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.12ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.12: ₹10 கோடிக்கும் மேலான மானியம்/நிதி ஒதுக்கங்களில் 50 விழுக்காட்டிற்கு சமமாக அல்லது குறைவான பயன்பாடு இருந்த மானியங்கள்**

*(₹ கோடியில்)*

| வ எண் | மானிய எண் | விவரம் | மொத்த ஒதுக்கீடு | உள்ளபடியான செலவு | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| | | **வருவாய்** | | | |
| 1 | 15 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாறுபாடு (சுற்றுச்சூழல், காலநிலை மாறுபாடு மற்றும் வனத்துறை) | 128.77 | 53.26 | 41.36 |
| 2 | 27 | தொழில்கள், முதலீடு மேம்பாடு மற்றும் வணிகத் துறை | 2,063.79 | 819.19 | 39.69 |
| 3 | 36 | திட்டமிடல், மேம்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 408.08 | 155.57 | 38.12 |

| வ எண் | மானிய எண் | விவரம் | மொத்த ஒதுக்கீடு | உள்ளபடியான செலவு | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| | | **முதலீடு** | | | |
| 4 | 06 | கால்நடைத்துறை (கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | 141.08 | 66.17 | 46.90 |
| 5 | 09 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 352.33 | 44.70 | 12.69 |
| 6 | 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை) | 301.14 | 103.61 | 34.41 |
| 7 | 16 | நிதித் துறை | 390.03 | 151.60 | 38.87 |
| 8 | 23 | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் (உள்துறை, கலால் மற்றும் ஆயத்தீர்வை துறை) | 80.00 | 27.41 | 34.26 |
| 9 | 44 | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை. | 10.00 | 5.00 | 50.00 |
| | | **கடன்** | | | |
| 10 | 14 | எரிசக்தி துறை | 2,241.95 | 955.78 | 42.63 |
| 11 | 22 | காவல் (உள்துறை, கலால் மற்றும் ஆயத்தீர்வை துறை) | 21.55 | 3.88 | 18.00 |
| 12 | 27 | தொழில்கள், முதலீடு மேம்பாடு மற்றும் வணிகத் துறை | 700.63 | 242.33 | 34.59 |
| 13 | 44 | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை | 150.00 | 69.36 | 46.24 |

(*ஆதாரம்*: *நிதிபொதுக்க கணக்குகள் 2023-24*)

2023-24ல் மானியங்கள் பயன்பாட்டு விழுக்காடு அடிப்படையில் தொகுக்கப்பட்டு அதன் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 3.5ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.5: மானியங்கள்/நிதியொதுக்கங்கள் எண்ணிக்கை சேமிப்பு விழுக்காடு அடிப்படையில் தொகுக்கப்பட்டு அதன் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள்**

**(₹ கோடியில்)**




இவ்வாறாக, பெரிய அளவிலான சேமிப்புகள், வரவு செலவு திட்ட செயல்பாட்டில் உள்ள குறைபாட்டையும் மானியம் அல்லது நிதியொதுக்கத்தின் செயலாக்கத்திலுள்ள குறைபாடுகளையும் குறிக்கிறது.

***(ஆ) சேமிப்புகளை ஒப்படைத்தல்***

தமிழ்நாடு வரவு-செலவு திட்ட நடைமுறை கையேடு பத்தி 140ன் படி, நிதியை செலவிடும் துறைகள், மானியங்கள்/நிதியொதுக்கங்களை அல்லது அவற்றில் ஒரு பகுதியை, சேமிப்பு எதிர்நோக்கப்பட்டவுடன், நிதித்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.

நடப்பாண்டில், ₹33,302.54 கோடி மொத்த சேமிப்பில் ₹33,439.82 கோடி ஒப்படைக்கப்பட்டது. இறுதி நாளன்று (31 மார்ச் 2024) ஒப்படைக்கப்பட்ட ₹14,856.21 கோடி (நிகரம்) தொகை **விளக்கப்படம் 3.6ல்** தரப்பட்டுள்ளது. மொத்தம் ₹15,543.60 கோடி (**இணைப்பு 3.15**) மதிப்புள்ள 101 நேர்வுகள் தலா ₹10 கோடி தொகைக்கு மேற்பட்ட மதிப்புடையவை ஆகும். இது போதுமான நிதி கட்டுப்பாடுகள் இல்லை என்பதையே உணர்த்துகிறது.

மேலும் சேமிப்பை விட ஒப்படைப்பது அதிகமாக இருந்த நேர்வுகளில், நிதியாண்டின் இறுதியில் மறுநிதியொதுக்கத்தின் போது ஒப்படைக்கப்பட வேண்டிய சேமிப்பின் சரியான அளவை, துறைகளால் உறுதி செய்ய இயலவில்லை. வருவாய் கணக்கின் கீழ் 14 அனுமதிக்கப்பட்ட மானியங்கள், மற்றும் கடன்கள் கீழ் மூன்று மானியங்களில் ஏற்பட்ட ₹429.08 கோடி சேமிப்பு **இணைப்பு 3.16ல்** உள்ளவாறு ஒப்படைக்கப்படவில்லை. வருவாய் பிரிவின் கீழ் ஒன்பது மானியங்கள் / நிதியொதுக்கங்கள், மூலதன பிரிவின் கீழ் 11 மானியங்கள் மற்றும் கடன் பிரிவின் கீழ் இரண்டு மானியங்கள் ஆகியவற்றில் **இணைப்பு 3.17ல்** பட்டியலிடப்பட்டவாறு, சேமிப்பை விட ஒப்படைப்புகள் அதிகமாக இருந்தன. இது, IFHRMSஐ நடைமுறைப்படுத்திய பிறகும் கூட, நிதித் துறையிடம் போதிய கட்டுப்பாடு இல்லாததை சுட்டிக்காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.6 : 2023-24க்கான சேமிப்புகள் மற்றும் ஒப்படைப்புகள்**

(₹ கோடியில்)




### (இ) வரவு செலவுத் திட்ட பயன்பாடு

பயன்பாட்டு விழுக்காட்டின் அடிப்படையில் பிரிவுகளாக தொகுக்கப்பட்ட மானியங்கள்/ நிதியொதுக்கங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பிரிவிலும் நேர்ந்த சேமிப்புகளும் கீழே உள்ள **அட்டவணை 3.13**ல் கொடுக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 3.13: மானிய/நிதியொதுக்கத்தின் பயன்பாடு**

| பயன்பாட்டு விழுக்காடு | 0 முதல் 50 விழுக்காடு வரை | 50 முதல் 70 விழுக்காடு வரை | 70 முதல் 90 விழுக்காடு வரை | 90 முதல் 100 விழுக்காடு வரை |
|---|---|---|---|---|
| மானியங்களின் எண்ணிக்கை | 2 | 2 | 23 | 29 |
| சேமிப்புகள் (₹ கோடியில்) | 2,072.89 | 297.92 | 12,422.78 | 18,508.95 |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24*)

இவ்வாறு, பெரிய அளவிலான சேமிப்புகள் வரவு செலவு திட்ட செயல்பாட்டில் உள்ள குறைபாட்டையும் மானியம் அல்லது நிதியொதுக்கத்தின் பயன்பாட்டில் உள்ள குறைபாடுகளையும் குறிக்கிறது.

### *(ஈ) தொடர் சேமிப்புகள்*

கடந்த ஐந்தாண்டுகளில், **இணைப்பு 3.18**ல் கூறப்பட்டுள்ளவாறு, மொத்த ஒதுக்கீட்டில் ஐந்து விழுக்காட்டிற்கும் மேலான தொடர்ந்த சேமிப்பு, 24 மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் ஏற்பட்டது. 2023-24ல் வருவாய் பிரிவில் சேமிப்பின் விழுக்காடு 5.40 முதல் 100 வரையிலும், மூலதன பிரிவில் 7.21 முதல் 65.60 விழுக்காடு வரையிலும் இருந்தது.

கடந்த ஐந்தாண்டு காலம் முழுவதும் மானியங்களில் தொடர்ச்சியாக சேமிப்பு இருந்ததை **இணைப்பு 3.18** காட்டுகிறது. முந்தைய தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இப் பிரச்சனைகள் தொடர்கின்றன.

இவ்வாறாக, உள்ளபடியான தேவையை ஆராயாமல், குறைபாடுள்ள வரவு செலவு திட்டத்தால் கூடுதல் ஒதுக்கீடு செய்து பின்னர் அவை மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்படுகிறது. இதனால், அந்த வருடத்தில் தேவைப்படும் மற்ற துறைகள்/திட்டங்களுக்கு நிதி கிடைக்காமல் போக வாய்ப்புண்டு.

### 3.6.1.6 மிகை செலவும் அதன் முறைப்படுத்தலும்

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 205(1)(b)ன் படி, ஒரு மானியம்/நிதியொதுக்கத்தின் கீழ் ஏற்பட்ட மிகை செலவு மாநில சட்டமன்றத்தின் மூலம் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது மாநில அரசுக்கு கட்டாயமாகும். மிகை செலவை முறைப்படுத்த ஒரு காலக்கெடுவை இப்பிரிவு குறிப்பிடாவிட்டாலும், நிதியொதுக்க கணக்குகளை பொது கணக்குகள் குழு விவாதித்த பின் மிகை செலவுகள் முறைப்படுத்தப்படுகின்றன.

#### (அ) ஒதுக்கீட்டை விட மிகை செலவு

நிதி ஒதுக்கீட்டை விட அதிகமான செலவினம் மேற்கொள்வது, சட்டசபை ஒப்புதல் பெற வேண்டிய தேவையை மீறுவதுடன் குறைபாடுள்ள திட்டமிடலைக் காட்டுகிறது. வரவு செலவு திட்ட செலவுகளை கூர்ந்து கண்காணிப்பதன் மூலம் இத்தகைய நிலையை தவிர்க்கலாம். இந்த ஆண்டு, நான்கு மானியங்களில் மொத்த மானிய ஒதுக்கீட்டை விட செலவினம் அதிகரித்ததால், முறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. விவரங்கள் கீழே **அட்டவணை 3.14ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14: ஒதுக்கீட்டை விட அதிகமாக செலவிடப்பட்ட மானியங்கள்**

(₹ கோடியில்)

| வ எண் | மானிய எண் | மானிய விவரம் | பிரிவு | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்த ஒதுக்கீடு | உள்ளபடியான செலவு | அதிகம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | கைத்தறி மற்றும் ஜவுளி (கைத்தறி, கைவினைப் பொருட்கள், ஜவுளி மற்றும் கதர் துறை) (அனுமதிக்கப்பட்டது) | வருவாய் | 1,15,144.05 | 28,971.44 | 1,44,115.49 | 1,44,190.63 | 75.14 |
| 2 | 19 | சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை (சாட்டியது) | வருவாய் | 46.43 | 14.76 | 61.19 | 62.43 | 1.24 |
| 3 | 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) (அனுமதிக்கப்பட்டது) | கடன்கள் | 40.00 | 60.00 | 100.00 | 103.22 | 3.22 |
| 4 | 43 | பள்ளி கல்வித் துறை (அனுமதிக்கப்பட்டது) | கடன்கள் | 40.00 | 0.00 | 40.00 | 56.73 | 16.73 |

#### (ஆ) முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவு

**அட்டவணை 3.15ல்** கூறப்பட்டுள்ளவாறு, 2019-20 முதல் 2022-23 காலகட்டத்தில் நேர்ந்த மிகை செலவான ₹968.12 கோடி மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது (ஆகஸ்ட் 2024).

**அட்டவணை 3.15: கடந்த ஆண்டுகளில் மிகை செலவினம் செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டியவை**

| ஆண்டு | மானிய எண்/ நிதியொதுக்கம் | முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவு (₹ *கோடியில்*) | முறைப்படுத்துதலின் நிலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2019-20 | 13, 40, 41, 43, 48 | 942.00 | இரண்டு மானியங்களுக்கான விளக்க குறிப்பு (13 மற்றும் 43) பெறப்படவில்லை. |
| 2020-21 | 27 | 20.87 | மானியத்திற்கான விளக்க குறிப்பு பெறப்பட்டுள்ளது மற்றும் பொது கணக்கு குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 2021-22 | 34, 35, 44, 51 | 5.24 | மூன்று மானியங்களுக்கான விளக்ககுறிப்பு பெறப்படவில்லை. (எண் 34, 35 & 51) மற்றும் கணக்கு குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 2022-23 | 51 | 0.01* | முறைப்படுத்தல் நிலுவையில் உள்ளது. |
| | **மொத்தம்** | **968.12** | |

* ₹50,000

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்*)

**மானியங்களில் செய்யப்பட்ட மிகை செலவை சட்டசபையில் முறைப்படுத்த மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

## 3.6.2 வரவு – செலவு திட்டம் மற்றும் கணக்குவைப்பு முறையின் செயல்திறன் குறித்த குறிப்புகள்

### *3.6.2.1 வரவு-செலவு திட்ட மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியானவற்றுக்கும் இடையேயான இடைவெளி*

நிதி சார்ந்த பல்வேறு குறியீடுகளை எய்துவதற்கு, வரி நிர்வாகம்/ பிற வரவு மற்றும் பொது செலவு ஆகியவற்றின் மீது திறனுள்ள மேலாண்மை இன்றியமையாதது. உண்மை நிலைக்கு பொருந்தாத கருத்துருக்கள் அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு, செலவு கண்காணிப்பு முறையில் குறைபாடுகள், வலுவற்ற திட்ட செயல்பாட்டு திறன்கள், வலுவற்ற உள்கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக்கீடு அமைகிறது. சில துறைகளில் ஏற்படும் அளவுக்கதிகமான சேமிப்பு, நிதி கிடைத்திருந்தால் பயன்படுத்தியிருக்கக்கூடிய பிற துறைகளுக்கு நிதி கிடைக்கவிடாமல் செய்கிறது.

2023-24 ஆண்டில் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டுடன் (மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள்) ஒப்பிட்ட வகையில் உள்ளப்படியான செலவின் சுருக்கம் **அட்டவணை 3.16**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.16: மூல/துணை ஒதுக்கீடுகளுக்கெதிராக உள்ளபடியான செலவின் நிலை**

**(₹ *கோடியில்*)**

| செலவின் தன்மை | மூல மானியம்/ நிதி யொதுக்கம் | துணை மானியம் / நிதி யொதுக்கம் | மொத்தம் | உள்ள படியான செலவு | நிகர சேமிப்பு | ஒப்படைக்கப்பட்ட தொகை | 31 மார்ச் அன்று ஒப்படைக்கப் பட்ட தொகை | ஒப்படைப்பு செய்யப் பட்ட சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) = ((7) / (6)) x 100 |
| ***அனுமதிக்கப்பட்டது*** | | | | | | | | |
| I வருவாய் | 2,53,664.83 | 27,740.69 | 2,81,405.52 | 2,63,146.48 | (-) 18,259.04 | (-) 18,133.86 | (-) 10,228.89 | 99.31 |
| II மூலதன வகை | 44,355.53 | 4,382.18 | 48,737.71 | 42,103.26 | (-) 6,634.45 | (-) 6,859.72 | (-) 3,709.92 | *103.40* |
| III கடன்களும் முன்பணங்களும் | 12,899.98 | 571.64 | 13,471.62 | 8,845.11 | (-) 4,626.51 | (-) 4,616.63 | (-) 263.65 | *99.79* |
| **மொத்தம்– அனுமதிக்கப்பட்டது** | **3,10,920.34** | **32,694.51** | **3,43,614.85** | **3,14,094.85** | **(-) 29,520.00** | **(-) 29,610.21** | **(-) 14,202.46** | ***100.31*** |
| சாட்டியது | | | | | | | | |
| IV வருவாய் வகை | 58,869.59 | 170.11 | 59,039.70 | 55,520.00 | (-) 3,519.70 | (-) 3,566.78 | (-) 619.21 | *101.34* |
| V மூலதன வகை | 24.14 | 383.70 | 407.84 | 406.08 | (-) 1.76 | (-) 1.76 | (-) 1.76 | *100.00* |
| VI பொது கடன் மீள செலுத்துதல் | 43,825.71 | 0.15 | 43,825.86 | 43,564.79 | (-) 261.07 | (-) 261.07 | (-) 32.78 | *100.00* |
| **மொத்தம்- சாட்டியது** | **1,02,719.44** | **553.96** | **1,03,273.40** | **99,490.87** | **(-) 3,782.53** | **(-) 3,829.61** | **(-) 653.75** | *101.24* |
| **எதிர்பாரா செலவு நிதிக்கு ஒதுக்கீடு (ஏதேனும் இருந்தால்)** | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| **பெரு மொத்தம்** | **4,13,639.78** | **33,248.47** | **4,46,888.25** | **4,13,585.72** | **(-) 33,302.53** | **(-) 33,439.82** | **(-) 14,856.21** | ***100.41*** |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2023-24)

2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவு திட்ட பயன்பாடு **விளக்கப்படம் 3.7ல்** காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.7: 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவு திட்ட பயன்பாடு**




*(ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்குரிய நிதியொதுக்க கணக்குகள்)*

நடப்பாண்டில் பயன்பாட்டின் விழுக்காடு 1.45 விழுக்காடு உயர்ந்து 92.55 விழுக்காடாக இருந்தது.

54 மானியங்கள் மற்றும் இரண்டு நிதியொதுக்கங்களின், 2023-24ம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு, செலவு மற்றும் சேமிப்பு/மிகையின் சுருக்கம் அனுமதிக்கப்பட்ட/சாட்டிய வகைகளுக்கான பிரிவு விவரங்களுடன் **அட்டவணை 3.17ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.17: வரவு செலவு திட்டத்தின் சுருக்கம்**

**(₹ கோடியில்)**

| வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | | செலவு | | சேமிப்பு (-) | | மிகை (+) | |
|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது |
| 3,43,614.85 | 1,03,273.40 | 3,14,094.85 | 99,490.87 | (-) 29,520.00 | (-) 3,782.54 | 0.95 | 0.01 |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2023-24)*

மொத்த துணை ஒதுக்கீடான ₹33,248.48 கோடியை விட மொத்த சேமிப்பு அதிகமாக (₹33,302.504 கோடி) இருந்தது. மறு நிதியொதுக்கம் மூலமாக அளிக்கப்பட்ட கூடுதல் ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை என்பது வரவு செலவு மேலாண்மை திட்டத்தில் உள்ள குறைபாடுகளை பிரதிபலிக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் நேர்ந்த செலவுகளின் போக்குகள் மூல மற்றும் திருத்திய மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டு **அட்டவணை 3.18ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை : 3.18: 2019-24 காலகட்டத்தில் உள்ள மொத்த வரவு செலவு திட்டம், திருத்திய மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றின் போக்குகள்**

**(₹ கோடியில்)**

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மூல ஒதுக்கீடு | 2,68,501.58 | 3,04,954.44 | 3,35,288.14 | 3,64,107.02 | 4,13,639.78 |
| துணை ஒதுக்கீடு | 19,851.68 | 34,018.02 | 14,451.49 | 30,148.70 | 33,248.48 |
| மொத்த வரவு செலவு திட்டம் (TB) | 2,88,353.26 | 3,38,972.45 | 3,49,739.63 | 3,94,255.72 | 4,46,888.26 |
| திருத்திய மதிப்பீடு (RE) | 2,70,255.50 | 3,29,034.84 | 3,20,375.66 | 3,48,450.41 | 4,12,976.84 |
| உள்ளபடியான செலவு (AE) | 2,61,259.87 | 2,93,753.73 | 3,19,361.82 | 3,59,166.33 | 4,13,585.72 |
| சேமிப்பு | (-) 27,093.40 | (-) 45,218.72 | (-) 30,377.81 | (-) 35,089.39 | (-) 33,302.54 |
| *மூல ஒதுக்கீட்டில் துணை ஒதுக்கீட்டின் விழுக்காடு* | *7.39* | *11.16* | *4.31* | *8.28* | *8.04* |
| *ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த சேமிப்பு/ மிகையின் விழுக்காடு* | *9.40* | *13.34* | *8.69* | *8.90* | *7.45* |
| TB-RE | 18,097.76 | 9,937.61 | 29,363.97 | 45,805.31 | 33,911.42 |
| RE-AE | 8,995.64 | 35,281.11 | 1,013.84 | (-)10,715.92 | (-) 608.88 |
| (TB-RE) TBல் விழுக்காடு | *6.28* | *2.93* | *8.40* | *11.62* | *7.59* |
| (RE-AE) TBல் விழுக்காடு | *3.12* | *10.41* | *0.29* | *(-)2.72* | *(-) 0.14* |

*(ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி அறிக்கைகள்)*

திருத்திய மதிப்பீட்டிற்கும், உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே உள்ள மாறுபாடு கடந்த ஆண்டுகளில் ஏற்றத்தாழ்வுடன் காணப்பட்டாலும், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்து காணப்பட்டது. அதே வேளையில், மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த சேமிப்பின் விழுக்காடு முந்தைய ஆண்டை விட சற்று குறைந்து காணப்பட்டது. மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டை விட திருத்திய மதிப்பீடு தொடர்ந்து குறைவாக காணப்பட்ட வேளையில், உள்ளபடியான செலவினம் 2022-23ம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தது. மேலும், உள்ளபடியான செலவினம் மூல வரவு செலவு திட்டத்தை விட குறைவாகவே இருந்ததால் துணை ஒதுக்கீடுகள் தேவைப்படவில்லை. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில், மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான

செலவினத்திற்கும் இடையே உள்ள இடைவெளி **விளக்கப்படம் 3.8ல்** தெளிவாக காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து காணப்படும் இக்குறைபாடுகள் வரவு செலவு திட்ட தயாரிப்பில் உள்ள குறைபாட்டைக் குறிக்கிறது.

**விளக்கப்படம் 3.8: மொத்த வரவு செலவு, திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உண்மையான செலவினங்களைக் காட்டும் போக்கு**




4,900 துணை தலைப்புகளில், நிதியொதுக்க கணக்குகளில் 1,568 துணை தலைப்புகளில் மிகை / சேமிப்பு பற்றிய குறித்துரைகள் உள்ளன. சேமிப்பு/மிகை வேறுபாட்டிற்கான காரணங்கள் 1,174 துணை தலைப்புகளுக்கு மட்டுமே பெறப்பட்டன என்பது **விளக்கப்படம் 3.9ல்** காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.9: ஒதுக்கீடு கணக்குகளில் உள்ள விளக்கம்**




### *3.6.2.2 வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் அதனை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியான நிதி ஒதுக்கீடு*

2023-24 வரவு செலவு திட்ட உரையில் மாநில அரசு நிறைய கொள்கை முடிவுகளை அறிவித்தது. மாநில வரவு செலவு திட்டத்தை பகுப்பாய்வு செய்ததில், பல திட்டங்கள் செயல் படுத்தப்படவில்லை மற்றும் ஏராளமான அறிவிப்புகள் ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தால் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை அறிய நேர்ந்தது. பெரும்பாலான அறிவிப்புகள், நடைமுறையில் உள்ள திட்டங்களின் தொடர்ச்சியாகவோ அல்லது நீட்டிப்பாகவோ இருந்தன. தகுதியுள்ள குடும்பங்களின், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ₹1,000 வழங்கும் "மகளிர் உரிமை தொகை" மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான "முதலமைச்சரின் காலை உணவு திட்டமும்" பொதுமக்களின் கவனத்தைப்

பெற்றதுடன் நிதி ஒதுக்கீட்டையும் முழுமையாக பயன்படுத்திய சில வரவேற்பு மிக்க திட்டங்களாகும்.

கல்வித் துறையின் முக்கிய கொள்கை அறிவிப்புகளான "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டம்", "எண்ணும் எழுத்தும்" மற்றும் "நான் முதல்வன்" போன்ற திட்டங்களுக்கு கூட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும், "தமிழ்நாடு உலக புத்தாக்கம் மற்றும் திறன் பயிற்சி மையம் (TN-WISH)" ₹120 கோடி திட்ட முதலீட்டில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், எவ்வித செலவும் செய்யப்படாமல் மறு நிதியொதுக்கத்தில் வரவு செலவு திட்ட ஒதுக்கீடான ₹20 கோடி முழுமையாக திரும்பப்பெறப்பட்டது.

1,540 திட்டங்களுக்காக ஒப்புதல் பெற்ற ஒதுக்கீடான ₹14,808.44 கோடி மறு நிதியொதுக்கத்தின் போது முழுமையாக திரும்பப்பெறப்பட்டது. இதில், ஒரு கோடிக்கு மேல் ஒப்புதல் ஒதுக்கீடு பெற்ற வருவாய் (அனுமதிக்கப்பட்டது) பிரிவின் கீழ் 116 திட்டங்களும் மூலதனம் (அனுமதிக்கப்பட்டது) கீழ் 59 திட்டங்களும் முறையே ₹5,748.28 கோடி மற்றும் ₹2,136.26 கோடியும் **இணைப்பு 3.19** (அ) மற்றும் (ஆ) வில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அடங்கும். வரவு செலவு ஒதுக்கீடுகள் யதார்த்தமற்ற கருத்துருக்களின் அடிப்படையில் செய்யப்பட்டன என்பதையே இது பிரதிபலிக்கிறது.

### *3.6.2.3 விரைவுபடுத்தப்பட்ட செலவு*

அரசின் நிதி ஆண்டு முழுவதும் சமமாக செலவிடப்பட வேண்டும். நிதி ஆண்டின் இறுதியில் செலவை விரைவுபடுத்துவது என்பது நிதி ஒழுங்குமுறையை மீறுவதாகும். செலவு செய்வதில் சீரான போக்கை பின்பற்றுவது, சிறந்த பொது நிதி மேலாண்மையின் முக்கிய கூறு ஆகும். ஏனெனில், ஒரு மாதத்தில் நிகழும் எதிர்பாராத பெரும் செலவுகளால், அம்மாதத்தில் வரவுக்கும் செலவுக்கும் இடையே சமமின்மையால் ஏற்படும் நிதிவகையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் தற்காலிக நிதி தட்டுப்பாட்டை அவ்வழக்கம் தடுக்கும்.

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின் பிரிவு 39ன் படி, நிதியாண்டின் இறுதி மாதத்தில் செலவை விரைவுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, **இணைப்பு 3.20ல்** பட்டியலிடப்பட்டுள்ள, ஒரு கோடிக்கும் மேல் மொத்த ஒதுக்கீடு பெற்ற 142 துணை தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ₹7,280 கோடி தொகை முழுவதும் மார்ச் 2024ல் செலவிடப்பட்டது. மேலும் **அட்டவணை 3.19ல்** பட்டியலிடப்பட்டுள்ள இரண்டு மானியங்களில் மொத்த செலவில் 50 விழுக்காடு மார்ச் 2024ல் செய்யப்பட்டது. ஆண்டு இறுதியில் செய்யப்பட்ட விரைவான செலவு, மேலாண்மை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள குறைபாடுகளை காட்டுகிறது.

**அட்டவணை 3.19: மார்ச் மாதத்தில் மட்டும் 50 விழுக்காட்டிற்கு மேல் செலவு நேர்ந்த மானியங்கள்.**

**(₹ *கோடியில்*)**

| வ எண் | மானிய எண் | விவரம் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு | மார்ச் மாத செலவு | மொத்தம் | மொத்த செலவில் மார்ச் மாத செலவின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 27 | தொழில்கள் முதலீடு மேம்பாடு மற்றும் வணிகத்துறை | 157.14 | 168.13 | 200.03 | 963.74 | 926.35 | 1,489.02 | *62.21* |
| 2. | 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 35.92 | 71.10 | 48.22 | 282.20 | 238.73 | 437.44 | *54.57* |

(*ஆதாரம்*: *VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது*)

மானிய எண். 43: பள்ளிக்கல்வித் துறை – பெருந்தலைப்பு 2202, 31 திட்டங்களின் செலவினம் மார்ச் 2024 மாதத்தில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

2023-24ம் ஆண்டின் மாதவாரியான வரவு மற்றும் செலவு விவரங்களை **விளக்கப்படம் 3.10** காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.10: மாதாந்திர வருவாய் வரவினம் மற்றும் செலவினம்**




(*ஆதாரம்*: *VLC தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது*)

## 3.7 எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்

மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதி, இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 267(2) மற்றும் 283(2)ல் வகை செய்யப்பட்டுள்ளதற்கு ஏற்ப, தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி சட்டம், 1954ன் கீழ் அமைக்கப்பட்டது. மாநில சட்டமன்ற ஒப்புதல் பெறப்படும் வரை ஒத்தி வைப்பது விரும்பத்தக்கதல்ல என கருதப்படும் எதிர்பாராத மற்றும் அவசரத்தன்மை கொண்ட செலவை மேற்கொள்ள மட்டுமே இந்நிதியிலிருந்து முன்பணங்கள் அளிக்கப்படலாம். அலுவல் முன்பணம் எனும் வகையிலான இந்நிதியின் மொத்த தொகை ₹150 கோடி ஆகும்.

எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் (CFA) எடுக்க அளிக்கப்பட்ட ஒப்புதல்கள் மற்றும் உள்ளபடியான பயன்பாடுகள் குறித்து 2019-20 முதல்

2023-24 வரையிலான காலகட்டத்தில் உள்ள விவரங்கள் **அட்டவணை 3.20ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.20: CFA ஒப்புதல்களின் விவரங்கள் (2019-20 முதல் 2023-24)**

| ஆண்டு | CFA ஒப்புதல்கள் | | CFA பயன்பாடு | | பயன்பாட்டின் விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை (₹கோடியில்) | எண்ணிக்கை | தொகை (₹கோடியில்) | எண்ணிக்கை | விழுக்காடு |
| 2019-20 | 30 | 40.01 | 27 | 33.69 | *90* | *84* |
| 2020-21 | 20 | 55.10 | 16 | 31.61 | *80* | *57* |
| 2021-22 | 04 | 17.15 | 03 | 12.26 | *75* | *71* |
| 2022-23 | 23 | 75.34 | 22 | 70.42 | *96* | *93* |
| 2023-24 | 11 | 47.84 | 10 | 47.44 | *91* | *99* |

*(ஆதாரம்: அரசு ஆணைகள்)*

நடப்பாண்டில் வெளியிடப்பட்ட CF ஆணைகள் மற்றும் ஆண்டு இறுதி நிலையிலான செலவு விவரங்கள் **இணைப்பு 3.21ல்** தரப்பட்டுள்ளன. ஒரு CF முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. ஏழு CFகள் முழுமையாக பயன்படுத்தப்பட்டன மற்றும் மீதமுள்ள மூன்று CF ஆணைகள் கிட்டத்தட்ட (பயன்பாட்டு விழுக்காடு 87.94 முதல் 99.97 வரை) பயன்படுத்தப்பட்டன என்பது **இணைப்பு 3.21**லிருந்து தெரியவருகிறது.

நடப்பாண்டில் 11 CF ஆணைகளின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையான ₹47.84 கோடியில், ₹47.44 கோடி செலவழிக்கப்பட்டு ₹0.41 கோடி செலவிடப்படாமல் இருந்தது.

அரசு, (நவம்பர் 2019) அடுத்த கூடுதல் மதிப்பீடுகள் வரை பொறுத்திருக்க இயலாத, மிகவும் இக்கட்டான மற்றும் அவசரத் தேவை உள்ள செலவினங்களுக்கான CF முன்பண வேண்டுகோளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியது. எனினும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் மாநில சிறுபான்மை ஆணையம், கல்லூரி மாணவர்களுக்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துவதற்கான ஆரம்ப கட்ட செலவுகளுக்காக எதிர்பாரா செலவின நிதியிலிருந்து ₹0.43 கோடி பெற்றது (ஆகஸ்ட் 2023) கண்டறியப்பட்டது. மேற்கூறிய திட்டம் புதிய திட்டமும் அல்ல ; அவசர செலவினமும் அல்ல. ஏனெனில் இது போன்ற போட்டிகள் பல கல்லூரிகளில் இத்துறையால், நன்கொடை ஏற்பாடுகள் மூலம் ஏற்கனவே (ஜூன் 2022) நடத்தப்பட்டுள்ளது.

## 3.8 தேர்ந்தெடுக்கப்பட்ட மானியங்கள் மீதான சீராய்வு

ஒவ்வொரு வருடமும் இரண்டு மானியங்களை விரிவான மதிப்பாய்வு செய்ய வேண்டும் என நிதி சான்றளிக்கும் தணிக்கை கையேட்டில் (Financial Attest Audit Manual) பத்தி 3.20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியொதுக்க கணக்குகளில் உள்ள கணிசமான சேமிப்புகள்/ மிகைகள்/ பிற முறைகேடுகள் அடிப்படையில் மானியங்கள் மதிப்பாய்விற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ச்சியான

**சேமிப்புகளை கருத்தில்கொண்டு, அவற்றில் பெருமளவு சேமிப்பு உள்ள மானியங்கள் மதிப்பாய்விற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.** 2023-24 **வரவு செலவு திட்ட முறைமையின் தரம் மற்றும் வரவு செலவு திட்ட செயலாக்கம் குறித்த ஆய்வுக்காக பள்ளி கல்வித் துறை (மானிய எண்** 43) **மற்றும் இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்) (மானிய எண்** 47) **ஆகியவை தணிக்கை மாதிரிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.**

## 3.8.1 பள்ளி கல்வி துறை

**தணிக்கை, தொடக்கக் கல்வி இயக்குநரகம், பள்ளி கல்வி இயக்குநரகம் மற்றும் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம் உள்ளிட்ட மூன்று இயக்குநரகங்களை வரவு செலவு திட்ட சீராய்வுக்காக தேர்வு செய்தது.** 2023-24 **ஆண்டில் மானிய எண்.** 43 **– பள்ளி கல்வி துறை** ₹41,212.96 **கோடி அளவிலான அதிகபட்ச ஒதுக்கீட்டை பெற்றிருந்தது.**

### *3.8.1.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2023-24**ம் ஆண்டில் மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டு உள்ளபடியான செலவின சுருக்கம் கீழே உள்ள அட்டவணை 3.21ல் தரப்பட்டுள்ளது.**

**அட்டவணை 3.21: மானிய எண் 43ன் கீழுள்ள வரவு செலவு திட்ட ஒதுக்கீடும் உள்ளபடியான செலவும்**

**(₹ *கோடியில்*)**

| செலவின் தன்மை | | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்பு(-)/ மிகை (+) | விழுக்காடு சேமிப்பு/மிகை | ஒப்படைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | I வருவாய் | 39,700.51 | 913.88 | 40,614.39 | 38,680.44 | (-) 1,933.95 | *(-) 4.76* | (-) 1,826.98 |
| | II மூலதனம் | 598.41 | 0.00 | 598.41 | 351.98 | (-) 246.43 | *(-) 41.18* | (-) 246.43 |
| | III கடன்கள் | 0.40 | 0.00 | 0.40 | 0.57 | 0.17 | *42.50* | (-) 0.10 |
| ***மொத்தம் அனுமதிக்கப்பட்டது* (A)** | | **40,299.32** | **913.88** | **41,213.20** | **39,032.99** | **(-) 2,180.21** | ***(-) 5.29*** | **(-) 2,073.51** |
| சாட்டியது | IV வருவாய் | 0.00* | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | *100.00* | 0.00 |
| | V மூலதனம் | 0.00 | 0.14 | 0.14 | 0.14 | 0.00 | *0.00* | 0.00 |
| ***மொத்தம் சாட்டியது* (B)** | | 0.00 | 0.14 | 0.14 | 0.14 | 0.00 | *100.00* | 0.00 |
| **பெரு மொத்தம் (A+B)** | | **40,299.32** | **914.02** | **41,213.34** | **39,033.13** | **(-) 2,180.21** | ***5.29*** | **(-) 2,073.51** |

* *அடையாள ஒதுக்கீடு* ₹13,000

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2023-24)

**அனுமதிக்கப்பட்ட செலவினத்தைப் பொறுத்த வரை, வருவாய் பிரிவில்** ₹1,933.96 **கோடி மற்றும் மூலதனப் பிரிவில்** ₹246.43 **கோடி (இணைப்பு 3.14 வரிசை எண் முறையே** 16 **மற்றும்** 34**ல் பட்டியலிடப்பட்டவாறு) சேமிப்பும், கடன்கள் கீழ்** ₹0.17 **கோடி மிகை செலவினமும் காணப்பட்டன. மேலும், நடப்பாண்டில் மானியத்தில் இறுதி சேமிப்பு** ₹2,180.21 **கோடி என்ற போதிலும் ஒப்படைப்பு செய்யப்பட்ட தொகை வெறும்** ₹2,073.51 **கோடி மட்டுமே. இந்த ஆண்டில் ஒட்டுமொத்த சேமிப்பு அட்டவணை 3.22ல் உள்ளவாறு மொத்த வரவு செலவு திட்டத்தில்** 5.29 **விழுக்காடு ஆகும்.**

**அட்டவணை 3.22: கடந்த நான்கு ஆண்டுகளின் ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2020-21 | 34,293.26 | 30,415.93 | (-) 3,877.33 | *11.31* |
| 2021-22 | 33,453.10 | 32,367.66 | (-) 1,058.44 | *3.24* |
| 2022-23 | 37,942.64 | 37,339.24 | (-) 603.40 | *1.59* |
| 2023-24 | 41,213.34 | 39,033.13 | (-) 2,180.21 | *5.29* |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

2022-23ல் ₹603.40 கோடியாக இருந்த சேமிப்பு 2023-24ல் ₹2,180.23 கோடியாக உயர்ந்தது.

**அட்டவணை 3.23ல்** கூறப்பட்டுள்ளவாறு, 2019-20 முதல் 2023-24 காலகட்டத்தில் பள்ளி கல்வி துறையில் மூலதன பிரிவின் கீழ் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒதுக்கீடு ₹910.58 கோடியாகும்.

**அட்டவணை 3.23: மூலதன பிரிவின் கீழ் ஆண்டுவாரியான ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | ஒப்படைக்கப் பட்ட தொகை | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 384.31 | 220.63 | (-) 163.68 | (-) 164.17 | *42.59* |
| 2020-21 | 335.10 | 189.51 | (-) 145.59 | (-) 145.53 | *43.45* |
| 2021-22 | 174.15 | 147.63 | (-) 26.53 | (-) 27.03 | *15.23* |
| 2022-23 | 544.96 | 217.54 | (-) 327.42 | (-) 327.42 | *60.08* |
| 2023-24 | 598.56 | 352.12 | (-) 246.43 | (-) 246.44 | *41.17* |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

மொத்த மானிய தொகையான ₹598.56 கோடியில் சேமிப்பு ₹246.44 கோடி. இது 41.17 விழுக்காடு ஆகும். மூலதன தலைப்பில் 2021-22 (COVID-19) ஆண்டைத் தவிர, கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்த மானியத்தில் 40 விழுக்காட்டிற்கும் மேலாக தொடர் சேமிப்புகள் காணப்பட்டன. இதற்கு பள்ளி கட்டடங்களை கட்டுவதில் ஏற்பட்ட தாமதமே முக்கிய காரணமாகும். இப்போக்கு, வரவு செலவு செயல்முறையில் உள்ள குறைபாட்டையும் திறனற்ற / திட்டங்களை செயல்படுத்தாத நிலையையும் குறிக்கிறது.

### *3.8.1.2 பள்ளி கல்வி துறையில் விரைவுபடுத்தப்பட்ட செலவு*

விரைவுபடுத்தப்பட்ட செலவினம் **இணைப்பு 3.20ல்** குறிப்பிடப்பட்டவாறு (வரிசை எண். 91 முதல் 104 வரை) 14 நேர்வுகளில் காணப்பட்டது.

### *3.8.1.3 பிற தணிக்கை குறித்துரைகள்*

- ஒன்பது திட்டங்களுக்கு ₹123.70 கோடி அளவுக்கு தேவையற்ற துணை ஒதுக்கீடுகள் , **இணைப்பு 3.5 (அ)** வரிசை எண். 43 முதல் 51 வரை பட்டியலிடப்பட்டவாறு, செய்யப்பட்டன. துணை ஒதுக்கீடுகளை அளிப்பது நிதித் துறையின் விருப்புரிமை என்று துறை பதிலளித்தது.

- எட்டு திட்டங்களில் ₹225.29 கோடி மிகை துணை ஒதுக்கீடுகள், **இணைப்பு 3.5 (ஆ)** வரிசை எண். 15 முதல் 22ல் குறிப்பிடப்பட்டவாறு அளிக்கப்பட்டன.

- இரண்டு திட்டங்களில் ₹49.71 கோடி குறைவான துணை மானியங்கள், **இணைப்பு 3.6** வரிசை எண். 28 மற்றும் 29ல் குறிப்பிடப்பட்டவாறு அளிக்கப்பட்டன.

- மூன்று பெருந்தலைப்புகளில் –(i) 2202 – பொது கல்வி (₹1,741.29 கோடி) (ii) 2225 – அட்டவணை இனத்தவர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலம் (₹70.04 கோடி) (iii) 4202 – கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு, மூலதன செலவினம் (₹50.26 கோடி) **இணைப்பு 3.15** வரிசை எண். 82 முதல் 84 வரை உள்ளவாறு பெருந்தொகைகள் ₹1,861.59 கோடி ஒப்படைப்பு செய்யப்பட்டன.

- கீழ்க்கண்ட இரு திட்டங்களில் வரவு செலவு ஒதுக்கீடு அதிகமாக செய்யப்பட்டிருந்த போதும் செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை:

  (i) 2202-01-101-AF – சமக்கிரக சிக்ஷா திட்டத்தின் கீழ் சிறப்பு பயிற்றுனர்களுக்கு மதிப்பூதியம் – துணை ஒதுக்கீடு (₹3.99 கோடி)

  (ii) 2202-02-105-UA – மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அமைத்தல் (₹45.68 கோடி)

- 2023-24ல் '2202-02-800-AT' 'சாரணர் ராஜ்ய புரஸ்கார் விருது திட்டத்தின் கீழ் மூல ஒதுக்கீடாக செய்யப்பட்டிருந்த ₹5.00 லட்சம் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமல் முழுமையாக திரும்பப்பெறப்பட்டது. தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்கத்திலிருந்து உரிய நிதியாண்டில் எவ்வித கருத்துருவும் பெறப்படவில்லை என்று துறை பதிலளித்தது. தேவை ஏதுமின்றி திட்டத்திற்காக துறை ஒதுக்கீடு செய்ததால், இம் மறுமொழி ஏற்கத்தக்கதன்று.

- மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (SCERT) யைப் பொறுத்த வரை, கடந்த மூன்று ஆண்டுகளாக, வரவு செலவு திட்ட பயன்பாடு ஒரு விழுக்காட்டை விட குறைவாக இருந்தது. 2023-24ல் ₹32.19 கோடி ஒதுக்கீட்டில், ₹14.70 லட்சம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இது வெறும் 0.46 விழுக்காடு மட்டுமே. துறை தன் பதிலில், வரவு செலவு ஒதுக்கீடு பணியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் செய்யப்பட்டது என்றும், அக்டோபர் 2023ல் மேற்கொள்ளப்பட்ட SCERT மறு சீரமைப்பு காரணமாக 199 பணியிடங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றும் தெரிவித்தது. இம் மறுமொழி ஏற்புடையதன்று; ஏனெனில் பணியிடங்களை ஒப்படைப்பு செய்யும் கருத்துருவை எதிர்நோக்கி, துறையானது குறைந்த ஒதுக்கீட்டை கேட்டு பெற்றிருக்க வேண்டும்.

- 10 கணக்கு தலைப்புகளில், ₹5.02 கோடி மிகை செலவினம் கீழே **அட்டவணை 3.24ல்** உள்ளவாறு, மேற்கொள்ளப்பட்டது.

**அட்டவணை 3.24: மானிய எண் 43ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மிகை செலவினம்**

(₹ கோடியில்)

| வ எண் | கணக்கு தலைப்பு | இறுதியாக திருத்தப்பட்ட மானியம் | உள்ளபடியான செலவு | மிகை |
|---|---|---|---|---|
| 1 | 2051.00.103.AC | 22.04 | 22.05 | 0.01 |
| 2 | 2202.01.101.AA | 720.17 | 720.24 | 0.07 |
| 3 | 2202.02.004.JJ | 0.78 | 0.83 | 0.05 |
| 4 | 2202.02.101.AA | 154.66 | 154.76 | 0.10 |
| 5 | 2202.02.105.AA | 2.12 | 2.28 | 0.16 |
| 6 | 2202.02.109.KI | 65.75 | 65.76 | 0.01 |
| 7 | 2202.02.110.AA | 4,014.98 | 4,019.53 | 4.55 |
| 8 | 2202.05.200.AA | 11.91 | 11.95 | 0.04 |
| 9 | 2205.00.105.AY | 8.11 | 8.13 | 0.02 |
| 10 | 2205.00.105.BA | 43.94 | 43.95 | 0.01 |
| | **மொத்தம்** | **5,044.46** | **5,049.48** | **5.02** |

ஊதிய நிலுவை தொகை, நீதிமன்ற வழக்குகள் போன்றவற்றால் கூடுதல் செலவினம் ஏற்பட்டதாக துறை மறுமொழி அளித்தது. மேலும், கூடுதல் செலவினம் செய்யப்படுவது வருங்காலத்தில் தவிர்க்கப்படும் என்று துறை உறுதி அளித்தது.

- கடன் தலைப்பு '7610.00.201.BH– செயலக ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் – பள்ளி கல்வி துறை' யின் கீழ் இறுதியாக திருத்தப்பட்ட மானியமான ₹0.30 கோடிக்கு மாறாக, ₹0.27 கோடி மிகை செலவினம் செய்யப்பட்டது.

## 3.8.2 இந்து சமய அறநிலையத் துறை

### *3.8.2.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2023-24ம் ஆண்டில் மானியம் 47ன் கீழ் மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டு உள்ளபடியான செலவின சுருக்கம் கீழே உள்ள **அட்டவணை 3.25ல்** தரப்பட்டுள்ளது:

**அட்டவணை 3.25: மானிய எண் 47ன் கீழுள்ள வரவு செலவு திட்ட ஒதுக்கீடும் செலவும்**

(*₹ கோடியில்*)

| | செலவின் தன்மை | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்பு(-)/ மிகை (+) | சேமிப்பின் விழுக்காடு | ஒப்படைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | I வருவாய் | 571.27 | 42.57 | 613.84 | 580.71 | (-) 33.13 | *5.40* | (-) 9.68 |
| | II மூலதனம் | 0.00* | 3.65 | 3.65 | 3.65 | 0.00 | *0.00* | 0.00* |
| மொத்தம் அனுமதிக்கப் பட்டது (A) | | **571.27** | **46.22** | **617.49** | **584.36** | **(-) 33.13** | ***5.37*** | **(-) 9.68** |
| சாட்டியது | IV வருவாய் | *6.00* | *2.00* | *8.00* | *8.00* | *0.00* | *0.00* | *0.00* |
| மொத்தம் – சாட்டியது (B) | | ***6.00*** | ***2.00*** | ***8.00*** | ***8.00*** | ***0.00*** | ***0.00*** | ***0.00*** |
| பெரு மொத்தம் (A+B) | | **577.27** | **48.22** | **625.49** | **592.36** | **(-) 33.13** | ***5.30*** | **(-) 9.68** |

* ₹1,000 *அடையாள ஒதுக்கீடு*

(*ஆதாரம்: நிதிபொதுக்க கணக்குகள்* 2023-24)

நடப்பாண்டில் சேமிப்பு ₹33.13 கோடியாக இருந்த போதிலும், ₹9.68 கோடி மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த சேமிப்பு 5.30 விழுக்காடாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மானியத்தின் ஒட்டுமொத்த சேமிப்பு வரவு செலவு ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்டு **அட்டவணை 3.26ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.26: கடந்த ஐந்து ஆண்டுகளின் ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

***(₹ கோடியில்)***

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2019-20 | 282.14 | 252.23 | (-) 29.61 | *10.49* |
| 2020-21 | 294.66 | 169.36 | (-) 125.30 | *42.52* |
| 2021-22 | 414.58 | 375.92 | (-) 38.66 | *9.33* |
| 2022-23 | 524.88 | 492.26 | (-) 32.62 | *6.21* |
| 2023-24 | 625.49 | 592.36 | (-) 33.13 | *5.30* |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

### *3.8.2.2 வருவாய் தலைப்பின் கீழ் தொடர் சேமிப்புகள்*

2019-20 முதல் 2023-24 வரையிலான ஐந்தாண்டுகளில், வருவாய் தலைப்புகளின் கீழ் தொடர் சேமிப்புகள் **அட்டவணை 3.27ல்** கூறப்பட்டுள்ளவாறு 5.33 விழுக்காடு முதல் 42.52 விழுக்காடு வரை இருந்தன.

**அட்டவணை 3.27: வருவாய் பிரிவின் கீழ் ஆண்டுதோறும் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

***(₹ கோடியில்)***

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | ஒப்படைப்பு செய்யப்பட்ட தொகை | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 282.14 | 252.53 | (-) 29.61 | (-) 29.96 | *10.49* |
| 2020-21 | 294.66 | 169.36 | (-) 125.30 | (-) 129.50 | *42.52* |
| 2021-22 | 414.58 | 375.92 | (-) 38.66 | (-) 22.96 | *9.33* |
| 2022-23 | 505.70 | 473.08 | (-) 32.62 | (-) 30.52 | *6.45* |
| 2023-24 | 621.84 | 588.71 | (-) 33.13 | (-) 9.68 | *5.33* |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

### *3.8.2.3 வருவாய் தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடுகளை திரும்பப் பெறுதல் மற்றும் அதிக சேமிப்புகள் குறித்து தணிக்கை குறித்துரைகள்*

➢ இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள 2235.02.102.BM – குழந்தைகளுக்கான 'கருணை இல்லங்களுக்காக ஒவ்வொரு வருடமும் ₹20.00 இலட்சம்' ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் மறு நிதியொதுக்கத்தின் போது இந்த ஒதுக்கீடுகள் முழுமையாக திரும்பப் பெறப்பட்டன. மேலும் 2019-20 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் ஒதுக்கீடுகள் பகுதியளவு ஒப்படைப்பு செய்யப்பட்டது. 2021-22ஆண்டு தொடர்பான செலவிற்கு அரசு அனுமதி

பெறப்படாததால் ₹3.56 இலட்சம் 2022-23ல் ஒப்படைப்பு செய்யப்பட்டது என துறை தெரிவித்தது. ஆனால், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை 2022-23 ஆம் ஆண்டிற்கான செலவுக்குத் தானே அன்றி முந்தைய கால கட்டத்தின் செலவுகளுக்காக அல்ல என்பதால் இம் மறுமொழி ஏற்புடையதல்ல.

- 2023-24ல் '2250.00.102.AH – கிராமப் பூசாரிகள் நல வாரியத்திற்காக' ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹17.00 இலட்சம், மறு நிதியொதுக்கத்தின் போது முழுமையாக திரும்பப் பெறப்பட்டது. இந்த தொகை, வாரியத்தின் பொறுப்பில் உள்ள துணை ஆணையரின் சம்பளத்திற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அந்தப் பதவி 2023-24 முழுவதும் காலியாக இருந்தது என்று தெரிவித்தது. ஆயின், டிசம்பர் 2015 லேயே வாரியத்தின் பதவிக் காலம் முடிந்த பின்னரும் துறை, தொடர்ந்து ஒதுக்கீடு செய்தது என்பதால் இம் மறுமொழி ஏற்புடையதல்ல. அத்துடன், 2017-18 மற்றும் 2018-19 ஆண்டுகளில் இத்தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.
- 2022-23ல் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான '2250.00.103.AE – பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத கோவில்களின் சேவைக்காக' ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹56.00 கோடி, நிர்வாக ஒப்பளிப்பு இல்லாத காரணத்தால் முழுமையாக திரும்பப் பெறப்பட்டது. 1000 வருட பழமையான கோயிலை புனரமைக்க 2023-24 ஆம் ஆண்டில் ₹60.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அப்பணிக்காக ₹18.15 கோடி (30.25 விழுக்காடு) மட்டுமே செலவிடப்பட்டது. இது மிகைப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட முன்மதிப்பீட்டைக் குறிக்கிறது.
- '2250.00.102.AK – மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய இடங்களுக்கு தலயாத்திரை மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்துக்களுக்கு மானியம்' வழங்கும் திட்டத்திற்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு ₹2.50 கோடி, ஆனால் மிகச் சிறிதளவு தொகையே பயன்படுத்தப்பட்டது.அதாவது, 2021-22ல் 0.64 விழுக்காடு, சற்றே அதிகரித்து 2022-23 மற்றும் 2023-24ல் முறையே 4.08 விழுக்காடு மற்றும் 24.16 விழுக்காடு ஆனது. முந்தைய ஆண்டுகளில் செலவினம் மிக மிகக் குறைவாக இருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டிலும் மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டதை உணர்த்துகிறது.

## 3.9 முடிவுரை

***மகளிருக்கான வரவு செலவு திட்டம்***

GBS பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் தயாரிக்கப்படவில்லை. மகளிருக்கான வரவு செலவு திட்டப் பிரிவுகள், எல்லா துறைகளிலும் உருவாக்கப்படாததால், முழுமையான வகையில் GBS தயாரிக்கப்படவில்லை.

***(பத்தி 3.3)***

### ஆதிதிராவிடர் சிறப்பு கூறு திட்டம் மற்றும் பழங்குடியினர் துணை திட்ட அறிக்கை

SCSP மற்றும் TSP இரண்டுமே பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பிலோ அல்லது எவ்வித தவறுகளும் விடுதல்களும் இன்றி அனைத்து திட்டங்களையும் உள்ளடக்கி முழுமையான முறையிலோ தயாரிக்கப்படவில்லை.

*(பத்தி 3.4)*

### தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம் / மறு நிதியொதுக்கம்

81 நேர்வுகளில் அளிக்கப்பட்ட மூல ஒதுக்கீடு முழுமையாக பயன்படுத்தப்படாததால், அவற்றுக்கு அளிக்கப்பட்ட மொத்த துணைநிலை மானியமான ₹1,078 கோடி தேவையற்றதாக ஆனது.

22 கணக்குத் தலைப்புகளில், (மூல மற்றும் துணை) ஒதுக்கீடுகளில் ₹1,102.17 கோடி பயன்பாட்டிற்கு இருந்தபோதிலும், மறுநிதியொதுக்க நிலையில் ₹89.07 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டது. இந்த நேர்வுகளில் நிகழ்ந்த மொத்த செலவான ₹1,005.38 கோடி ஏற்கனவே உள்ள ஒதுக்கீட்டிற்கு உட்பட்டே இருந்தது என்பதால் கூடுதல் ஒதுக்கீடு தேவையற்றதாக ஆனது.

ஒன்பது கணக்கு தலைப்புகளில், மூல வரவு செலவு திட்டத்திலோ அல்லது துணை மதிப்பீட்டிலோ எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படாமல் ₹42.42 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

64 நேர்வுகளில், மூல / துணை மதிப்பீடுகளில் அளிக்கப்பட்டிருந்த ₹38.62 கோடி மற்றும் முதல் மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்பட்ட ₹255.34 கோடி முழுமையாக இரண்டாவது மறு நிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டதால், செலவு பூச்சியம் ஆனது.

28 கணக்கு தலைப்புகளில்; மூல ஒதுக்கீடான ₹12,489.10 கோடி முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது.

*(பத்திகள் 3.6.1.3 மற்றும் 3.6.1.5)*

### சட்டபூர்வ அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட செலவினம்

ஒன்பது கணக்குத் தலைப்புகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல் ₹42.42 கோடி மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

*(பத்தி 3.6.1.4)*

### செலவிடப்படாத தொகை, திருப்பி ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும் தொடர் சேமிப்புகள்

41 நேர்வுகளில், பல்வேறு மானியங்களில், ₹100 கோடிக்கு மேலான சேமிப்புகள் மூலம் மொத்தம் ₹31,217.00 கோடி சேமிப்பு ஏற்பட்டது.

ஒப்படைப்பு செய்யப்பட்ட மொத்த தொகையான ₹33,439.82 கோடியில் ₹14,856.21 கோடி (நிகரம்) கடைசி நாளில் (31 மார்ச் 2024) திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இதில், ₹10 கோடிக்கு மேலாக 101 நேர்வுகளில்

₹15,543.60 கோடி ஒப்படைக்கப்பட்டது என்பது போதுமான நிதி கட்டுப்பாடு இல்லாததை குறிக்கிறது.

வருவாய் வகைப் பிரிவின் கீழ் 14 அனுமதிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் கடன் பிரிவின் கீழ் மூன்று அனுமதிக்கப்பட்ட மானியங்களில் ஏற்பட்ட ₹429.08 கோடி சேமிப்பு, ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

கடந்த ஐந்தாண்டுகளில், 24 மானியம்/ நிதியொதுக்கங்களில் மொத்த மானியத்தில் ஐந்து விழுக்காட்டிற்கு மேலான தொடர் சேமிப்புகள் இருந்தன.

*(பத்தி 3.6.1.5)*

***ஒதுக்கீட்டை மீறிய செலவினம்***

2023-24ல் நான்கு மானியங்களின் கீழ் ஒட்டு மொத்த ஒதுக்கீட்டையும் மீறி மிகை செலவினம் செய்யப்பட்டுள்ளது. இது முறைப்படுத்தப்பட வேண்டும்.

*(பத்தி 3.6.1.6(அ))*

***முறைப்படுத்தப்பட வேண்டிய கடந்தகால மிகை செலவு***

2019-20 முதல் 2023-24 வரையிலான கால கட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மிகை செலவினமான ₹968.12 கோடி இன்னமும் முறைப்படுத்தப்படவில்லை.

*(பத்தி 3.6.1.6(ஆ))*

***வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் அதனை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியான நிதி***

சில அறிவிப்புகளுக்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை மற்றும் சில அறிவிப்புகளில் ஒதுக்கீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவோ பயன்படுத்தப்படவில்லை என்பது வரவு செலவு திட்டம் 2023-24ஐ பகுப்பாய்வு செய்ததிலிருந்து தெரிய வந்தது. பெரும்பாலான அறிவிப்புகள் நடைமுறையில் உள்ள திட்டங்களின் தொடர்ச்சியாகவோ அல்லது நீட்சியாகவோ இருந்தன.

*(பத்தி 3.6.2.2)*

***விரைவு செலவினம்***

நிதியாண்டின் இறுதி மாதத்தில் செலவை விரைவுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, ₹ஒரு கோடிக்கு மேல் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட 142 துணை தலைப்புகளின் கீழ் ₹7,280 கோடி தொகை முழுவதும் மார்ச் 2024ல் செலவிடப்பட்டது. இரண்டு மானியங்களை பொறுத்தவரை 50 விழுக்காட்டிற்கும் மேலான செலவினம் மார்ச் மாதத்தில் செய்யப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின் பிரிவு 39ன் வழிவகைகளை மீறிய செயலாகும்.

*(பத்தி 3.6.2.3)*

## 3.10 பரிந்துரைகள்

*(i)* அனைத்து மகளிர் திட்டங்களை அடையாளம் காணவும், GBSஐ முழுமையான வடிவில் தயாரிக்கவும் அனைத்து துறைகளிலும் மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.

*(ii)* ஆதிதிராவிடர் துணை திட்டம் மற்றும் பழங்குடியினர் துணை திட்டம் ஆகியவற்றுக்கு மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதத்துக்கு ஏற்ப போதுமான ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் அந்த நிதி முழுவதும் பயன்படுத்தப்பட்டது குறித்தும் உறுதி செய்ய வேண்டும்.

*(iii)* ஒதுக்கீடு இல்லாமல் செலவு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு முறையான கட்டுப்பாடு முறையை உருவாக்க வேண்டும். தேவையற்ற துணை மானிய ஒதுக்கீடுகளை தவிர்க்க வேண்டும்.

*(iv)* எதிர்நோக்கப்பட்ட சேமிப்புகளை கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி ஒப்படைப்பதன் மூலம் நிதியை பிற வளர்ச்சி நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும். இதை உறுதி செய்யும் வகையில் வரவு செலவு திட்டம் மற்றும் கண்காணிப்பு முறையை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

*(v)* வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்படும் பெரிய கொள்கைகளுக்கும் / திட்டங்களுக்கும் தேவையான ஒதுக்கீடுகள் செய்வதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

*(vi)* கடைசி நேர ஒப்படைப்பு மற்றும் விரைவு செலவினத்தை தவிர்க்க அரசு பொருத்தமான கட்டுப்பாட்டு முறையை ஏற்படுத்த வேண்டும். IFHRMSன் வர்த்தக நுண்ணறிவு தொகுதி மூலம் செலவினங்களின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

# அத்தியாயம் IV

# கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

# அத்தியாயம் IV

## கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கை நடைமுறைகளின் தரம்

நிதி சார்ந்த துறை அளவிலான அறிக்கை நடைமுறைகளும், தொடர்புடைய விதிகள் மற்றும் செயல்முறைகளை பின்பற்றுவதும் சிறப்பான நிர்வாகத்திற்கு கணிசமான அளவில் பங்களிக்கின்றன. இவ்வகையில், நிதி விதிகள், நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை பின்பற்றுவதும், அவ்வாறு பின்பற்றுதலின் நிலை குறித்து உரிய நேரத்தில் தரத்துடன் அறிக்கை அளித்தலும் சிறந்த நிர்வாகத்திற்கான தன்மைகளுள் ஒன்று. இணக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான அறிக்கைகள் பயனுள்ளவையாகவும் செயல்படுத்தும் வகையிலும் இருந்தால், நுணுக்கமான திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் உள்ளிட்ட அரசின் அடிப்படை தலைமை பொறுப்புகளை நிறைவேற்ற அரசுக்கு உதவும்.

மாநில அரசின் பல்வேறு அதிகார அமைப்புகளால் அளிக்கப்பட்ட கணக்குகளின் தரம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைமைகளை பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் பின்பற்றாதது ஆகியவை மீதான குறிப்புகளை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

### அ. கணக்குகளின் முழுமை தொடர்பான காண்புரைகள்

### 4.1 மாநில அரசின் கடன்கள் தொகுப்பு நிதியில் வரவு வைக்கப்படவில்லை

மாநில அரசின் கடன்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 293 (1) பிரிவின்படி நிர்வகிக்கப்படுகின்றன. அரசு நிறுவனங்கள்/ பெருநிறுவனங்கள்/ வாரியங்கள் மூலம் பெறப்பட்ட கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கிறது. இந்த நிறுவனங்கள்/ பெருநிறுவனங்கள்/வாரியங்கள் மாநில வரவு-செலவு திட்டத்திற்கு வெளியே திட்டமிடப்பட்ட பல்வேறு மாநில திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியை சந்தை கடனாக பெறுகின்றன. இந்த நிறுவனங்களின் கடன்கள் இறுதியில் மாநில அரசாங்கத்தின் பொறுப்புகளாக மாறி, 'வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்' (OBB) என்று அழைக்கப்படுகிறது. வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களின் போக்கு, 2019-20 முதல் 2023-24 வரையிலான விவரங்கள், **அட்டவணை 4.1**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1 - வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் நிறுவனம் வாரியான நிலை

(₹ கோடியில்)

| முகமையின் பெயர் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | 463.09 | 411.63 | 373.03 | 308.71 | 257.26 |
| நீர் மற்றும் சுகாதாரம் திரட்டப்பட்ட நிதி – தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் வரையறுக்கப்பட்டது | 237.45 | 220.77 | 239.17 | 380.14 | 460.62 |
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 3.24 | 1.59 | 0.45 | 0.00 | 0.00 |
| தமிழ்நாடு நீர்வள பாதுகாப்பு மற்றும் நதிகள் மீட்பு கழகம் வரையறுக்கப்பட்டது | 0.00 | 34.43 | 629.31 | 1,609.69 | 3,201.22 |
| **மொத்தம்** | **703.78** | **668.42** | **1,241.96** | **2,298.54** | **3,919.10** |

(*ஆதாரம்: வரவு செலவு திட்ட ஆவணம் மற்றும் உரிய ஆண்டிற்கான நிதிக் கணக்குகள்*)

மேற்கண்ட முகமைகளைப் பொறுத்த வரை, அவற்றின் கடன்களுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகளை திருப்பி செலுத்த மாநில அரசு உறுதி அளித்துள்ளது. தமிழ்நாடு நீர்வள பாதுகாப்பு மற்றும் நதிகள் மீட்பு கழகத்தால் NABARD உள்கட்டமைப்பு மேம்பாட்டு உதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நதிகள் பாதுகாப்பு பணிகள் காரணமாக, அதன் வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் 2021-22 ஆண்டிலிருந்து கணிசமாக உயர்ந்து, 2023-24ல் முந்தைய ஆண்டை விட 100 சதவீதம் அதிகரித்தது.

மாநிலத்தின் வரவு - செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன் 2019-20 முதல் 2020-21 வரை ஓரளவு குறைந்து 2021-22 முதல் 2023-24 வரையிலான ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. மார்ச் 2024 முடிவில், OBB ₹3,919.10 கோடியாக இருந்தது. இதில் நடப்பாண்டில் பெறப்பட்ட ₹1,672.01 கோடியும் அடங்கும். இதில் தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்காக ₹51.45 கோடி இந்த ஆண்டு திருப்பி செலுத்தப்பட்டது (**பத்தி 2.6.1.1 அத்தியாயம் II**).

வரவு-செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் மற்றும் அத்தகைய கடன்களை முழுமையாகச் செலுத்துவதற்கான அரசாங்கத்தின் பொறுப்புகள் கூடுவதால், குறிப்பாக தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக வருவாய் மற்றும் நிதிப்பற்றாக்குறையை தொடர்ந்து சந்தித்து வருகின்ற நிலைமையில், மாநிலத்தின் நிதி ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், வரவு செலவு திட்டத்தில் வெளியிடாமல் அத்தகைய பொறுப்புகளை உருவாக்குவது கணக்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் முழுமை ஆகிய இரண்டிலும் கேள்விகளை எழுப்புகிறது.

## 4.2 வட்டி பெறும் வைப்புத்தொகைகள் தொடர்பான வட்டி பொறுப்புகளை தீர்வு செய்யாமை

கணக்கு தலைப்புகள் 8338 (உள்ளாட்சி நிதிகளின் வைப்புத்தொகைகள்) மற்றும் 8342 (பிற வைப்புத்தொகைகள்) ஆகியவற்றின் கீழ் பொறுப்புகளை

எதிர்கொள்ள 2049-60-101 (வைப்புத்தொகைகள் மீதான வட்டி) என்ற பெருந்தலைப்பின் கீழ் வட்டி பெறும் வைப்புத்தொகைகளுக்கு வட்டி வழங்க நிதி ஒதுக்கி, அதனை செலுத்தும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

2023-24ல் 8338 மற்றும் 8342 என்ற பெருந்தலைப்புகளின் கீழ் இருந்த மொத்த வைப்புத் தொகை ₹78,139.17 கோடி மற்றும் அந்த வைப்புத்தொகைகள் மீதான வட்டியாக ₹341.26 கோடி, 31 கணக்கு தலைப்புகளின் கீழ் (வைப்புத் தொகையில் 0.44 விழுக்காடு) செலுத்தப்பட்டது; இந்த ஆண்டு, 10 முகமைகள் அரசு கணக்கில் செலுத்திய வைப்புத்தொகைக்கு வட்டி வழங்குவதற்காக முதற்கட்டமாக ₹9.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இத்தொகை முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்பப் பெறப்பட்டது. இதன் மூலம் வைப்புத் தொகைகளுக்கான (**இணைப்பு 3.11ல்** விவரிக்கப்பட்டுள்ளது) வட்டி வழங்கும் பொறுப்புறுதிகள் ஒத்திவைக்கப்பட்டன.

## 4.3 மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு நேரடியாக நிதி விடுவிப்பு

பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு கணிசமான நிதியை மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு[1] நேரடியாக விடுவிக்கிறது. அவ்வாறான நிதி தொடர்பாக, கணக்குகளுக்கான தலைமை கட்டுப்பாட்டாளரின் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) இணைய தளத்தில் உள்ள விவரங்கள், மாநில நிதி கணக்குகள் - பகுதி IIன் இணைப்பு VIல் தரப்பட்டுள்ளன. இந்நிதிகள் மாநில வரவு - செலவு திட்டம்/மாநில கருவூல அமைப்பு வழியாக விடுவிக்கப்படுவதில்லை.

பல்வேறு மத்திய திட்டங்களை செயல்படுத்துவதற்காக 2023-24ம் ஆண்டில் மத்திய அரசு ₹30,085.53 கோடி தொகையை நேரடியாக மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு மாற்றம் செய்தது.

இந்திய அரசாங்கத்தின் தரவுகளின்படி, மாநில திட்ட செயலாக்க முகமைகளுக்கு 2019-20 முதல் 2023-24 காலகட்டத்தில் நேரடியாக நிதி வழங்கப்பட்டதன் போக்கு அதிகரித்து நடப்பாண்டில் ₹2,268.99 கோடி உயர்ந்துள்ளதை **விளக்கப்படம் 4.1** காட்டுகிறது.

[1] மாநில திட்ட செயலாக்க முகமை என்பது மாநிலத்தில் குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்து நிதியைப் பெற மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா அமைப்பு. உட்பட ஏதேனும் ஒரு அமைப்பு/நிறுவனத்தை உள்ளடக்கியதாகும்.




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான மாநில நிதிக் கணக்குகள்*)

2023-24ம் ஆண்டில் மத்திய துறை திட்டங்கள் மற்றும் மத்திய நிதி உதவி திட்டங்களுக்காக தலா ₹100 கோடி அளவிற்கு மேலாக நிதி பெற்ற முகமைகளின் விவரங்கள் **அட்டவணை 4.2ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2: ₹100 கோடி அளவிற்கு மேலான நிதியை மத்திய அரசிடமிருந்து நேரடியாக பெற்ற முகமைகள்**

| வ. எண் | மத்திய அரசின் திட்டங்கள் | மாநில செயல்படுத்தும் முகமை | 2023-24ல் மத்திய அரசு விடுவித்த தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (அ) மத்திய துறை திட்டங்கள் | | |
| 1 | தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட உணவு தானியங்கள் கொள்முதலுக்கான உணவு மானியம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | 7,072.53 |
| 2 | பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி | வேளாண்மை துறை | 1,441.32 |
| 3 | தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாடு திட்டம் | தமிழ்நாடு மாநில AIDS கட்டுப்பாடு சங்கம் | 114.58 |
| | (ஆ) மத்திய நிதியுதவி திட்டங்கள் | | |
| 1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக உத்தரவாதத் திட்டம் | மாநில வேலைவாய்ப்பு உறுதி நிதி, தமிழ்நாடு | 10,254.44 |
| 2 | ஜல் ஜீவன் திட்டம் (JJM) / தேசிய ஊரக குடிநீர் திட்டம் | தமிழ்நாடு மாநில நீர் மற்றும் சுகாதார இயக்கம் | 2,617.10 |
| 3 | ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) | தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் | 691.28 |
| 4 | தேசிய கோகுல் திட்டம் | தமிழ்நாடு கால்நடை மேம்பாடு முகமை | 109.96 |

(*ஆதாரம்: மாநில நிதிக் கணக்குகள் 2023-24*)

இந் நிதிகள் மாநில வரவு - செலவு திட்டம்/மாநில கருவூல அமைப்பு மூலம் விடுவிக்கப்படாததால், இவை பெறப்படுவதும் செலவிடப்படுவதும் வருடாந்திர நிதி கணக்குகளில் சேராது. ஆகையால், மாநிலத்தின் வரவு செலவுகள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட பிற நிதி மாறுபாடுகள்/ அளவுருக்கள் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களை முழுமையாக காட்டாது.

## ஆ . வெளிப்படைத்தன்மை தொடர்பான பிரச்சினைகள்

## 4.4 தொகு நிதிக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மின்சார வரி

**மாநில அரசால் TANGEDCOவிடமிருந்து குறைவாக பெறப்பட்ட மின்சார வரி.**

தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம், 2003 பிரிவு 3ன் கீழ், TANGEDCO (சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்) மின்சார வரியை எரிசக்தி கட்டணங்களுடன் வசூலித்து, வரியை அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும். முந்தைய ஆண்டின் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, 2019-2023 கால கட்டத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) நுகர்வோரிடமிருந்து மின்சார வரியாக ₹5,493.40 கோடி வசூலித்ததில், குறைவாக செலுத்திய ₹4,264.61 கோடியை, வசூல் கட்டணத்தை (₹142.16 கோடி) சரிகட்டிய பின்னர் தொகுப்பு நிதியில், இந்த ஆண்டு செலுத்தியது. எனினும் நடப்பாண்டில், ₹1,985.03 கோடி வசூலித்த TANGEDCO (வசூல் கட்டணமாக ₹19.85 கோடி கழித்த பின்னர்) ₹1,457.75 கோடி மட்டுமே செலுத்தியது. 31 மார்ச் 2024 நிலவரப்படி, தொகு நிதியில் செலுத்தப்படாத மின்சார வரி ₹507.43 கோடியாக (**அட்டவணை 4.3**) இருந்தது.

**அட்டவணை 4.3: வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்ட மின்சார வரி பற்றிய விவரங்கள்**

*(₹ கோடியில்)*

| ஆண்டு | வசூலிக்கப்பட்ட தொகை | வசூல் கட்டண தொகை | வசூல் கட்டண தொகையை கழித்த பின் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டிய தொகை | அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை | வரவு வைக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 1,266.10 | --* | 1,266.10 | 1,266.10 | -- |
| 2020-21 | 1,102.09 | --* | 1,102.09 | 1,102.09 | -- |
| 2021-22 | 1,387.73 | 124.79 | 1,262.94 | 1,262.94 | -- |
| 2022-23 | 1,737.48 | 17.37 | 1,720.11 | 1,720.11 | -- |
| 2023-24 | 1,985.03 | 19.85 | 1,965.18 | 1,457.75 | 507.43 |
| **மொத்தம்** | **7,478.43** | **162.01** | **7,316.42** | **6,808.99** | **507.43** |

* ஜூன் 2003 முதல் ஜூன் 2021 வரையிலான காலகட்டத்திற்கான. வசூல் கட்டணம் மே 2021 மற்றும் ஜூன் 2021ல் சரிகட்டப்பட்டது.

(*ஆதாரம்: கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை - II)-ஆல் அளிக்கப்பட்ட விவரங்கள்*)

TANGEDCO, வரி தொகையை தொகுப்பு நிதியில் செலுத்துகின்ற கட்டாய நடைமுறையை பின்பற்றாததை தணிக்கை கண்டறிந்தது.

## 4.5 பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு I-1991 பிரிவு 210(A)ன்படி, மானிய உதவிக்கான பயன்பாட்டுச் சான்றிதழ்கள் (UC) மாநில கணக்காயரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கான கெடு நாள், மானியம் தரப்பட்ட

செலவினத்தின் தன்மையை பொறுத்து நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒப்பளிப்பு செய்யும் அதிகாரி, மானியம் பெறும் நிறுவனம், விதிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் விவர அறிக்கைகளை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை ஒப்பளிப்பு ஆணையிலேயே விதிக் கூறு மூலம் அறிவுறுத்த வேண்டும். இருப்பினும், மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட எந்த அரசு ஆணை/ஒப்பளிப்பு ஆணைகளிலும், பயன்பாட்டுச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதற்கான எந்த காலக்கெடுவும் குறிப்பிடப்படாததால், பயன்பாட்டு சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு அதிகபட்சமாக 12 மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டது. இக்காலக் கெடு, MSO A&E தொகுதி I பத்தி 16.8(i)ன் படி செலவினம் மேற்கொள்ளப்பட்ட மாதத்திலிருந்து கணக்கிடப்படும். ஒப்பளிப்பு அதிகாரியால் அவ்வாறு காலக் கெடு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்றால், மானியமானது வழங்கப்பட்ட நோக்கத்திற்காக, நியாயமான காலத்திற்குள் (சாதாரணமாக மானிய ஒப்பளிப்பு கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள்) செலவிடப்பட வேண்டும்.

MSO (A&E) அத்தியாயம் 16ல் உள்ள விதிமுறைகளின் படி, கட்டுப்பாடுகளுடன் கூடிய உதவி மானியம் மற்றும் / அல்லது மானியம் பெறுபவரால் பெறப்பட்ட ஒப்பளிப்பின் படி, மானியத்தை ஒப்பளிப்பு செய்த அதிகாரிக்கு, மானியம் பெறப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்கள் அல்லது மேற்கொண்டு (அதே நோக்கத்திற்காக) மானியம் பெற விண்ணப்பம் செய்வது, இவற்றில் எது முதல் நிகழ்வோ, அதற்குள் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும். பயன்பாட்டு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனில், நிதி கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மானியத் தொகை பயனாளிகளைச் சென்று சேராமல் இருக்க வாய்ப்புகள் உள்ளன.

எனினும், நிதி கணக்குகள் 2023-24ன்படி, ₹2,805.94 கோடி தொகைக்கான 111 பயன்பாட்டு சான்றிதழ்கள் நிலுவையில் உள்ளன. நிலுவை குறித்த துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.1**ல் தரப்பட்டுள்ளன. பயன்பாட்டு சான்றிதழ்கள் அளிப்பதில் நிலுவை குறித்த ஆண்டுவாரியான சுருக்கம் **அட்டவணை 4.4**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4: நிலுவையிலுள்ள பயன்பாட்டு சான்றிதழ்களின் ஆண்டுவாரியான விவரம்**

| ஆண்டு | பயன்பாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | நிலுவை தொகை (₹ கோடியில்) |
|---|---|---|
| 2017-18 | 2 | 9.78 |
| 2018-19 | 2 | 6.05 |
| 2020-21 | 2 | 5.81 |
| 2021-22 | 11 | 168.65 |
| 2022-23 | 26 | 197.70 |
| 2023-24 | 68 | 2,417.95 |
| **மொத்தம்** | **111** | **2,805.94** |

(*ஆதாரம்: நிதிக் கணக்குகள் மீதான குறிப்புகள்*) (2019-20ல் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவை ஏதும் இல்லை)

2022-23 ஆம் ஆண்டுக்கு முன்பு, மருத்துவக்கல்வி & ஆராய்ச்சி இயக்குநரகம் (DME& R) சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகம் (CMA) சென்னை என்ற இரு துறைகளுக்கு வழங்கப்பட்ட மானியங்களுக்கான நிலுவையில் உள்ள UC குறித்து சோதனை ஆய்வு மேற்கொண்டதில் பின்வருவன கண்டறியப்பட்டன:

## 4.5.1 நகராட்சி நிர்வாக ஆணையரகம் (CMA)

₹188.22 கோடி உதவி மானியம் அளிக்கப்பட்டதில் (மார்ச் 2024), ₹45.86 கோடி தொகைக்கு மூன்று பயன்பாட்டுச் சான்றிதழ்கள் கீழே விவரிக்கப்பட்டவாறு (**அட்டவணை 4.4 (அ)**) நிலுவையில் உள்ளன.

**அட்டவணை 4.4 (அ) உதவி மானியங்களுக்கான (GIA) நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள்**

*(₹கோடியில்)*

| வ எண் | நோக்கம் | GIA மொத்தம் / விடுவிக்கப்பட்ட மாதம் / சமர்ப்பிக்கப்பட்ட UC | விடுவிக்கப்பட்ட/ பயன்படுத்தப்பட்ட தொகை | பயன்படுத்தப்பட வேண்டிய/ அரசுக்கு செலுத்தப்-படவேண்டிய மீதத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | * (i) பெருநகர சென்னை மாநகராட்சியில் விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாய்க்கு குறுக்கே பாலம் கட்டுதல் (கைவிடப்பட்டது) | 89.35 (பிப்ரவரி 2021) UC சமர்ப்பிக்கப்பட்டது 67.43 | 4.81 (விடுவிக்கப்–பட்டது பயன்படுத்தப்–படவில்லை) | 4.81 (செலுத்தப்பட வேண்டிய தொகை) |
| | ** (ii) கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேட்டுப்பாளையம் தெருவில் இருந்து சத்தி சாலை வரை உள்ள சங்கனூர் பள்ளம் மேம்பாட்டுப் பணிகள் (முன்மொழியப்பட்ட 2300மீ அளவுக்கு மாறாக 1800மீ நிறைவு செய்யப்பட்டது) | | 49.96 (விடுவிக்கப்–பட்டது) 28.66 (பயன்படுத்தப்–பட்டது) | 21.3 (UC சமர்ப்பிக்கப்படவில்லை) |
| | *** (iii) இரண்டு பணிகள் அதாவது, தேனி அல்லி நகரம் நகராட்சியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னி குயிக் பேருந்து நிலையத்தில் உள்ள புறநகர் பேருந்து நிலையம் பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகியவற்றுக்கு மாற்றுப் பாதை அமைத்தல் | | 1.88 (விடுவிக்கப்–பட்டது) 1.26 (பயன்படுத்தப்–பட்டது) | 0.62 (பணிகள் கைவிடப்பட்டதால் செலுத்தப்பட வேண்டிய தொகை) |
| 2 | உடுமலைப் பேட்டை நகராட்சி நூற்றாண்டு விழா (எட்டு மேம்பாட்டு பணிகள்) | 48.87 (டிசம்பர் 2020) UC சமர்ப்பிக்கப்பட்டது 27.11 | 48.87 (மார்ச் 2021ல் விடுவிக்கப்–பட்டது) | 8.89 (செலுத்தப்பட வேண்டிய தொகை) 12.87 (UC சமர்ப்பிக்கப்படவில்லை) |
| 3 | போடிநாயக்கனூர் நகராட்சி நூற்றாண்டு விழா (21 மேம்பாட்டுப் பணிகள்) | 50.00 (டிசம்பர் 2020) UC சமர்ப்பிக்கப்பட்டது 47.83 | 50.00 (விடுவிக்கப்–பட்டது) | 0.98 (செலுத்தப்பட வேண்டிய தொகை) 1.19 (பணிகள் முடிந்த பின்னரும் UC சமர்ப்பிக்கப்படவில்லை) |
| | **மொத்தம்** | **188.22** | | |

வரிசை எண். 1 - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (ULBs) மேம்பாட்டுப் பணிகளுக்காக உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மானியத்தில் மேற்கொள்ளப்பட்ட மூன்று பணிகளின் நிலை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு:

* இத்திட்டம் கைவிடப்பட்டு, அந்த நிதி, மற்றொரு திட்டத்திற்கு திருப்புகை செய்யப்பட்டது. (சென்னை வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்). இப்பணியும், நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. இதனால் பயன்படுத்தப்படாத மானியத் தொகையை (₹4.81 கோடி) துறை, தானே வைத்துக்கொண்டது. UC நிலுவையில் உள்ளது.

** ₹28.66 கோடி செலவினத்துடன் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பிப்ரவரி 2022ல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீதத் தொகையான ₹21.30 கோடிக்கான UC, பணி முடிவுறாததால் நிலுவையில் உள்ளது.

*** நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக, திட்டம் கைவிடப்பட்டது. மேலும் விடுவிக்கப்பட்ட தொகை (₹0.62 கோடி) அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை.

வரிசை எண். 2 – உடுமலைப்பேட்டை நகராட்சியில்,

- ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணிக்காக முன்மொழியப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கும் (₹39.98 கோடி) விடுவிக்கப்பட்ட மானியத்திற்கும் (₹48.87 கோடி) இடையிலான வேறுபாடு ₹8.89 கோடி. இது நாள் வரை இத்தொகை அரசுக் கணக்கில் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.
- நடைபெற்று வரும் பணிகளுக்கான UCக்கள் (₹ 12.87 கோடி) இன்னமும் நிலுவையில் உள்ளன.

வரிசை எண். 3 - போடி நாயக்கனூர் நகராட்சியில், செலவழிக்கப்படாத தொகையான ₹0.98 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை. நிறைவு பெற்ற பணிகளுக்கான ₹1.19 கோடி தொகைக்கான UCக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

### 4.5.2 மருத்துவ கல்வி & ஆராய்ச்சி இயக்குநரகம்

மருத்துவ கல்வி & ஆராய்ச்சி (DME&R) இயக்குநரகத்தில் நிலுவையில் உள்ள ₹4.34 கோடி மதிப்பிலான பயன்பாட்டு சான்றிதழ்கள் குறித்து சோதனை ஆய்வு மேற்கொண்டதில், நெருப்பு காயங்கள் தடுப்பு மற்றும் மேலாண்மை தேசிய திட்டத்தின் (NPPMBI) உதவி மானியத்தில் (₹6.24 கோடி) கீழ்க்கண்ட முரண்பாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) செலவழிக்கப்படாத தொகை ₹0.76கோடியை (PWD தொடர்பானது) துறை, நேரடியாக இந்திய அரசு கணக்கில் வரவு வைத்தது. ஆனால் செலவழிக்கப்படாத தொகையானது, மானியம் விடுவிக்கப்படும்போது பின்பற்றப்படும் அதே வழிமுறைகளை பின்பற்றி (நிதி கணக்குகள் 2016-17) மாநில கணக்காயர் மூலமாகத்தான் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் நிதி கணக்குகளிலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனவே, மாநில அரசின் பங்கு (₹0.51 கோடி) மற்றும் இந்திய அரசின் பங்கு (₹0.76 கோடி) இரண்டும் சேர்ந்து செலவழிக்கப்படாத தொகை ₹1.27 கோடி (PWD தொடர்பானது) சிறு தலைப்பு 911ன். கீழ் 'கழிக்க: அதிகப் படியான தொகை மீளப்பெறுதல்' என்று பதிவு செய்யப்பட வேண்டும். இந்திய அரசின் பங்கு MH & FW கணக்கில் மாநில கணக்காயர் மூலம் வரவு வைக்கப்பட வேண்டும்.

(ஆ) செலவழிக்கப்படாத தொகையான ₹0.93 கோடி (PWD மற்றும் TNMSC தொடர்பானது) துறையால் அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

பயன்பாட்டுச் சான்றிதழ்களை அளிப்பதற்கான காலக்கெடு குறிப்பிடப்பட்ட போதிலும் மேற்கண்ட மானியங்களுக்கான பயன்பாட்டுச்சான்றிதழ் நிலுவையில் உள்ளன. பயன்பாட்டு சான்றிதழ்கள் சமர்ப்பிக்காதது,

பொறுப்புடைமையை உறுதி செய்வதற்கான விதிகளை துறை அலுவலர்கள் பின்பற்றத் தவறியதை காட்டுகிறது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும். பயன்பாட்டுச் சான்றிதழ்கள் நிலுவையில் இருப்பது, நிதியை தவறாகப் பயன்படுத்தும் அபாயம் நிறைந்ததாக உள்ளது. பயன்பாட்டுச் சான்றிதழ்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதை வலியுறுத்துவதுடன் உறுதி செய்யவும் வேண்டும்.

## 4.6 மானிய உதவி பெறும் நிறுவனங்களை 'மற்றவை' என வகைப்படுத்தியமை

மாநில அரசு பல்வேறு அமைப்புகளுக்கு உதவி மானியம் வழங்குகின்றது. கணக்குகளின் வெளிப்படைத்தன்மைக்காக நிதி வழங்கப்பட்ட நிறுவனத்தின் தன்மை மற்றும் அதன் விவரங்களை அளிப்பது முக்கியமானதாகும்.

தமிழ்நாடு அரசின் 2023-24 நிதிக் கணக்குகளின் படி, உதவி மானியம், மாநிலத்தின் மொத்த செலவினத்தில் 23.24 விழுக்காடாக இருந்தது மற்றும் மொத்த உதவி மானியமான ₹83,446.82 கோடியில், 54 திட்டங்களை 'மற்றவை' என வகைப்படுத்தி, ₹63,458.53 கோடி (76.05 விழுக்காடு) விடுவிக்கப்பட்டுள்ளது (விரிவான தலைப்பு 090). இந்த ₹63,458.53 கோடியில், ₹2,244.18 கோடி, செலவினத்தின் கீழ் 'மற்றவை' என வகைப்படுத்தி (துணை-விரிவான தலைப்பு - 009) அளிக்கப்பட்டுள்ளது. இது, கணக்குகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் இந்த மானியத்திற்கு வழங்கப்படும் பயன்பாட்டுச் சான்றிதழ்களை கண்காணிப்பதை வெகுவாக பாதிக்கும்.

கடந்த ஐந்தாண்டுகளில், அதாவது 2019-20 முதல் 2023-24 வரை, வழங்கப்பட்ட மொத்த உதவி மானியத்தில் 'மற்றவை' என வகைப்படுத்தி வழங்கப்பட்ட மானியத்தின் விழுக்காடு போக்கு **விளக்கப்படம் 4.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.2: 'மற்றவை' என வகைப்படுத்தப்பட்ட மானிய உதவிப் பெறும் நிறுவனங்கள்**




(*ஆதாரம்: உரிய ஆண்டிற்கான மாநில நிதிக் கணக்குகள்*)

## 4.7 சரிக்கட்டடப்படாத தற்காலிக முன்பணங்கள்

பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ள, எதிர்பாராசெலவுக்கான சுருக்கப்பட்டி மூலம் நிதியை பெற்று, பின்னர் விரிவான செலவுப்பட்டிகள் மூலம் அதை சரிக்கட்டும் முறையை தமிழ்நாடு அரசு பின்பற்றுவதில்லை. மாறாக, தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு, விதி 99ன் கீழ் தற்காலிக முன்பணங்களை பெற, பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது; விரிவான செலவுப்பட்டிகள் மற்றும் செலவு சீட்டுகளை அவர்கள் கூடியவிரைவில் அளிப்பதன் மூலம் முன்பணங்கள் சரிக்கட்டப்பட வேண்டும். துறை அலுவலர்களால் பெறப்பட்ட இத்தகைய தற்காலிக முன்பணங்கள், எடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சரிகட்டப்பட வேண்டும்.

31 மார்ச் 2024 நிலையில், பல்வேறு பணம் பெற்று வழங்கும் அதிகாரிகளால் (DDOs) பெறப்பட்ட ₹216.46 கோடி மதிப்புடைய 383 தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்தன. இதில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்த முன்பணங்கள் ₹58.44 கோடி (**அட்டவணை 4.5ன்** கீழ் வரிசை எண் 1 மற்றும் 2ல் கொடுக்கப்பட்டுள்ளது).

நிலுவையில் உள்ள ₹216.46 கோடி மொத்த தற்காலிக முன்பணங்களில், அரசு தேர்வு இயக்குநரகம் மற்றும் வருவாய் துறை – **CRA** ஆகியவற்றில் முறையே ₹64.23 கோடி (29.67 விழுக்காடு) மற்றும் ₹3.70 கோடி (1.71 விழுக்காடு) நிலுவையில் உள்ளன.

தற்காலிக முன்பணங்கள் சரிக்கட்டப்படாதது பற்றி தொடர்ந்து மாநில நிதி நிலை மீதான தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்களின் எண்ணிக்கை 2021-22ல்

1,649 என்பதிலிருந்து 2022-23ல் 693 மற்றும் 2023-24ல் 383 ஆக குறைந்தது, அவற்றுக்குரிய தொகை 2021-22ல் ₹317.81 கோடியிலிரு 2022-23ல் ₹296.97 கோடி மற்றும் 2023-24ல் ₹216.46 கோடி ஆக குறைந்தது.

சரிக்கட்டப்படாமல் நிலுவையில் இருந்த முன்பணங்களின் கால வாரியான நிலுவை விவரம் **அட்டவணை 4.5ல்** தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.5: நிலுவையில் இருந்த முன்பணங்களின் கால வாரியான விவரம்**

| வரிசை எண் | நிலுவை | முன்பணங்களின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பத்து ஆண்டுகளுக்கு மேல் | 4 | 0.93 |
| 2 | ஐந்து ஆண்டுகளுக்கு மேல், பத்து ஆண்டுகளுக்குள் | 16 | 57.51 |
| 3 | ஒரு ஆண்டுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்குள் | 79 | 123.14 |
| 4 | ஒரு ஆண்டுக்குள் | 284 | 34.88 |
| **மொத்தம்** | | **383** | **216.46** |

*(ஆதாரம்: PAG (A&E) அலுவலகத்தால் அளிக்கப்பட்ட விவரங்கள்)*

நிலுவையிலுள்ள கணிசமான முன்பணங்களை, சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை முனைப்புடன் அமல்படுத்துவதில், துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை இது சுட்டிக்காட்டுகிறது. இந்நேர்வுகளில், உரிய நிதி ஆண்டின் முடிவிற்குள் செலவு செய்யப்பட்டது என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. முன்பணங்கள் பெறப்பட்டு பின் சரிக்கட்டப்படாதது, பொது நிதியின் விரயம் /கையாடல்/தவறுகள் போன்றவற்றுக்கும் தவறான வழக்கங்களுக்குமான வாய்ப்பை அதிகமாக்குகின்றது. இது சம்பந்தமாக தவறு செய்யும் DDOக்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

## 4.8 தன்வைப்பு கணக்குகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு பிரிவு 269ன்படி, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு, தன்வைப்பு கணக்குகளை (PD) துவக்கி அவற்றில் தொகைகளை செலுத்த தமிழக அரசுக்கு அதிகாரம் உள்ளது. இக்கணக்குகளை அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மாநில அரசிடமிருந்து பெறப்படும் ஒப்பளிப்புகளின் அடிப்படையில் கையாளுகின்றனர், AG (A&E) தொகுநிதியிலிருந்து தொடர்புடைய தன்வைப்பு கணக்கிற்கு நிதி மாற்றம் செய்ய பகுதி III - பொது கணக்கின் கீழ் அனுமதி வழங்குகிறார். இக்கணக்குகள் அந்த ஆண்டின் இறுதியில் முடிக்கப்பட வேண்டும்.

தன்வைப்பு கணக்கிற்கு (8443-00-106-AA) மாற்றப்படும் பணம் எந்த பெருந்தலைப்புகளில் இருந்து மாற்றம் செய்யப்பட்டதோ அவற்றின் கீழ் இறுதி செலவாக கருதப்படுகின்றன.

2023-24ல் மாநில தொகுநிதியிலிருந்து ₹721.60 கோடி (83 கணக்குகள்) தன்வைப்பு கணக்குகளுக்கு மாற்றப்பட்டது. நிதியாண்டின் இறுதியில் அனைத்து 83 கணக்குகளும் முடிக்கப்பட்டன. மேலும், ஐந்து தன்வைப்பு

கணக்குகளில், முந்தைய ஆண்டு, தவறான வகைப்படுத்தல் காரணமாக நிலுவையில் இருந்த ₹1,154 கோடி சரிசெய்யப்பட்டு அக் கணக்குகள் இந்த ஆண்டு முடித்து வைக்கப்பட்டன.

## 4.9 பணமாக்கப்படாத காசோலைகளின் பெருக்கம் மற்றும் மின்னணு இசைவு சேவையிலிருந்து திரும்பப் பெறப்பட்டவை

காசோலைகள் வழங்கப்பட்ட மாதத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அவை பணமாக்கப்படாவிட்டால், அக்காசோலைகள் காலாவதி ஆனது பற்றி பணம் பெறுபவர்களுக்குத் தெரிவித்து, காலாவதியான காசோலைகளைத் திரும்ப ஒப்புவித்து புதிய காசோலைகள் பெற்றுக்கொள்ளுமாறு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (PAO) / மாவட்ட கருவூல அதிகாரி (DTO) அறிவுறுத்த வேண்டும் என PAO கையேடு பத்தி 92 (iii) மற்றும் தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பின் விதி 49 குறிப்பிடுகின்றன. பணம் பெறுபவர்களிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை எனில், காசோலை ரத்து செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட தலைப்பின் கீழ் செலவினத்தை சரிசெய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

### 4.9.1 பணமாக்கப்படாத காசோலைகள்

ஏழு PAOக்கள் அளித்த, பணமாக்கப்படாத காசோலைகளின் விவரங்களின்படி, ₹60.46 கோடிக்கான 54,179 காசோலைகள் பணமாக்கப்படாமல் (ஜூன் 2024) இருப்பது தெரிய வந்தது. PAOக்களின் பதிவுருக்களின்படி, பணமாக்கப்படாமல் உள்ள காசோலைகளின் மதிப்பு மற்றும் காலவாரியான விவரத் தொகுப்புகளின் சுருக்கம் **அட்டவணை 4.6**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.6: பணமாக்கப்படாத காசோலைகளின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டுகளின் எண்ணிக்கையில் காலதாமதம் | நேர்வுகளின் எண்ணிக்கை | காசோலைகளின் மதிப்பு |
|---|---|---|
| 0-5 ஆண்டுகள் | 18 | 0.01 |
| 5-10 ஆண்டுகள் | 344 | 1.69 |
| 10-20 ஆண்டுகள் | 15,660 | 7.99 |
| 20 ஆண்டுகளுக்கு மேல் | 38,157 | 50.76 |
| **மொத்தம்** | **54,179** | **60.46** |

(*ஆதாரம்: PAOக்கள் அளித்த விவரங்கள்*)

நீண்ட நிலுவையிலுள்ள இந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### 4.9.2 நிலுவையில் உள்ள மின்னணு இசைவு சேவை (ECS) கொடுப்புகள்

பயனாளிகளுக்கு நேரடி பணப் பரிமாற்றத்தின் கீழ், சம்பளம், ஊதியம், ஓய்வூதியம், பிற இடருதவி, ஆகிய பணக் கொடுப்புகள் மின்னணு இசைவு சேவை (ECS) மூலம் செய்யப்படுவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வங்கியிலுள்ள பணம் பெறுபவரின் விவரங்கள், PAO/கருவூலங்களில் பராமரிக்கப்படும் விவரங்களுடன் ஒத்துப் போகவில்லை எனில், ECS மூலம் செய்யப்பட்ட பணச் செலுத்தங்கள் PAO/கருவூலத்தில் திரும்பப் பெறப்படுகின்றன. பிப்ரவரி 2018ல், ECS மூலம் செலுத்தப்படும் பணத்தை திரும்பப் பெறுவதற்கான வழிகாட்டு நெறிகளை கணக்குகள் மற்றும் கருவூலங்களின் ஆணையர் வழங்கினார். அந்த வழிகாட்டு நெறிகளின்படி, மூன்று மாதங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள கோரப்படாத தொகை, அந்தந்த DDOக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட பிறகு, அரசுக் கணக்கிற்கு திரும்பச் செலுத்தப்படவேண்டும். PAOக்களின் பதிவுருக்களை தணிக்கை செய்ததில், PAO (தெற்கு) மற்றும் PAO மதுரையில் ₹91.97 இலட்சம் மதிப்புள்ள 1321 ECS செலுத்தல்கள் மூன்று மாதங்களுக்கும் மேலாக (ஆகஸ்ட் 2024) நிலுவையில் இருப்பது தெரியவந்தது. இதற்கான காரணம் பதிவுசெய்யப்படவில்லை. திரும்பப்பெறப்பட்ட ECS கொடுப்புகளை, பயனாளிகளின் வங்கிக் கணக்கை ஒத்திசைவு செய்து அவர்களுக்கு வழங்கவோ அல்லது வழிகாட்டு முறைகளின்படி அரசுக் கணக்கில் செலுத்தவோ PAOக்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

## 4.10 சிறுதலைப்பு ‘800’ன் வரைமுறையற்ற பயன்பாடு

கணக்குகளில் பொருத்தமான கணக்கு தலைப்புகள் கொடுக்கப்படாதபோது மட்டுமே, 800 - பிற செலவுகள்/பிற வரவுகள் என்ற சிறு தலைப்பு பயன்படுத்தப்பட வேண்டும். சிறு தலைப்பு 800ன் தொடர்ச்சியான பயன்பாடு கணக்குகளின் சரித் தன்மையை பாதிக்கும் என்பதால், அத்தகைய தொடர்ச்சியான பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும்.

### சிறுதலைப்பு 800 – செலவினம்

2023-24ம் ஆண்டில், வருவாய் மற்றும் மூலதன பிரிவுகளின் கீழ் ₹31,952.08 கோடி செலவினம் ‘800 - பிற செலவு’ என்ற சிறுதலைப்பின் கீழ் (மொத்த செலவான ₹3,50,217.97 கோடி தொகையில் 9.12 விழுக்காடு) கணக்கு வைக்கப்பட்டது.

நான்கு பெருந்தலைப்புகளில், மொத்த செலவினமும் சிறு தலைப்பு – 800 கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது, தணிக்கை கூர்ந்தாய்வில் கண்டறியப்பட்டது. 11 ‘பெருந்தலைப்புகளில்’ சிறு தலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினம், அந்தந்த கணக்கு தலைப்புகளின் மொத்த செலவில் 50 விழுக்காட்டை தாண்டியதையும் தணிக்கை கூர்ந்தாய்வில் அறிய நேர்ந்தது (**இணைப்பு 4.2**)

சோதனை அடிப்படையில் சிறுதலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினங்களை ஆராய்ந்தபோது, அதற்கென்று தனியாக சிறுதலைப்பு இருந்தபோதும் பின்வரும் செலவுகள் பிற செலவினங்களுக்கான

சிறுதலைப்பு - 800ல் தவறாக பதிவு செய்யப்பட்டதை **அட்டவணை 4.7ல்** காணலாம்.

**அட்டவணை 4.7: சிறுதலைப்பு '800 - பிற செலவு' கீழ் பதிவு செய்யப்பட்ட செலவினம்**

| வரிசை எண் | செலவின் தன்மை (விரிவான தலைப்பு) | தவறாக பதிவு செய்யப்பட்ட கணக்கு தலைப்பு | | LMMHன் படி பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்பு விவரங்கள் |
|---|---|---|---|---|
| | | கணக்கு தலைப்பு | தொகை (₹ இலட்சத்தில்) | |
| 1 | 110 - மானியங்கள் | 2405-00-800-BG-110 | 565.41 | 2405 – மீன்வளம்-00-121-மீனவர்கள் நலத்திட்டங்கள் **(2405-00-121)** |
| 2 | 090 - உதவித்தொகை | 2405-00-800-BI-090 | 13.16 | |
| 3 | 090 - உதவித்தொகை | 2405-00-800-BJ-090 | 6.41 | |
| 4 | 110 - மானியங்கள் | 2405-00-800-KD-110 | 5,900.34 | |
| 5 | 120 - படிப்புதவித் தொகை மற்றும் பயிற்சி உதவித் தொகை | 2405-00-800-KG-120 | 50.00 | |
| 6 | 190 - இயந்திரமும் சாதனமும் | 3456-00-800-AF-190 | 1.68 | 3456- நுகர்பொருள் வழங்கல்-00-102-நுகர்பொருள் வழங்கல் திட்டங்கள் **(3456-00-102)** |
| 7 | 330 - தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 3456-00-800-AF-330 | 74.93 | |
| 8 | 710 - அச்சிடும் செலவுகள் | 3456-00-800-AF-710 | 37.88 | |

(*ஆதாரம்: VLC தரவுகள் மற்றும் CGA ஆல் வழங்கப்பட்ட LMMH*)

## சிறுதலைப்பு 800 – பிற வரவுகள்

2023-24ம் ஆண்டின் மொத்த வரவுகள் ₹2,64,596.66 கோடி, இதில் ₹17,125.77 கோடி '800-மற்ற வரவுகளில்' பதிவு செய்யப்பட்டது. இது ஆண்டின் மொத்த வரவுத் தொகையில் 6.47 விழுக்காடு ஆகும். 11 பெருந்தலைப்புகளில், மொத்த வரவும், சிறுதலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்டன. 20 பெருந்தலைப்புகளில் மொத்த வரவுகளில் 50 விழுக்காட்டுக்கு மேல் '800' என்ற சிறுதலைப்பின் கீழ் பதிவு செய்த நேர்வுகள் **இணைப்புகள் 4.3ல்** கூறப்பட்டுள்ளன.

சோதனை அடிப்படையில் சிறுதலைப்பு **800**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வரவினங்களை ஆராய்ந்தபோது, கண்டறியப்பட்டவை:

அ) 11 வரவுகள் (₹1 கோடிக்கு மேல்) அதற்கென்று தனியாக சிறுதலைப்பு இருந்தபோதும் தவறாக மற்ற வரவுகளின் கீழ் இணைக்கப்பட்டது (சிறுதலைப்பு 800) **அட்டவணை 4.8ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.8: சிறுதலைப்பு '800 - பிறவரவு' கீழ் பதிவு செய்யப்பட்ட வரவு**

| வரிசை எண் | வரவின் தன்மை (விரிவான தலைப்பு) | தவறாக பதிவு செய்யப்பட்ட கணக்கு தலைப்பு | | LMMHன் படி பதிவு செய்யப்பட வேண்டிய கணக்குத் தலைப்பு விவரம் |
|---|---|---|---|---|
| | | கணக்கு தலைப்பு | தொகை (₹ இலட்சத்தில்) | |
| 1 | 250 – வட்டி | 0049-04-800-AT-250 | 5,877.05 | 0049 – வட்டி வரவுகள் – வட்டி – 04 – மாநிலத்தின் வரவு – 118 – அரசு ஊழியர்களின் கடன்கள் மீதான வட்டி. "இந்த 118 சிறுதலைப்பின் கீழ் அரசு ஊழியர்களின் கடன்கள் மீதான வட்டி, வெவ்வேறு விதமான வட்டியுடன் கூடிய முன்பணங்களுக்கு, தனியாக ஒவ்வொரு வகை துணைத் தலைப்பை திறந்து கொள்ளலாம். **(0049-04-118)** |
| 2 | 810 – பணியாளர் சம்பள பிடித்தங்கள் | 0049-04-800-AT-810 | 34.99 | |
| 3 | 140 – வரிகள் | 0029-00-800-AA-140 | 3,652.62 | 0029 - நில வருவாய் – 106 – நில அளவை மற்றும் நில வரி ஏற்பாட்டுப் பணிகள் தொடர்பான வரவுகள் **(0029-00-106)** |
| 4 | 310 – வாடகை வரவு/வாடகை கட்டணங்கள் / குத்தகை வரவுகள் | 0853-00-800-AA-310 | 8,063.15 | 0853 – இரும்பு அல்லாத கனிமப் பொருட்களை வெட்டியெடுத்தல், உலோகத் தொழில்கள் - 00 - 107 - சிறு கனிமச் சலுகைக் கட்டணம், வாடகைகள் மற்றும் உரிமை தொகைகள் (மணல் சிறு கனிமங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகிறது). **(0853-00-107)** |
| 5 | 320 – உரிமைத் தொகை | 0853-00-800-AE-320 | 2,278.66 | |
| 6 | 270 – வரி அல்லாத கட்டணங்கள் | 0853-00-800-AF-270 | 3,562.82 | |
| 7 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0210-04-800-AM-270 | 3,747.17 | 0210-மருத்துவமும் பொது சுகாதாரமும்-04- பொது சுகாதாரம்–104– கட்டணங்கள் அபராதங்கள் முதலியன. "பொது சுகாதார அதிகாரிகளால் போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம், அபராதம் போன்றவை **104** சிறு தலைப்பில் அடங்கும். **(0210-04-104)** |
| 8 | 290 – அபராதங்கள் மற்றும் தண்டனைத் தொகைகள் | 0210-04-800-AN-290 | 1,227.88 | |
| 9 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0070-60-800-AB-270 | 841.23 | 0070 – ஏனைய நிருவாகப் பணிகள் – 60 – ஏனைய பணிகள் – 108 – திருமணக் கட்டணம் **(0070-60-108)** |
| 10 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0070-60-800-DM-270 | 347.67 | |
| 11 | 270 - வரி அல்லாத கட்டணங்கள் | 0425-00-800-AF-270 | 1,477.57 | 0425 கூட்டுறவு – 00 – 101 **(0425-00-101)** தணிக்கை கட்டணம் |

*(ஆதாரம்: VLC தரவுகள் மற்றும் CGA ஆல் வழங்கப்பட்ட LMMH)*

(ஆ) தற்போதுள்ள விதிகளின்படி, முந்தைய ஆண்டுகள் தொடர்பான மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்தும் போது சம்பந்தப்பட்ட பெருந்தலைப்பின் கீழே '911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்' என்ற சிறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்படும். மேலும் மானியம் பெற்றவர் செலவழிக்காத தொகையின் மீதான வட்டி அல்லது மறு வருவாய்களை, பிரிவு சார்ந்த வரவு தலைப்புகளின் கீழ் உள்ள பெருந்தலைப்பு / துணை முக்கிய தலைப்பின் சிறுதலைப்பான, 801 - செலவழிக்கப்படாத தொகையின் மீதான வட்டி அல்லது பிறவருவாய் மானியம் பெற்றவரிடமிருந்து பெறப்பட்டது என பதிவு செய்ய வேண்டும்.

மாறாக முந்தைய ஆண்டுகள் தொடர்பான இத்தகைய திருப்பி செலுத்துதல்கள் **அட்டவணை 4.9ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி சிறுதலைப்பு 800 – பிறவரவுகள் என்று வருவாய் வரவு தலைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன என்பதும் (தணிக்கை ஆய்வில்) தெரியவந்தது.

**அட்டவணை 4.9: சிறுதலைப்பு '800 - பிறவரவு' கீழ் பதிவு செய்யப்பட்ட வரவு**

| வரிசை எண் | கணக்குத் தலைப்பு மற்றும் விவரம் | விரிவான தலைப்பு மற்றும் விவரம் | உப விரிவான தலைப்பு மற்றும் விவரம் | வரவுத்–தொகை (₹ இலட்சத்–தில்) |
|---|---|---|---|---|
| 1. | 0070-60-800- (EY, FE, FH, FV, GB, GF GI, GM, GQ, HG) பல்வேறு துறைகளால் செலுத்தப்பட்ட நிலுவைத் தொகை | 900 - இதர வருவாய் வரவுகள் | 001 - இதர வரவுகள் | 82,517.04 |
| 2. | 0070-60-800- (FA, FB, FD, FG, FH, FL, FM, FN, FO, FP, FQ, FR, FS, FU, FX, FY, GC, GG, GH, GT) பல்வேறு துறைகளில் செலுத்தப்பட்ட நிலுவைத் தொகை | 290 - இதர வருவாய் வரவுகள் | 001 - இதர வரவுகள் | 24,349.88 |
| 3. | 0049-04-800- (CK, CZ, DR, EF) வட்டி வரவுகள் – பல்வேறு இயக்குநரகங்கள் /ஆணையரகங்கள் | 250 - வட்டி | 062 - நிலுவைத் தொகை | 75.77 |
| 4. | 0210-01-800-BM தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வரவுகள் | 250 - வட்டி | 062 - நிலுவைத் தொகை | 2,032.74 |
| 5. | 0216-03-800-AB முன்னாள் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட வட்டித் தொகை | 250 - வட்டி | 062 - நிலுவைத் தொகை | 1,469.96 |
| | மொத்தம் | | | **1,10,445.39** |

(*ஆதாரம்: VLC தரவுகள் மற்றும் CGAஆல் வழங்கப்பட்ட LMMH*)

மேற்கண்ட ₹1,10,445.39 இலட்சம் தொகையில் ₹1,06,866.92 இலட்சம் முந்தைய ஆண்டுகளில் பல்வேறு துறைகளின் செலவழிக்கப்படாத தொகையாகும், மீதம் ₹3,578.25 இலட்சம் முந்தைய ஆண்டுகளின் திட்ட நிலுவைத் தொகைகளின் மூலம் பெறப்பட்ட வட்டி தொகையாகும். இது குறித்து முந்தைய ஆண்டிற்கான மாநில நிதி தணிக்கை அறிக்கையில் சுட்டி காட்டிய போதிலும், சிறுதலைப்பு ''800 – பிற வரவுகள்'' கீழ் இந்த ஆண்டும் தொடர்ந்து தவறாக பதிவு செய்யப்பட்டது. இதனால் அந்த அளவுக்கு வருவாய் வகை வரவுகள் மிகைப்படுத்திக் காட்டப்பட்டன.

முந்தைய மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கைகளில் (SFAR) சிறுதலைப்பு 800ன் கீழ் வரவுகள்/செலவுகளின் வகைப்பாடு - பிற வரவுகள்/செலவுகள் குறித்த பிரச்சனைகள் தொடர்ச்சியாக

தெரிவிக்கப்பட்ட போதிலும் தவறான வகைப்பாடு தொடர்ந்தது. சம்பந்தப்பட்ட பெருந்தலைப்பி கீழ் வர வேண்டிய வரவுகள்/செலவுகளின் கணிசமான விகிதங்கள் சிறுதலைப்பு 800ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது கவலைக்குரியது, ஏனெனில் இது நிதி அறிக்கையின் வெளிப்படைத்தன்மையை மோசமாக பாதிக்கிறது.

## இ. அளவீடு தொடர்பான பிரச்சினைகள்

### 4.11 அனாமத்து மற்றும் கடன்கள், வைப்புகள் மற்றும் செலுத்தங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இருந்த மீதங்கள்

நிதி கணக்குகளின் விவர அறிக்கை 21ன் இணைப்பு, அனாமத்து மற்றும் செலுத்தங்கள் என்ற தலைப்புகளின் கீழ் நிகர மீதங்களை காட்டுகிறது. இத்தலைப்புகளில் உள்ள மீதங்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் உள்ள பற்று மற்றும் வரவு வகை மீதங்களை தனித்தனியாக கூட்டி, கணக்கிடப்படுகின்றன. மாநில கருவூலங்கள்/பொதுப் பணித்துறை மற்றும் வனத்துறை கோட்டங்கள் போன்றவை அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் அனாமத்து மற்றும் செலுத்தங்கள் கீழுள்ள இனங்கள் சரிக்கட்டப்படும்.

“8658-101-PAO-அனாமத்து” என்ற கணக்கு தலைப்பு AG(A&E)க்கும் இந்திய அரசின் பல்வேறு தனித்தனியான சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களுக்கும் இடையே நிகழ்ந்த நடவடிக்கைகளை தீர்வு செய்யும் நோக்கத்திற்காக உள்ளது. இவை முக்கியமாக மத்திய அரசு சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநில அரசு செலுத்தும் பணம் தொடர்பான பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது. இதற்கு அனுமதி / தீர்வு கிடைத்தவுடன், மாநில அரசின் பண இருப்பு அதிகரிக்கும்.

முதலில் AG பதிவுருக்களில் இக் கணக்கு தலைப்பின் கீழ் பதியப்படும் நிதி நடவடிக்கைகள், சம்பள மற்றும் கணக்கு அலுவலர்களிடமிருந்து காசோலைகள்/வரைவோலைகள் பெறப்பட்டவுடனும், அவ்வலுவலர்கள் சார்பாக மாநில கருவூலங்களில் பெறப்படும் தொகைகளுக்கான காசோலை / வரைவோலை வழங்கப்பட்டவுடனும் சரிக்கட்டப்படும். இந்த தலைப்பின் கீழ் நிலுவையில் உள்ள ₹189.95 கோடி பற்று மீதம் என்பது, சம்பள மற்றும் கணக்கு அலுவலரின் சார்பாக AG மூலம் செலுத்தப்பட்ட தொகை, இன்னும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. என்பதைக் காட்டுகிறது, செலவழிக்கப்பட்ட தொகை மாநில நிதிகளுக்கு மீள தரப்படாததால், நிலுவையில் உள்ள ரொக்க இருப்பு 31 மார்ச் 2024ல் குறைந்து காணப்படுகிறது.

## 4.12 துறையின் கணக்குகள் ஒத்திசைவு செய்யப்படாமை

துறைகளின் கட்டுப்பாட்டு அலுவலர்கள், நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு செலவு இருக்கும்படியாக அதன் மீது பயனுள்ள கட்டுப்பாட்டை வைத்திருப்பதுடன், தமது கணக்குகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்யவும் வேண்டும். தமிழ்நாடு வரவு - செலவு திட்ட நடைமுறை கையேடு, விதிகள் 124 மற்றும் 127ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் பராமரிக்கும் கணக்குகள், கூட்டு மொத்தம் ஆகியன, AG(A&E)ன் பதிவுருக்களில் உள்ள கணக்குகளுடன் மாதந்தோறும் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். மேற்படி நூலின் விதி 128ன்படி, தலைமை கட்டுப்பாட்டு அலுவலர், தனது கணக்குகளிலோ அல்லது AG(A&E)ன் பதிவுருக்களிலோ உரிய மாற்றங்கள் செய்யப்பட்ட பிறகு, ஒரு ஒத்திசைவு சான்றிதழை AG(A&E)க்கு அனுப்ப வேண்டும்.

2023-24 ஆண்டில், தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள், செலவினங்கள் தொடர்பாக 97.11 விழுக்காடு, வரவுகள் தொடர்பாக 93.86 விழுக்காடு, முதலீடு செலவினம் தொடர்பாக 98.85 விழுக்காடு மற்றும் கடன்கள் மற்றும் முன் பணம் தொடர்பாக 97.19 விழுக்காடு ஒத்திசைவு செய்துள்ளனர். 140 வரவினத்திற்குரிய தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 82 அலுவலர்கள் மற்றும் செலவினத்திற்குரிய 215 தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களுள் 132 அலுவலர்கள் மட்டுமே மேற்படியான ஒத்திசைவை முழுமையாக செய்திருந்தனர். மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் இப்பொருளின் போக்கு குறித்த பகுப்பாய்வு, ஒத்திசைவு செய்யப்படாத நேர்வுகளின் விழுக்காடு, முந்தைய ஆண்டு வரை உயர்ந்து வந்ததும் நடப்பாண்டில் குறைந்திருப்பதும் **அட்டவணை 4.10ல்** காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.10: வரவு மற்றும் செலவு பற்றிய கணக்குகளை தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் ஒத்திசைவு செய்யாதது பற்றிய நிலை**

| ஆண்டு | தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | முழுமையாக ஒத்திசைவு செய்த தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | முழுமையாக ஒத்திசைவு செய்யாத தலைமை கட்டுப்பாட்டு அலுவலர்கள் | ஒத்திசைவு செய்யாமையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **வரவுகள்** | | | | |
| 2019-20 | 121 | 52 | 69 | *57.02* |
| 2020-21 | 121 | 107 | 14 | *11.57* |
| 2021-22 | 126 | 91 | 35 | *27.78* |
| 2022-23 | 122 | 68 | 54 | *44.26* |
| 2023-24 | 140 | 82 | 58 | *41.43* |
| **செலவுகள்** | | | | |
| 2019-20 | 209 | 105 | 104 | *49.76* |
| 2020-21 | 209 | 175 | 34 | *16.27* |
| 2021-22 | 211 | 151 | 60 | *28.44* |
| 2022-23 | 214 | 120 | 94 | *43.93* |
| 2023-24 | 215 | 132 | 83 | *38.60* |

(*ஆதாரம்: PAG (A&E), தமிழ்நாடு தொகுத்த விவரங்கள்*)

மேலும், 2018-19ல் கடன்களை மறுசீரமைப்பு செய்ததில், பல எதிர்மறை மீதங்கள் உருவாயின. அசல் தொகையை மீள செலுத்துதல் மற்றும் வட்டியை செலுத்துதல் ஆகியவற்றுக்காக பழைய கடன் தலைப்புகள் இன்னமும் தொடரப்படுகின்றன. இதன் விளைவாக, பழைய தலைப்புகளில் அதிகமான வரவுகள் பதிவாகி, புதிய தலைப்புகளில் வரவுகள் ஏதும் பதிவாகவில்லை என்பது முந்தைய SFARகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலை 2023-24 ஆண்டிலும் தொடர்ந்தது.

ஒத்திசைவு செய்வதில் சட்டபூர்வ விதிகள் மற்றும் நிர்வாக வழிமுறைகளை கடைபிடிக்கத் தவறியதால், தவறான வகைப்பாடு மற்றும் கணக்குகளில் வரவுகள் மற்றும் செலவுகள் தவறாக பதிவு செய்யப்பட்டன. இது வரவு செலவு திட்ட செயல்பாட்டின் நோக்கத்தையே சிதைத்துவிட்டது.

## 4.13 ரொக்க இருப்பு குறித்த ஒத்திசைவு

இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934, பிரிவுகள் 20, 21 மற்றும் 21Aன் வழிவகைகளுக்கிணங்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கியாளராக இந்திய ரிசர்வ் வங்கி செயல்படுகிறது. மாநில அரசின் சார்பில் நடைபெறும் நிதி நடவடிக்கைகள், ரிசர்வ் வங்கியின் அலுவலகங்கள் மற்றும் அதன் சார்பில் அரசு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள முகமை வங்கிகளின் அலுவலகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநில அரசுகளின் முதன்மை வைப்பு கணக்குகள் நாக்பூரில் உள்ள ரிசர்வ் வங்கியின் மத்திய கணக்குகள் பிரிவில் பராமரிக்கப்படுகின்றன, முகமை வங்கிகள் இணைப்பு அலுவலகங்கள் மூலம் தெரிவிக்கும் மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகங்கள் கணக்கு வைத்து மத்திய கணக்குகள் பிரிவுக்கு தெரிவிக்கின்றன.

மாநில அரசின் நிதி நடவடிக்கைகளை, கணக்கு வைத்தல் மற்றும் ஒத்திசைவு செய்தல் தொடர்பான ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்களின் குறிப்பாணையின்படி, முகமை கிளைகள் வரவுகள்/செலுத்தங்களின் பட்டியல்களை நாள் அடிப்படையில் தொடர்புடைய துணை கருவூலம்/ கருவூலத்திற்கு இதற்கென கூறப்பட்ட படிவத்தில் தாமதமின்றி அனுப்ப வேண்டும். மேலும், இணைப்பு வங்கிகள் தயாரிக்கும் முகமை வங்கிகளின் தொகுப்பு மாதாந்திர அறிக்கைகள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்; ரிசர்வ் வங்கி அவற்றை மாநில கணக்காயருக்கு அனுப்ப வேண்டும்.

மேற்கூறிய நடைமுறை அமலில் இருக்கையில், பொதுவாக, மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்பு நிலைக்கும், மத்திய கணக்குகள் பிரிவின் படியான தொகைக்கும் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது. மாதவாரியான இருப்பில் வேறுபாடு இருப்பினும், ஆண்டுதோறும் ஏப்ரல் 25ம் தேதி வாக்கில் ஆண்டு கணக்குகள் முடிக்கப்படும்போது உள்ள ரொக்க இருப்பு நிலைகளில் வேறுபாடு இருக்கக்கூடாது.

எனினும், 2023-24 ஆண்டின் இறுதி இருப்பில், மாநில கணக்காயரின் பதிவுருக்களின் படியான ரொக்க இருப்புக்கும், ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்புக்கும் இடையே கணிசமான நிகர வேறுபாடு (₹112 கோடி) இருந்தது. ரொக்க இருப்பில் இருந்த வேறுபாடு தொடர்பான விவரங்கள் **அட்டவணை 4.11ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.11: ரொக்க இருப்பில் வேறுபாடுகள்**

| காலம் | பற்று வேறுபாடு | | வரவு வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் | இனங்களின் எண்ணிக்கை | ₹ கோடியில் |
| 2018-19 வரை | 805 | 4,745.81 | 1,145 | 5,258.30 |
| 2019-20 | 59 | 279.87 | 142 | 874.90 |
| 2020-21 | 74 | 1,182.49 | 155 | 544.10 |
| 2021-22 | 87 | 837.12 | 79 | 484.76 |
| 2022-23 | 85 | 783.53 | 113 | 743.28 |
| 2023-24 | 128 | 3,305.36 | 151 | 3,340.82 |
| **மொத்தம்** | **1,238** | **11,134.18** | **1,785** | **11,246.16** |

*(ஆதாரம்: முதன்மை மாநில கணக்காயர் (A&E) அளித்த தகவல்களின் படி)*

கடந்த ஐந்து ஆண்டுகளில் நேர்ந்த நிகழ்வுகள் மீதான பகுப்பாய்வு மூலம், (ரொக்க இருப்புகளில் உள்ள வேறுபாடுகள் **அட்டவணை 4.12ல்** விளக்கப்பட்டுள்ளவாறு), 2019-20 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் குறைவுப் போக்கில் இருந்த ரொக்க இருப்பு, நடப்பாண்டில் கணிசமாக உயர்ந்துள்ளதை அறியலாம்.

**அட்டவணை 4.12: ரொக்க இருப்புகளில் இருந்த வேறுபாட்டின் போக்கு**

(₹ கோடியில்)

| ஆண்டு | மாநில கணக்காயரின் பதிவுருக்களின்படியான ரொக்க இருப்பு | ரிசர்வ் வங்கி தெரிவித்த ரொக்க இருப்பு | வேறுபாடு |
|---|---|---|---|
| 2016-17 | 305.55 (வ) | 89.53(வ) | 395.08(வ) |
| 2017-18 | 81.18 (வ) | 8.12 (வ) | 89.30(வ) |
| 2018-19 | 459.88 (வ) | 37.49(வ) | 497.37(வ) |
| 2019-20 | 923.33 (ப) | 2,067.49(வ) | 1,144.16(வ) |
| 2020-21 | 467.24 (வ) | 5.70(வ) | 472.94(வ) |
| 2021-22 | 266.95 (ப) | 426.56(வ) | 159.61(வ) |
| 2022-23 | 59.17 (வ) | 43.90(வ) | 103.07(வ) |
| 2023-24 | 110.02 (வ) | 1.98(வ) | 112.00(வ) |

*(ஆதாரம்: உரிய ஆண்டுக்கான நிதி கணக்குகளின் விவர அறிக்கை 2ன் இணைப்பு)*

வங்கிகள் வரவுகளை கருவூலங்களுக்கு தெரிவிக்காததே வேறுபாட்டிற்கு முக்கிய காரணமாகும்.

## 4.14 2023-24ம் ஆண்டில் நிதிக் குறியீடுகள் மீதான சில பரிவர்த்தனைகளின் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வுகளின் தாக்கம்

2023-24ல் நடத்தப்பட்ட பரிவர்த்தனைகள் கூர்ந்தாய்வு மற்றும் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வு மூலம், வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை குறிப்பிட்ட கணக்கு சரிகட்டல்களால் பாதிக்கப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. **இது அட்டவணை 4.13ல்** கொடுக்கப்பட்டுள்ளது. (**அத்தியாயம்-I பத்தி 1.9.1ல்** விவாதிக்கப்பட்டுள்ளது).

**அட்டவணை 4.13: குறைவாக/மிகையாக காட்டப்பட்ட வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை**

| விவரங்கள் | வருவாய் பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (₹ கோடியில்) | | நிதி பற்றாக்குறையில் நேரும் மாற்றம் (₹ கோடியில்) | |
|---|---|---|---|---|
| | மிகையாக காட்டப்பட்டது (-) | குறைவாக காட்டப்பட்டது (+) | மிகையாக காட்டப்பட்டது (-) | குறைவாக காட்டப்பட்டது (+) |
| வட்டி தொகை மாற்றத்தில் குறைவு. | -- | (+) 96.04 | -- | (+) 96.04 |
| ஈடு செய்யப்படாத எதிர்பாரா செலவு நிதி. | -- | (+) 5.47 | -- | (+) 5.47 |
| தேசிய ஓய்வூதிய திட்டத்தில் (NPS) பங்களிப்பு தொகை மாற்றத்தில் குறைவு. | -- | (+) 99.76 | -- | (+) 99.76 |
| **மொத்தம்** | -- | **(+) 201.27** | -- | **(+) 201.27** |

*(ஆதாரம்: நிதி கணக்குகளின் NTFA மற்றும் பிந்தைய தணிக்கை பகுப்பாய்வு)*

## 4.15 கணக்கு தர நிலைகளுடன் இணக்கம்

இந்திய அரசியல் சாசனம் பிரிவு 150ன் படி, இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) ஆலோசனைக்கிணங்க இந்திய குடியரசு தலைவர், மத்திய மற்றும்

மாநில கணக்குகளின் படிவங்களை பரிந்துரைக்கிறார். பொறுப்புடைமை செயல் முறையை மேம்படுத்த, அரசு கணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளின் தரநிலைகளை உருவாக்குவதற்காக CAG, அரசு கணக்குகளின் தர ஆலோசனை வாரியத்தை (GASAB) 2002ல் ஏற்படுத்தினார். CAGன் ஆலோசனைக்கிணங்க குடியரசுத் தலைவர் இது வரை நான்கு இந்திய அரசு கணக்கு தரநிலைகளை (IGAS) அறிவித்தார். இத்தரநிலைகளுடன் 2023-24ம் ஆண்டின் தமிழக அரசு நிதி அறிக்கையில் உள்ள தமிழக அரசின் இணக்கம் குறித்த விவரங்கள் **அட்டவணை 4.14ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.14: கணக்கு தர நிலைகளுடன் இணக்கம்**

| வரிசை எண் | கணக்குத் தர நிலைகள் | IGASன் சாராம்சம் | மாநில அரசால் இணங்கப்பட்டவை | குறைபாடுகளின் தாக்கம் |
|---|---|---|---|---|
| 1 | IGAS-1: அரசால் வழங்கப்படும் உத்தரவாதங்கள்- வெளிப்படுத்தும் தேவைகள் | நடப்பாண்டில் வழங்கப்பட்ட இத்தரநிலை மூலம் உத்தரவாதத்தின் தொகை (வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக) நிதி அறிக்கைகளில் அரசு வெளிப்படுத்த வேண்டும். | இணங்கப்பட்டது | -- |
| 2 | IGAS-2: மானிய உதவிகளின் கணக்குகளும் பிரிவுகளும் | சொத்துக்களை உருவாக்க மானிய உதவி வழங்கப்பட்டாலும், அது வருவாய் வகை செலவினமாக வகைப்படுத்தப்பட வேண்டும். மானிய உதவி பொருளாக வழங்கப்பட்டாலும் வெளிப்படுத்த வேண்டும். | இணங்கப்பட்டது | -- |
| 3 | IGAS-3: அரசால் வழங்கப்படும் கடன்களும் முன்பணங்களும் | அரசால் வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்களை வெளிப்படுத்துதல் | பகுதியளவு இணங்கப்பட்டது.<br>2018-19ல் தமிழக அரசு வழங்கிய பழைய கடன்களை மறுசீரமைப்பு செய்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறித்த அறிக்கை 7 மற்றும் 18, IGAS-3 படி தயாரிக்கப்பட்டாலும், (2018-19ம் ஆண்டில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களின் மறுசீரமைப்புக்குப் பிறகும்)<br>2023-24லும் கடன் தலைப்புகளின் கீழ் பதிவான தொகைகள் ஒத்திசைவு செய்யப்படவில்லை. எனவே, கடன் பெற்ற நிறுவனங்களின் நிலுவை திருப்பிச் செலுத்தல்கள் குறித்த விவரங்கள் சேர்க்கப்படவில்லை. மாநில அரசுடனான ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது. | ஒத்திசைவு செய்யாததன் காரணமாக எதிர்மறை மீதம் உள்ளது. இதுகுறித்து நுழைவு கலந்தாய்வு கூட்டத்தில் (ஜூன் 2024) அரசிடம் தெரிவிக்கப்பட்டது.இது தொடர்பான, நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. |
| 4 | IGAS-4: முந்தைய காலக்கட்டத்திற்கான சரிகட்டல் | அரசு முடிவுகளால் ஏற்கனவே முடிக்கப்பட்ட முந்தைய ஆண்டுகளின் கணக்குகளின் நிலுவை மற்றும் தொடர் பதிவுகளில் ஏற்படும் தவறுகளை சரி செய்தல் அல்லது சரி கட்டல். **(அறிக்கை 13 – நிதி கணக்குகளின் இருப்புகளின் சுருக்கம்)** | இணங்கப்பட்டது | -- |

*(ஆதாரம்: PAG (A&E) அலுவலகத்தால் அளிக்கப்பட்ட தகவல்கள்)*

## ஈ. வெளிப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள்

### 4.16 கணக்குகள் அளிக்கப்படாமை / அளிப்பதில் நேர்ந்த தாமதம்

இந்திய தணிக்கைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிமுறைமைகள்) சட்டம், 1971, பிரிவுகள் 14 மற்றும் 15ன்படி, அரசின் நிதியுதவியை பெறும் நிறுவனங்களின் கணக்குகள், பெறப்பட்ட உதவியின் அளவு போன்றவற்றின் அடிப்படையில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தணிக்கை செய்யப்பட வேண்டும். அச்சட்டத்தின் கீழ் தணிக்கை செய்யப்படுவதற்கு தகுதி பெறும் நிறுவனங்களை கண்டறியும் பொருட்டு, பல்வேறு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி, அதன் நோக்கம், அந்நிறுவனங்களின் மொத்த செலவு ஆகிய விவரங்களை துறைத்தலைவர்கள் ஆண்டுதோறும் தணிக்கைக்கு அளிக்க வேண்டும்.

238 நிறுவனங்கள்/அமைப்புகளின் 2023-24 வரையிலான ஆண்டு கணக்குகளை துறைத்தலைவர்கள் அளிக்கவில்லை. ஆகஸ்ட் 2024 நிலுவை விவரங்கள் **இணைப்பு 4.4ல்** தரப்பட்டு, நிலுவைக்காலம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 4.15ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.15: நிறுவனங்கள்/ஆணைக் குழுக்கள் ஆண்டு கணக்குகளை அளிப்பதில் நிலுவை**

| வ. எண் | காலதாமதம் (ஆண்டுகள்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓராண்டு வரை | 132 |
| 2 | ஓராண்டிற்கு மேல் மூன்றாண்டுகள் வரை | 67 |
| 3 | மூன்றாண்டுகளுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை | 13 |
| 4 | ஐந்தாண்டுகளுக்கு மேல் | 26 |
| | **மொத்தம்** | **238** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் அளித்த விவரங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)*

சம்பளம், பராமரிப்பு போன்றவற்றிற்காக அரசின் நிதியுதவியை பெறும் கல்வி நிறுவனங்களே ஆண்டு கணக்குகளை அளிக்காத நிறுவனங்களுள் முக்கியமானவை. கணக்குகளை இறுதி செய்வதில் ஏற்படும் காலதாமதம் என்பது, அளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதியுதவி பயன்படுத்தப்பட்டது என தணிக்கை தரப்பு சட்டமன்றத்திற்கு உறுதி அளிக்க தடையாக இருக்கும்.

## 4.17 தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தனி தணிக்கை அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் வைப்பதில் நிலுவை நிலை

சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் 1987 பிரிவு 18ன் துணைப் பிரிவுகள் 2, 4 மற்றும் 5ன் படி, சட்டபூர்வ மாநில அதிகாரிகளின் கணக்குகள் இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) மூலம் குறிப்பிட்ட கால இடைவெளியில் தணிக்கை செய்யப்பட வேண்டும். மாநில சட்ட அதிகாரிகளின் கணக்குகள், CAGஆல் சான்றளிக்கப்பட்ட அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிற நபர்களால் சான்றளிக்கப்பட்டு, தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து மாநில அரசுக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படும். மாநில அரசு இந்த கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கையை, அவை கிடைத்தவுடன் கூடிய விரைவில், மாநில சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டும். இருப்பினும், தமிழ்நாடு மாநில சட்ட சேவை ஆணையம் மற்றும் மாநிலத்தில் உள்ள 32 மாவட்ட சட்ட சேவை ஆணையங்களின் தனி தணிக்கை அறிக்கைகள் (**இணைப்பு 4.5**) 2000-01 ஆண்டிலிருந்து மாநில சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

## 4.18 கையாடலகள், இழப்புகள் மற்றும் களவுகள்

தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு I, பிரிவு 294ன்படி, பொது பணம், பண்டக சாலை, பிற அசையும் அல்லது அசையா சொத்துக்கள் ஆகியவற்றின் கையாடல் அல்லது இழப்புகள் தொடர்பான அனைத்து நேர்வுகளையும் அலுவலக தலைவர்கள் AG(A&E)க்கு தெரிவிக்க வேண்டும். மேலும், இழப்புகளுக்கான பொறுப்புடைமையை செயல்படுத்துதல் மற்றும் இத்தகைய நேர்வுகளை தீர்வு செய்தல் ஆகியவற்றிற்கான கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் அந்த விதித்தொகுப்பு வகுத்துள்ளது.

மார்ச் 31, 2024 நிலையில், மொத்தம் ₹30.93 கோடி மதிப்புள்ள கையாடல், குறைவு, மற்றும் களவு தொடர்பான 397 நேர்வுகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன. நிலுவையிலுள்ள நேர்வுகளின் துறைவாரியான விவரங்கள் **இணைப்பு 4.6ல்** தரப்பட்டுள்ளன. நிலுவை இனங்களின் நிலுவைக் காலம் பற்றிய விவரங்கள் மற்றும் நிலுவைக்கான காரணங்கள் முறையே **அட்டவணை 4.16** மற்றும் **அட்டவணை 4.17ல்** தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.16: நிலுவை இனங்களின் நிலுவைக் காலம்**

| நிலுவைக் காலம் (ஆண்டுகள்) | நேர்வுகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு (₹ கோடியில்) |
|---|---|---|
| 0 - 5 | 49 | 3.08 |
| 6-10 | 15 | 9.44 |
| 11-15 | 32 | 4.87 |
| 16 - 20 | 31 | 3.42 |
| 21 மற்றும் அதற்கு மேலும் | 270 | 10.12 |
| **மொத்தம்** | **397** | **30.93** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் மற்றும் PAG (A&E) அலுவலகம் அளித்த விவரங்கள்)*

**அட்டவணை 4.17: நிலுவைக்கான காரணங்கள்**

| நிலுவைக்கான காரணம் | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|
| துறை சார்ந்த மற்றும் குற்றவியல் புலனாய்வு நடத்தப்படவில்லை | 168 | 13.66 |
| தொடங்கப்பட்ட துறை சார்ந்த நடவடிக்கை நிறைவுறவில்லை | 109 | 4.97 |
| குற்றவியல் நடவடிக்கைகள் முடிவுற்றாலும் தொகை மீள பெறப்படவில்லை | 12 | 0.76 |
| தொகையை மீள பெறுவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான ஆணை பெறப்படவில்லை | 76 | 3.74 |
| நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளவை | 32 | 7.80 |
| **மொத்தம்** | **397** | **30.93** |

*(ஆதாரம்: துறைத்தலைவர்கள் மற்றும் PAG (A&E) அலுவலகம் அளித்த விவரங்கள்)*

397 நேர்வுகளில், ₹28.03 கோடி மதிப்புள்ள 233 நேர்வுகள் மற்றும் ₹2.73 கோடி மதிப்புள்ள 132 நேர்வுகள் முறையே கையாடல் மற்றும் குறைவு தொடர்பானவை. இந்த நேர்வுகளை இறுதி செய்வதில் ஏற்படும் தாமதம் அரசுக்கு இழப்பை உண்டாக்கும்.

## 4.19 மாநில நிதிநிலை தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

பொது கணக்குகள் குழு, 2013-14 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில் மாநில நிதி நிலை மீதான தணிக்கை அறிக்கைகளை விவாதிக்க 20 முறை (ஆகஸ்ட் 2024 வரை) கூடியது. ஆகஸ்ட் 2024 நிலையில், 2008-09 முதல் 2021-22 வரையிலான ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கைகளில் நிலுவையில் இருந்து 183 பத்திகள்/சீராய்வுகளில் விவாதிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 162 பத்திகள்/சீராய்வுகளில் 24 பத்திகள்/சீராய்வுகள் விவாதிக்கப்பட்டன.

## 4.20 முடிவுரை

பயன்பாட்டு சான்றிதழ்களை (₹2,805.94 கோடி) அளிக்காதிருப்பது, பொறுப்புடைமையை உறுதி செய்யும் விதிகளை பின்பற்ற துறை

அலுவலர்கள் தவறியதைக் காட்டுவது மட்டுமல்லாமல், மானிய உதவி வழங்கிய நோக்கத்தை சிதைப்பதாகவும் உள்ளது. நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்கள் மூலதன வகை செலவிற்கான மானிய உதவி தொடர்பானதாக இருந்தால், இப்பொருள் மேலும் முக்கியத்துவம் பெறும்.

**(பத்தி 4.5)**

கணிசமான தொகை கொண்ட சரிக்கட்டப்படாத தற்காலிக முன்பணங்கள், (₹216.46 கோடி பெறப்பட்டு பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது), அவற்றை சரிக்கட்டுவது தொடர்பான விதிமுறைகளை அமல்படுத்துவதில் துறை அலுவலர்களின் தரப்பில் இருந்த மெத்தனப்போக்கை காட்டியது.

**(பத்தி 4.7)**

பல வரவுகள் மற்றும் செலவுகள் அவற்றுக்குரிய பெருந்தலைப்புகளின் கீழ் தனியாக சிறு தலைப்பு இருந்தபோதும் சிறு தலைப்பு 800ன் கீழ் தவறாக பதிவு செய்யப்பட்டன.

கடந்த ஆண்டுகளின் செலவழிக்கப்படாத நிலுவைத் தொகைகள் மற்றும் இந்த நிலுவைகளில் பெறப்பட்ட வட்டி ஆகியவை சிறு தலைப்பு "911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்" என்ற தலைப்பின் கீழ் முன்பதிவு செய்வதற்குப் பதிலாக வரி அல்லாத வரவினம் தலைப்பின் கீழ் (சிறு தலைப்பு 800) பதிவு செய்யப்பட்டன.

**(பத்தி 4.10)**

மார்ச் 2024 நிலவரப்படி, நிறுவனங்கள் / அமைப்புகள் தொடர்பான 238 கணக்குகள் இறுதி செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன. நிலுவைக் காலம் ஓராண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு மேலும் இருந்தது.

**(பத்தி 4.16)**

கையாடல், இழப்பு, மற்றும் களவு நேர்வுகள், அவை நடந்தபோது முதன்மை மாநில கணக்காயரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை மற்றும் அதற்கான தீர்வு நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன.

**(பத்தி 4.18)**

## 4.21 பரிந்துரைகள்

- *கட்டுப்பாட்டு அலுவலர்கள் தற்காலிக முன்பணங்களை சரிசெய்து, உரிய நேரத்தில் பயன்பாட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதையும், அவ்வாறு செய்யத் தவறியவர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படுவதையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.*
- *DDOs/PAOக்களுக்கு, ஏற்கனவே உள்ள பொருத்தமான சிறு தலைப்புகளின் கீழ் வரவுகள் மற்றும் செலவினங்களை பதிவு செய்யவும், வேறு பொருத்தமான தலைப்பு ஏதும் இல்லாத போது மட்டுமே சிறு தலைப்பு 800ல் பதிவு செய்யவும் அரசு அறிவுறுத்த வேண்டும். முந்தைய ஆண்டுகளின் செலவழிக்கப்படாத நிலுவை தொகைகளை* "911- மிகையாகக் கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல்" *கீழ் பதிவு செய்ய வேண்டும்.*

- *நிலுவையில் உள்ள கணக்குகளுக்கு சம்பந்தப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரிகள் மீது அரசு பொறுப்பு நிர்ணயிக்க வேண்டும்.*
- *பொதுப் பணம், பண்டகசாலை அல்லது பிற அசையும் அல்லது அசையாச் சொத்துக்களின் இழப்பு அல்லது மோசடி போன்ற அனைத்து நேர்வுகளையும் மாநில கணக்காயரிடம் தெரியப்படுத்த அனைத்துத் துறைத் தலைவர்களையும் அரசு அறிவுறுத்த வேண்டும்.*

**(த. ஜெய்சங்கர்)**

**சென்னை** **முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I),**
**நாள்** 02 **ஜூன்** 2025 **தமிழ்நாடு**

**மேற்கையொப்பமிடப்பட்டது**

**(கொ. சஞ்சய் மூர்த்தி)**

**புது டில்லி** **இந்திய தணிக்கைத் தலைவர்**
**நாள்** 27 **ஜூன்** 2025

# இணைப்புகள்

## இணைப்பு 1.1

### (பார்வை: பத்தி 1.2; பக்கம்:1)

### மாநிலம் பற்றிய விவரக்குறிப்புரை

| A. | பொது விவரங்கள் | | |
|---|---|---|---|
| வரிசை எண் | விவரங்கள் | | புள்ளி விவரங்கள் |
| 1 | பரப்பளவு | | 1,30,060 சதுர கிமீ. |
| 2 | மக்கட்தொகை | | |
| | (அ) 2011 கணக்கெடுப்பின்படி | | 7.21 கோடி |
| | (ஆ) 2024ல்***** | | 7.71 கோடி |
| 3 | (அ) மக்கட்தொகையின் அடர்த்தி (2001 கணக்கெடுப்பின்படி) (அனைத்து இந்திய அடர்த்தி= ஒரு சதுர கிமீக்கு 325 நபர்கள்) | | ஒரு சதுர கிமீக்கு 480 நபர்கள் |
| | (ஆ) மக்கட்தொகையின் அடர்த்தி (2024) (அனைத்து இந்திய அடர்த்தி = ஒரு சதுர கிமீக்கு 426.09 நபர்கள்) | | ஒரு சதுர கிமீக்கு 592.72 நபர்கள். |
| 4 | வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்கட்தொகை* (அனைத்து இந்திய சராசரி= 21.92 விழுக்காடு) | | 11.28 விழுக்காடு |
| 5 | படிப்பறிவு** (2011 கணக்கெடுப்பின்படி) (அனைத்து இந்திய சராசரி = 73.00 விழுக்காடு) | | 80.10 விழுக்காடு |
| 6 | இளம் சிறார் இறப்பு வீதம்*** (ஒவ்வொரு 1,000 உயிர் பிறப்பிற்கும்) (அனைத்து இந்திய சராசரி (2020) = ஒவ்வொரு 1,000 உயிர் பிறப்பிற்கும் 28) | | 13 |
| 7 | பிறப்பின் போது ஆயுளின் எதிர்நோக்கு **** (அனைத்து இந்திய சராசரி = 70 ஆண்டுகள்) | | 73.2 ஆண்டுகள் |
| 8 | மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) 2023-24 நடப்பு விலைகள் | | 27,21,571 கோடி |
| | தலா ஒருவருக்கான GSDP CAGR (2014-15 முதல் 2023-24 வரை) | | 10.40 விழுக்காடு |
| 9 | GSDP CAGR* (2014-15 முதல் 2023-24 வரை) | தமிழ் நாடு | 10.90 விழுக்காடு |
| 10 | மக்கட்தொகை மற்றும் அதன் பத்தாண்டு வளர்ச்சி வீதம் (2014 முதல் 2024*****) | தமிழ் நாடு | 4.68 விழுக்காடு |

| B. | நிதி பற்றிய விவரங்கள் | | |
|---|---|---|---|
| | | விவரங்கள் | |
| CAGR@ | | 2022-23 முதல் 2023-24 வரை | |
| | | பொது மாநிலங்கள் | தமிழ் நாடு |
| | | (விழுக்காடு) | |
| அ | வருவாய் வகை வரவினங்கள் | 8.19 | 8.55 |
| ஆ | வரி வருவாய் | 10.58 | 11.35 |
| இ | வரி அல்லாத வருவாய் | 14.62 | 51.83 |
| ஈ | மொத்தச் செலவினம் | 10.56 | 9.89 |
| உ | மூலதன வகை செலவினம் | 19.85 | 2.45 |
| ஊ | கல்வி மீதான வருவாய் செலவினம் | 5.11 | 3.27 |
| எ | மக்கள் நல்வாழ்வு மீதான வருவாய் செலவினம் | 10.34 | 1.92 |
| ஏ | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதான வருவாய் செலவினம் | 7.52 | 9.13 |
| ஐ | ஓய்வூதியம் மீதான வருவாய் செலவினம் | 6.27 | 17.16 |

* மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை (MoSPI)

** பொருளாதார கணக்கெடுப்பு 2021-22

*** மாதிரி பதிவு அமைப்புகள் (SRS) அறிக்கை (2020)

**** SRS ஐ அடிப்படையாக கொண்ட 2016-20க்கான ஆயுள் அட்டவணை சுருக்கம். இந்திய தலைமை பதிவாளர்

***** மக்கள் தொகையை கணிக்கும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் மக்கள் தொகைக்கான தேசிய குழுவால் இந்தியா மற்றும் மாநிலங்கள் 2011-2036 மக்கள் தொகை கணிப்புகள்,

@ ஆண்டு கூட்டு வளர்ச்சி வீதம்

(ஆதாரம்: நிதி பற்றிய விவரங்கள் மாநில நிதிக்கணக்குகளில் உள்ள விவரங்களை சார்ந்தவை)

## இணைப்பு 1.2
(பார்வை: பத்தி 1.4; பக்கம்:8)

**பிரிவு அ : அரசு கணக்குகளின் அமைப்பு மற்றும் முறை**

**அரசு கணக்குகளின் அமைப்பு:** மாநில அரசின் கணக்குகள் (i) தொகுநிதி, (ii) எதிர்பாரா செலவு நிதி மற்றும் (iii) பொதுக்கணக்கு எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும்

**பிரிவு I:** **தொகுநிதி:** வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் கீழ் உள்ள அனைத்து வரவினங்கள் மற்றும் செலவினங்கள், பொதுக்கடன், கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியவை சேர்ந்து உருவானதே மாநிலத்தின் தொகுநிதியாகும்

**பிரிவு II:** **எதிர்பாரா செலவு நிதி:** சட்டப்பேரவையின் ஒப்புதல் உடனே பெறமுடியாத நிலையில், எதிர்பாரா அவசரச் செலவுகளை எதிர்கொள்வதற்கு, நிதி எடுத்தாள ஏதுவாக ஆளுநர் வசம் அலுவல் முன்பணம் என்பதான வகையில் 'எதிர்பாரா செலவு நிதி' யானது சட்டப்பேரவையால் நிறுவப்பட்டது, தொகுநிதியின்கீழ் உள்ள சம்பந்தப்பட்ட நடைமுறை சார்ந்த கணக்கு பெருந்தலைப்பிற்குப் பற்று வைப்பதன் மூலம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து பெற்ற முன்பணம் அந்த நிதிக்கே மீட்சி செய்யப்படுகிறது.

**பிரிவு III:** **பொதுக்கணக்கு:** அரசால் அல்லது அதன் சார்பாக பெறப்பட்ட மற்ற பொதுப்பணங்கள் பொதுக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினம் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதல்ல. இந்தக் கணக்கில் பெறப்படும் வரவுகளுக்கு அரசு ஒரு வங்கியாளர் அல்லது பொறுப்பாட்சியராகச் செயல்படுகிறது. கடன்(பிரிவு I ன் கீழ் உள்ள பொதுக்கடன் நீங்கலாக), வைப்புத் தொகைகள்,முன்பணங்கள், சேமநிதிகள், செலுத்திய தொகைகள் மற்றும் அனாமத்து எனப்படும் நிச்சயமற்ற தன்மையுடையவை ஆகியவற்றிற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் சேர்ந்து உருவானதே பொதுக்கணக்காகும்.

**பிரிவு ஆ: நிதி கணக்குகளின் அமைப்பு**

| விவரஅறிக்கை | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| | **பகுதி I** | |
| விவரஅறிக்கை 1 | நிதிநிலை பற்றிய அறிக்கை | ஆண்டு இறுதியில் அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் திரள்வடிவம், இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் அதன் வரலாற்று விலையில் மதிப்பிடப்படுகின்றன. நிதி சார்ந்த மற்றும் பௌதீக சொத்துக்கள் ஆகிய இரண்டும் சொத்துக்களில் அடங்கும். பௌதீக சொத்துக்கள், "(i) மூலதனச் செலவுகள் மற்றும் (ii) இதர மூலதனச் செலவுகள் "ஆகியவற்றின் கீழ் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. |
| விவரஅறிக்கை 2 | வரவு செலவுகளின் அறிக்கை | தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக்கணக்கு ஆகிய மூன்று தொகுதிகளாக வைக்கப்படும் அரசுக் கணக்குகளின்கீழ் பெறப்படும் அனைத்து வரவுகள் மற்றும் செலவுகளின் சுருக்கமான விவரத்தை இந்த அறிக்கை அளிக்கிறது. மேலும், தொகுநிதியில், வருவாய் மற்றும் மூலதன கணக்குகளின்கீழ் உள்ள அனைத்து வரவுகளும் செலவினங்களும் பகுத்துக் காண்பிக்கப்படுகின்றன. |
| விவரஅறிக்கை 3 | வரவினங்கள் மீதான அறிக்கை(தொகுநிதி) | வருவாய் மற்றும் மூலதன வரவினங்கள், மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள், மாநில அரசால் வெளிச்சந்தையிலிருந்து பெறப்படும் கடன்கள், மீளப்பெற்ற கடன்கள், முன்பணங்கள் போன்றவை இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. |
| விவரஅறிக்கை 4 | செலவினங்கள் மீதான அறிக்கை(தொகுநிதி) | இவ்வறிக்கை செலவினத்தை அதன் தன்மையோடு கொடுப்பதோடு அச்செயல்களின் குறிக்கோள்வாரியான செலவின சுருக்கத்தையும் அளிக்கிறது. |
| விவரஅறிக்கை 5 | திரளாகச் சேர்ந்த மூலதனச் செலவினத்தின் மீதான அறிக்கை | திரளாகச் சேர்ந்த மூலதனச் செலவினத்தின் செயல்வாரியான விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. இச்செலவினத்தின் பெரு மொத்தம் விவர அறிக்கை 1ல் காண்பிக்கப்பட்டுள்ளது. |

| விவரஅறிக்கை | தலைப்பு | விவரம் |
| --- | --- | --- |
| விவரஅறிக்கை 6 | கடன்கள் மற்றும் இதர பொறுப்புகள் மீதான அறிக்கை | வெளிச்சந்தைக் கடன்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களும் முன்பணங்களும், அரசு, கடனாக பெற்றதில் அடங்கும். இவ்விரண்டும் சேர்ந்து அரசின் பொதுக் கடனாக அமைகின்றன. மேலும், "பொதுக்கணக்கின்" பல்வேறு தொகுதிகளின் கீழ் உள்ள இருப்புத்தொகைகள் "இதர பொறுப்புகளாக" இந்த சுருக்க அறிக்கையில் காண்பிக்கப்படுகிறது. இதர பொறுப்புகளை பொறுத்தமட்டில் அரசு, ஒரு வங்கியாளர் அல்லது பொறுப்பாட்சியராக செயல்படுவதால், இவை அரசின் பொறுப்புகளாக அமைகின்றன, வருவாய் வரவினங்களிலிருந்து எதிர்கொள்ளப்பட்ட நிகர வட்டிச் செலுத்தங்களின் பங்கு மீதான ஒரு விளக்கக் குறிப்புரையும் இவ்வறிக்கையில் அடங்கும். |
| விவரஅறிக்கை 7 | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான அறிக்கை | அரசு வழங்கிய கடன்களும் முன்பணங்களும் விவர அறிக்கை 1ல் இடம் பெறுகிறது. மீளப்பெறுதலும் செலுத்தங்களும் விவர அறிக்கைகள் 2, 3 மற்றும் 4ல் காண்பிக்கப்படுகிறது. கடன்களும் முன்பணங்களும் இவ்வறிக்கையில் தொகுதிவாரியாகவும் கடன் பெற்ற குழுக்கள்வாரியாகவும் சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளது, இதன் தொடர்ச்சியாக மீளப் பெறப்படாமல் நிலுவையிலுள்ள கடன்கள்(இவற்றின் விவரங்கள் அரசுத் துறைகளால் பராமரிக்கப்படுகிறது) பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. |
| விவரஅறிக்கை 8 | அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விரிவான அறிக்கை | பல்வேறு நிறுவனங்களின் பங்கு முதலில், நடப்பாண்டிலும் மற்றும் முந்தைய ஆண்டிலும் அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விவரங்களை இவ்வறிக்கை தெரிவிக்கிறது. |
| விவரஅறிக்கை 9 | அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மீதான அறிக்கை | நடப்பாண்டில் பெறப்பட்ட கடன்களில் திருப்பிச் செலுத்தப்பட்ட முதல் மற்றும் வட்டி, ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்களின் துறைவாரியான சுருக்கம் இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. |
| விவரஅறிக்கை 10 | அரசு வழங்கிய உதவி மானியங்கள் மீதான அறிக்கை | உதவி மானியம் பெற்ற நிறுவனங்களின் குழுவாரியான விவரங்கள் இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளன. நிதியாக அல்லாமல் பொருளாக அளிக்கப்பட்ட மானியங்கள் பற்றிய விளக்கக்குறிப்பும் இதில் அடங்கும். |
| விவரஅறிக்கை 11 | அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய செலவினங்கள் மீதான அறிக்கை | அரசால் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய செலவினங்கள் விவரங்களை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவரஅறிக்கை 12 | வருவாய்வகை செலவினங்கள் அல்லாத மற்ற செலவினங்களின் நிதி ஆதாரங்களும் அதன் பயன்பாடும் குறித்த அறிக்கை | மூலதன மற்றும் இதர செலவினங்கள் (வருவாய் கணக்கு நீங்கலாக) மற்றும் இச்செலவினங்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆதாரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது |
| விவரஅறிக்கை 13 | தொகுநிதி, எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக் கணக்குகளின் கீழ் இருப்பிலுள்ள தொகைகளின் விவர அறிக்கையின் சுருக்கம் | நிதிக்கணக்குகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்கு இவ்வறிக்கை உதவுகிறது. |
| | **பகுதி II** | |
| விவரஅறிக்கை 14 | வருவாய் வகை மற்றும் மூலதன வகை வரவினங்களின் கணக்குகளை, கணக்குச் சிறுதலைப்புவாரியாக அளிக்கும் அறிக்கை | அரசின் வருவாய் மற்றும் மூலதன வரவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவரஅறிக்கை 15 | வருவாய் வகை செலவினங்களின் விரிவான கணக்குகளை, சிறுதலைப்புவாரியாக அளிக்கும் அறிக்கை | அரசின் வருவாய் செலவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. ஒப்பிட்டு நோக்குவதற்காக முந்தைய ஆண்டு எண் இலக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. |
| விவரஅறிக்கை 16 | மூலதன வகை செலவினங்களின் விவரங்களை சிறுதலைப்புவாரியாகவும் உட்தலைப்புகள் வாரியாகவும் அளிக்கும் விரிவான அறிக்கை | அரசின் மூலதனச் செலவினங்களின் விரிவான கணக்குகளை இவ்வறிக்கை வழங்குகிறது. ஒப்பிட்டு நோக்குவதற்காக முந்தைய ஆண்டு எண் இலக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆண்டு இறுதியில் திரளாக சேர்ந்த மூலதனச் செலவினத்தின் தொகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. |
| விவரஅறிக்கை 17 | கடன்கள் மற்றும் இதர பொறுப்புகள் மீதான விரிவான அறிக்கை | (வெளிச்சந்தைக் கடன்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட) கடன்களின் சிறுதலைப்புவாரியான விவரங்கள், இக்கடன்களின் முதிர்வு மற்றும் திருப்பிச் செலுத்தும் விவரக்குறிப்புகளையும் இவ்வறிக்கை அளிக்கிறது, விவர அறிக்கை 6ன் விரிவான வடிவமே இவ்வறிக்கை. |

| விவரஅறிக்கை | தலைப்பு | விவரம் |
|---|---|---|
| விவரஅறிக்கை 18 | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான விரிவான அறிக்கை | அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள், கடன் இருப்புத் தொகைகளில் நேர்ந்த மாற்றங்கள், கடன் தள்ளுபடி, கடன்கள் மீதான வட்டி வரவுகள் போன்றவை இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளன, விவர அறிக்கை 7ன் விரிவான வடிவமே இவ்வறிக்கை. |
| விவரஅறிக்கை 19 | அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விரிவான அறிக்கை | பல்வேறு நிறுவனங்களின் பங்கு முதலில், நடப்பாண்டிலும் மற்றும் முந்தைய ஆண்டிலும் அரசு மேற்கொண்ட முதலீடுகள் குறித்த விவரங்களை இவ்வறிக்கை தெரிவிக்கிறது, பங்கின் ரகம், அதன் முகமதிப்பு, பெறப்பட்ட ஆதாயப்பங்கு போன்ற இதர விவரங்களையும் இவ்வறிக்கை அளிக்கிறது. |
| விவரஅறிக்கை 20 | அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மீதான விரிவான அறிக்கை | தனிச் சட்டப்படி அமைந்த கழகங்கள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர நிறுவனங்கள் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு நடப்பாண்டில் அரசு வழங்கிய உத்தரவாதங்கள் மற்றும் ஆண்டு இறுதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்டு நிலுவையிலுள்ள கடன்தொகை ஆகியவற்றை இவ்வறிக்கை வழங்குகிறது. |
| விவரஅறிக்கை 21 | எதிர்பாரா செலவு நிதி மற்றும் பொதுக்கணக்கின்கீழ் நேர்ந்த நடவடிக்கைகளின் விரிவான அறிக்கை | எதிர்பாரா செலவு நிதியில் நடப்பாண்டில் நேர்ந்த மாறுதல்கள், இந்நிதிக்கு ஒதுக்கப்பட்டவை, செலவினம், நிதிக்கு மீட்சி செய்யப்பட்டவை போன்ற விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. பொதுக்கணக்கின் கீழ் நேரும் நடவடிக்கைகளின் விவரமும் இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. |
| விவரஅறிக்கை 22 | முதலீடு செய்யப்பட்ட சேமநிதிகள் விரிவான அறிக்கை | பொதுக்கணக்கிலுள்ள சேமநிதிகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் பற்றிய விவரங்களை இவ்வறிக்கை அளிக்கிறது. |

# இணைப்பு 1.3
## (பார்வை: பத்தி 1.4; பக்கம்:8)

### பிரிவு அ: நிதிநிலையை மதிப்பிடுவதற்கு கையாளப்பட்டுள்ள வழிமுறைகள்

ஒரு நிதித்திரள் தொகுப்புக்கான தெரிவு செய்யப்பட்ட நிதி மாதிரிகள் மற்றும் அவற்றில் எதிர்நோக்கப்பட்டவைகளுக்காக பதினைந்தாவது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் /வரம்புகள் இவற்றுடன் தமிழ் நாடு நிதி பொறுப்புடைமை சட்டம் 2003 மற்றும் அதன் கீழ் சட்டசபையில் வைக்கப்பட வேண்டிய விவர அறிக்கைகளில் தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொண்ட பொறுப்புகள் /முன்கணிப்புகள் ஆகியவை முக்கியமான நிதித்திரள்களின் போக்கு மற்றும் வகைமுறைகளின், தரத்தை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. மாநிலத்தின் பொருளாதார செயலாக்கத்தை மதிப்பிடுவதற்கு GSDP ஒரு சிறந்த குறியீடாகும் என கருத்தில் கொண்டு வரி வருவாய் மற்றும் வரி அல்லாத வருவாய், வருவாய் மற்றும் மூலதனச் செலவினம், உள்நாட்டுக் கடன், வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறைகள் போன்ற முக்கியமான நிதித்திரள்கள் நடப்பிலுள்ள சந்தைவிலையின் படியான GSDPன் ஆதாரமாகிய GSDPயில் நேரும் மாறுதல்களுக்கு இணையாக உள்ளனவா அல்லது GSDPஐ தவிர மற்ற பல்வேறு நிதிக்குறியீடுகளின் மேலோங்குநிலையின் வளர்ச்சி வீதமும் கணக்கிடப்பட்டுள்ளது.

நிதித் தொகுப்புகளின் போக்கு மற்றும் முறைகளை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட சில தேர்ந்தெடுக்கப்பட்ட விகிதங்கள் /சொற்றொடர்களின் பொருள் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| சொற்றொடர்கள் | கணக்கீட்டு முறையின் அடிப்படை விவரம் |
|---|---|
| குறியீட்டின் மேலோங்குநிலை | குறியீட்டின் வளர்ச்சி வீதம் /GSDP வளர்ச்சி |
| ஒரு குறியீட்டின் (X) மேலோங்குநிலையோடு ஒப்பிட்டு இன்னொரு குறியீட்டின் (Y) மேலோங்குநிலை | (X) குறியீட்டின் வளர்ச்சி வீதம்/(Y) குறியீட்டின் வளர்ச்சி வீதம் |
| வளர்ச்சி வீதம் | [(நடப்பாண்டுத் தொகை/கடந்த ஆண்டின் தொகை Amount)-1] * 100 |
| வளர்ச்சிக்கான செலவினம் | சமூகப் பணிகள் செலவினம் + பொருளாதாரப் பணிகள் செலவினம் |
| மாநிலம் செலுத்திய சராசரி வட்டி | வட்டிச் செலுத்தம் /[(கடந்த ஆண்டின் நிதிப் பொறுப்புகளின் தொகை + நடப்பாண்டின் நிதிப் பொறுப்புகள்)/2] * 100 |
| நிலுவையிலுள்ள கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான விழுக்காடாக பெறப்பட்ட வட்டி | பெறப்பட்ட வட்டி = [(கடன்கள் மற்றும் முன்பணங்களின் ஆரம்ப இருப்பு + இறுதி இருப்பு)/2] * 100 |
| வருவாய் மிகை | வருவாய் வரவினம் – வருவாய் செலவினம் |
| நிதி மிகை | வருவாய் வகை வரவினங்கள் + பல்வகை மூலதன வகை வரவுகள் - (வருவாய் வகை செலவினம் + மூலதன வகை செலவினம் + வழங்கப்பட்ட நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள்) |
| முதன்மை மிகை | நிதி மிகை – வட்டிச் செலுத்தங்கள் |

### பிரிவு ஆ: தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டம், 2003

விவேகமான நிதி மேலாண்மையை உறுதிசெய்யவும், வருவாய் பற்றாக்குறையை தொடர்ந்து சீராக அகற்றுவதன் மூலம் நிதிநிலைத்தன்மையை ஏற்படுத்தவும், நிதிநிலைத்தன்மைக்கு இசைவான கடன் மேலாண்மைக்காகவும், அரசின் நிதிச் செயல்பாடுகளில் அதிக வெளிப்படையான போக்கினைக் கொள்வது நடுத்தர கால நிதிக் கட்டமைப்பில் நிதிக் கொள்கையை செயலாக்குவது ஆகியவற்றை உறுதி செய்யவும் மாநில அரசு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டம், 2003ஐ நிறைவேற்றியது. இச்சட்டம், முதலில் பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் நிபந்தனைகளுக்கு ஒத்திருக்கும் வகையிலும் பின்னர் பதின்மூன்றாவது, பதிநான்காவது மற்றும் பதினைந்தாவது நிதிக்குழுக்களின் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையிலும் திருத்தப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தப்பட்ட வகையில் பின்வரும் நிதி மேலாண்மை இலக்குகளை வரையறுத்தது:

(அ) 2002-03 ஆண்டு தொடங்கி, ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டின் பொருளாதார நிலைக்கேற்ப, வருவாய் பற்றாக்குறைக்கும் வருவாய் வகை வரவினங்களுக்கும் இடையேயான விகிதம் மூன் முதல் ஐந்து விழுக்காடு குறைக்கப்பட்டு, 2023-24ஆம் ஆண்டிற்குள் வருவாய் பற்றாக்குறையை முழுமையாக அகற்றி அதன் பின்னர் அந்நிலையை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) நிதிப் பற்றாக்குறைக்கும் GSDPக்கும் இடையேயான விகிதத்தை 31 மார்ச் 2024க்குள் மூன்று விழுக்காட்டிற்கு மிகாமல் கட்டுப்படுத்தி அதன் பின்னர் அந்நிலையை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

(ஆஆ) நிதிப் பொறுப்புகள் GSDPக்கும் இடையேயான விகிதத்தை, நடுத்தர கால இலக்குக்குறியான 2011-12 ஆண்டிற்கு 24.50 விழுக்காடு; 2013-14 ஆண்டிற்கு 25.00 விழுக்காடு; 2014-15ஆம் ஆண்டிற்கு 25.20 விழுக்காடு ஆகியவற்றிற்குள் கட்டுப்படுத்தி அதன் பின்னர் விதிக்கப்பட்ட விழுக்காட்டில் இவ்விகிதத்தை நிலை நிறுத்த வேண்டும்.

(இ) நிலுவையிலுள்ள மொத்த உத்தரவாதங்களை முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவினங்களில் 100 விழுக்காட்டிற்குள்ளாகவோ அல்லது GSDPயில் 10 விழுக்காட்டிற்குள்ளாகவோ, இவற்றுள் குறைவானது எதுவோ அதற்குள் கட்டுப்படுத்த வேண்டும்.

## இணைப்பு 2.1
## (பார்வை: பத்தி 2.1; பக்கம்:19)
## மாநில அரசின் நிதிநிலைமை பற்றிய ஒரு பல்வருடப் புள்ளி விவரம்

*(₹ கோடியில்)*

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| **பகுதி அ : வரவுகள்** | | | | | |
| **1 வருவாய் வகை வரவினங்கள்** | **1,74,526 (34)** | **1,74,076 (28)** | **2,07,492 (33)** | **2,43,749 (30)** | **2,64,597 (28)** |
| **(i) சொந்த வரி வருவாய்** | **1,07,462 (62)** | **1,06,153 (61)** | **1,22,866 (59)** | **1,50,223 (62)** | **1,67,279 (63)** |
| மாநில பொருட்கள் மற்றும் சேவை வரி (SGST) | 38,376 (36) | 37,942 (36) | 45,277 (37) | 53,823 (36) | 61,961 (37) |
| வேளாண்மை வருமானம் மீதான வரி | .. | .. | .. | .. | .. |
| விற்பனை, வணிகம், ஏனையவற்றின் மீதான வரி | 44,515 (41) | 43,489 (41) | 48,668 (40) | 59,143 (39) | 60,200 (36) |
| மாநில ஆயத்தீர்வை | 7,206 (7) | 7,822 (7) | 8,237 (7) | 10,423 (7) | 10,774 (6) |
| வாகனங்கள் மீதான வரிகள் | 5,675 (5) | 4,561 (4) | 5,627(5) | 7,513 (5) | 9,375 (6) |
| முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்கள் | 10,856 (10) | 11,675 (11) | 14,331 (12) | 17,560 (12) | 19,013 (11) |
| நிலவருவாய் | 258 (..) | 211 (..) | 205 (..) | 248 (..) | 256 (..) |
| சரக்கு மற்றும் பயணிகள் மீதான வரி | 11 (..) | 2 (..) | 12 (..) | 5 (..) | 7 (..) |
| இதர வரிகள் | 565 (1) | 451 (..) | 509 (..) | 1,508 (1) | 5693 (3) |
| **(ii) வரி அல்லாத வருவாய்** | **12,888 (7)** | **10,422 (6)** | **12,117 (6)** | **17,061 (7)** | **25,904 (10)** |
| **(iii) மத்திய அரசின் வரிகள் மற்றும் தீர்வைகளில் மாநிலத்தின் பங்கு** | **26,393 (15)** | **24,924 (14)** | **37,458 (18)** | **38,731 (16)** | **46,072 (17)** |
| **(iv) மத்திய அரசிடமிருந்து பெற்ற உதவி மானியங்கள்** | **27,783 (16)** | **32,577 (19)** | **35,051 (17)** | **37,734 (15)** | **25,342 (10)** |
| **2 பல்வகை மூலதன வரவுகள்** | **..** | **..** | **..** | **42 (..)** | **12 (..)** |
| **3 கடன் மற்றும் முன்பணங்கள் வசூலிக்கப்பட்டவை** | **5,384 (1)** | **5,245 (1)** | **5,355 (1)** | **1,078 (..)** | **4,024 (..)** |
| **4 மொத்த வருவாய் மற்றும் கடனல்லாத மூலதன வரவுகள் (1+2+3)** | **1,79,910** | **1,79,321** | **2,12,847** | **2,44,869** | **2,68,633** |
| **5 பொதுக் கடன் வரவுகள்** | **66,774 (13)** | **1,02,867 (17)** | **1,04,485 (17)** | **1,01,062 (12)** | **1,31,597 (14)** |
| உள்நாட்டுக் கடன் (வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்று நீங்கலாக) | 64,784 | 91,997 | 90,843 | 90,807 | 1,16,602 |
| வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்றின் கீழ் நிகர நடவடிக்கைகள் | .. | .. | .. | .. | .. |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களும் முன்பணங்களும் | 1,990 | 10,870 | 13,642 | 10,255 | 14,995 |
| **6 தொகுநிதிக்கு மொத்த வரவுகள் (4+5)** | **2,46,684** | **2,82,188** | **3,17,332** | **3,45,931** | **4,00,230** |
| **7 எதிர்பாரா செலவு நிதி வரவுகள்** | **10** | **..** | **..** | **..** | **..** |
| **8 பொதுக்கணக்கு வரவுகள்** | **2,61,483 (52)** | **3,36,178 (54)** | **3,98,157 (56)** | **4,79,342 (58)** | **5,44,412 (58)** |
| **9 மாநிலத்தின் மொத்த வரவுகள் (6+7+8)** | **5,08,177** | **6,18,366** | **7,15,489** | **8,25,273** | **9,44,642** |
| **பகுதி-ஆ: செலவுகள் /தொகை கொடுத்தல்** | | | | | |
| **10 வருவாய் வகை கணக்கில் செலவுகள்** | **2,10,435 (42)** | **2,36,402 (39)** | **2,54,030(36)** | **2,79,964 (34)** | **3,09,718 (33)** |
| பொதுவான பணிகள்(வட்டி கொடுப்பு உட்பட} | 78,138 | 78,993 | 84,894 | 99,097 | 1,13,336 |
| சமூகப் பணிகள் | 73,999 | 89,805 | 88,749 | 88,967 | 1,01,245 |
| பொருளாதாரப் பணிகள் | 42,610 | 51,808 | 60,898 | 71,974 | 71,573 |
| உதவி மானியங்கள் மற்றும் பங்குத் தொகைகள் | 15,688 | 15,796 | 19,489 | 19,926 | 23,564 |
| **11 மூலதன வகை கணக்கில் செலவுகள்** | **25,632 (5)** | **33,067 (5)** | **37,011 (5)** | **39,530 (5)** | **40,500** |
| திட்டப்பணிகள் | .. | .. | .. | .. | .... |
| திட்டம் சாரா பணிகள் | .. | .. | .. | .. | .. |
| பொதுவான பணிகள் | 1,064 | 936 | 780 | 1,041 | 950 |
| சமூகப் பணிகள் | 5,860 | 10,831 | 14,985 | 14,324 | 14,398 |
| பொருளாதாரப் பணிகள் | 18,708 | 21,300 | 21,246 | 24,165 | 25,152 |

(₹ கோடியில்)

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| 12 கடன் மற்றும் முன்பணங்கள் கொடுத்தது | 4,022 (1) | 3,835 (1) | 3,641 (1) | 7,261 (1) | 8845 (1) |
| 13 மொத்தம் (10+11+12) | 2,40,089 | 2,73,304 | 2,94,682 | 3,26,755 | 3,59,063 |
| 14 திருப்பிச் செலுத்தப்பட்ட பொதுக்கடன் | 17,866 (3) | 16,228 (3) | 19,737 (3) | 27,105 (3) | 43,565 |
| உள் நாட்டுக் கடன்(வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்று நீங்கலாக) | 16,510 | 14,874 | 18,385 | 25,377 | 41643 |
| வழிவகை முன்பணம் மற்றும் மிகைப்பற்றின்கீழ் நிகர நடவடிக்கைகள் | .. | .. | .. | .. | .. |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களும் முன்பணங்களும் | 1,356 | 1,354 | 1,352 | 1,728 | 1,922 |
| 15 எதிர்பாரா செலவு நிதிக்கு நிதியொதுக்கம் | .. | .. | .. | .. | .. |
| 16 தொகுநிதியிலிருந்து மொத்தச் செலவு (13+14+15) | 2,57,955 | 2,89,532 | 3,14,419 | 3,53,860 | 4,02,628 |
| 17 எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவுகள் | .. | .. | .. | .. | 5 |
| 18 பொதுக்கணக்கிலிருந்து செலவுகள் | 2,44,023 (49) | 3,23,189 (53) | 3,83,757 (55) | 4,62,459 (57) | 5,38,016 (57) |
| 19 மாநிலத்தின் மொத்தச் செலவுகள் (16+17+18) | 5,01,978 | 6,12,721 | 6,98,176 | 8,16,319 | 9,40,649 |
| *பகுதி- இ :பற்றாக்குறைகள்/மிகை* | | | | | |
| 20 வருவாய் பற்றாக்குறை (1-10) | 35,909 | 62,326 | 46,538 | 36,215 | 45,121 |
| 21 நிதிப்பற்றாக்குறை (4-13) | 60,179 | 93,983 | 81,835 | 81,886 | 90,430 |
| 22 முதன்மை பற்றக்குறை (21+23) | 28,199 | 57,486 | 40,271 | 34,975 | 36,864 |
| *பகுதி- ஈ : இதர விவரங்கள்* | | | | | |
| 23 வட்டிக் கொடுப்புகள் (வருவாய் கணக்கு செலவில் சேர்க்கப்பட்டுள்ளது | 31,980 | 36,497 | 41,564 | 46,911 | 53,566 |
| 24 உள்ளாட்சி அமைப்புகள் முதலியவைகளுக்கு நிதி உதவி | 15,688 | 15,796 | 19,489 | 19,926 | 23,564 |
| 25 வழி வகை முன்பணங்கள் / பயன்படுத்திய மிகைப்பற்று(நாட்கள்) | | | | | |
| பயன்படுத்திய வழி வகை முன்பணங்கள் (நாட்கள்) | .. | .. | .. | .. | .. |
| பயன்படுத்திய மிகைப்பற்று (நாட்கள்) | .. | .. | .. | .. | .. |
| 26 வழி வகை முன்பணங்கள்/ மிகைப்பற்று மீதான வட்டி | .. | .. | .. | .. | .. |
| 27 மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | 17,43,144 | 17,88,074 | 20,72,496 | 23,93,364 | 27,21,571 |
| 28 நிலுவையிலுள்ள நிதிப் பொறுப்புகள் (ஆண்டு இறுதியில்) | 4,23,743 | 5,18,796 | 6,10,667 | 6,91,591 | 7,72,423 |
| 29 ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் (வட்டியுடன் சேர்த்து) | 47,319 | 65,659 | 91,975 | 90,709 | 1,22.270 |
| 30 அதிகபட்ச உத்தரவாதத் தொகை(ஆண்டு இறுதியில்) | 4,669 | 44,656 | 64,176 | 40,565 | 70,567 |
| *பகுதி- உ : நிதி நல குறியீடுகள்* | | | | | |
| *I நிதி வளங்களை சேகரித்தல்* | | | | | |
| 31 சொந்த வரி வருவாய்/GSDP | 6.16 | 5.94 | 5.93 | 6.28 | 6.15 |
| 32 சொந்த வரி அல்லாத வருவாய் /GSDP | 0.74 | 0.58 | 0.58 | 0.58 | 0.95 |
| 33 மத்திய அரசிடமிருந்து மாற்றமானவை/GSDP | 1.51 | 1.39 | 1.81 | 1.62 | 1.69 |
| *II செலவின மேலாண்மை* | | | | | |
| *34 மொத்தச் செலவினம் / GSDP* | 13.77 | 15.28 | 14.22 | 13.65 | 13.19 |
| *35 மொத்தச் செலவினம் / வருவாய் வரவினங்கள்* | 137.57 | 157.00 | 142.02 | 134.05 | 135.70 |
| *36 வருவாய் செலவினம் / மொத்தச் செலவினம்* | 87.65 | 86.50 | 86.20 | 85.68 | 86.26 |
| *37 சமூகப் பணிகள் மீதான வருவாய் செலவினம்/ மொத்தச் செலவினம்* | 30.82 | 32.86 | 30.12 | 27.23 | 28.20 |
| *38 பொருளாதாரப் பணிகள் மீதான வருவாய் செலவினம் / மொத்தச் செலவினம்* | 17.75 | 18.96 | 20.67 | 22.03 | 19.93 |
| *39 மூலதனச் செலவினம்/ மொத்தச் செலவினம்* | 10.68 | 12.10 | 12.56 | 12.10 | 11.28 |
| *40 சமூக மாற்றும் பொருளாதாரப் பணிகள் மீதான மூலதனச் செலவினம்/ மொத்தச் செலவினம்* | 10.23 | 11.76 | 12.29 | 11.78 | 11.01 |
| *III நிதிச் சமனற்ற நிலைகளின் மேலாண்மை* | | | | | |
| *41 வருவாய் வகை பற்றாக்குறை/GSDP* | 2.06 | 3.49 | 2.25 | 1.51 | 1.66 |
| *42 நிதிப் பற்றாக்குறை / GSDP* | 3.45 | 5.26 | 3.95 | 3.42 | 3.32 |
| *43 முதன்மை பற்றாக்குறை / GSDP* | 1.62 | 3.21 | 1.94 | 1.46 | 1.35 |
| *44 வருவாய் பற்றாக்குறை / நிதிப் பற்றாக்குறை* | 59.67 | 66.32 | 56.87 | 44.23 | 49.90 |
| *IV நிதிப் பொறுப்புகளின் மேலாண்மை* | | | | | |
| *45 நிதிப் பொறுப்புகள்/GSDP* | 24.35 | 28.70 | 28.83 | 28.39 | 28.00 |
| *46 நிதிப் பொறுப்புகள் /வருவாய் வரவினங்கள்* | 242.80 | 298.03 | 294.31 | 283.73 | 291.93 |
| *47 கடன் மீட்பு (அசல் + வட்டி) / மொத்த கடன் வரவுகள்* | 66.73 | 45.89 | 52.89 | 66.58 | 67.85 |

*(₹ கோடியில்)*

| | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| ***V இதர நிதி நலக் குறியீடுகள்*** | | | | | |
| **48 *முதலீடு மீதான வருமானம்*** | **0.45** | **0.37** | **0.49** | **0.68** | **1.56** |
| **49 *நிதி சார்ந்த சொத்துக்கள் / பொறுப்புகள்*** | **0.79** | **0.76** | **0.66** | **0.63** | **0.62** |

*ஒவ்வொரு உபதலைப்பின் மொத்தத்தோடு கணக்கிடப்பட்ட விழுக்காடு (முழுமையாக்கப்பட்ட) அடைப்புக்குறிகளுள் கொடுக்கப்பட்டுள்ளது*

* *நிதிபொறுப்புகள் /GSDP கணக்கிடும்போது, வரவு செவு திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்கள் பொறுப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன. GSTகுறைவுக்கு இழப்பீடாக இந்திய அரசால் வழங்கப்பட்ட திருப்பித் தர வேண்டாத கடன்கள், மாநிலத்தின் ஆதாரங்களிலிருந்து திருப்பித் தரப்படுவதில்லை. எனவே பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டது.*

### விளக்கக் குறிப்பு

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணைகளிலுள்ள சுருக்கிய கணக்குகளை நிதிக் கணக்கில் உள்ள கருத்துரை மற்றும் விளக்கங்ளோடு சேர்த்துப் படிக்க வேண்டும். அரசுக் கணக்குகள் பெரும்பாலும் ரொக்க வரவு, செலவு அடிப்படையில் (cash basis) அமைந்துள்ளதால், அரசு கணக்கின் பற்றாக்குறை, வணிகக் கணக்கு (commercial accounting) அடிப்படையில் அமைந்துள்ள, வரவேண்டிய இனங்கள் முறைக்கு (accrual basis) மாறாக ரொக்க வரவு - செலவு நிலையையே காண்பிக்கிறது. இதன் காரணமாக, வரவேண்டிய அல்லது கொடுக்கப்பட வேண்டிய தொகைகள் அல்லது தேய்மானம் போன்ற இனங்கள், இருப்புக் கணக்குகளில் உள்ள மாறுபாடுகள் போன்றவை அரசுக் கணக்கில் இடம் பெறாது. அனாமத்து மற்றும் பல்வகை இருப்புகள், காசோலைகள் வழங்கியும் பணமாக்கப்படாதவை, மாநில அரசின் சார்பாக கொடுப்பு மற்றும் பிற முடிவடையா தீர்வுகள் ஆகியவற்றை அடக்கியுள்ளன.

## இணைப்பு 2.2
## (பார்வை: பத்தி 2.3.2.3; பக்கம்:31)
## SNAக்கு நிதியை விடுவிப்பதில் தாமதம்

### (a) மத்திய – மாநில பங்களிப்பு திட்டங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கை SNAக்கு மாற்றுவதில் தாமதம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | விடுவித்த தேதி (மத்திய அரசால் மாநிலத்திற்கு விடுவிக்கப்பட்டது) | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசு மற்றும் மாநில அரசு பங்கினை SNAக்கு மாற்றம் செய்யப்பட வேண்டிய தேதி (மாநில அரசுக்கு மத்திய அரசு விடுவித்ததில் இருந்து 30 நாட்கள்) | மத்திய அரசு பங்கை கருவூலம் SNAக்கு மாற்றம் செய்த தேதி | கால தாமதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (₹ கோடியில்) | | | | |
| 1. | 9145-தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் | 16-12-2023 | 2.54 | 1.69 | 15-01-2024 | 18-01-2024 | 3 |
| | | 16-12-2023 | 5.88 | 3.92 | 15-01-2024 | 18-01-2024 | 3 |
| | | 16-12-2023 | 10.91 | 0.96 | 15-01-2024 | 18-01-2024 | 3 |
| 2. | 9186 – ஒருங்கிணைந்த வனவிலங்கு வாழ்விட மேம்பாடு | 13-10-2023 | 1.05 | 0.70 | 12-11-2023 | 11-01-2024 | 60 |
| 3. | 3663 – மாநில மருந்து ஒழுங்குமுறை அமைப்பை வலுப்படுத்துதல் | 10-11-2023 | 1.02 | 0.68 | 10-12-2023 | 25-03-2024 | 106 |
| | | 10-11-2023 | 0.07 | 4.27 | 10-12-2023 | 18-03-2024 | 99 |
| | | 10-11-2023 | 6.48 | 4.32 | 10-12-2023 | 11-12-2023 | 1 |
| 4. | 3667 – ஒருங்கிணைந்த கல்வி | 12-02-2024 | 4.20 | 2.80 | 13-03-2024 | 15-03-2024 | 2 |
| 5. | 9488 – குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 (DAMA) ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான அமைப்பை வலுப்படுத்துதல் | 06-10-2023 | 0.90 | 0.90 | 05-11-2023 | 20-11-2023 | 15 |
| | | 06-10-2023 | 5.72 | 5.72 | 05-11-2023 | 17-11-2023 | 12 |
| | | 18-12-2023 | 0.04 | 0.04 | 17-01-2024 | 22-02-2024 | 36 |
| 6. | 3975 – திறன்மிகு குழந்தைகள் மையம் மற்றும் ஊட்டச்சத்து குழுமம் 2.0 (ஒருங்கிணைந்த ICDS-அங்கன்வாடி சேவைகள், இளம் பருவப் பெண்களுக்கான போஷன் அபியான் திட்டம், தேசிய குழந்தைகள் காப்பகம் திட்டம்) | 01-11-2023 | 13.56 | 9.04 | 01-12-2023 | 15-12-2023 | 14 |
| | | 30-12-2023 | 0.30 | 0.20 | 29-01-2024 | 16-02-2024 | 18 |
| | | 30-12-2023 | 2.63 | 1.75 | 29-01-2024 | 07-02-2024 | 9 |
| | | 30-12-2023 | 11.94 | 11.94 | 29-01-2024 | 15-02-2024 | 17 |
| 7. | 3980 – சமர்த்யா சக்தி சதன், (ஸ்வதர் உஜ்வாலா கைம்பெண்கள் விடுதி) சகி நிவாஸ் பால்னா பெண்களுக்கு அதிகாரமளித்தல், பெண்களுக்கான வரவு செலவு திட்டம், ஆராய்ச்சி திறன் மற்றும் ஊடகப் பயிற்சிக்கான PMMVY தேசிய மையம்) | 27-10-2023 | 0.82 | 0.55 | 26-11-2023 | 31-01-2024 | 10 |

**(b) மத்திய அரசு உதவிபெறும் திட்டத்திற்கான மத்திய அரசு பங்கினை SNAக்கு மாற்றம் செய்வதில் தாமதம்**

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மத்திய அரசு விடுவித்த தொகை (கோடியில்) | மத்திய அரசு மாநில அரசுக்கு விடுவித்த தேதி | மத்திய அரசு பங்கினை SNAக்கு மாற்றம் செய்ய வேண்டிய தேதி (மாநில அரசுக்கு மத்திய அரசு விடுவித்ததில் இருந்து 30 நாட்கள்) | மத்திய அரசு பங்கு SNAக்கு மாற்றப்பட்ட தேதி | தாமதம் (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 9556 - நகர புத்துருவாக்கம் இயக்கம் 500 நகரங்கள் | 40.00 | 22-12-2023 | 21-01-2024 | 14-02-2024 | 24 |
| 2. | 3166 - தேசிய குடும்ப நலன் திட்டம் | 2.71 | 26-10-2023 | 25-11-2023 | 01-12-2023 | 6 |
| | | 6.63 | 26-10-2023 | 25-11-2023 | 07-12-2023 | 12 |
| 3. | 9165 – பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான் (முன்னாளில், பள்ளிகளில் மதிய உணவு தேசிய திட்டம்) | 2.44 | 29-12-2023 | 28-01-2024 | 29-01-2024 | 1 |

## இணைப்பு 2.3
## (பார்வை: பத்தி 2.4.2.5; பக்கம்:45)
## சிறுதலைப்பு – 911ன் கீழ் ஒரு கோடி மற்றும் அதற்கு மேலுள்ள தொகைகளை திருப்பிச் செலுத்துதல்

| வரிசை எண் | கணக்குத் தலைப்பு | விவரங்கள் | திருப்பிச் செலுத்துதல் (₹) |
|---|---|---|---|
| **சாட்டப்பட்டது** | | | |
| 1. | *2049.03.117.AE* | *தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வட்டி – அரசின் பங்களிப்பு* | *5,81,44,167* |
| 2. | *2014.00.102.AA* | *நீதிபதிகளும் பதிவாளர்களும்* | *2,05,39,090* |
| **அனுமதிக்கப்பட்டது** | | | |
| 3. | 2401.00.110.JJ | பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பயிர்களின் காப்பீட்டிற்கான மாநிலத்தின் பங்குத் தொகை | 12,27,37,09,455 |
| 4. | 3456.00.102.UF | NFSA 2013 – இன் கீழ் மாநிலத்தினுள் உணவு தானியங்களின் இயக்கம் மற்றும் நியாய விலை கடை வியாபாரிகளுக்கான வரம்பு – மாநில பங்கு | 4,52,68,64,694 |
| 5. | 2425.00.108.KD | உழவர்களுக்கு பயிர் கடன் வட்டி குறைக்கப்பட்டதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி உதவித்தொகை | 2,25,67,96,844 |
| 6. | 2210.80.800.JJ | முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு திட்டம் | 1,92,58,13,453 |
| 7. | 2235.60.200.KG | வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவத்திற்கான டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் | 1,37,97,87,986 |
| 8. | 2235.60.102.UC | இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஓய்வூதிய திட்டம் | 1,10,46,76,690 |
| 9. | 2210.01.110.JJ | கல்லூரி இணைந்த மருத்துவமனைகளை மேம்படுத்துதல் | 1,00,42,92,133 |
| 10. | 2235.02.102.JX | பெண் குழந்தை நலனுக்கான திட்டத்திற்கு நிதியுதவி | 85,74,00,000 |
| 11. | 3475.00.108.UD | தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 85,37,28,437 |
| 12. | 2236.02.102.KL | 5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் | 76,79,85,857 |
| 13. | 2505.01.911.JF | இந்திரா காந்தி கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் | 76,22,81,141 |
| 14. | 2215.01.190.JG | தண்ணீர் பற்றாக்குறை நிதிக்கு பங்களிப்பாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு (வரையறுக்கப்பட்டது) மானியம் | 70,96,80,000 |
| 15. | 2217.04.192.JC | ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கம் – நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை சேவைகள் – நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது | 63,16,04,925 |
| 16. | 2235.60.102.UA | சமூகப் பாதுகாப்பு வளையம் – இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித் தொகை | 61,17,74,382 |
| 17. | 2216.03.800.JG | சூரிய சக்தியால் இயங்கும் பசுமை வீடு திட்டம் | 54,10,13,224 |
| 18. | 2236.02.102.KN | அரசுப் பள்ளிகளிலும் அரசு மானிய உதவிபெறும் பள்ளிகளிலும் உள்ள 10 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 43,43,93,994 |
| 19. | 2236.02.102.UJ | 5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – மாநில அரசின் பங்கு | 42,45,87,212 |
| 20. | 2204.00.104.KR | விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள் | 40,61,04,000 |
| 21. | 2210.06.101.KE | மாதவிடாய் சுகாதாரத் திட்டம் | 31,72,21,723 |
